திருச்சிற்றம்பலம்.

ல்லைவிடங்கன்வித்துவான் மாரிமுத்துப்பிள்ளையவர்கள்

இயற்றிய.

புலியூர்வெண்பா.

சென்னைக் கவணர்மெண்டு நார்மல்பாடசாலைத்

தமிழ்ப்புலவராயிருந்த.

திரு. க. சுப்பராயசெட்டியாரால்.

தாம் இயற்றிய உரையோடு.

சென்னை - சூளை.

திராவிடரத்நாகர அச்சுக்கூடத்தில்.

பதிப்பிக்கப்பட்டது.

சர்வதாரிஞு வைகாசிமீ

இரண்டாம்பதிப்பு.

குருவாழ்க.

14623

நன்கறிவுறுத்தல்.

உயிர்க்குறுதி பயக்கும் கல்விபயிலு மாணாக்கர்கள் எளிதினுணர இப்பிரபந்த மியற்றினவர் பௌத்திரர்தி-சு-வேலுசாமி பிள்ளையவர் வேண்டுகோளால்யாம இயற்றிய புலியூர்வெண்பா வுரையையும் பிழை திருத்தத்தையும் பார்த்தபுறத்தேசத்து வித்துவான்களி லொருவர் "உழுதநிலத்திற் பின்னுழுபவர் போல" பின்பு உரையெழுதி யச்சிட்டு வெளிப்படுத்திய பிரதியொன்றைப் பார்வையிட்டுச் சிற்சில இடங்களிற் குறியிட்டனுப்பினர், அப்பிரதியைப்பெற்று நோக்கும்போது உரை வரலாறென்று ஒன்றுமுன்னாப்புலப்பட்டது "ஆடையிரவல், கப்பெற்ற வொருவன் முழம்போடத் தொடங்கியதுபோல" அதிலளந்தபயனில்சொற்கள்பலவுண்டு அவைஅடியிற்காண்க.

௸ வேலுசாமிபிள்ளையவர் சென்னைக்குவந்த காலையில் என்னைக்கண்டபோது மஹாகவிகள் ஐயா அவர்கள் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கரென்று கூறினர், முன்பின் இவரையும் இவர் குலாதிசயங்களையும் அறியாதிருப்பினும் ௸ ஐயா அவர்கள் மாணாக்கர் என்றமையாலவரோடளவளாவியுரையாட அன்றுமுதல் வந்துகொண்டிருந்தனர். 1889வருஷம் A B டெகஸ்டுக்கு வழககப்படியாம் பொருளெழுதி வருங்காலவந்தவர், யாழ்ப்பாணம். தமிழ்ப்பண்டிதரொருவர் தாம புலியூர்வெண்பாவுக்கு உரையெழுதுகின்றோம் எனக்கூறியதற்கும், வெஸ்லிமிஷன்காலேஜ் தமிழ்ப்பண்டிதரொருவர் ௸ வெண்பாவிற்கு உரையெழுதுகின்றோம் அதற்கு உதவி செய்ய வேண்டுமென்றதற்கும் சுப்பராயசெட்டியார் உரையெழுதப் போகின்றனர் என்றுயான் மறுத்தேன், நீங்களதற்கு உரையெழுதவேண்டுமெனக்கூறித் தாம் மூலமாகப் பதிப்பித்த ஐந்தாம்பதிப்புப் புலியூர்வெண்பா ஒன்றுதந்ததுமன்றி இரண்டாம்பதிப்பில் பாதிக்குக்கூடிய செலவுபெற்றுக்கொண்டு புத்தகங்கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது கேட்டிருந்தவர்களுஞ் சிலரிருக்கின்றனர், இந்த உண்மையைப், பிறவிக்குரு-

நன்கறிவுறுத்தல்.

றுக்குக் கண்கொடுத்து நடராசப் பெருமானாருளால் இப்பிர பந்தத்தைச்செய்து பெருமைவாய்ந்தோர்மரபில்வந்தவர் இது பொய்யெனத் துணிந்து கூறுவரா;—கூறார்? கூறார்? அவர் தாமெழுதி யச்சிடுவதாகச் சொன்னால்யாம்மறுப்போமா, உரையெழுதத் தெரிந்தவரானால்யாம் எழுதுவதற்முன்னரேயெழுதி யச்சிட்டிருக்கவேண்டும் "காற்றுள்ளபோதேதூற்றிக்கொள்" என்றபடி பயன் வாய்த்தபோதாவது எழுதிமுடித் திருப்பாரல்லவா; ௪, ௧௨, ௯௨, ௯௪, ௯௮, ௫௫, ௫௮, ௬௧, ௮0, ௯ அம் செய்யுளிலுள்ள தப்புகளை யாம் ஆசங்கித்து இவ்வாறிருக்க வேண்டுமென, தாம் உடம்பட்டதற்குப் பிறர் சாக்ஷியிருப்பதை மறுப்பினும் தம்மனஞ்சான்றாகு மல்லவா;—தாம் பிழையென உடம்பட்டவைகளும அச்சிற்றவறியவற்றையாம் எடுத்துக்காட்டிய பிழைதிருத்தத்தையுந் தவறுகளாகக் கொண்டு, ன்னவிபரீதமோ, பித்தமோ, பிறவிக்குணமோ எனஇன்னம் பலபடப் பித்தர்போலப் பிதற்றுங்கவிகள் முன்னிருந்தனவொன்றாவது, இன்றிருக்கின்றனவென்றாவது விரன்முடக்க இவரையன்றிக்கூடுமோ;—எந்தவகையிலும் அபராதியல்லாத எம்மைப் பழித்த இந்தப்பெரும்பாவத்தைப்போக்க எந்தமூர்த்தி, தலம், தீர்த்தங்களிற் சென்றுபோக்கு வரோயாம் அறியோம்? அறியோம்! இதுநிற்க. இவர் உரையெழுதிய நியாயத்தைச் சற்றுப்பார்ப்போமாக.

முற்காலத்தில்நச்சினார்க்கினியர்,பரிமேலழகர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் நூலாசிரியர் கருத்தின்படி உள்ளவாறே உரையெழுதி யேம்பட்டனர் என்றெழுதி யிருக்கின்றனர், அதனைச்சுருக்கிக் கூறுகின்றோம்.

இளம்பூரணர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் "எல்லாவெழுத்தும்" "அஃதிவணுவலாது" எனவும்இரண்டு சூத்திரங்களாகப் புறனடைக்கமைத்தனர், நச்சினார்க்கினியர் ஒருசூத்திரமாகக்கொண்டும், திருச்சிற்றம்பலக்கோவையாருள் "வரையன்றெருகால்" என்னும்பாசுரத்துள் "நிரைவன்றழுவெழு,, என்னும்பாடத்தை "நிரையன்றழுவெழு" எனவும் "ஐயனைக்கண்ணிற்காண" என்னும் பாடத்தை "ஐயநிற்கண்ணிற்

காண" எனவும்பாடங்கொண்டு பொருளெழுதியிருக்கின்றனர். திருக்குறளில் "மதினுட்ப நூலோடுடையார்க் கதினுட்பம்" என்னும் பாடத்தைப்பரிமேழகா "அதிநுட்பம்" எனப்பாடங்கொண்டுபொருளெழுதிமுன்னுள்ளபாடத்திற்குக்குற்றமுங்கூறினா, இஃதொன்றோ;—பல. சிலப்பதிகாரம், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, புலவராற்றுப்படை, கலித்தொகை, குறுந்தொகை, நெடுந்தொகைமுதலிய மூலவிலக்கியங்கட்கும் அவ்வாறே. இவர்கள்காலத்தில் "இறைவன் தண்டசக்கரங்கள்" இருந்தனவல்லவா "குட்டிதற் கோபிள்ளைப்பாண்டியன்" உண்டல்லவா இவர்களுக்குவந்தன அழியாப்புகழும், அரசர் சன்மானமுமன்றிவேறியாவை. நெல்லைவெண்பா, சிவகிரிவெண்பா, திருவையாற்றுவெண்பா, வேங்கடவெண்பா, கலைசைவெண்பா, சிராமலைவெண்பாமுதலியவெண்பாக்களோடுபுலியூர்வெண்பாவும் ஒன்றோ, வேறோ. இவ்வாறிருக்க இந்தச்சிறு பிரபந்தத்தை மூல இலக்கணத்தோடும் திருக்கோவையார்முதலிய இலக்கியங்களோடும் ஒன்றாகக்கருதியது அந்தோபெரும்பாவம்? பெரும்பாவம்? தமக்குபகரிக்கும் ஆசிரியன்முதலிய பலரையுங்கா... விடத்தில் நிந்தித்தொழுகுவோர்க்கு இஃதொருபெரும்பாவமாகத் தோன்றுமா இல்லை? இல்லை?.

இக்காலத்தில் மகாவித்துவான்கள் சரவணப் பெருமாளையரவர்கள் ஆறுமுகநாவலரவர்கள் தொன்றுதொட்டு வழங்கிய பாடங்களை மாற்றி வேறுபாடங்கொண்டனரா என்றனர், அருள் ஷெ நாவலரவர்கள் நல்வழியில் "நண்டுசிப்பிவேய்கதலி நாசமுறுங்காலத்தில்-கொண்டகருவழிக்குங்கொள்கைபோல்" என்னும்பாடத்தை "கருவளிக்கும்" எனப்பாடங்கொண்டு பொருளெழுதினா, எழுத்துமட்டுமா;—சொல்லும், அடியும், பாட்டுங்கூடவல்லவா;—மேற்படி ஐயரவர்களும் அப்படியே. இது ... இவர்களுக்குவந்தனபுகழோ, வேறோ? வெள்ளிடைமலைபோல விளங்கிக்கிடக்கும் அவ்வவர்பாடபேதங்களி னுண்மை இவர் மனக்கண்ணிற்குப் புலப்படாமை பெருமடமையே, அதைப் போக்குவது நம்மாலரிது, இறைவன் தண்டமேபோக்கும்.

நன்கறிவுறுத்தல்.

நாம்தப்பென்று அவாமுன்பாக மறுத்தபாடங்களுக்குப பொருளமைதியை யாங்காங்குணர்க. அவற்றுள் புதைபொருளாகவும் புதையிலக்கணமாகவும் உள்ளனவற்றைச் சிறிதுபாரப்போம். ௬௬-ம் செயயுளில முதற்றேவா என உள்ளபாடத்திற்கும், முதறேவா எனவுள்ளபாடத்திற்கும் வித்தி, போபபையரிலக்கணத்தைக்காற பேராம்புலவர்க்குவிளங்குமா, நல்லாசிரியனைவழிபட்டு நன்னூலைப்பாடங்கேட்டு ௧௭-வருடம சிந்தித்துப்பயின்றவர்க் கல்லவாபுலப்படும் ௬௬-ம் செய்யுளில் தனையை காமருகேசஞ் சரிப்பார என்னும் பழம் பாடத்தைக்கொண்டு தனையைக்கு ஆம்மருக்கம் எனச்சொல்வகை செய்தால்மருக்கேசம் என ஒற்றுமிகவேண்டுமே என்றுஆலோசிக்காதுசொல்வகைசெய்துபொருள் எழுதியிருக்கின்றனர், ஆதலால் யாம் அதுபோல வழுக்கேடாது தனையைகாமருகேசம் என இயல்பாகக்கொண்டு சொல்வகைசெய்து பொருள்கொண்டாம்.

௯௭-ம் செய்யுளில் ... மாம் என்னும் பழம்பாடங்கொண்டே மெய்யைநான் எனகிறகாரியம், மறைக்கின்ற ஆணவத்தாலாகுமென்றல் உண்மையே, அப்பொருள் ஆணவம்ஆம மெய் என்றசொல்வகையி லடங்குமா; உபசாரவழக்கென்றல் அபசாரவழக் காயன்றேமுடியும் "சொறசெறவேதாந்தம்" என்னுஞ் செய்யுள் முதல் "எழுலகேத்தொன்பான்" என்ற ௫௦-செய்யுள்காறும் அத்தலப் புராணங்களிறகூறிய மான்மியங்களைச் சுருக்கியல்லவா கூறியிருக்கின்றன "உடைாடு தெது நிற்கின்றவன்மாகொண்டுவா" என்றால சமையவாற்ற லுணராதவன் குதிரைகொண்டுவாராது உளளமானைக்கொண்டு வந்ததுபோல ௯௨-ம் செய்யுளில் சோதிவனை என்றதுபுருவமதியம் எனவும், மும்மடி என்றது இடைகலை, பிங்கலை, சுழுமுனையெனவும், தோன்றாது என்றது இவற்றால்வரும் அவஸ்தைகளில்லையெனவும் பொருளகூறுவார்களொருசாறு லெல்லார்கள். ஷெ மகாகவிகளிடத்திற ... காற்றோபாற கற்றோர் பாற் கற்றோரும இது ... கேருமதியார்களே தோன்றாது என்றதற்குஇவ்வு... மறைபசயவென்சத்திரிபு என இலக்கணம் எழுதியிருக்கின்றது, அதனைச் சற்றுப்பார்ப்

நன்கறிவுறுத்தல்.

போல, தொல்காப்பியம்சொல் - வினையியல் ௩௩-ம் சூத்திரம் உடன்பாட்டு வினைக்கும் எதிர்மறை வினைக்கும் பொதுவாக ஈறுபற்றி முடிபுகூறியதல்லது விதிப்பொருளனவாகிய வாய்பா டுபற்றிக் கூறியதல்லவே இதனை யுணராது விதிவினைக்குக்கூ றும் இலக்கணத்தையமைத்துத தாம்கூறியதுபோல என்ற உரை யாசிரியருளாவது;---நூல்களி லிவ்வாறு வருமிடங்கள் பலவு ளவாதலால், அவற்றுளொன்றுக்கேனும் இவ்வாறெழுதியது எங்கேனும் உண்டா, "கம்பாகும்பக்களிற்றினன்" கம்பத்திற் கட்டிய பெரிய மத்தகத்தையுடைய யானையை யுடையவன். எனக்கவிகள் உபநியாசஞ் செய்ய, மற்றொருகவிக்கும் பத்திற்பெ ய்துகிளறியகம் [illegible] யசனி[illegible]இன்றான் எனப்புதைத் பொருளமைந்[illegible]யென, உபநியாசஞ்செய்துதகரம் றகரமாகவந்தது [illegible] "[illegible]டியோரொற்றினல்" எனவந் தாற்போல வந்த[illegible]கெட்டி? கெட்டி? நன்றாயிருக்கின் றது என்று [illegible] உலகிலுண்டா;---பிறர்பாலிரந்து புதைபொருளையும்[illegible] இலக்கணத்தையும நம்பிப்பெரிய ஆர வாரம்செய்தது எ[illegible], என்னபித்தம், என்னபிறவிக் குணமோ அந்தோ [illegible] இரங்குகின்றோம்.

அருள்வாக் [illegible] சொல்லலசொளாது இவர்பதிப்பித் கூறியதைக்கல[illegible] அதைச்சற்றுநோக்குவோமாக; இயா சித்திரபானுவருஷம் பதிப்பித்த ஐந்தாம்பதிப்பில் "வில் லா - வணக்குந்[illegible]மாகனைக்குஞ்சமத்தினார்" என்பு பொருளமைதி பெறுதலால் பொருளமைதிபெற ஒரு ந ரவொற்றைச்சேர்ப்பதற்கு "நூலுக்கு இருமரபிலுஞ்சுதந்தரமு டையவனுயிருக்கஎவ்வளவோயோசிக்கலாயினேன்" என்றவர் உரையோடு பதிப்பித்த ஆறாம்பதிப்பில் ௪-ம் செய்யுளில் ஐந் தாம்பதிப்பிலுள்ள பொற்கொடையால் என்னும் பாடத்தைப் பொற்குடையால் எனவும், ௧௮-ம் செய்யுளில் புன்னையர்க் கீயும் என்னும் பாடத்தைப் புன்னையற்கீயும் எனவும், ௬௮-ம் செய்யுளில் கொணர்வா என்னும் பாடத்தைக் கொணர்வாய் எனவும் ௮௩-ம் செய்யுளில் காற்காட்டி யாறுதலைகாட்டி என் னும் பாடத்தைக்காற்காட்டியாறுதலைக்காட்டி எனவுந்திருத்து தற்கு எத்தனைநாள்சென்றனவோ அந்தோபெரும் பிரயாசை!

நன்கறிவுறுத்தல்.

பெரும்பிரயாசை! அருள்வாக்காயினும். சுதந்தரமுடையவராதலால் பதிக்குந்தோறெல்லா மாற்றலாம். மாசுணக்குஞ்சு, ட்டு, முயல், மாட்டினார், குபேரனுக்குமுடம் எனவருதலால் இவற்றிற்கு நியாயங்கள் "அடியோரேற்றினான்" என்பதற்கு அநாமதேய நூலிலிருந்து மேற்கோள் காட்டியதுபோல. அவ்வவ்விடங்களிலருள்வாக்குளன் றோராட்சியைக்காட்டி யிருப்பாரோ. அன்றிப்புதைபொருளும்புதையிலக்கணமும் எழுதியிருப்பாரோ என்று பலதரந்திருப்பித் திருப்பிப்பார்ப்பினும் ஒன்றுங்காணேம். கண்டது, நாமெழுதியவுரையில் ஒவ்வோரிடங்களில் ஒருசொல்லைமாற்றியும் கூட்டியும் அன்றிப் புதிதாகவேறுரையில்லாமையையே. இதனை நியாயத்தலத்தி லறிவோம்.

மகாகவிகள் ஐயா அவாகள் திருநாகைக் காரோணப்புராணம் அச்சிற்பதிப்பிக்க வெளியபணியைசிரமேற்கொண்டுபதிப்பித்துவரும்போது (உ) பாரம் அவர்களனுமதியாலனுப்பக்கடவுள்வாழ்த்தில் "கருந்தடங்கணம்மை "கழகவிடங்கரை" என்னெனும் (உ) செய்யுள்களுக்குயாமுரையெழுதியிருத்தலைநோக்கி, நீயெழுதியிருக்கும் உரையைக் கண்ணுற்றுப் பெருமகிழ்ச்சி கூர்ந்தோம், இப்புராணத்தில் நந்திநாதப்படலத்தில்வருஞ் சித்திரக்கவிகட்கும் காஞ்சிப்புராணத்தில் சுரகரீசப்படலத்தில்வருஞ் சித்திரக்கவிகட்கு உரை எழுதியதுபோல எழுதிமுடிக்க வேண்டுமென" சுக்கிலவருடம் கட்டளையிட்டனர்கள் திருவாவடுதுறை யாதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ, சுப்பிரமணியதேசிகசுவாமிகள் "வித்துவசிகாமணியாகிய தாங்கள் காஞ்சிப்புராணம் அச்சிடத்தொட்டது முடிவுபெறுமலிருப்பதை இப்போது நிறைவேறும்படிபார்வையிட்டு உடனே முடித்தனுப்பவேண்டுமென" தாதுவருடம் கட்டளையிட்டருளினர்கள் இந்த மகான்கள் மதித்த ஆசிவசனம் எமக்கோர் பெரும்புகழ் விளைப்பதேயன்றிக், கற்றோர்போலநடிக்குமற்றையோர் எமது உரையை நிந்தித்ததை யொருபொருளாகக்கொண்டு கவல்வோமா "தம்மையிகழ்ந்தமை தாம்பொறுப்பதன்றிமற் - றெம்மை யிகழ்ந்தவினைப்பயத்தால் - உம்மை - எரிவாய் நிரயத்துவீழ்வர்கோலென்று - பரிவதூஉஞ்சான்றோர்கடன்" என்பதையன்றோ சிந்தித்தொழுகுவது எமதுகடமை.

பரமபதிதுணை

புலியூர்வெண்பா.

காப்பு.

பொன்னாருந் தில்லைப் புலியூர் வெண்பாவுக்குப்
பன்னாளுமேத்திப் பணிகுவாம் நன்னாரி
னிகக்கும் பூங்கடுக்கை சாத்தா னீன்றகற்ப
கக்குஞ் சரப்பூங் கழல்.

இ - ள். பொன் ஆரும் தில்லை - அழகமைந்த தில்லை வனத்திலுள்ள, புலியூர்வெண்பாவுக்கு - புலியூர்மேற்பாடும் வெண்பாமுட்டின்றி முடிதற்கு, நல்நார் - நல்லநாரினின்று, இகக்கும் - நீங்கிய, பூங்கடுக்கை சாத்தான் - பொலிவமைந்த கொன்றைமலர் மாலையையணிந்த சிவபெருமான், ஈன்ற - பெற்றருளிய, கற்பகக்குஞ்சரம் - கற்பகவிநாயகரது, பூங்கழல் - தாமரைமலர்போன்ற திருவடிகளை, பல்நாளும் - பலநாளும், ஏத்தி - துதித்து, பணிகுவாம் - வணங்குவாம்.

செய்வதுதன்மையது என்பார்நன்னார் இகக்கும என்றார்.

நூல்.

சொற்செறிவேதாந்தச்சுடர்த்தகரவித்தையதாம்
பொற்சபையினோங்கும்புலியூரே - முற்சமனை
விசுபதத்தாலடித்தார்விற்கொண்டமர்விளைத்த
பாசுபதத்தாலடித்தார்பற்று.

இ - ள். சொல்செறி - உறுதிச்சொல்நிறைந்த, வேதம் அந்தம் - வேதத்தினிறுதியிலுள்ள, சுடர் - ஒளிமிகுந்த, தகர வித்தைஆம் - தகரவித்தையாகிய, பொன்சபைநின்று - பொன்னம்பலம்நிலைபெறுதலால், ஓங்கும் - (எல்லாத்தலங்களினும்)

சிறந்தோங்கும், புலியூர் - புலியூரானது, முன் - முற்பொழுது, சமன்ஐ - இயமனை, வீசு - உதைத்த, பதத்தான் - திருவடியால், நடித்தார் - நடனஞ்செய்தாரெவரும், வில்சொண்டு - வில்லையேந்தி, அமர்விளைத்த - போர்செய்த, பாசுபதத்தான் - தம்மால் பாசுபதம்பெற்ற அருச்சுனனால், அடித்தான் - அடிக்கப்பட்டவருமாகிய இறைவா, பற்று - அன்புகூர்ந்திருக்குமிடமாம் புலியூர். எழுவாய், பற்றுபயனிலை. பற்று என்பதை எழுவாயாக்கிப் புலியூரைப் பயனிலையாகக் கொள்ளுதலும் அடங்கும். சாந்தோக்கிய உபநிடதத்தில் கூறப்படுதலால் வேதாந்தம் எனவும், பிரமபுரமாகிய சரீரத்திலிருக்கும் தகரமாகிய புண்டரீகமென்னும் வீட்டினுள்ளிருக்கும் ஆகாயமாதலால் தகரவித்தையதாம் பொற்சபையையனைவருமுணர்கின்றோம். இதனைச் சூதசங்கிதையில் சாந்தோக்கிய உபநிடதத்தார பரியந்தரைப் பின்னும் உரைத்த அத்தியாயத்திற்காண்க. தமைச் சரணடைந்த மார்க்கண்டேயன் பொருட்டாக, அவனுயிர் வாங்கவந்த இயமனைத் திருக்கடவூரென்னுந் திருப்பதியில் உதைத்தருளுதல் கந்தபுராணத்துள்ளன, தம்மிடத்திலே பாசுபதம் பெறும்பொருட்டுத் தவஞ்செய்யும் அருச்சுனன் தவத்திற்கிரங்கி, அவனைக் கொல்ல எழுந்த மூகாசுரனென்னும் பன்றியையெய்து அருச்சுனனொடு பன்றியைக்குறித்து ஒரு திருவிளையாடலாகப் போர்செய்யுங்கால் அருச்சுனன் விற்கழுந்தாலடிபட்டது பாரதத்திலுங் காண்க. அது பகுதிப்பொருள்விகுதி. (௧)

தன்கருமநீத்ததுன்மதன்முன் னடங்காணநிரம்
புங்கதியைத்தந்தபுலியூரே - சங்கையறு
மோகரத்தர்பாசடையார்மோதலையுப்பற்றவருட்
சாகரத்தர்மாசடையார்சார்பு.

இ - ள். தன்கருமம் (அந்தணர்குலத்திற்பிறந்து) தான் செய்யுங் கருமத்தை, நீத்த - ஒழித்துப் பாவத்தைமேற்கொண்ட துன்மதன் - துன்மதனெனவன், முன் - முற்காலையில் (ஓர் நாளும்) நடம்காண - திருநடனத்தைக்காண, நிரம்பும் கதியை - நிறைந்தமுத்தியை, தந்த - தந்தருளிய, புலியூர் - புலி

யூரானது, கங்கை - கங்காதேவியின்மேல், அதிமோகர் - மிக்கவிருப்பமுடையவரும், மோதுஅலே - கரையொடுமோதும் அலையினையும, உப்பு - உப்பையும், அற்ற - ஒழிந்த, அருள்சாகரத்தர் - கிருபாசமுத்திரமாயுள்ளவரும், மாசடையார் - பெரியசடாபாரத்தையுடைய வருமாகிய இறைவர், சார்பு-சார்ந்திருக்குமிடமாம்.

அந்தணர்குலத்திற்பிறந்த துன்மதனென்பவன், தன்தந்தைசொல்லையுங் கேளாது தன்குலத்துக்கியைந்த கருமங்களையுஞ்செய்யாது கொலைகளவாதிகளைச்செய்து பலஇடங்களினுந்திரிந்தலைந்து தன்கூட்டத்தோடு சிதம்பரத்துக்கு அண்மையில்வருங்கால் அன்றுதனுராவியில் நிகழுந் திருவாதிரைநன்னாளாதலால் தரிசனத்துக்குவந்த அடியவர் கூட்டங்களோடுகலந்து பொன்னம்பலத்தையடைந்து நடேசர்திருநடனத்தைக்கண்டு மீண்டுந் தன்கூட்டங்களோடுங்கூடிக் கொடுந்தொழிலைச் செய்து அலையும்போது பாம்புதீண்டியுயிர்விட்டான், அப்பால் இயமன் தூதுவர்களால் கட்டியிழுக்கப்பட்டுச்சென்றனன், சிறிது நேரிட்ட சிவபுண்ணியத்தால் சிவகணங்களால் அவரினின்றுமீட்கப்பட்டனன் என்பது புராணவரலாறு. (உ)

பாதகஞ்செய்துற்சகனும்பண்டிறப்பக்கண்டுகதி
போதவுவந்திட்டபுலியூரே - வேதன்
சிரமதலையுந்தனிந்தார்சேர்த்துநரசிங்கத்
துரமதலையக்கணிந்தாரூர்.

இ - ள். பாதகம்செய் (கொலைமுதலிய) அதிபாதகத்தைச்செய்த, துற்சகன் உம் - துற்சகனென்னும் வேடனும், பண்டு - முற்காலையில், இறப்ப - (தன் எல்லையில்) உயிர்விட, கண்டு - பார்த்தருளி, கதி - சிவபுரத்தில், போத - செல்ல, உவந்துஇட்ட—மகிழ்ந்துதந்த, புலியூர்—புலியூரானது, வேதன்—பிரமனுடைய, சிரம்—தலையையும், மதலை—கொன்றைமலர் மாலையையும், அக்கு - சங்குமணியையும், அணி—அழகிய, தார்—மாலையாக, சேர்த்து—அணிந்து, நரசிங்கத்து-திருமால் கொண்ட

நரசிம்மமூர்த்தத்தின், உரம்—வலிமை, அலைய—கெட, கணித்தார்—கடைக்கட்பார்வைசெய்தவர், ஊர்—ஊராம.

சையமலையிலுள்ளவேடர் குலத்திற்பிறந்து கொலைகளவு முதலிய கொடும்பாதகங்கள்செய்து திரியுந் தூற்சகனென்னும் ஓர்வேடன், வஞ்சிநாடாளுஞ் சேரகுலதீபம்போன் றவதரித்த சேரர்குலாதிபதி யொருவர் சிதம்பரத்திற்சென்று நடராசர் திருநடனத்தைக்கண்டு தரிசிக்கவேண்டுமென்னும் விருப்பினராய்த் தமது நாட்டினின்று சிதம்பரத்திற்குச் செல்லுங்கால் அவரது பரிசநத்தினேவலால் பொற்குடையையெடுத்து அவர் சேனையோடுசென்று சிதம்பரத்தையடைந்தபின், சுரநோயாற் கட்டுண்டு சிறிதுநாட்சென்று இறந்தபின் சிவபுரத்தை யடைந்தனன் என்பதும், பிரமன் செருக்கடைந்து தலையிழந்தனனென்பதும், திருமால்இரணியனை வதைசெய்துஇறுமாப்படைந்தகாலத்தில் தேவர்கள் வேண்டுகோளால் அந்நரசிங்கத்தை யொறுத்தனர் என்பதும் புராணவரலாறுகள். (ச)

நற்கதியைத் தூற்றெரிசனன்மறையோனுட் களிப்பப்
பொற்குடையானல்கும்புலியூரே - சொற்கிளர்நால்
ஆரணமாறங்கத்தரம்பவளமேனியினேருர்
நாரணமாறங்கத்தர்நாடு.

இ - ள். நல்கதி ஐ—நல்லசிவகதியை, தூற்றெரிசனன்—தூற்றெரிசனனென்னும்வேடன், மறையோன் - ஒரு அந்தணனுடைய, உள்களிப்ப—மனங்களிகூர (தந்த) பொன்குடையால் - அழகியகுடையால், நல்கும் (அவ்வேடனுக்கு தந்தருளிய) புலியூர்—புலியூரானது, சொல்கிளர்—புகழால் விளங்கும், நால் ஆரணம்—நான்குவேதங்களும், ஆறுஅங்கத்தர்-ஆறங்கங்களுமாகிய இவைகளை (உயிர்கள்பொருட்டு) அருளினவரும், அழகிய, பவளம்—பவளத்தையொத்த, மேனியின் - திருமேனியில், நாரணன்மால்—நாரணனாகிய திருமால், தங்கு—தங்கி, ஓர் அத்தர்—ஓர்பாகத்தையுடையவருமாகிய இறைவர், நாடு—நாடாம்.

பொற்கொடையாலென்னும் பாடம் புராணத்திற்குப்பொருத்தமை காண்க.

புலியூர்வெண்பா

ஆரணம் முதனூல் ஆறங்கம் சார்புநூல, ஆறங்கங்கள் ஆவன சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம் சந்தோவிசிதி. விந்நாரணியவேடர்களில் தலைமைபூண்டதுர ஜெரிசனனென்னும் வேடன்வழிப்பட்டவர்களைக் கொள்ளையாடிக் கொலைசெய்தொழுகுநாளில், ஒருநாள் விருத்தவேதியனொருவனை அவ்வழியில்வரக்கண்டு உன்னுயிரைக்கவர்வேன் உன்னிடத்துள்ள பொருள்முழுதுங் கொடுவெனக் கவர்ந்தனன், அவ்வந்தணனஞ்சி நான்விருத்தனாதலால் வெயில் வெப்பத்திற்கு ஆற்றேனை நீ கவர்ந்தகுடையை மட்டுங் கொடுக்கவென்றிரக்க, கலையினைப் பயன்வந்துதவுதலால் அவ்வேடன் கொடுத்த அக்குடையைப் பெற்று தலைக்கருகில் முதுகியவெயில் வெப்பத்தால் வெசாரிய விருத்தவேதியன் வருதலையோரந்தனன் கன்னு முன்சென்று அக்குடையைவாங்கி நிழல்விரிக்க, அந்நிழலில் சமரினைப் பாரிசமன்று சிவகங்கைத் தீர்த்தக்கரையை யடைந்தனன். அத்தீர்த்தக்கரையையடையக் குடையுதவிய சிவபுண்ணியத்தால் அவ்வேடன் சிறிதுநாட்சென்று சிவபதத்தையடைந்தனன் என்பது புராணவரலாறு. (௧)

தாண்டுபுலிக்கால்கையுகிர்தானோர் மழமுநிவன்
பூண்டிருந்தர்ச்சிக்கும்புலியூரே - பாண்டியற்காய்
மாணிக்கங்காட்டினார்மாமறைப்பாலன்பாலால்
வேணிக்கங்காட்டினார்வீடு.

இ - ள். ஓர் மழமுநிவன் - ஒப்பில்லாத பாலமுநிவர், தாண்டு - தாண்டிச்செல்லும், புலிகால்கை - புலியினது கால்களிலும் கையிலுமுள்ள, உகிர்தான் பூண்டிருந்து - நகங்களைத்தமதுகால்களிலும் கைகளிலும் பெற்றிருந்து, அர்ச்சிக்கும் - அருச்சனைசெய்யும், புலியூர் - புலியூரானது, பாண்டியற்குஆய் பாண்டியனுக்காக, மாணிக்கம் காட்டினார் - (வணிகவுருக்கொண்டுவந்து) மாணிக்கங்களைக் காட்டினவரும், மா - பெருமையமைந்த, மறைபாலன் - ஆதிசைவ மறையவர்குலத்திற் பிறந்த ஓர்சிறுவன், பால் ஆல் - ஆட்டியபாலால், அங்கு - அவ்விடத்தில், வேணிக்கு - தமதுசடாபாரத்தில், ஆட்டினார் - ஆடியருளினவருமாகிய இறைவர், வீடு - திருக்கோயிலாம்.

உரைபாடம்.

தமது பிதாவாகிய மத்தியந்தினமுனிவருடைய அநுஞை
யால் சிதம்பரத்திற்குச் சென்று திருமூலட்டானேசுரரை வழிப
ட்டிருக்குநாளில் ஓர்நாள் அருச்சித்தற்கு விடிந்தபின் சென்று
மலரெடுக்கலாமெனறால் வண்டுதேம், விடியுமுன் எடுக்கலாமெ
ன்றால் வழிதெரியாது, மரங்களிலேறல் கைகால்கள்பனியிறு
ல்வழுக்கும அதனால் பழுதிலலாத மலரைக்கொண்டு எவ்வாறு
அருச்சிப்பேனென்று தளர்ந்திருக்கும்போது பெருமானார் காட்சி
தந்து அம்மழுமுனிவா வேண்டுகோளின்படி கைகால்களில் பு
லியின்நகங்களைப்போலக் கூரிய நகங்கள்பெற்றனர் என்பதும்,
மதுரையில் வீரபாண்டியன் புத்திரனுக்கு மகுடஞ்சூட்ட மந்தி
ரிகள்கருதிக்கருவூலத்திற்பார்க்க, அவ்வீரபாண்டியன்காமக்கிழ
த்தியா மக்களாகவாந்து போனதால்காணாது யாதுசெய்வோமெ
ன்று திகைத்துச சோமசுந்தரக்கடவுள் சந்நிதிக்குச்செல்ல, அப
பெருமானார் வணிகருருக்கொண்டு எதிர்ப்பட்டு ஏன்வருந்துகி
ன்றீர் என்னிடத்தில நவமணிகளுமுள்ளனவெனக் காட்டினா
என்பதும், திருவிரிஞ்சிபுரத்தில் ஆதிசைவ வேதியருள் தாதை
யிழந்த ஓா சிறுவன் முறைவா, அந்நாள் மாறையோா உதவா
மையால் அச்சிறுவனே சென்று பூசிக்கும்போது சிவபெருமா
னிரங்கி யச்சிறுவனுக்கு எட்டும்படி திருமுடி தாழ்ந்தனரென்
பதும் புராணவரலாறுகள் (௫)

தத்துதிரைப்பாலுததிதன்னையழும்வெம்புலியின்
புத்திரனுக்கீயும்புலியூரே - பத்தித
தவந்தழைத்தசித்தனார்தாஞ்சமைத்தசேயை
உவந்தழைத்தசித்தனூர்.

இ - ள். தத்துதிரை - தாவிவரும்அலைகளையுடைய, பால்
உததிதன் ஐ - பாற்கடலை, அழும் - அழாநின்ற, வெம்புலிஇன்
வியாக்கிரபாதருடைய, புத்திரனுக்கு - புத்திரராகிய உபமன்
னியுமுனிவருக்கு, ஈயும் புலியூர் - கொடுத்தருளிய புலியூரான
து, பத்தி - சிவநேசமாகிய, தவம்தழைத்த - தவம்நிரம்பிய, சி
த்தனார்தாம் - இதையத்தையுடைய சிறுத்தொண்டர் நாயனார்,
சமைத்த - (தமக்காக) பாகஞ்செய்த, சேய்ஐ - (அவரது) புத்
திரனை உவந்து - விரும்பி, அழைத்த - (முன்போலுருக்கொ

ண்டுவர) அழைத்தருளிய, சித்தனார் - சித்தருருக்கொண்டுவந்தவர், ஊர் - ஊராம்.

வியாக்கிரபாதமுனிவர் தமதுதந்தையினனுஞையால் வசிட்டமுனிவர் தங்கையைமணம்புரிந்து உபமன்னியு முனிவரைப்பெற்றனர், வசிட்டமுனிவர் மனைவியாராகிய அருந்ததியார் அம்மகவைக்கொண்டு தம்பர்ணசாலைக்குவந்து காமதேனுவின் பாலூட்டிவளர்த்தனர், ஓர்நாள் வியாக்கிரபாதமுனிவர் தம்பர்ணசாலைக்குக் கொண்டுவந்து மாவைநீரிற்கரைத்தூட்ட உமிழ்ந்துவிட்டுக் காமதேனுவின் பாலைவிரும்பியழுதனர், தந்தையார்நொந்து திருமூலட்டானர் சந்நிதியில்வளர்த்தப் பசியாற்றாது அழ இறைவரருளால் பாற்கடல் பெற்று உண்டு வளர்ந்தனர் என்பதும், திருச்செங்காட்டங்குடியில் வசிக்கும் அந்தணர்குலத்தில அவதரித்த சிறுத்தொண்டர் நாயனார் அன்பினையுலகினுக்கு உணர்த்தச் சிவபெருமான் வைரவவேடத்திருவுருக்கொண்டு அவர்மனைக்குவந்து தமது பிள்ளையையறுத்துக் கறிசமைத்து அமுதுபடைப்பீரில்லிலருந்துவோமென்றுகூறத், தமது ஏகபுத்திரனாகிய சீராளனையவ்வாறே செய்து பரிகலந்திருத்தியமுதுபடைக்குமபோதுபிள்ளையில்லாதனனேம், உமதுபிள்ளையிருந்தாலழையுமென்ன, அதற்கு உடன்படுவார் போன்று புறத்துவந்து பள்ளியிலிருந்தபிள்ளையையழைப்பார்போல அழைக்க அப்பிள்ளைவந்த தென்பதும் புராணவரலாறுகள். பு என்னும் நரகத்தைநீக்கி முத்தியைத்தருவோன் என்னும் பொருள்மேல். 'திறறலால் புத்திரன் காரணப்பெயர். (கூ)

மெய்திகழுஞ்சேடனுருவிட்டுப்பதஞ்சலியாய்ப்
பொய்கையுழிவந்தபுலியூரே - வையை
வரம்புகட்டுவாரானூர்மாமுநிக்குப்பாற்சா
கரம்புகட்டுவாரானூர்காப்பு.

இ - ள். மெய்திகழும் - வடிவால் விளங்கும், சேடன் - ஆதிசேடன், உருவிட்டு - தனதுருவையொழித்து, பதஞ்சலியாய் - (முன்கொண்ட) பதஞ்சலிவடிவமாய், பொய்கையுழி - பிலத்துவாரத்தினிடமாக, வந்த - வந்தடைந்த, புலியூர் -

பூரானது, வையை - வையைப்பெருக்கிற்கு, வரம்புகட்டுவார்-
கரையையடைக்கவந்தவரும், ஆனூர்-இடபவாகன முடையவரும்,
மாமுனிக்கு - பெருமைவாய்ந்த உபமன்னியுமுனிவர்க்கு, பாற்சா
கரம் - பாற்கடலை, புகட்டுவார் ஆனூர் - ஊட்டியருளுவோரு
மாகிய இறைவர், காப்பு - காவலாயுள்ள விடமாம்.

ஒருகாலத்தில் திருமால் ஆதிசேஷசயனத்தில் அறிதுயி
லொழிந்து சிரசின்மேற் கைகள்கூப்பிச் சிவானந்தபரவசராயிரு
க்கக்கண்டு, அந்த ஆதிசேஷன் வணங்கி இவ்வாறிருந்தமை யெ
ன்னென்றுவினவ, நேற்றுச்சிவபிரானார் பிக்ஷாடனதிருக்கோ
லங்கண்டு தேவதாருவனத்தில் திருநடனம்புரிந்தருளியதைத்
தெரிசித்த ஆநந்தத்தினால் விழித்தனனென்றுகூற, அதுகேட்
டுத் தானுந் தெரிசிக்கவிருப்பங்கொண்டு விடைபெற்றுத் திருக்
கயிலையையடைந்து தவஞ்செய்ய, இறைவர்காட்சிதந்து இவ்வ
டிவத்தோடுசென்றால் உலகஞ்சகியாதாகலின், அத்திரிமுனிவனு
ம் அனசூயையும் செய்ததவத்தால் அவ்வனசூயை இருதயத்தி
யாய் நீராடி அவளுடைய அஞ்சலியில் நீ நுந்துதலையை யுடை
யசிறுபாம்பாய் அவள்பாதத்தில் விழுதலாற் பதஞ்சலி யெனப்
பெற்ற பெயரோடு நாகலோகத்திற்சென்று அங்கே யொருபரு
வதமும் அதற்குத்தெற்கே ஒருபிலத்துவாரமுமுண்டு, அப்பில
த்துவாரத்தின்முடிவே தில்லைவனமாதலால் அவ்வாயிலாகத்தி
ல்லைவனத்திற்குச் செல்வாயென்றருள, அவ்வாறே வந்துபொ
ய்கையினின்றெழுந்தனா என்பதும், வாதவூரடிகளைப் பாண்டி
யன் வருத்தியகாலத்திலிறைவரருளினால் வையைப்பெருக்கெ
டுத்து ஊழிவெள்ளம் போல்வர, அந்த நகரிலுள்ளோரடைக்க
அனுஞைசெய்தபோது, வந்திக்குக் கூலியாளாயிறைவர்வந்து
அளந்துவிட்ட கரையினெல்லையை யடைத்தனர் என்பதும்
புராணவரலாறுகள். அப்பொய்கைக்குநாகசேரித்தீர்த்தம் என்
பது திருநாமம். சாகரம் சகரரால் தோண்டப்பட்டது எனகிற்
றலால் தத்திதாந்தபதம். (எ)

மாசிலாவம்புலிக்குமா துமைக்குமாநடத்தைப்
பூசமதிற்காட்டும்புலியூரே - பேசரிய

புலியூர் வெண்பா

வித்தகத்தாராகண்டிறந்தார்வீடுறச்செய்தங்கசற்கா
மத்தகத்தார்கண்டிறந்தார்வாழ்வு.

இ - ள். மாசு இல்லாத - குற்றமில்லாத, அம்புலிக்கு உம் - அழகிய வியாக்கிரபாதருக்கும், மாது உமைக்கு உம் - உமாதேவியாருக்கும், மாநடத்தை - ஞானப்பெருமை வாய்ந்த திருநடத்தினை, பூசம் அது இல் - பூசத்திரு நக்ஷத்திரத்தில், காட்டும் - திருநடத்தினைக்காட்டியருளிய, புலியூர் - புலியூரானது, பேசு அரிய - சொல்லுதற்கரிய, வித்தகத்தார் - மெய்ஞ்ஞானத்தையுடையவராகி, கண்டு (பாசவியல்பை) உணர்ந்து, இறந்தார் - கடந்த சநகர்முதலானவர்கள், வீடு உற - பாமுத்தியையடைய, செய்து - செய்தருளி, அங்கசற்குஆக - மன்மதனுக்கு ஆக, மத்தகத்து - நெற்றியில், ஆர் - பொருந்திய, கண்திறந்தார் அனற்கண் திறந்தருளியஇறைவர், வாழ்வு - வாழுமிடமாம்.

சநகர்முதலிய நால்வர், சநகர், சநற்குமாரர், சநாதநர், சநந்தநர். வியாழக்கிழமையில் பூசநக்ஷத்திரத்தில் மத்தியானத்தில் வியாக்கிரபாதர் பதஞ்சலியாரிவர்கட்குத் திருநடனங்காட்டியருளினர் என்பதும். சநகர்முதலியநால்வருக்கும் வீட்டியல் புணர்த்த, இறைவர் சிவயோகங்கூடிய காலத்தில் போகத்தை இழந்து நின்ற, தேவர்களேவலால் மன்மதன் சென்று மலர்க்கணைதொடுக்க, இறைவா நெற்றிக்கண் திறந்தனர் என்பதும் புராணவரலாறுகள். புலிஎன்னும் பொதுப்பெயர் மாசிலாஎன்னுங் குறிப்பால் புலியையொழித்து முநிவரை யுணர்த்தியது. வியாக்கிரபாதர் என்ற உபலக்கணத்தால் பதஞ்சலியாரையுங் கொள்ளப்பட்டது "ஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தே" என்ற சூ - ஆல் அதுபகுதிப்பொருள்விகுதி. (அ)

முன்னாகச்சிங்கவன்மன்மூழ்கச்சிவதடத்தும்
பொன்னாகமாக்கும்புலியூரே - ஒன்னார்க்காக்
குன்றுவளைவிற்போர்கொளவெடுப்போர்கூடறனிற்
சென்றுவளைவிற்போர்செறிவு.

இ - ள். சிங்கவன்மன் - சிங்கவன்மனென்பவன், முன்

ஆக - முற்பட. சிவகடகதத்தில் - சிவகங்கையில், மூழ்க - ஸ்நானஞ்செய்ய, பொன்ஆகும் ஆக்கும் - பொன்னிறம் வாய்ந்த உருவந்தந்த, புலியூர் - புலியூரானது, ஒன்றார்க்கு ஆக - பகைவர்க்காக, குன்று - மேருவை, வில்வளை - வில்லாக வளைத்து, போர்கொள்ள - போர்செய்ய, எடுப்பார் - எடுத்தவரும், கூடல்தன்இல் - மதுரையில், சென்று (வணிகவுருக்கொண்டு) சென்று, வளைவிற்போர் - வளைவிற்றவருமாகிய இறைவர், செறிவு - நெருங்குமிடமாம்.

கௌடதேசத்தையாளும் ஐந்தாவதுமனுவின் மனைவியரிருவருள் மூத்தவளுக்குப்பிறந்த, உடல்முழுதும் சிங்கம்போலவெண்ணிறமுடைய சிங்கவன்மனென்னும் பெயரையுடையவர் தம்தந்தையாரைநோக்கி மூர்த்திதலம் தீர்த்தங்கட்குச்செல்ல விடைகொடுமென்று அவர் அனுமதிபெற்று, பல இடங்களுக்குச்சென்று தெரிசித்து ஒருவேடன் வழிகாட்டத் தில்லைவனம் அடைந்து வியாக்கிரபாதரையும் பதஞ்சலியாரையும் வணங்கி யிறைவரருளால் சிவகங்கையில் மூழ்கிப் பொன்வடிவந்தாங்கிய காரணத்தால் இரணியவன்மா எனப்பெயர்பெற்றனர் என்பதும், தாருவனமுனிவர்கள் மனைவியர் கற்பினையளந்துகாட்ட இறைவர் பிக்ஷாடனமூர்த்தங்கொண்டு சென்றருளியகாலையில் அம்முனிவர் பன்னியர்கற்புநிலை கலங்கிநிற்குங்காலையில் முனிவர்கள்கண்டு மதுரையில் வணிகர்குலக்கன்னியர்களாய் அவதரியுங்களென்று சபிக்க, அச்சாபமேற்றபெண்கள் எப்போது ஒழியுமெனப் பணியும்போது, அம்மதுரையிலெழுந்தருளிய பரமசிவன் உங்கள்கையைப் பரிசிப்பர் அப்போது அகலுமென அனுக்கிரகஞ்செய்ய அவ்வாறேவந்துபிறந்தனர்கள், அவர்கள் சாபத்தைநீக்கி யருளுதற்குச் சோமசுந்தரக்கடவுள் வளைவணிகராய்வந்தனர் என்பதும் புராணவரலாறுகள். வளை என்னு முதனிலை, இறந்தகால வினையெச்சத்தில்வந்தது. (௯)

அள்ளியவாயோதனமொன்றந்தணன்வாய்வீழ்த்தகொ
புள்ளருள்பெற்றுய்யுட்புலியூரே - உள்ளமது [டிப்
சோதிக்கவருவார்தொண்டரோடுன்வசமென்
றோதிக்கவருவாரூர்.

ஸ்ரீ

புலியூர்வெண்பா

புலியூரைப்பற்றிய வெண்பாவினாலாகிய நூலென்றுபொருள். அவ்வூர்ச்சிவபெருமானைப்பற்றிப் பாடியதும் இதிலடங்கும். வேற்றுமைப்புணர்ச்சி, இரண்டனுருபும்பயனுமுடன்றொக்கதொகை. 'புலியூரென்பது- சிதம்பரத்தினது திருநாமங்களுள் ஒன்று. சிவதலங்களுட் சிறந்த சிதம்பரத்திற்கு - தில்லை, கோயில், புண்டரீகபுரம் முதலிய வேறுஞ் சிலபெயர்களும் உண்டு. கால்களும் கைகளும் புலியினுடையனவாக இருக்கப்பெற்ற வியாக்கிரபாதரென்னும் முனிவர் கடவுளைத் தரிசித்து வழிபட்டுப்பேறுபெற்ற தலமாதலின், இதற்குப்புலியூரென்பது காரணப்பெயரென அறிக. புலி- முனிவர்க்கு உவமவாகுபெயர். தன்னைத் தரிசித்த பிரமனுக்குத் தன்னிடத்தேற்ற பெரும்பற்றை [பக்கவாசையை] விளைக்கும் புலியூரானமையின், இது- பெரும்பற்றப்புலியூரெனவுங் கூறப்படும். வெண்பா- நால்வகைப்பாக்களுள் ஒன்று. இது இங்கே அவ்வகைப்பாடலினாலாகிய நூலுக்குக் காரணவாகுபெயர். இதனை - மேன்மையுணர்த்தும் திரு எனனும் அடைமொழிசேர்த்து, திருப்புலியூர்வெண்பாவென்றும் வழங்குவர்.

காப்பு.

காப்பு - காத்தல்; அஃது- இங்கு, காக்கின்றகடவுள்விஷயமான வணக்கத்துக்குத் தொழிலாகுபெயர். ஆகவே, கவி தமக்கு நேரிடத்தக்க இடையூறுகளை நீக்கித் தம எண்ணத்தை முடிக்கவல்லதோர் பொருளின்விஷயமாகச் செய்யுந் தோத்திரமென்பது கருத்து. தம்மைச் சரணமடைந்தவர் தொடங்குந் தொழில்களுக்கு வரும் விக்கினங்களை [இடையூறுகளை]ப் போக்குதலாலும், தம்மையடையாது அவமதித்தவர்களுக்கு விக்கினங்களை ஆக்குதலாலும் விக்கினேசுவரரென்னுந் திருநாமம்பெற்றுள்ள (பரமசிவனது மூத்ததிருக்குமாரர் - விநாயகமூர்த்தியைப் பற்றியதென அறிக. இக்காப்புச்செய்யுளில் வழிபடப்பட்டவர், சைவசம்பிரதாயமுறைமைப்படி தலத்துக்குரிய கற்பகவிநாயகரெனக.

(இ - ள்.) பொன்னார்ந்த - அழகு மிகுந்த, தில்லை - தில்லைவனத்திலுள்ள, புலியூர் - புலியூரென்னும்பெயருடைய சிதம்பரதலத்தைப் பற்றிக் கூறுகிற, வெண்பாவுக்கு - வெண்பாவினாலாகிற பிரபந்தம் தடையின்றி முடியும்பொருட்டு, நல - சிறந்த, நாரிக்கும் - தேனைச் சொரிகிற, சரம் - மாலையாகத் தொடுக்கப்படுகிற, பூங்கடுக்கையான் - அழகிய கொன்றைமலரைச்சூடிய சிவபிரானை, ஈன்ற - பெற்றருளிய, கற்பகம் குஞ்சரம்- கற்பகவிநாயகரது, பூ கழல் - தாமரைமலர்போன்ற அழகியதிருவடிகளை, பல் நாளும் - பலநாளிலும் [தினந்தோறும்], ஏத்தி - துதித்து, பணிகுவாம்- (யாம்) வணங்குவோம்; (எ - று.)

எல்லாநூல்களிலும் மங்கலமொழி முதல்வருத்திக் கூறவேண்டுவது கவிமரபாதலின், பொன் என்று தொடங்கினார், மேல நூலின்முதலில் சொல் என்று தொடங்குவதும் இதுபற்றியே: திரு யானை தேர் பரி கடல் மலை மணி பூ புகழ் சீர் மதி நீர் எழுத்து பொன் ஆரணம் சொல் புயல் நிலம் கங்கை உலகம் பரிதி அமிழ்தம் இவையும், இவற்றின் பரியாயப்பெயர்களும், இவைபோன்ற இன்னுஞ்சிலவும் மங்கலச்சொற்களாம். சிதம்பரதலமுள்ள இடம் தில்லையென்னுமரமடர்ந்தகாடாயிருந்தமையின், தில்லையென்றும் தில்லைவனமென்றும் பெயர்பெறும். பணிகுவாம், கு - சாரியை. இது, கடவுள்வணக்கமாதலால் "நான்முகற் றொழுது நன்கியம்புவன்", "அச்சுத னடிதொழு தறைகுவன்", "பந்த மடிதொடை பாவினங் கூறுவன்" என்றாற்போலொருமையாற்கூறித்தன்னைத்தாழ்த்தாமல் பன்மையாற்கூறித்தன்னை உயர்த்தியது இவ்வணக்கமென்னெனின்;—

புலியூர் வெண்பா

இ - ள். வாய்அள்ளிய - அலகாகியவாயாலள்ளிய, ஒன்றுஒருகணம் - ஓர்சோற்றவிழை, அந்தணன்வாய் - ஓர்மறையவன்வாயில், வீழ்த்த - வீழ்த்திய, கொடிப்புள் - காக்கையானது, அருள்பெற்று (இறைவர்) திருவருள்பெற்று, உய்யும் - பிறப்பொழிந்த, புலியூர் - புலியூரானது, உள்ளம் (திருநீலகண்டநாயனாருடைய) மனநிலையை, சோதிக்கவருவார் - சோதிக்க வருமிறைவரும், தொண்டா - அடியவனே, ஓடு - பலியோடு, உன்வசம் என்று ஒடு - உன்வசமென்று கூறிக்கொடுத்து, கவருவார் - (பின்) அதனைக்கொள்ளைகொண்டவருமாகிய பரமனூர், ஊர் - நகரம்.

சிதம்பரத்தெருவிற் கவந்த மறையவனொருவன் இளைப்பாலக்கரையிற் படுத்துறங்கும்போது, அன்னத்தைக்கவர்ந்து போன காகத்தினலகினின்று நழுவிவீழ, நித்திரையாலதையறியாது அம்மறையவன்பருகினான், அந்தப்புண்ணியத்தாலக்காக்கைசிவகதியடைந்ததென்பதும், வேட்கோவர்குலத்திற் றிருவவதாரஞ்செய்த, திருநீலகண்டநாயனார் மனைவியாரோடு சிவநேயம் பூண்டு சிவனடியார்களுக்குத் திருவோடுதரும் நியமம்பூண்டொழுகுநாளில், இவர்களன்பிலையுலகத்தாரறிந்துய்யும் பொருட்டு இறைவர் ஓர் சிவயோகியாய்த் திருவுருக்கொண்டுவந்து தாம் கொண்டுவந்த திருவோட்டை யவர்கையிற்கொடுத்து இதனைச் சேமஞ்செய்துவையும் என்று கொடுத்து அதனைப்பின்பு மறைத்தருளினர் என்பதும் புராணவரலாறுகள். கொடிப்புள் பின்மொழியை விசேடித்துவந்த இருபெயரொட்டுப்பண்புத்தொகைநிலைத்தொடர். அது பகுதிப்பொருள் விகுதி. (கப)

சென்றேநலந்தீதுசெய்யிலொன்றுகோடியதாய்ப்
பொன்றாதுநீடும்புலியூரே - நின்றாடும்
பொன்னம்பலவர்புகன்மறையினாலுணரா
வன்னம்பலவர்மனை.

இ - ள். சென்று - தில்லையிற்சென்று, நலம் - புண்ணியமாவது, தீது - பாவமாவது, செய்யில் - செய்தால், ஒன்று (அவற்றுள்) ஒன்று, கோடியது ஆய் - கோடியென்னும் இலக்க

முடையதாய், பொன்றுது - கெடாமல், நீடும் - விருத்தியாகும், புலியூர் - புலியூரானது, நின்று - அருளுருக்கொண்டுநின்று, ஆடும் - திருநடனஞ்செய்யும், பொன்னம்பலவர் - பொன்னம்பலத்தையுடையவரும், புகல் - கூறும், மறையின்ஆல் - வேதநூல்களையினால், உணராத - அறிதற்கரிய, வன்னம்பலவர் - பலநிறங்களையுடையவருமாகிய இறைவர், மனை - இருப்பபை வீடாம்.

சிதம்பரத்தில் நன்மையாவது தீமையாவது ஒருவன் செய்வானாயின் அது ஒன்று பலகோடியாகும் என்பது புராணவரலாறு. வேதமவிந்துசத்தியின் காரியப்பாடாதலால் மறையினாலுணரா எனவும், பஞ்சவன்னங்களுடையவராதலால் வன்னம்பலவர் எனவுங்கூறினார். (கக)

மாக்கள்வினைபாலவயிரவன்கைச்சூலத்தாற்
போக்கிநலந்தந்தபுலியூரே - சாக்கியர்கல
மோதக்கனிவிருந்தார்முன்வணிகமாதளித்த
சூதக்கனிவிருந்தார்தோய்வு

இ - ள். மாக்கள் (அங்குவசிக்கும்) மக்கள், வினை - (தாம்செய்யும்) தீவினைப்பயன்களை, பாலவயிரவன் - பாலவயிரவமூர்த்தி, கைச்சூலத்து ஆல - திருக்கரத்தேந்திய சூலாயுதத்தினால், போக்கி - ஒழித்து, நலம் - முத்திப்பயனை, தந்த - கொடுத்தருளும், புலியூர் - புலியூரானது, சாக்கியர் - சாக்கியநாயனார், கல்மோத (அன்பால்மலரெனக்கருதி) கல்லெறிய, கனிவு இருந்தார் - மகிழ்கூர்ந்தவரும், முன் - முற்பொழுது, வணிகமாது - புனிதவதியார், அளித்த - கொடுத்த, சூதக்கனி - மாங்கனியாகிய, விருந்தார் - விருந்தினையுண்டவருமாகிய இறைவர், தோய்வு - பொருந்துமிடமாம்.

சங்கமங்கையென்னும் பதியிற்பிறந்து முத்திபயக்கும் சமயம் எதுவென நாடிக்காஞ்சிநகரிற்சென்றுபௌத்தர்கொள்கையிற்புகுந்து அதுபயன்படாததென்று கழித்துச் சைவசமயமே முத்திபயக்குஞ் சமயமென்றெண்ணி யவ்வேடம் பூண்டிருப்பினும் அன்புதான்காரணமென்று சிவநேயமிக்குடையவராய்

ஒருநாள் வெள்ளிடையில் ஒருசிவலிங்கத் திருவுருவத்தைக் கண்டு மனங்கசிந்து ரோமம்புளகித்துப் பரவசத்தராய் அங்குள்ள ஓர்செங்கல்லையெடுத்தெறிய இறைவர்குழைந்தருளி யேற்றனர் என்பதும், காரைக்காலில் வைசியர்குலத்தி லவதரித்த புனிதவதியாரை பரமதத்தசெட்டியார் மணம்புணர்ந்து இல்லறம்வழுவாதொழுகிச் சிவனடியாரை யுபசரித்து வாழுங்காலையில் ஓர் சிவனடியார் பசியினைப்பொறுக்கலாற்றாமையால் அன்னம்படைத்துத் தங்கணவரனுப்பிய மாங்கனியிரண்டனுள் ஒன்றினைவைத்தருத்தினர் என்பதும், சிதம்பரத்தில் வசிப்போர் தீவினைசெய்வாராயின் அத்தீவினைக்குத் திருவுபால வயிரவமூர்த்தி திருக்கரத்திலேந்திய சூலத்திற்கோத்துக்கழிந்தபின் சிவகதிபெறுவார் என்பதும் புராண வரலாறுகள். இயமன்சைட்டுவ ... தலில்லையென்றார் மாக்கள் வினைகைச்சூல ... என்றார் மக்கள்மாககள் நீட்டல்விகாரம். (கஉ)

சொல்லாச்சிவசன்மா சோமநாதர்க்குவினைப்
பொல்லாங்ககற்றும்புலியூரே - வில்லா
வணக்குஞ்சமர்த்தினர்மாமலைதோண்மேன்மா
சுணக்குஞ்சமர்த்தினர்தோய்வு.

இ - ள் சொல்லாத - (தானறிந்ததைக் கூறாத), சிவசன்மா - சிவசன்மாவென்னும் அந்தணன், சோமநாதர்க்கு - சோமநாதமென்னுந் திருப்பதியிலெழுந்தருளிய இறைவர்க்கு, வினைபொல்லாங்கு - (செய்த) தீவினைப்பயனை, அகற்றும் - ஒழிக்கும், புலியூர் - புலியூரானது, மாமலை - பெரியமேருவை, வில்ஆக வணக்கும் - வில்லாக வளைத்த, சமர்த்தினர் - சமர்த்துடையவரும், தோள்மேல் - திருத்தோளின்மேல், மாசுணக்குஞ்சு - பாம்பின்குட்டியை, அமர்த்தினர் - தங்கச்செய்தவருமாகிய இறைவர், தோய்வு - பொருந்துமிடமாம்.

சௌராட்டதேயத்திலுள்ள சோமநாதம் என்னும் ஆலயத்தில் கார்த்திகைமாசத்தில் கார்த்திகை நக்ஷத்திரத்தில் நடக்குந் திருவிழாச் சேவிக்கச்சென்றவர்களுள், சோமசன்மாவினு

டைய சரீரம உரிஞ்சுதலால் நெய்யகல் வீழ்ந்து திருவிளக்கு அணைந்தது; அவன் அருகில்நின்றசிவசன்மா அதுகண்டும் ஒன்றும் பேசிலன், சிலநாள்சென்று இவர்களிறந்தபின் திருவிளக்குநெய்கவிழ்த்த பாதகத்தால் சரீரம் எல்லாம் புழுக்குடையச் சோமசன்மாவும, திருவிளக்கு நெய்கவிழ்ந்தமைகண்டுஞ் சொலலாத சிவசன்மாகண்கள் மலைபோல்வளர நாக்குமூன்றுகூடப்பிடுதூரம நீளவும இவ்விருவரும் பேயுருக்கொண்டு விந்தாடவியிலலைந்தனர்; இவர்கள் முன்னர்ச்செய்த சிவபூசைப்பேற்றால் வாமதேவமுனிவரைக்கண்டு தரிசித்து அவரால் தங்களுக்குவந்த பேய்ப்பிறவியையுணர்ந்து சிவநேயம் பிறந்து கடைத்தேறினர் என்பது பழைய வரலாறு. மாசனைக்குஞ்ச என்றதுமட பவழு (கரு)

ஆழ்ந்தகடற்செல்வற்கடாபிரமகத்திதனை
போழ்ந்தறுத்தாளுந்தென்புலியூரே - தாழ்ந்தவரைத்
துய்யகதியேற்றினார் சோதிவெள்ளிவெற்பனைய
வெய்யகதியேற்றினார்வீடு.

இ - ள். ஆழ்ந்த - ஆழமாயுள்ள, கடற்செல்வற்கு - சமுத்திராதிபதியாகிய வருணனுக்கு, அடா - நெருங்கிய, பிரமகத்திதன்னை - பிரமகத்தியை, போழ்ந்து அறுத்து - வேரோடு அறுத்தகளைந்து, ஆளும் - அடிமைகொள்ளும், தென்புலியூர் - (இமயமலைக்குத்) தென்பாலுள்ள புலியூரானது; தாழ்ந்தவரை - தன்னைவணங்கிய அடியவர்களை, துய்யகதி - என்றுமுள்ள சிவகதியில், ஏற்றினார் - செலுத்தினவரும், சோதி - விளக்கமமைந்த, வெள்ளிவெற்பு - வெள்ளிமலையை, அனைய - ஒத்த, வெய்ய - விரைந்துசெல்லும், கதி - வேகத்தையுடைய, ஏற்றினார் - இடபவாகனத்தையுடையவருமாகிய விறைவர், வீடு - திருப்படைவீடாம்.

தனக்குப் பகைஞனுயுள்ள ஓரசுரனைவருணன்கொல்ல அவனுக்குப் போர்செய்யும உபாயத்தைக்கற்பித்தற்பொருட்டு அவன் ஆசிரியன் இருளில்வர, அவ்வாசிரியனைப் பகைவனென்றுகருதிப் பாசத்தைவிடுத்தனன் அதனால் ஆசிரியனிறக்க அ

14623

கொலைப்பாதகம் காரணமாக ஓர் பிசாசு தோன்றிக் கால்களுங் கைகளுங் கழுத்தோடுபொருந்தும்படி கட்டிக் கடலிற்போட்டது, நெடுநாள் கடலிலழுந்திக்கிடந்த அவ்வருணனுக்குச் சிவபெருமானா எழுந்தருளி மாசிமகத்தில் காட்சிதந்து அப்பாசக்கட்டு அறும்படி யருள்செய்தனா என்பது புராணவரலாறு. அன்றுமுதல அத்துறை பாசமறுத்த துறையெனப பெயர் பூணடது (க௭)

வன்மதிநீசன் கடனீர் மாசிமகத் தாடவவன்
புன்மை தவிர்த்தாளும் புலியூரே — தென்மதுரைக்
கற்களிறுக்கிக் களித்தார் கானவனெச்சிற் சுவைக்கப்
பற்களிறுக்கிக் களித்தார் பற்று.

இ - ள். வலமதி-கொலைகளவாதியின்முதிர்ந்த அறிவையுடைய, நீசன்-ஓர்புலையன, கடலநீர்-கடலென்னுந்தீர்த்தநீரில் மாசிமகத்து ஆட—மாசிமாதத்தில்வரு மகநக்ஷத்திரத்தில் நீராட, அவன் புன்மைதவிர்த்து—அவனது மலப்பற்றை யொழித்து, ஆளும் புலியூா—அடிமைகொணட புலியூரானது, தென்மதுரை—தென்றிசையிலுள்ளமதுரையில், கல்களிறுகு—கல்யானைக்கு, இக்கு அளித்தார்—கரும்பினை யுண்பித்தவரும், கானவன்—வேடாகுலத்திற்றோன்றிய கண்ணப்பநாயனார், எச்சில்—எச்சில்செய்தநசையை, சுவைக்க—சுவைபாாத்தருள, பல்கள் இறுக்கி—பற்களாலிறுகமென்று, களித்தாா—களிகூர்ந்தவருமாகிய இறைவா, பற்று— அன்புகூர்ந்த இடமாம்.

பாசமறுத்த துறையென்னுங் கடற்றீர்த்தத்தில் மாசிமகத்திருநக்ஷத்திரத்தில் ஸ்நானஞ்செய்தவா பிறப்பொழிந்துமுத்திபெறுவார், அதனையுணராத கொடியநீசனொருவன் அத்திருநக்ஷத்திரத்தில் நீராடிப் பிறப்பொழிந்தானென்பதும், மதுரைத்திருப்பதியி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள் தமதிச்சையால் எல்லாம்வல்ல சித்தராய்த் திருவிளையாடல் செய்தருளுங்காலையில் அக்காலத்தரசாணட அபிடேகபாண்டியன் கேள்வியுற்று அவரை வரும்படி சொல்லியேவ, அரசனால் எமக்கு ஆகுங்காரியம் என்னவென்று மறுத்தருளுங்காலையில் ஓர்நாள், அப்

பாண்டி — னுக்கோயிலுக்குப பரிசநதேதாடு வரும்போது அவனுக்குக் காட்சிதந்தருளத் திருவுளங்கொண் டெதிர்ப்பட்டருளினர், அப்பாண்டியனேக்கி யவரியல்புதெரிந்து தன்னைக் காணவந்த ஒருவேளாண்மகன் கையுறையாகக் கொடுத்தகரும் பினை நீர் எல்லாம்வலல சித்தராயின் இந்தக்கல்யானை தின்னக் கொடும் என்றுநீட்டப் புன்னகைபுரிந்தருளி யக்கல்யானைக்கு அருந்தினா என்பதும், திருக்காம நதியென்னுந்திருத்தலநதி னருகிலுள்ள உடுபபூரில வேடாகுலத்தலைவனுகிய நாகன் செய்த தபோபலத்தால் திருவவதாரஞ்செய்து திண்ணனுா எனத்திருநாமம்பூண்டருளிய கண்ணப்பநாயனுா வேட்டஞ்செயத மிருகத்தின் கொழுந்தசையை, அம்பாலரிந்தெடுத்து நெருப்பிறபதமாகக் காய்ச்சி வாயிலிட்டுப பக்குவமபார்த்துச சிறந்ததசையைக் கல்லையிலிட்டூட்டவுணடனா என்பதும் புராணவரலாறுகள். ()

மேவுநடுக்கங்கடமைவீட்டிரெவர்க்குங்காயாம
பூவண்ணன்காக்குந்தென்புலியூரே—கோவணஞ்சீர்த்
தட்டிடவென்றொப்பினுர்தம்பிறவியல்லிருளை
அட்டிடவென்றொப்பினுராவு.

இ - ள். எவர்க்குமும்—அடியார்களெவர்க்கும், மேவும்—பொருந்திய, நடுக்கங்கள்தம்மை—துன்பங்களை, வீட்டி—அழித்து, காயாம பூவண்ணன்—காயாம்பூவைப்போலுங் கரியநிறத்தையுடையதிருமால், காக்கும்—அன்போடுகாக்கும், தென்புலியூர்—தென்பாலுள்ள புலியூரானது, கோவணம்—கோவணத்தை, சீர்—பொலிவமைந்த, தட்டிட—தட்டிவிடக்கடவாய், என்று-என்றருள, ஒப்பினுர்தம்—உடன்பட்ட அமர்நீதிநாயனுரது, பிறவில் இருள்ஐ—பிறவியென்னும் போக்குதற்கு அரிய இருளினை, அட்டிடவென்று-வேரோடறுக்கவென்று, ஒம்பினுா—பாதுகாத்த இறைவர், ஆவு—அன்புகூர்ந்திருக்கு மிடமாம்.

அட்டிட என்று ஒப்பினுர் ஒழிக்கச் சூரியனுக்கொப்பாயுள்ளவரும் எனப்பொருள்கொள்ளுதலும் ஒன்று.

திருமால் திருக்கயிலையில் ஓர்நாள் இறைவரை வணங்கிச் சிற்சபையில் தேவரீர் திருநடனத்தினை யென்றுந்தரிசிக்க அருளாயென்று குறையிரக்க,மகமேருவின் கொடுமுடி மூன்றனுள்

தென்பாற்சிகரம் சனகசபையாதலால் அம்மலையின்மேலபாற கொடுமுடியிலிருந்து தரிசித்து நமது அடியவருள் நீயுத்தமன் ஆதலால் அவர்களைப்பாதுகாத்து வருவாய் என்பதும், வணிகர் குலத்தில் திருவவதாரஞ்செய்த அமர்நீதிநாயனார் திருநல்லூரி லோர் திருமடங் கட்டுவித்துச் சிவனடியார்களைப் பாது காத்து வருகையில், இவர் சிவநேயத்தை யுலகினரறிந்துய்யப்பிரமசாரி யாத் திருவுருவங்கொண்டருளிவந்து தண்டிலிருந்த கோவணத் தையவர்கையிற் கொடுத்து நீராடிவருகின்றோம் அது காறுமி தனைக் காப்பாயென்றுகொடுத்து மழையில் நனைந்துவந்து நம து கோவணத்தைக்கொடுமென்றுகேட்க, அவர்மாயையால் ம றைந்த அக்கோவணத்தைத்தேடிக் காணாமையால் அஞ்சிநிற்க இறைவர்கண்டு வேறுள்ள இக்கோவணத்துக்கு நிகராகக்கொ டுமென்றருளினர், துலைநாட்டி யோர்தட்டி லக்கோவணத்தை யிட்டு மற்றோர்தட்டில் தம்மிடத்திலுள்ள ஆடை, பொன்முத லியவற்றையிட்டும் நிகரில்லாமையால் தாமும்ஏறிச்சிவபுரியை யடைந்தனர் என்பது புராணவரலாறுகள். (கசு)

நேயமனையா ளுடனே நீலகண்டனார் முதுமை
போயிளமைபெற்றபுலியூரே — தீயமலத்
தோடும்போதங்கெட்டா ருள்ளத்தாரன் றிருவர்
தேடும்போதங்கெட்டார்சேர்வு.

இ - ள். நேயம்—சிவநேயமிகுந்த, மனையாள் உடன்—தமது மனையாளோடு, நீலகண்டனார்—திருநீலகண்டநாயனார், முதுமைபோய்—மூப்புப்பருவத்தினின்று நீங்கி, இளமைபெற்ற—இளமைப் பருவத்தையடைந்த, புலியூர் — புலியூரானது, தீயமலத்து—கொடிய ஆணவமலத்தில், ஓடும் போதம் கெட்டார்—செல்லும் தற்போதமிழந்த அடியவரது, உள்ளத்தார்—இதயத்திலுள்ளவரும், அன்று—அக்காலையில், இருவர் தேடும் போது—அரிபிரமர் தேடுங்காலையில், அங்கு—அவ்விடத்தில், எட்டார்—அடைதற்கரியவருமாகிய இறைவர், சேர்வு—வாசஞ்செய்யும் இடமாம்.

சிதம்பரத்தில் வாழும் வேட்கோவர் குலத்தில்திருவவதாரஞ்செய்து சிவநேசமுடையவராய்ச் சிவனடியார்களுக்குத் திருவோடு கொடுக்குந் தொண்டுபூண்டு இல்லறத்தில் வாழுங்காலையில், இன்பத்துறையில் இச்சைகொண்டிருந்தலை மனைவியார் அறிந்து, எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம் எனச்சபதங்கூற, அதுகேட்டு அஞ்சி உம்மையன்றி யெந்தமாதரையும் மனத்தாலும் தீண்டேனென்று அவ்வாறே யிருந்து முதுமையடைந்த காலத்தில் இவர்கள் அன்பினையுலகறிந்து கடைத்தேற நடராஜப்பெருமானார் ஒரு சிவயோகிபோல எழுந்தருளி யந்நாயனாரைக் கண்டு இத்திருவோட்டினை நாம் கேட்கும்போதுகொடுக்கவேண்டும் என அவரிடம் வைத்து அதை மறையச் செய்து மீண்டு சென்று கேட்கும்போது, அது அங்கில் லாமையால்மயங்கிப் பயந்துவந்து சொல்ல, அச்சிவயோகியார் நாம் நம்போம் உமது மனைவியார் கையைப்பற்றி யிக்குளத்தில் மூழ்கிச்சொலலென, ஒரு தண்டத்தி னிருதலையையு மனைவியாரும் தாமும்பற்றி அத்திருக்குளத்தி லிளமையோடுவந்தனர்கள் என்பதுபுராணவரலாறு. (கஎ

அந்நாட் சிகைவிளக்கேற் றன்பினுக்கு முத்திகணம்
புன்னயர்க் கீயும்புலியூரோ — எந்நாளும்
அன்பர்கருத்துடையா ரன்பரிடத் தன்பில்லா
வன்பர் கருத்துடையார்வாழ்வு.

இ-ள். அ நாள்—அக்காலத்தில், சிகை—தமது சிகையினை, விளக்குஏற்று—திருவிளக்காக ஏற்றிய, அன்பினுக்கு—அன்பின்பொருட்டு, முத்தி—மோக்ஷத்தை, கணம்புல்நாயர்க்கு—கணம்புல்லநாயனார்க்கு, ஈயும்—கொடுத்தருளிய, புலியூர்—புலியூரானது, எ நாள் உம்—எக்காலத்திலும், அன்பர்—மெய்யன்பினையுடையவரது, கருத்து—மனத்தினை, உடையார்—திருக்கோயிலாக வுடையவரும், அன்பர் இடத்து—தமது அடியவரிடத்து, அன்பு இல்லாத—அன்புபூண்டொழுகாத, வன்பர்—புறச்சமயிகளுடைய, கருதுடையார் — பிறப்பினையொழிக்காதவரும் ஆகிய இறைவர், வாழ்வு—வாழுமிடமாம்.

இருக்குவேளூரில் திருவவதாரஞ்செய்து மெய்யன்பு பூண்டு செல்வத்தாலான பயன் திருவிளக்கிடுதலேயெனத்தெளிந்து அப்பணிபூண்டொழுகுநாளில், செல்வங் குறைவுபட்டுவருதலைக்கண்டு சிதம்பரத்திற்குவந்து அங்குள்ள திருப்புலீச்சரத்தில் தமது வீடுமுதலிய எல்லாப்பொருள்களையும் விற்று அத்திருப்பணியை வழுவாது நடத்திவரும்போது, அதுவும் ஒழியக்கடன் வாங்குதற்கு அஞ்சிக் கணம்புல்லரிந்து விற்று அப்பொருளைக் கொண்டு அத்திருப்பணி நடத்திவந்தனர். ஒருநாள் சிவபெருமான் அருளால் அதுவும் விலைப்படாமையால் திருப்பணிக்குமுட்டுப்பாடுவாராமல் சந்நிதியிற் குவித்தெரிக்கத் தாம் குறித்தகாலவளவைக்குச் சரிவாராமையால் தமதுகைகயைத்திரித்தெரித்துச் சிவகதிபெற்றனர் என்பதுபுராணவரலாறு. (கஅ)

தாவோமத் தானீசந் தாம்போய்க்கதிநாளைப்
போவோமென் பார்சேர் புலியூரோ—மாவாகச்
சம்புவைச்செய்தேமுனிந்தார் தந்தவத்திசாயவில்லில்
அம்புவைச்செய்தேமுனிந்தாராரவு.

இ - ள். தாவு ஓமத்து ஆல்—(தில்லைவாழந்தணர் வளர்த்த) வேள்வித்தீயினால், ஈசம் தான்போய்—புலைத்தன்மை சழிந்து, நாளைப்போவோம் என்பார்—(சிதம்பரத்திற்கு) நாளைக்குச் செல்வோம் என்றகாரணத்தால்வந்த திருநாளைப்போவார் என்னுந் திருநாமமுடையநாயனார், கதிசேர் — முத்தியடைதற்கு எல்லையாகிய, புலியூர்—புலியூரானது, சம்பு ஐ—நரியை, மா ஆகசெய்து—குதிரைகளாகச்செய்து, முன் — முற்காலத்தில், ஈந்தார்—(அரிமருத்தனபாண்டியனுக்கு) தந்தவரும், தந்த—(சமணர்கள்) ஏவிய, அத்திசாய—யானையிறக்க, வில் இல்—கோதண்டத்தில், அம்பு வைச்சு ஏவிஅம்பினை யேறிட்டுக்கோபித்தவருமாகிய இறைவர், ஆர்வு—தங்குமிடமாம்.

ஆதனூரில் புலைச்சேரியர் செய்ததவத்தால் திருவவதாரஞ்செய்த நந்தனார் என்பவர் சிவநேயமுடையவராய்ச் சிவால

யங்களிலிருக்கும் பேரிகைக்குத் தோலிட்டு வார்பிசித்தலமுதலான திருப்பணிகளைச்செய்து சிதம்பரம்போய் நடேசனைத்தரிசனஞ்செய்ய வேண்டுமென்னும் ஆசைமுனைகச, இரவெல்லாந்துயிலாது விடிந்தபின்பு, அவ்வெல்லையிற்போவது நமதுகுலத்துக்கு ஒவ்வாதாதலால் போகலாகாதென்று நின்றுவிடுதலும், நாளைப்போகலாமென்று சிந்தித்தலுமாயிருந்து, ஒருநாள் சென்று ஊரெல்லைக்குச் சமீபமாய்ப்பாயங்குநடக்கும் வேள்விகளை நோக்கி யினிப்போகலாகாதென்று இரவும் பகலும் அவ்வெல்லையைப் பிரதக்ஷிணஞ்செய்து நமக்கெப்போது தரிசனங் கிடைக்குமென்று தளர்ச்சியடையும்போது இறைவர் திருவுளமிரங்கி யந்தணர்களுக்குக் கட்டளையிட, அவ்வந்தணர்கள் உபசாரத்துடனழைத்துத் தென்றிருமதிலுக்குட்புறத்தில் நடேசர் சந்நிதிக்கு நேராகத்தீயமைக்க, நாயனார் மூழ்கிச்சடைமுடி உபவீதம் விளங்கத் தவமுனிவராயெழுந்து சிற்சபைக்குச்சென்று தரிசித்து முத்தியடைந்தாரென்பதும், அரிமருத்தனபாண்டியன் குதிரைவாங்கக் கொடுத்த பொருளையிறுக்க, வாதவூரடிகளை யொறுத்தற்கிரங்கி நரிகளைக் குதிரைகளாக்கிக் கொடுத்தருளினர் என்பதும், விக்கிரமபாண்டியனோடு போர்செய்தற்கு அஞ்சிக் காஞ்சித்திருநகரையாளும் ஒருசோழன், தனது ஆசிரியர்களாகிய சமணர்களை யருவித்து ஆபிசாரவேள்வியொன்று செய்து மதுரைத்திருநகரையழிக்க யானையொன்றையேவ, அதனையுணர்ந்து சிவபெருமானது திருவடிகளை யப்பாண்டியன் சரணடைந்தனன், அதற்கு இறைவர் வேடுவத் திருவுருக்கொண்டு அந்தயானையை யெய்தனர் என்பதும் புராணவரலாறுகள். சந்தார் குறுக்கல் விகாரம். வைத்து வைச்சுமரூஉ ()

சிற்கனத்தற்சொருபச்சீரகத்தைச்சேர்ந்தனுமுன்
புற்கையிட்டுப்பெம்மபுலியூரோ—நற்கொடிக்கோர்
தாயுமானார்கொடியார்தங்கள்வினைத்தீக்கொடியா
பாயுமானார்கொடியார்பற்று.

இ-ள். சிற்கனம் தற்சொருபம் — ஞானகாசமாகிய சொருபமாயுள்ள சிவத்தின், சீர் அகத்துறை—பொலிவமைந்த

அங்ஙனம் உயர்த்திக்கூறுதல் பிறவிடங்களில் உண்டெனினும் இவ்விடத்தில் உயர்த்தியதன்று; தானொருவன் கடவுளையறிந்து அன்புகூர்ந்து வணங்கி அப்பயனைத் தான் அடைதலினும் சிருஷ்டிதொடங்கித் தன கோத்திரத்தாரையுந் தன்னொடுகூட வணங்கி அவர்க்கும் அப்பயனை அடைவித்தலே சிறந்ததெனக் கருதிச் சான்றோரெல்லாந் தொன்றுதொட்டு இவ்வாறு கூறிவருவது [illegible]மரபாமென்க. [மக.-பழமை.] என்னெனின்;-"ஏகதந்த விநாயகனடி[illegible]ராம்", "வத்தி வேதத்தின தொழுவோ [illegible]", "சரணவாரிசம[illegible]தலைக்கொள்வாமரோ", "மலரடி சென்னி வைப்பாம்" என இவ்வாறு [illegible]வை அளவில வெனக. கழ[illegible]வாமனை [illegible]யைக்க. இதற்கு - ய[illegible]என்னுந் தோன்றாஎழுவாய் வருவிக்க. [illegible] இகக்கும் எனப்பிரித்[illegible]ல்லநாள் ஒரிஇயின என்றார் [illegible]; கையைத்தனையால் அமைந்த கொன்றைப்பூமாலையென்று கருத்துக்கூறுவாருமுளர். கடுக்கையென்னும் கொன்றைமரத்தின்பெயர்-அதன்மலர்க்கு ஆகுபெயர். சாப்பூங்கடுக்கையான்-கடுக்கைப்பூச்சரத்தாலான மாலையையுடையவன். சரப்பூங்கடுக்கை-மாலையாகப்பூக்குங் கொன்றையுமாம். ஈ[illegible]ன் - பகுதி. கற்பகவிருட்சம்போல வேண்டுவார்வேண்டுவனவற்றைக் கொடுத்தலை ஈந்தருளுந் தன்மையராதலின், கற்பகமாதலைத் தம்பெயர்களாக்கொண்டு விநாயகக்கற்பகமென்று பெயர். எல்லா அவயவங்களுமிழந்தன்மையாகிய தலையானைத்தலையாயிருத்தல்பற்றி, விநாயகக்கடவுளைக் குஞ்சரமென்றார்.

நூல்.

க.—(இ - ள்.) சொல் செறி - சொற்கள் நிறைந்த, வேத அந்தம் - வேதத்தின்முடிவாகிய உபநிடத்திற் கூறப்படுகிற, சுடர் - ஒளியையுடைய, தகர வித்தையது ஆம - தகரவித்தையதாகிய, பொன் சபை - பொன்னம்பலம், நின்று - நிலைபெற்று, ஓங்கும் - உயர்ந்து இருந்தற்கிடமான, புலியூரே-புலியூரானது,—முன் - முன்னொருகால் [illegible], சமனை - யமனை, வீசு - உதைத்தருளின, பதத்தால் - திருவடியா[illegible]த்தார் - திருநடனஞ்செய்தருளினவரும், வில் கொண்டு - (காண்டீவம் [illegible]னும்) வில்லைப் பிடித்துக்கொண்டு, அமர் விளைத்த - போரைச்செய்த, பாசுபதத்தான்-(தம்மிடத்துப) பாசுபதாஸ்திரத்தைப்பெறும் அருச்சுனனால், அடித்தார் - அடிக்கப்பட்டவருமாகிய சிவபிரான, பற்று - விரும்பியெழுந்தருளியிருக்குந் தலமாகும்; (எ - று.)

இப்பிரபந்தத்திலுள்ள பாட்டெல்லாம் (கலம்பகங்களில்வரும் பதியென்னுந்துறைபோல) முன்னிரண்டடிகளில் ஊர்ப்பெயரும் வருணனையும், பின்னிரண்டடிகளில் தலைவன்பெயருமகிமையுமாக அமைக்கப்பட்டுள்ளனவென அறிக. ஊழ்வினையாற் பதினாறுவயதுபெற்ற மிருகண்டுபுத்திரராகிய மார்க்கண்டேயரென்பவர், கூற்றுவன்வந்து காலபாசத்தாற்கட்டியிழுக்குங்காலத்துப் பரமசிவனைச்சரணமடைய, அப்பெருமான யமனைக்காலாலுதைத்துத் தள்ளி முனிகுமாரருக்கு என்றும்பதினாறாகத் தீர்க்காயுசுகொடுத்தருளினரென்பதும், பாசுபதம்பெறத் தவஞ்செய்கின்ற அருச்சுனனை அழிக்கத் துரியோதனனேவலாற் பன்றிவடிவாய்வந்த மூகாசுரன்மேல் வேடவடிவாய்வந்த சிவபெருமான் அம்பெய்ய, அது பிளக்குமுனனே அருச்சுனன் அம்பொன்றெய்து வராகத்தைவிழுத்த, அதுகாரணமாக அவ்விருவருக்கும உண்டான போரிற் பரமசிவன் எதிரியினவில்நாணியையறுக்க, பார்த்தன் அவ்விற்கழுந்தால் கடவுளதுமுடியில் அடித்தவளவிலே, சிவபிரான் தமது நிசரூபத்தோடு காட்சிகொடுத்து அவன்வேண்டுகோளின்படி பாசுபதாஸ்திரத்தையும் வில் அம்பறாத்தூணி முதலியவற்றையும் அருளிப்போயினரென்பதும் இச்செய்யுளிற்குறித்த கதைகள். இவற்றால் முறையே கடவுளது அடியவர்க்கெளிமையும், அமரர்க்கருமையும விளங்குகின்றன. இவற்றுள்

முத்தியை, சேந்தன் உம்—சேந்தனாரும், முன்—முற்போழ்தில் பற்கை இட்டு—புல்லரிசியாலமைந்த கூழினையூட்டி, பெற்ற—(அதனால்) அடைந்த, புலியூர்—புலியூரானது, ஓர் நல் கொடிக்கு—அழகிய பூங்கொடிபோன்ற ஒரு வணிககுலப்பெண்ணுக்கு, தாயும் ஆனார்—அன்னையுமாய் வந்தவரும், கொடியார் தங்கள்—கொடுமையாளரது, வினை நீங்கு ஓடியார் — தீவினையையொழிக்காதவரும், பாயும் ஆன் ஆர் கொடியார்—பாய்ந்துசெல்லும் இடபமெழுதிய கொடியையுடையவருமாகிய இறைவர், பற்று—அன்புகூர்ந்திருக்குமிடமாம்.

சேந்தனார் என்னுந் திருநாமமுடையவர் சிவநேயம் பூண்டு சிவனடியவர்க்கு உணவருத்தி யில்லறம் வழுவாது நடக்குங் காலையில் வறுமை மேலிட உணவில்லாது மக்கள் வாடுதலை மனைவியார் நோக்கி மங்கலநாணவிழ்த்து, இதனை விற்றாயினும் உணவிற்கு வேண்டும்பொருளைக்கொள்கவெனத் தமது நாயகன் கையிற்கொடுக்க, அச்சேந்தனாரும் அதுபெற்று மாறிப் புல்லரிசிகொண்டு தம்மனையாள் கையிற்கொடுத்தனர், அவர் அதுபெற்றுத் திருவமுது அமைத்துக் கணவர்க்குணர்த்தச் சிவபூசனை முடித்து வரும்போது நடராசர் ஓர் சிவனடியார் திருவுருக்கொண்டெழுந்தருளி யெமக்கு ஆற்றக்கூடாத பசிவந்தது. அதைத் தவிர்க்கவேண்டுமெனக்கூற, தமது மக்கள் பசியும்நோக்காது அவர் பசியாற்றக் கூழுணவை யூட்ட முற்றுமுண்டு அவர்கள் பசியையு மாற்றி முத்திதந்தனரென்பதும், திரிசிரபுரத்தில்வாழும் தநகுத்தனென்னும் வணிகன், காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள அரதநகுத்தன் மகளை மணம்புரிந்து வாழுங்காலையில் அவன் மனைவியார் சிவநேயம்பூண்டு சிராமலைப் பெருமானை வழிபட்டொழுகுநாளில் கருப்பம்வாய்ந்தனர், இதனைக்கேள்வியுற்ற அரதநகுத்தன் மனைவி காயமுதலிய மருந்தும் சிற்றுணவுகளும் அமைத்துச் சிலதியர் தலையிலேற்றித் திரிசிரபுரத்திற்கு வரும்போது, பெருமழையால் காவிரிநதி பெருக்கெடுத்துக் கரைவழிந்து வழிமறிக்க அங்குத் தங்கினள், பேறுகாலங் கிட்டியதாதலால் இறைவர் அரதநகுத்தன் மனைவியைப்போலத் தமதிச்சையால் திருவுருக்கொண்டுகாயமுதலியவற்றைத் தோழி

யர் தலையிலேற்றித் தள்ளாடிவழிநடந்த பேரிளைப்புடையவ போல வேசாறித் தம்மகளில்லத்திற்குவந்து உச்சிமோந்து மன ங்குளிரப்பேசி மருந்துவும்பார்த்தனா என்பதும் புராணவரலா றுகள். தத் அது, சிற்சகனமாகிய அது என்பதுபொருள். தந்தையாதலுமன்றி யெனநிற்றலால் உம்மை இறந்ததுதழீஇய உயர்வுசிறப்புப்பொருட்டு (உ0)

விண்டலம்மேபோற்றும்விராட்புருடனுரிதய
புண்டரிகமானபுலியூரோ—சண்டன்வலி
மைத்தாமமொழிவித்தா வதுதொடுமார்க்கண்டருக்கன்
பைத்தாம்பொழிவித்தார்பற்று.

இ - ள். விண் தலம் போற்றும்—விண்ணுலகம் வணங் கும், விராட்புருடனுர்—விராட்புருடனாது, இதயம்புண்டரி கம் ஆன—இதயதாமரையாயுள்ள, புலியூர் — புலியூரானது, சண்டன்—இயமன் (வீசிய) வலிமைதாம் பு—வலியபாசத்தை ஒழிவித்து—(வீழாமல்) ஒழித்து, ஆர்வத்தொடு—விருப்பத்தோ டு, மார்க்கண்டருக்கு—மார்க்கண்டேயருககு, அன்பு ஐ—அன் பினை, தாம்பொழிவித்தார்—தாம்செய்து காத்தருளிய இறைவ ர், பற்று—அன்புகூர்ந்திருக்குமிடமாம்.

அரைக்குமேல் எழுலகும் அரைக்குக்கீழ் எழுலகும் திருவு ருவமாக வுடைய விராட்புருடனுர்க்குச் சிதம்பரம் அநாசததா னம் என்பதும், திருக்கடவூரில் தம்மை வழிபடும் மார்க்கண் டேயர்மேல் இயமன் கோபித்துவீசிய பாசத்தையொழித்து அ வனைவதைத்து இவரைக்காத்தனர் என்பதும் புராணவரலாறு கள். அன்பு ஆசைக்குக்காரணமாதலால் ஆர்வத்தொடு என் றார். மிருககண்டேயர் புத்திரர் மார்க்கண்டேயர் இது தத்திதா ந்தபதம். (உக)

குஞ்சிதத்தாள்கண்டவரைக்கும்பெற்றோர்கள்விரு
புஞ்சிவவீடெய்தும்புலியூரோ—செஞ்சடையிற் [ம்
சின்னவிளம்பிறையார்தில்லைமறையோருருநாம்
என்னவிளம்பிறையாரில்.

இ - ள். குஞ்சிதம் தாள் கண்டவர் ஐ—மேலெடுத்தவளைந்த திருவடியைத் தரிசித்தவர்களை, கும்பிட பெற்றோர்கள்—வணங்கப்பெற்றவர், விரும்பும் சிவவீடு—விரும்புஞ்சிவகதியை எய்தும் புலியூர்—அடைதற்கேதுவாயுள்ள, புலியூர்—புலியூரானது, செஞ்சடை இல்—செவந்தசடாபாரத்தில், சின்ன—உருவிற் சிறிய, இளம்பிறையார்—இளஞ்சந்திரனையணிந்தவரும் தில்லை மறையோர்—தில்லைவாழந்தணராது, உருநாம் என்ன—திருவுருவம் நாமென்று, விளம்புஇறையார்—கூறும் இறைவருமாகிய பெருமானுடைய, இல்—வாழும்படைவீடாம்

இரணியவன்மனை வியாக்கிரபாதர் கட்டளையால் அந்தர்வேதியிலிருந்த திருவுடையந்தணர் மூவாயிரவரையும் வணங்கித் தேர்மேலேற்றிக்கொண்டு தில்லையையடைந்து அந்த வியாக்கிரபாதனையும் பதஞ்சலியானையும் வணங்கித் தமதுகௌடதேசத்தில் நிகழ்ந்த செய்தியைக் கூறித் திருவுடையந்தணர்வந்ததையுங் கூறினர், அம்முனிவரிருவரும் எதிர்கொள்ள, அவ்வந்தணர்கள் தேரினின்றிறங்கித் தங்களை யெண்ணிக்காட்ட மூவாயிரவர் என்னுந்தொகையில் ஒருவர் குறைந்தமையால் திகைத்து நிற்க, நடராசப்பெருமானார் இவ்வந்தணர்களெல்லாரும் நம்மையொப்பார், நாமிவரையொப்போம், ஆதலால் நாமிவருள் ஒருவர் என அருளிச்செய்தனர் என்பது புராணவரலாறு. சின்ன—சிறுமையென்னும் பண்பின்றிரிபு (௨௨)

தேவமறையாகமங்கடென்கயிலையென்றுதொழப்
பூவுலகிலோங்கும்புலியூரே—மூவுலகும்
வந்துதிக்குமுன்புணர்வார்வாழ்வருளவம்பரம்பா
தந்துதிக்குமுன்புணர்வார்சார்பு.

இ - ள். தேவமறை ஆகமங்கள்—தெய்வத்தன்மையையுடைய வேதங்களும் ஆகமங்களும், தென்கயிலை என்று தொழ—தென்கயிலையென்று வணங்க, பூ உலகு இல்—நிலவுலகில் ஓங்கும் புலியூர்—சிறந்துவிளங்கும் புலியூரானது, மூ உலகும்—சுவர்க்கமத்திய பாதலம் என்னும் மூன்றுலகும், வந்து உதி

ச்கு முன்—வந்துதோன்றுதற்குமுன்னே, புனர்—தம்மோடு பேதமாயுள்ள, வாழ்வு அருள—எல்லையில்லாத பேரின்ப வாழ்வினை யருள, அப்பர்—திருநாவுக்கரசுகள், தம்பாதம்—தமதுதிருவடிகளை, துதிக்குமுன்பு—துதித்தற்குமுன்னம், உவந்தார்—(அத்துதியைத் திருச்செவியில்) ஏற்ற இறைவர், சாரும்பு—சார்ந்துவசிக்குமிடமாம்.

வேதங்களிலும் ஆகமங்களிலும் தில்லையைத் தென்கயிலையென்று கூறுதலால் வேதமறையாகமங்கள் தென்கயிலையென்றுதொழ எனவும், பேரின்பவாழ்வு சேர்தற் கேதுகளில்லாதாதலால் மூவுலகும் வந்துதிக்குமுன்புனர் எனவுங் கூறினார். அம்மூன்றிணையொருமையும்மைத் தொகையாதலால் மறையாகமங்கள் என இறுதியிற் பன்மைவிகுதிபெற்று வந்தன. (உரு)

நன்மாதவத்தொருவன் றொடங்கும்படிக்கிரங்கிப்
பொன்மாரிபெய்யும் புலியூரே—முன்மார்பிற்
பன்னாகத்தார் பகர்ந்திட்ட நாட் செங்கல்லைப்
பொன்னாக்கத் தந்தார் புரி

இ - ள். நல் மாதவத்து ஒருவன்—மிகுவில்லாத பெரிய தவத்தைப்பூண்ட ஒருமுனிவன், தொடங்கு படிக்கு—தான் மேற்கொண்ட (திருப்பணியை) முட்டின்றி முடித்தற்கு, இரங்கி—கருணைகூர்ந்து, பொன்மாரி—பொன்வருஷத்தை, பெய்யும்—சொரியும், புலியூர்—புலியூரானது, மார்பு இன் முன்—திருமார்பின் முன்னே, பன்னாகம்—பலசர்ப்பங்களாகிய, தந்தார்—உபவீதத்தையுடையவரும், பகர்ந்திட்ட நாள் ஆக—அம்மேற்பாடிய பாகரங்களுக்காக, செங்கல்தன்னை—செங்கல்லை, பொன் ஆகத் தந்தார்—பொற்கட்டிகளாகத் தந்தவருமாகிய இறைவர், புரி—வாசம்செய்யும் திருநகராம்.

ஒருமுனிவர் சிதம்பரத் திருப்பணியை மேற்கொண்டு முடித்தற்கு இடையில் பொருளில்லாமையால் வருந்துங்காலையில் இறைவர் திருவுளமிரங்கிப் பொன்வருஷஞ் சொரிவித்தார். என்பது ஓர் வரலாறு. திருவாரூரில் திருப்பங்குனி யுத்திரத்தி

குமாரவிற்குப் பார்வையார் குறைமுடிக்கத் திருப்புகலூர்க்குச் சென்றருளி யிறைவர் திருவடிவணங்கித் திருப்பதிகம் பாடித்த மது குறைமுடி யாமையால் திருமடத்திற்குச் செல்லாது திருமு ற்றத்தில் ஒரிடத்திருக்கும்போது, இறைவர் அருளால் சிறிது நித்திரைவர அங்குக் கோயிற்றிருப்பணிக்காகவந்த செங்கலைத் தலையணையாக அடுக்கி யுத்தரீயப்பட்டாடையை விரித்துத்திரு க்கண்டுயிலும்போது அடியார்களுந் துயில்கொள்ளச்சிறிதுபோ து சென்று துயிலுணர்ந்து, அவ்விறைவரருளால் செங்கல்பொ ன்னாக இருக்கக்கண்டு மகிழ்கூர்ந்தனர் என்பது புராணவரலா று. தமிழ்ச்சாக ஆக என்பது குவ்வுருபின்மேலவந்த நான்கா மவேற்றுமைச் சொல்லுருபு நாடும் டிக்கு நாடற்கு எனக் கொள்க (௬ ௯)

நாமகடன்கீழ்த்திசையினாட்டுங்குணதிசையிற்
பூமகளர்ச்சிக்கும்புலியூரோ—தாமலதோர்
ஆதரவில்லாவாழ்த்தடியார்தமக்கங்கையிற்பொற்
பூதரவில்லார்வாழ்புரம்

இ - ள். தென்கீழ்திசை இல்—தென்கிழக்குத்திசையி ல், நாமகள்—கலைமகளும், நாட்டும்—எடுத்துக்கூறும், குணதி சையில—கீழைத்திசையில, பூமகள்—திருமகளும், அர்ச்சிக்கு ம—பூசித்துப் பேறுபெறும், புலியூர்—புலியூரானது, வாழ்த்து அடியார் தமக்கு—தம்மைவாழ்த்தும் அடியவர்களுக்கு, தாம் அ ல்லது—தாமல்லாமல், ஓர் ஆதரவு இல்லார்—ஓர்பற்றுக்கோடி ல்லாதவரும், அங்கை இல்—தமது திருக்கரத்தில், பொன்பூத ரம் வில்லார்—பொன்மலையை வில்லாக வுடையவருமாகிய இ றைவர், வாழ்புரம்—வாழ்ந்திருக்குமூராம்.

தம்மைவாழ்த்தும் அடியார்களுக்குத் தாம்பற்றுக்கோடா யுள்ளார் என்பார் தாமலதோர் ஆதரவில்லார் என்றார். (உரு)

வாசனைசேர்மாமலரோன்மாமறைமூவாயிரவர்
பூசனைசெய்தேத்தும்புலியூரோ—ஓசைதரு

பாற்சங்கரியார்பதுமத்திருக்கணிந்தோர்
பாற்சங்கரியார்பதி.

இ - ள். வாசனைசேர்—வாசமிக்க, மாமலரோன்—பெருமையமைந்த தாமரைமலரில் வசிக்கும் பிரமனும், மா—மகத்துவமுடைய, மறைமூவாயிரவர்—திருவுடையந்தணர் மூவாயிரவரும், பூசனைசெய்து—பூசித்து, ஏத்தும்—வணங்கும், புலியூர்—புலியூரானது, ஓசைதரு—கோஷிக்கும, பால்சங்கு—வெள்ளியபாஞ்சசன்னியத்தையேந்திய, அரியார்—திருமால் (பேர்த்துச்சாத்திய) பதுமம் திருக்கு—திருத்தாமரையாகியகண்ணினை, அணிந்து—தரித்து, ஓர்பால்—ஓரிடப்பாகத்தில, சங்கரியார்—உமாதேவியையுடையவர், பதி—வாழுந் திருநகராம்.

பிரமன் அந்தர்வேதியில் தாமசெய்யும் வேள்வியைத் திருவுடையந்தணரைக்கொண்டு முடித்துப் பேறுபெற்றமையால் பிரமனொடுகூட்டியெண்ணினார். சலந்தராசுரனை வகிர்ந்த சக்கரத்தை விரும்பித் திருமால் சிவபெருமானைப் பூசித்துவருங்கால், ஓர்நாள் அவரன்பைச் சோதித்தற்பொருட்டு அருச்சித்தற்குரிய ஆயிரந்தாமரையுள் ஒன்றைமறைத்தருள, அதற்குப் பிரதியாகத் தமது திருக்கண்ணை இடந்துசாத்தினார் என்பது புராணவரலாறு. எண்ணும்மைதொகுத்தல் (உசு)

ஓதுபசியாலெருவையுண்ணவிறக்குங்கயற்கப்
போதுகதிநல்கும்புலியூரோ—பூதிவெகு
வாயிடுமாகத்தனார்வன்கமர்வாய்மாவடுவை
வாயிடுமாகத்தனார்வாழ்வு.

இ - ள். ஓது பசி ஆல்—சொல்லுந் தீப்பசியினால் எருவை உண்ண—பருந்து கவ்வியுண்ண, இறக்கும் கயல்கு—உயிர்விடுங் கயல்மீனுக்கு, அ போது—அக்காலையில், கதி நல்கும்—முத்திதரும், புலியூர்—புலியூரானது, பூதி—திருநீற்றை, வெகுவாய் இடும்—மிகவுஞ்சண்ணித்த, ஆகத்தனார்—திருமேனியையுடையவரும், வல் கமர் வாய்—வலிய கவரில், மாவடுஐ—மாவின் வடுவினை, வாய் இடும்—திருவாயிலிட்டெழுந்த, மாக

சதஞரா—பெரியகடவுளரும் ஆகிய இறைவர். வாழ்வு—வாழும் இடமாம்.

ஒருபருந்து பசியால் ஒருகயல்மீனைக்கவ்வித்தில்லையினெல்லையில் வந்து தின்னும்போது, உயிர்விட்ட அக்கயல்மீனுக்கு நடராசப்பெருமானார் முத்தி தந்தருளினார் என்பதும், கணமங்கலமென்னும் திருப்பதியில்வேளாளர்குலத்தில் திருவவதாரஞ்செய்து சிவநேயம் பூண்டொழுகும் அரிவாட்டநாயனார் இறைவருக்கு நைவேதனஞ் செய்யும்படி செந்நெல்லரிசி, செங்கீரை, மாம்பிஞ்சு இவைகளைத் திருக்கோயிலிற் கொண்டுபோய்க்கொடுக்கும் நியமம்பூண்டொழுகுநாளில், இவரன்பினை யுலகினரறிந்து உய்தற்பொருட்டுச் செல்வங்குன்றப் பெருமானார் கடைக்கணித்தலால், கூலிக்கு நெல்லரிந்து தாம்கொண்ட திருப்பணியைக் கைக்கொண்டொழுகும் நாளில், ஓர்நாள் அரிசிமுதலிய வற்றைத் திருக்கூடையி லெடுத்துக்கொண்டு சென்றருளும் போது காலிடறி நிலவெடிப்பில் யாவுங் கவிழ்ந்துவிட, மனம்வருந்தி அரிவாளினால் தமது கழுத்தை யரியத்தொடங்கும் போது, அவ்வெடிப்பின் வழியே திருவுளமிரங்கி யிறைவர் திருக்கரநீட்டி யவர்கையைப் பிடித்தருளியது மன்றிச்சிந்திய அப்பொருளினை நைவேதனங்கொண்டது தெரியும்படி மாம்பிஞ்சினைக்கடித்த ஓசையும் அவர் செவிக்குப்புலப்படுத்தியருளினார் என்பதும் புராணவரலாறுகள். (உ௭)

பத்தரைக்கொண்டே பேசாப்பாவைதனைப்பேசுவித்துப்
புத்தரையாட்கொள்ளும்புலியூரே—முத்திதரும்
பஞ்சாக்கரனார்பணிவார்வினைபறன்முன்
பஞ்சாக்கரனார்பதி.

இ - ள். பத்தர் ஐ கொண்டு—வாதவூரடிகளால், பேசாதபாவை தன் ஐ—மூங்கைப்பெண்ணினை, பேசுவித்து—பேசச்செய்வித்து, புத்தர் ஐ ஆட்கொள்ளும்—புத்தசமயிகளையடிமைகொண்டருளிய, புலியூர்—புலியூரானது, முத்திதரும்— (விதிவழி யுச்சரிப்பவர்களுக்கு) பரகதி தந்தருளிய, பஞ்சாக்கரனார்-ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யுடையவரும், பணிவார் வினை—தம்மை

வணங்கும் அடியவர் கன்மமலத்தினை, அழல் முன் பஞ்சு—தீயி லெதிரப்பட்டபஞ்சுப்போல, ஆக்கும் அந்நார்—செயசாருநர்வோரு ம் ஆகிய இறைவர், பதி—திருநகராம்.

இலங்கையினின்றும் சிதம்பரத்தைப் புத்தபள்ளியாக்கவ ந்த புத்தர்கள் தில்லைவாழ் திருவுடையார் தம்மோடு வாதில்வெ ல்ல வழைக்க, அவர்கள் நடராசப்பெருமானார் கட்டளையின்ப டிவாதவூராளிகளுக்குச் சுணர்த்த பாதஅவ்வாதவூரப் பெ ருமானார் அவர்களை வாதில்வெல்ல, அதனையுணர்ந்த சோழன்த ன்புத்திரியின் மூங்கை நோயைத் தவிர்க்குஞ் சமயமே மெய்ச் சமயமென் றங்குவிடுக்க, அப்புத்தர்கள் மணிமந்திராதிகளால் தீர்க்க முயன்றுந் தீராதாக, அவ்வாதவூரடிகள் திருநீறு தந்தரு ளித் திருச்சாழலுக்கு அம் மூங்கைப்பெண் விடைதரும்படிசெ ய்வித்தருளினார் என்பது புராணவரலாறு. பாவைஉவமையா குபெயர். (உஅ)

கண்ணுறுபோதும்பவத்தைக்காய்ந்தருளுமீரைந்து
புண்ணியதீர்த்தஞ்சேர்புலியூரோ—பெண்ணொருபா
கத்திருந்தார்கட்டறியாரைகைகூப்பிநின்றுதுதிக்
கத்திருந்தார்கட்டரியார்காப்பு.

இ - ள். கண்ணுறுபோது உம்—(ஆன்மாக்கள்) கண்க ளாற் பரிசிக்கும் பொழுதிலும், பவத்து ஐ காய்ந்து—பிறப்பி னையொழித்து, அருளும்—சிவபுரத்தைத் தந்தருளும், புண்ணி யம்—புண்ணியசொரூபமாகிய, ஈரைந்து தீர்த்தம்சேர்—பத்துத் திருத்தீர்த்தங்களமைந்த, புலியூர்—புலியூரானது, பெண்—உ மாதேவியாரின், ஒருபாகத்து இருந்தார்—வலப்பாலிலமர்ந்தவ ரும், கட்டுஅரியார்—பாசம்ஒழிந்த அடியவர், கைகூப்பி நி ன்று துதிக்க—கைகுவித்து நின்றுதுதிக்க, இருந்தார்கள் தரி யார்—புறச்சமயிகளிடத்தில் வசிக்காதவருமாகிய இறைவர், காப்பு—காவல் வாய்ந்த இடமாம்.

அடியவரிடத்து வசிப்பாரேயன்றி யல்லாரிடத்து வசியா ர என்பார் இருந்தார் கட்டரியாரென்றார். கனகசபைக்கு வட க்கில் சிவகங்கையும், திருக்கோயிலுக்கு வட கிழக்கில் குய்யதீர்

த்தமும, திருக்கோயிலுக்குத் தெற்கில் புலிமடுத்தீர்த்தமும், திருப்புலீச்சரத்திற்கு முன் அனந்ததீர்த்தமும், திருவனந்தேச்சரத்திற்கு மேற்கில் நாகசேரித்தீர்த்தமும், திருக்காளாஞ்சேரியில் பிரமதீர்த்தமும், பிரமசாமுண்டி திருக்கோயிலிற்குமுன்சிவப்பிரியை தீர்த்தமும், சிவப்பிரியைக்குத் தென்கிழக்கில் திருப்பாற்கடலும், கனகசபைக்குக் கிழக்கில் பரமானந்தக் கூபமும் இருத்தலால் எனைந்து புண்ணிய தீர்த்தஞ்சேர் என்றார். நீராடலும் பரிசித்தலும் அன்றியெனை நிற்றலால் உம்மை இறந்தது தழீஇய வுயாவு சிறப்புப்பொருட்டு அரியாரென்னும் குறிப்பு வினைமுற்றில் அருமை இல்லாமை மேல் நின்றது. கண்ணுறு போதே எனப்பாடமோதிப்பார்க்கும்போதே எனப்பொருள் கூறில் பார்த்தவொன்றேயமையும் அதலால் எச்சவும்மை தந்தனவுணர்க.

முத்தீயிடையினவிமுந்தச்சொரிந்துமறைப்
புத்தேளோமஞ்செய்பு லியூர்—மெய்த்தோளின்
மாதுளவனந்தன்வணங்குபதனாகத்தோர்
மாதுளவனந்தன்மனை.

ஞ - ள். முத்தீ இடையின்—வேள்வித்தீயில், அவி—அவிப்பாகத்தை, முந்த சொரிந்து—முற்படச்சொரிந்து, மறைப்புத்தேள—பிரமன், ஓமம் செய்—ஓமஞ்செய்தற்கு எதுவாயிருந்த, புலியூர்—புலியூரானது, மெய்த்தோள் இல்—தோற்றத்தை யுடைய புயத்தில், மாதுளவள்—பெருமையமைந்த துழாய்மாலையை யுடையவனும், நந்தன்—பாஞ்சசன்யமென்னுஞ்சங்கையேந்தினவனுமாகிய திருமால், வணங்குபதன்—வணங்குந்திருவடியை யுடையவனும், ஆகத்து—திருமேனியில், ஓர்மாதுளள—ஒப்பில்லாதஉமாதேவியாரையுடைய, வன்னத்தன்—பஞ்சவன்னங்களையுடையவனுமாகிய இறைவன், மனை-வீடாம்.

முத்தீ வேள்விக்குரிய மூன்றக்கினி. அவையாவன காருகபத்தியம், தக்கணக்கினியம், ஆகவனீயம். கங்கைக் கரையில்அந்தர்வேதியில் பிரமன் ஓர்யாகஞ்செய்யத் தொடங்கி யதனை முடித்தற்பொருட்டுத் தில்லைவனம் அடைந்து சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து திருநடனத்தைத் தரிசித்துத் தில்லைவா

புருதனாகளையுந் தேவர்களையுமுடன்படுத்தி வியாக்கிர பாதனாயினராகக்கொண்டு சென்று வேள்விமுடித்தனன் என்பது புராணவரலாறு. சேர் என்னும் வினைத்தொகை காலங்கரந்தபெயரெச்சமாதலாற் புலியூர் என்னுங் கருவிப்பொருள் கொண்டது புத்தேளபுதுமை, அதுபுதுமையை விளக்குந்தேவர் மேல் நிற்றலாற் பண்பாகுபெயர், நத்தன் வலித்தல்விகாரம் (௬0)

ஓர்கலையெங்கெங்குமுலாவியத்தயாமத்திற்
பூரணமாயொன்றும் புலியூரோ—காரணமாம்
பார்த்தாண்டவனார் பணிந்தாலுமுள்ளன்பைப்
பார்த்தாண்டவனாம் பதி

இ-ள். ஓர்கலை—ஒப்பில்லாத கலை, எங்கும் எங்கும் உலாவி—எந்தெந்தத்திருப்பதிகளிலும் உலவி, அத்தம் யாமத்து இல்—நடுராத்திரியில், பூரணம் ஆய்—நிறைவாய், ஒன்றும்—பொருந்தும், புலியூர்—புலியூரானது, காரணம் ஆம்—திருநடனஞ்செய்தருளுதற்குக் காரணமாகிய, பார்—தில்லைவனத்தில, தாண்டவன்—திருநடனத்தையுடையவனும், ஆர் பணிந்தாலும்—எவர்வணங்கினும் உள் அன்பு ஐ பார்த்து—முறுகியஉள்ளன்பினை நோக்கி, ஆண்டவன்—அடிமைகொண்டவனுமாகிய இறைவன், ஆர்—எழுந்தருளும், பதி—திருநகராம்.

சிதம்பரத்தில் இறைவரருளுருவம் வசித்தருளு மறைந்த தலங்கள்தோறும் அத்திருவுருவத்தின் கலைகளுலாவி அர்த்தயாமத்தில் அவ்வருளுருவத்தில் வந்தொடுங்குவதெனவும், தேவதுருவனும் திருநடனஞ்செய்தற்குப் பொருமையால் பூமிக்கு நடுவாகிய தில்லை பொதுக்குந் தானமாயிருத்தலாலங்குத் திருநடனஞ்செய்தருளினர் என்பதும் புராணவரலாறுகள். ஒன்றும் என்னும் பெயரெச்சம் புலியூர் என்னும் நிலப்பொருள் கொ

(௬௧)

சோதிவடிவம்முடியாய்த்தோன்றுதெவர்க்குமனு
பூதிவெளியாகும்புலியூரோ—மாதெனவங்
கந்தரவல்லாளுளுங்கைக்கொளப்பொற்றுளமிடுங்
கந்தரவல்லாளுளுங்காப்பு.

SWAMINATHAIYAR LIBRARY, TIRUVANMIYUR, MADRAS 6642

மூலாதிவினைசரித்திரத்தால், அனுபவிக்கவேண்டும் பெரு[illegible] கீழ்வினையையும் தன்அடியார்க்குக் கடக்கச்செய்கிற கடவுளாதலேபோற்றல் புலப்படும். உயிர்களுக்குத் தலைவனாதலாலும், விருஷபத்துக்குத் தலைவனாதலாலும் பசுபதியென்று சிவனுக்குப்பெயர்; அவனது சம்பந்தமானது-பாசுபதம்: தத்திதாந்தநாமம். இவ்வாறு - ஒருவனது குற்றத்தைப் பொறுத்து அவனுக்கே அருள்செய்தமைக்குத் திருஷ்டாந்தமாக எடுத்துக்கூறப்படும். முன்-காலமுன. சமன்- ஸமன் என்னும் வடமொழித் திரிபு; (எல்லாவுயிர்களிடத்தும்) சமவுரிமையாகக் காட்டப்படுவனென்று பொருள்: சயாநன் எனனும் வடமொழித்திரிபாயின்-(எல்லாப்பிராணிகளையும்) ஒடுக்குபவனென்றும், யமன் என்னும் வடமொழித்திரிபாயின்-(பிராணிகளைத்) தண்டித்து அடக்குபவனென்றும்பொருள்படும். விசுபதம்-இறக்குங்காலவினைத்தொகை. பாசுபதத்தான், ஆன்-மூன்றனுருபு. சிதம்பரத்தில் நடித்தது, வியாக்கிரபாதமுனிவர் பதஞ்சலிபகவான் என்பவர்க்காக எனக. பற்று - செயப்படுபொருள்விகுதி புணர்ந்து கெட்ட பெயரென்றுவது [illegible] நின்றதொழிலாகுபெயரென்றுவது கொள்க. தங்கும் பேர் - பெயரிசைம், இடப்பெயர் கொண்டது; இனி, பொனசபை யென்று [illegible] - பொனசபை சிறப்பால் தான்சிறப்புப்பெற்றதென்றுமாம். புலியூரென்பதனுள் [illegible] கொள்க. அநாதமைக - அசையாகவாவது, பிரிநிலை தேற்றங்களுள் ஒன்றாகவாவது கொள்க. சொல் சேறு - புகழ் மிக்க என்றுமாம். வேதாந்தம் என்பதற்கு - வேதத்தினைதேர்ந்ததென்று பொருள். தகரவித்தையென்பதற்கு-சிதாகாசம் என்பது தேர்ந்தபொருள்; பிரமபுரமாகிய இச்சரீரத்தினிருக்கும் தகரமாகிய இருதயகமலத்தில் உள்ள ஆகாயம்போலுதலால், தகரவித்தையதாம்பொற்சபை யெனப்பட்டது: தகரம-இதயம், வித்தை - விதலய, உபாசனரூபமானஞானம. பூதாகாசம் போலச் சடமாகாது ஞானவடிவமான ஆகாயமாமெனக. பாசமாகிய இருளையொழித்தலின், சுடர்த தகரவித்தை யென்றார். பொறசபை - பொன்மயமானசபை; கனகசபை. (க)

உ.—(இ - ள்.) தன் கருமம் - தான்பிறந்தசாதிக்கு உரிய (நித்திய நைமித்திக) கருமங்களை, நீத்த - செய்யாதொழிந்த, அன்மதன - அன்மதனென்னும் பிராமணனை, முன் - முன்னொருகாலத்தில், நடம் காண - (சிவபிரானுடைய) திருநடனத்தைத் தரிசிக்க, இம்பும் கதியை தந்த - இன்பம[illegible] முத்தியை(அவனுக்கு)க்கொடுத்தருளின, புலியூரே-புலியூரானது,— [illegible], அதி மோகா - கங்காதேவியினிடத்தில் மிகுந்தவிருப்பத்தையுடை[illegible]ரும், அத்தர் - (யாவர்க்கும்) தலைவரும், மா சடையார்-பெரியசடையையுடையவரும், மோது அலை உப்பு அறு அருள் சாகரத்தர் - வீசுகின்ற அலைகளும் உவர்ப்புச்சுவையுமில்லாத திருவருட்கடலானவரும், மாசு அடையார - (இயல்பாகவே) பாசத்தினின்று நீங்கினவருமாகிய சிவபிரான், சார்பு - சேர்ந்திருக்குமிடமாம்; (எ - று.)

பாண்டிநாட்டிற் பிராமணசாதியிற்பிறந்த அன்மதன் தனதந்தைசொல்லையுங் கேளாமல் தனது சாதிக்கு இன்றியமையாத தொழில்களுள் ஒன்றையுஞ் செய்யாதுவிட்டுக் கொலை களவு முதலிய பெரும்பாவத்தொழில்கள் பலவற்றையுஞ்செய்துகொண்டு பலவிடங்களிலுந்திரிந்து தன்கூட்டத்துடனே சிதம்பரத்துக்குச் சமீபமாகவருகையில், அன்று மார்கழித்திருவாதிரைத்திருநாளாதலால், சுவாமிதரிசனத்திற்குவந்த அடியார்கூட்டங்களோடு கலந்து அவன் சென்று பொன்னம்பலத்தை யடைந்து அங்குச் சிவபிரானுடைய திருநடனத்தைத் தரிசித்து, மீண்டுங் கொடுந்தொழில்களைச் செய்துகொண்டு விந்தியாரணியத்திற் செல்லுகையில், பாம்புகடித்து இறக்க, அவனதுபாதகங்களைநோக்கி யமதூதர்கள் வந்து அவனைக்கட்டியிழுத்துக்

இ - ள். சோதி வரை—ஒளிவாய்ந்த மேருவின், மூமுடி ஆய—மூன்றுசிகரமாய், எவர்க்கு உம் தோன்றாது—யாவர்க்கு ம்புலப்படாமல், அனுபூதி—சிவானுபூதியுடை யவர்க்கே, வெளி யாகும்—புலப்படத்தோன்றும், புலியூர்—புலியூரானது, அங்க ம்—உக்கிய எலும்பினை, மாதுஎன்ன—பெண்ணென்று சொல் ல, சூலவல்லான்—படைக்கவல்ல ஆளுடைய பிள்ளையார், நாள் உம்—எந்நாளும், கைகொள—திருக்கரத்திற் கொண்டொத்தறு த்துப்பாட, பொன் தாளம் இடும்—பொன்னாலமைந்த தாளந் தந்தருளிய, கந்தாம் அல்லான்—திருமிடற்றில் விஷத்தின் கரு நிறமுடைய இறைவர், ஆளும்—உரிமையாகக்கொள்ளும், காப் பு—காவலாகிய இடமாம்

மேருவின் வடசிகரம் திருமூலட்டானமும், தென்சிகரம் கனகசபையும், மேலைச்சிகரம் சேவித்து வழிபடும் கந்திருவர்மு தலியோரிடமுமாய் எனையோர் கண்களுக்குப் புலப்படாது சி வானுபூதியுடையவர்க்கே விளங்கும் என்பதும், திருமயிலையில் வாழுஞ் சிவநேசச்செட்டியார், கபாலீசர்திருவருளால் பிறந்தபு த்திரி தோழிமாருடனே சென்று நந்தவனத்தில் மலர்கொய்யப் பாம்புதீண்டி யிறக்க, ஆளுடைய பிள்ளையார்க்கு உடைமையா கக் கருதியிருந்தமையால் தகனஞ்செய்த சாம்பலை யஸ்தி யோடு எடுத்துக் குடத்தில்வைத்து அந்தப்பெண்ணிருந்த கன் னியாமாடத்தில் வைத்து முன்போலுபசரித்து வரும்போது பி ள்ளையா ரங்குவரத் தெரிசித்துப்பூசிக்க அக்குடத்தை வருவித் து அடைத்த எலும்பினைப் பெண்ணாக்கினார் என்பதும், அந்த ஆளுடைய பிள்ளையார் திருக்கோலக்காவென்னுந் திருத்தலத் திற்கு எழுந்தருளித் திருக்கரத்தா லொத்தறுத்துத் திருப்பதிக ம்ஓதும்போது இறைவர் கருணைகூர்ந்து பொற்றாளம் அருளி னார் என்பதும் புராணவரலாறுகள். (௩௨)

வானவுலகேத்துதுருவாசர்பசியாறவுமை
போனகமளிக்கும்புலியூரோ—ஆனசபை
நம்பத்துவிதத்தார்நாடரியார்மோனத்தார்
நம்பத்துவிதத்தார்நாடு.

இ-ள். வான உலகு—விண்ணுலகம், ஏத்து—துதிக்கும், துருவாசர்—துருவாசமுனிவர், பசி ஆற — பசிதீர்ந்திளைப்பாற, உமை—சிவகாமியம்மையார், போனகம் அளிக்கும்—திருவமுது தந்தருளிய, புலியூர்— புலியூரானது, ஆன— எடுத்த, சாகம்பத்துவிதத்தார்—பத்துவிதத் திருவவதாரமுடைய திருமால் நாடு அரியார்—வராகவுருக்கொண்டு தேடுதற்கு அரியவரும், மோனத்தார்—மௌனநிலையையுடைய சிவயோகிகள், நம்பு—விரும்பும், அத்துவிதத்தார்—அத்துவித வடிவானவருமாகிய இறைவர், நாடு—வாழும் நாடாம்.

துருவாசமுனிவர் தம்பரங்கெதரிசிக்கத் தில்லைக்கு வந்தபோது, வழிநடையிளைப்பால் பசியால்வருந்தித் தமக்குஅமுது எங்குங்கிடையாமையால் கவலையுற்று "எருக்குமுளைத்ததில்லையீசனுமிங்கில்லை" எனவாயெழும்போது சிவகாமியார் ஒருபார்ப்பனச்சிறுமித் திருவுருக்கொண்டுவந்தருளித்திருவமுது படைத்தவுடன் உண்டு பசியாறி "எருக்குமுளைத்ததுஇல்லையீசனுமிங்குண்டு" என்று பாடினர் என்பது ஓர்வரலாறு. சகம்பத்துமச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலபத்திரன், கண்ணன், கற்கி அத்துவிதம் ஆண்டான், அடிமையென்னும் இரண்டிறந்தது. வானமுலகு எனப்பாடமோதி வானமுநிலவுலகும் எனப்பொருள்கூறுவாருமுண்டு ()

வாணகையாற்றீபுரத்தின்வாழ்மூவரைக்காவல்
பூணவளித்தாளும்புலியூரோ—ஆணவத்தாம்
மெய்க்கருத்துவந்தனையான்மிக்குழலாமிகமேகோர்கள்
மெய்க்கருத்துவந்தனையான்வீடு.

இ-ள். வாள்—ஒள்ளிய, நகை ஆல தீ—புன்னகையால் மூட்டிய தீயினால், புரத்து இன் வாழ் மூவர் ஐ—திரிபுரத்தில்வாழுமூவரை, காவல் பூண—(திருவாயில்) காவல்பூண்டுநிற்க, அளித்து—கருணைசெய்து, ஆளும்—அடிமைகொள்ளும், புலியூர்—புலியூரானது, ஆணவத்து ஆம்—ஆணவமலத்தால்வரும், மெய்கரு—சரீரத்தோற்றமாகிய, துவந்தனை ஆல்—பந்தத்

திறல், மிக்கு உழலாமல்—சட்டுப்பட்டு மிகவும் சுழன்றுவருந் தாமல், மிக்கோர்கள்—சிவஞானிகளுடைய, மெய்கருத்து—உண்மையமைந்த மனத்தினை, உவந்த விரும்பிய,அன்னையான்—(அவர்களுக்கு) தாய்போலுள்ள இறைவன், வீடு—வாழுந் திருபடை வீடாம்.

பொன்வெள்ளி இரும்பால் பிரமன்வரத்தாலமைந்த திரிபுரங்களிலும் தாரகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலியென்னும் மூன்றசுரர்களும் அரசியல் செய்து சிவநேயமுடையவராய்த் தேவர்களுக்கு இடுக்கண்செய்து வாழுநாளில, தேவர்கள்வேண்டுகோளால் திருமால் புத்தவேடங்கொண்டு அப்புரத்தில் அம்மூவரையொழிய ஏனையோரையெல்லாம் மயக்கிச்சிவபெருமானுக்குணர்த்த, அப்பெருமானார், அத்தேவர்களமைத்த தேரின்மேல் ஆரோகணித்து அப்புரத்தை நகைத்தெரித்துச்சிவநேயம் வழுவாது நின்ற அம்மூவரையும் திருவாயிற்காவலாளர் ஆகக்கொண்டருளினர் என்பது புராணவரலாறு. ஆணவமலம் கன்மமலத்துக்கு மூலமாதலால் ஆணவத்தாம் என்றார். ஆணவமாம் என்பதற்கு ஆணவத்தாலாகியஎனப்பொருள் கூறுவோர்வேற்றுமைவழியில்அத்துச்சாரியைவேறுதலைநோக்கிலர். ஆணவம், மாஎனச்சொல்வகைசெய்தலிங்கமையாதென்க

சம்பந்தர்க்கந்தணர்கடம்மைச்சிவகணமொப்
பும்பண்பைக்காட்டும்புலியூரோ—அம்புலிவான்
எட்டாகமஞ்சார்ந்தானேத்தமறையோடிருபான்
எட்டாகமஞ்சார்ந்தானில்.

இ - ள். சம்பந்தர் கு—ஆளுடையபிள்ளையார்க்கு, அந்தணர்கள் தம்மை—தில்லைவாழந்தணர்களை, சிவகணம் ஒப்பும்பண்பு ஐ -சிவகணங்களொக்குந் தன்மையை, காட்டும்—புலப்படுத்திய ...ளும், புலியூர்—புலியூரானது, அம்புலி—சந்திரன்தவழும் ...ன் எட்டு—ஆகாயத்தையளாவிய, ஆகம்—திருமேனி, மஞ்...ர்ந்தான்—மேகத்தையொத்த திருமால், ஏத்த—துதிக்க, ... ஓடு—நான்கு வேதங்களோடு, இருபான் எட்டு ஆகமம்—இருபத்தெட்டாகமங்களின், சார்ந்தான்—உட்கிடையாயுள்ள இறைவன், இல்—வாழுந் திருப்படைவீடாம்.

ஆளுடையபிள்ளையார் திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனாருடன் சிதம்பரத்திற்குச் சென்று நடராசப்பெருமானைத்தரிசித்து ஆநந்தபரவசத்தராய் அங்கிருத்தற்கஞ்சித் திருவேட்களத்தில் வசித்திருக்கும் நாளில், பெருமானையருச்சிக்கத்தில்லைவாழந்தணர்கள் என்னபேறு பெற்றார்களோ வென்னுங் கருத்துடையராய்ச் சிதம்பரத்திற்குச் சென்றருளுங்காலையில் அத்தில்லைவாழந்தணர்கள் அப்பெருமானார் திருவருளால் சிவகணங்களாகப் புலப்படத் தரிசித்தனர் என்பது புராணவரலாறு. இருபத்தெட்டாகமங்களாவன—காமிகம், யோகஜம், சிந்தியம் காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கிநேயம் வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் (௩௫)

வைத்தவருளாற்கோவைவாதவூரன்புகலப்
புத்தகத்திற்றீட்டும்புலியூரோ—துத்தியரா
வானத்தமரிந்தார்மாமவுலியாரெழுநா
வானத்தமரிந்தார்வாழ்வு.

இ - ள். வைத்த அருள் ஆல்—தாம்வைத்த திருவருளால், கோவை—கோவைத்திருவாசகத்தினை, வாதவூரன்—திருவாதவூரடிகள், புகல—சொல்ல, புத்தகத்து இல்—தாம்சேர்த்த திருமுறையில், தீட்டும்—எழுதியருளிய, புலியூர்—புலியூரானது, துத்தி—படப்பொறியையுடைய, அரா—பாம்பும், வானத்து—ஆகாயத்தில், அமர்—பொருந்திய, இந்து—சந்திரனும், ஆர்—பொருந்திய, மா மவுலியார்—பெரியசடாமுடியையுடையவரும், எழுநா—எழுநாவையுடைய அக்கினிதேவனது, வான் அத்தம்—பெரியகையினை, அரிந்தார்—தறித்தவருமாகிய இறைவர், வாழ்வு—வாழுமிடனும்.

திருவாதவூரடிகள் திருத்தில்லைவனத்தி லெழுந்தருளியிருக்குங்காலையில், நடராசப்பெருமானார்பாண்டிநாட்டில்அவரொடு முன்பழக்கமுள்ள ஒரு வேதியத்திருவுருவங் கொண்டுவந்து நிற்ப நீர் யாரென்று அடிகள்வினவியபோது நாம் பாண்டிநாட்

டன் வாழ்வுடையோம், உமது தன்மையைக்கேட்டுக் காணவந்தோமென்று கூற, உபசரித்து இங்குவந்த காரணமென்னென்று கேட்டபோது நீர்பாடிய திருப்பாசுரங்களையெழுதவேண்டுமென்னும் விருப்புடையோம் என்றவ்வாறே யெழுதிமுடித்து, ஒரு கோவைசொல்லவேண்டுமென எழுதிமுடித்தனர்என்பதும், தம்மையவமதித்துத் திருமாலை, யாக பதியாகக்கொண்டு நடத்திய தக்கன்வேள்வியில் வந்த தேவகணங்களுள் தீக்கடவுளின் கையை வீரபத்திரக்கடவுளால் தறித்தார் என்பதும் புராணவரலாறுகள். எழுநா—ஏழுநாவையுடையோன் என நிற்றலால் பண்புத்தொகை நிலைத்தொடர். (௩௬)

சீருற்றசரீரிசேக்கிழார்க்காதிமொழி
பூரித்துரைக்கும்புலியூரோ—நீரைக்
கரந்துவைத்தவேணியார்காதினிற்றாவிக்கூய்க்
கரந்துவைத்தவேணியார்காப்பு.

இ - ள். சேக்கிழார்க்கு—சேக்கிழார் நாயனாருக்கு, சீர்உற—சிறப்புமிக்க, அசரீரி—அசரீரியாக, ஆதிமொழி—முதன்மொழியை, பூரித்து—(திருத்தொண்டர்புராணத்தை) முடிக்க, உரைக்கும—எடுத்துத்தந்தருளிய, புலியூர்—புலியூரானது, நீர் ஐ—கங்கையினை, கரந்து (பனித்துளிபோல் அது) ஒளிக்க, வைத்த—வைத்தருளிய, வேணியார—சடாபாரத்தையுடையவரும், காதினில்—திருச்செவியில், தாவிகூய்—தாவிக்கூவி, கரம்துவைத்த—திருக்கரத்தில் கோஷித்துக்கொண்டிருந்த, வேணியார்—மானையுடையவருமாகிய இறைவா, காப்பு—காவலாயுள்ள இடமாம்.

சீவகசிந்தாமணிக் கதையை மெய்யென்று நம்பி வீணாள் போக்கிவந்த சோழன்கடைத்தேற, அடியார் வைபவச்சரிதையை யடைவுபடப் புராணஞ்செய்யத் திருவுளங்கொண்டு சிதம்பரத்திற்குச்சென்று நடராசப்பெருமானை வணங்கித் தமது குறைமுடிப்பான் வேண்ட, பெருமானர் "உலகெலாம்" என அடியெடுத்துத்தந்தருள அப்புராணமுடித்தனர் என்பதும், பகீரதன் தன்மூதாதையர்கள் சுவர்க்கமடையக் கங்கையோர்வை

டுத்தருளவேண்டுமென்று குறையிரப்ப, அக்கங்கை தமது சடா
டவியில் பனித்துளிபோல மறைந்தொழிய வேற்றனர் என்ப
தும், தேவதாருவன முனிவர்களேவ அண்டங்கிழிபடக் கோஷி
த்துவந்த மானை நமது செவியருகிற் கூவு எனத் திருக்கரத்திற்
பிடித்தனர் என்பதும் புராணவரலாறுகள். (௩௭)

வாட்கையசவாணியர்சொன்மாநூலினைப்படிக்கற்
பூட்கையெடுக்கக்கொள்புலியூரே—தாட்கமலப்
போதுளவனத்தன்புருகூதன்போற்றுமந்திப்
போதுளவனத்தன்புரி.

இ-ள். வாள் கை—வாளையேந்திய கையையுடைய, அ
சவாணியர்—அசவாணியர்குலத்தில் திருவவதாரஞ்செய்த திரு
க்கடவூர் உய்யவந்ததேவநாயனார், சொல்—கூறிய, மாநூலின்
ஐ—மகத்துவமமைந்த சைவசித்தாந்தநூலினை, படி (சந்நிதா
னத்தின்) சோபானத்திலமைந்த, கல்பூட்கை—கல்யானையான
து, எடுக்க—எடுத்துத்தர, கொள—அங்கீகரித்த, புலியூர்—புலியூ
ரானது, தாள்—தண்டமைந்த, கமலப்போதுஉள்ளவன்—தா
மரையில் வசிக்கும், பிரமனும், நத்தன்—பாஞ்சசன்யம் ஏ
ந்தியதிருமாலும், புருகூதன்—இந்திரனும், போற்றும்—துதிக்
கும், அந்திப்போது—செக்கர்வானம்போல, உள்ள—இருக்கி
ன்ற, வன்னத்தன்—செந்நிறம்வாய்ந்த இறைவன், புரி—வாழுந
திருநகராம்

திருப்பெரும்பற்றப் புலியூரி லெழுந்தருளியிருந்த திருக்க
டவூர் உய்யவந்ததேவநாயனார் தமது ஞானாசிரியராகியஉய்யவ
ந்ததேவநாயனாரருளிச்செய்த சைவசித்தாந்தநூல் பதினான்க
னுள் முற்பட்ட திருவுந்தியாரி னுட்கிடையை விளங்கக்காட்ட
இந்நூல்செய்தருளிச் சிதம்பரத்திற்குச்சென்று நடராசப்பெரு
மானார் சந்நிதியில் வாசிக்கமுயலும்போது, தில்லைவாழந்தணர்
முதலியோர் சந்நிதானத்தின் படியிலுள்ள கல்யானை இந்நூலை
நடராசப்பெருமானார் திருவடிக்கீழ்வைத்தால் வாசிக்கலாமெ
னக்கூற அதற்குடம்பட்டு அக்கல்யானைமேல் வைத்தனர், அக்

கல்யானை மதம்பொழிந்து செருக்குற்றெழுந்து தன்மேல்வைத்த அத்திருநூலினைத் துதிக்கையாலெடுத்து அப்பெருமானார் திருவடிக்கீழ் வைத்தலால் அந்நூலுக்குத் திருக்களிற்றுப்படியார் எனக்காரணப்பெயராய்த் திருநாமமுவந்தது. இந்நாயனார் தந்துவாயாமரபிற் றோன்றினவர் எனக்கேள்வி. பூட்கைதுவாயத் தசையுடைய கையையுடையதென நிற்றலால் இரண்டாம்வேற்றுமைத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித் தொகைநிலைத் தொடர். உய்யவந்த தேவநாயனார் சிவஞானச்செல்வம்பெற்றவர். ஆதலால் உய்யவந்தோன்றன் வாட்கையசவாணிபர் என்றும் ()

ஆசையெட்டினுக்கிறையுமாசையெட்டியாசைவிட்
பூசையிட்டுப்போற்றும்புலியூரே—பேசவெட்டா
வேதாந்தரும்பரமனனந்தநெல்லை
வேதாந்தருமபரமவீடு.

இ-ள். ஆசை எட்டினுக்கும்—எட்டுத்திசைகளுக்கும், இறையும்—இறைவர்களாகிய இந்திரன் முதலிய திக்குப்பாலகர்களனைவரும், ஆசை எட்டி—அன்புபூண்டு, ஆசை விட்டு—மலசத்துவத்தையொழிய, பூசை இட்டு—பூசைசெய்து, போற்றும்—துதிக்கும், புலியூர்—புலியூரானது, பேச எட்டா—பேசுதற்கரிய, வேதாந்தர்—வேதமுடிவிலுள்ளவரும், உம்பரமர்—தேவர்களுக்கும், விண்நாடு—பொன்னுலகை, அனந்த—வரையறுத்துரையாத்த, நெல்லை—திருநெல்வேலியென்னுந் திருப்பதியில், வேதாம்—மூங்கில்—, தருமபரமா—பெற்ற பரமனாகிய இறைவனது, வீடு—திருவீடாம்.

அட்டதிக்குப்பாலகராவார் இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன். இவர்கள் கிழக்கு முதலிய எட்டுத்திசையிலுமுள்ளவர்கள். இவர்கள் தத்தந் திசையிற் றிருக்கோயிற் பூசித்துப் பேறுபெற்றனர் என்பது புராணவரலாறு. திருநெல்வேலியென்னுந் திருப்பதியில் சிவபெருமான் மூங்கிலின் கீழெழுந்தருளி யிருத்தலால் வேதாந்த தருமபரமா என்றார்.

சூரியனும்பச்சைத்துழாயமுகிலும்பூசனைசெய்
தென்பூருவதிக்கிற்செய்புலியூரே—கூரியவேல்
ஆறுமுகக்குமரனுபதேசம்பெறுவான்
ஆறுபடைக்குமரனாவு.

இ - ள். சூரியன்உம்—சூரியனும், பச்சைதுழாய—பச்சைத்துழாய்மாலையையணிந்த, முகில்உம் — மேகம்போன்ற திருமாலும், பூசனை—பூசைசெய்ய, தென்பூருவதிக்குஇல்—தென்கிழக்குத்திசையில், செய்—செய்யும், புலியூர — புலியூரானது, கூரியவேல—கூர்மையையுடைய வேலேந்திய, ஆறுமுக—ஆறுமுகங்களையுடைய, குமரன்ஆல்—முருகக்கடவுளால், உபதேசம் பெறுவான் — உபதேசம் பெற்றவரும், ஆறு—சங்கையை, முடிக்கும் (சடையில்) தரித்த, அரன் (அடைந்தவர் மாயையை வேரோடு) அரிபவராகிய இறைவர். ஆய — பொருந்தப்பட்டார்.

பிரமனைச் சொக்கையொழுக்கப் பிரணவத்தின் பொருளை வினவ, அதுதெரியாது அவனைப் பயங்குருகாலையில் முருகக்கடவுள் அவனைச் சிறையிலிட்டனர். அப்போது தேவர்கள் வேண்டுகோளால் சிவபெருமான் அச்சிறையினின்று நீக்கி, அம்முருகக்கடவுளைத் தமது திருத்தொடையேல்வைத்தருளி, அப்பிரணவத்தின் பொருளைக் கூறுவாயென்று திருச்செவிசாய்த்து வினவியருள அம்முருகக்கடவுள் திருவாய்மலர்ந்தருளினர் என்பது புராணவரலாறு. (சுப)

மேனிலத்தொப்பாலயங்கண்மெய்க்கவுடர்கோன்செழும்
பூநதத்தாற்செய்யும்புலியூரே—ஞானமுற்ற [ஞ்சாம்
சம்பந்தர்த்தாதராதலமேலம்புணரு
சம்பந்தரத்தர்தலம்.

இ - ள். மேல்நிலத்து ஒப்ப—பொன்னுலகத்தையொத்துத்தோன்ற, ஆலயங்கள்—சிவாலயங்களை, மெய்—உண்மையையுடைய, கவுடர்கோன்—கவுடதேசத்தரசராகிய இரணியவன்மனார், செழுமை—மாற்றுயர்ந்த, சாம்பூநதத்துஆல்—சாம்

பூநரமென்னும்பொன்னிறல், செய்யும்—செய்தமைத்த, புல்
பூா—புலியூரானது, ஞானம் உற்றசம்பந்தர் திருஞானசம்பந்
தர்க்கு, அத்தர்—பிதாவும், தராதலம் எல்லாம்—எல்லாவுலகங்
களிலும், புணரும்—கலந்த, சம்பந்தர்—இயைபுடையவரும்,
அத்தர்—தலைவருமாகிய இறைவரது, தலம்—திருப்பதியாம்.

சூரியன்புத்திரனுகிய மனுமரபில்வந்த ஐந்தாமனுவின்புத
திரராகிய சிங்கவன்மா சிங்கம்போலவெண்ணிறம்வாய்ந்த தன
து உடற்குற்றத்தைநோக்கி, அது தீரும்வண்ணம் தந்தையின்
அநுமதிபெற்றுத் தமதுநாடாகிய கௌடதேசத்தினின்று நீங்
கிக் காசிமுதலிய திருப்பதிகளையடைந்து சிவபெருமானை வ
ணங்கித் திருத்தில்லையை யடைந்து பதஞ்சலி வியாக்கிரபாத
முனிவர்களைவணங்கி, அவர்களருளால் சிவகங்கையில் ஸ்நான
ஞ்செய்து உடற்குற்றமொழிந்து பொன்வடிவந்தாங்கி யிரணி
யவன்மனுர் எனப்பெயர்பெற்றனர், பின்னர் அம்முனிவர்களா
ல் ஸ்ரீபஞ்சாக்கர வுபதேசம்பெற்று நடராசப்பெருமானுர் ஆநந
தத் திருநடனத்தைத் தரிசித்துத் தமதரசியலைவெறுத்து அம்மு
னிவர்களால் முடிசூட்டப்பெற்றுச் சோழநாட்டரசாய்த் திரு
வம்பலமுதலிய திருப்பணிகளைச்செய்வித்தனர் என்பது புராண
வரலாறு. ஆளுடையபிள்ளையாருக்குத் திருமுலைப்பாலூட்டி
யருளினமையால் ஞானமுற்ற சம்பந்தரத்தர் என்வும், ஆன்மா
க்களுக்குத் தோன்றாத்துணையாயுட னிருத்தலால் தராதலமெ
லாம் புணருஞ் சம்பந்தா எனவுங் கூறினர். சாம்பூநதம் சம்பு
நதியிற் பிறந்தது இது நால்வகைப் பொன்னுள் ஒன்று. ஆட
கம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம். (௬௧)

உக்கிரசாமுண்டியும்பண்டூர்த்தநடத்தானைநா
புக்குவந்தித்தேத்தும்புலியூரே—அக்கு
மாலையங்கழுத்துளவன்வாரியின்மீனுக்கா
வலையங்கழுத்துளவன்வாழ்வு.

இ-ள். உக்கிரம்—கோபமிக்க, சாமுண்டியும்—காளி
யும், பண்டு—முன்னாளில், ஊர்த்தநடத்தால்—ஊர்த்ததிருந
டனத்தினால், நாணம்புக்கு—நாணங்கூர்ந்து, வந்தித்து—வணங்கித்

ங்கி, ஏத்தும்—துதிக்கும், புலியூர்—புலியூரானது, அச்சுவலையம்—சங்குமணியாலமைந்த வட்டவடிவாகிய வடத்தை, கழுத்து உள்ளவன்—திருக்கழுத்திலுள்ளவனும், வாரிஇல்—கடலில், மீனுக்குஆக—மீனைப்பிடித்தற் பொருட்டாக, வலை—வலையினை, அங்கு—அக்கடலில், அழுத்து—அழுத்திய, உளவன்—உளவையுடையவனுமாகிய இறைவன், வாழ்வு— வாழுந்திருப்பதியாம்.

இறைவிக்கு இறைவர் ஓர்கால் உபதேசித்தகாலையில் அவ்விறைவி பராமுகமாயிருக்க, அதுநோக்கி யவ்விறைவர் ஓர்திருவிளையாடலைக்கருதிச் சினங்கூர்ந்தவர்போல நாம் அருளியதைப் பராமுகஞ்செய்தமையால் பாண்டிநாட்டின் கீழைத்திசையிலுள்ள நெய்தனிலத்தலைவன் புத்திரியாகக் கடவாய் நாம் வந்து மணம்புரிவோமென்றருளி, தம்பாற் சாபமேற்ற நந்திநாயனார் சுறாமீன்வடிவாய்க் கடலையுழக்கி நிற்றலால் இம்மீனைப் பிடிப்போர்க்கு என்புத்திரியாரைத் தருவோமென்ற அந்நெய்தனிலத் தலைவன் சூளால் நெய்தனிலத்தலைவராய்ச்சென்று வலைவீசி மீன்பிடித்தனர் என்பது புராணவரலாறு. (௪௨)

மாதவத்துமாணிக்கவாசகர்மன்றுள்ளொளிக்குட்
பூதியந்தோடொன்றும்புலியூரே—கேதகைப்பூந்
தாமங்கழித்தளிப்பார்தன்னொடண்டமூழிதொறுந்
தாமங்கழித்தளிப்பார்சார்பு.

இ-ள். மாதவத்து — பெரியசிவஞானத்தையுடைய, மாணிக்கவாசகர்—திருவாதவூரடிகள், மன்றுஉள் ஒளிக்குஉள்—சிற்சபையில் நடராசப்பெருமானார் திருவடிக்கீழ், பூதியத்துஒடு—மானிடசரீரத்தோடு, ஒன்றுய—அடைந்த, புலியூர்—புலியூரானது, கேதகைபூ—தாழைமலராலாகிய, தாமம்கழித்து—மாலையைக்கழித்து, அளிபார்தன் ஒடு—குளிர்ந்த நிலவுலகோடு, அண்டம்—பல்லாயிரகோடியண்டங்களையும், ஊழ்தொறும்—ஊழிகாலந்தோறும், தாம் அங்கு அழித்து—தாம் அவ்விடத்திலழித்து, அளிப்பார்—மீட்டுந் தந்தருளும் இறைவர், சார்பு—பொருந்துமிடமாம்.

கொண்டுசெல்கையில், அவன் ஒருகால் சிவநடனத்தைத் தரிசித்திருந்த மாத்திரத்தாலுண்டாகிய பெருநற்பயனால் சிவகணங்கள்வந்து அவ்வியமபடரினின்றும்மீட்டு உயர்கதியிற்கொண்டுசேர்த்தன ரென்பது முன்னிரண்டடியிற் குறித்த கதை. தீத்த, தீ - பகுதி. துன்மதன - துர்மதன்: வடசொல்; கெட்டகளிப்புடையவனென்று பொருள். நடம், கூத்து - வடசொற்கள். காண - செயவெனெச்சம், காணப்பெற்றதனா லென்றபடி, இறந்தகாலம். முன் - இங்கே காலமுன். நேமயுகத்தி - நிச்சய ஆனந்தத்தைத் தருவதும், எல்லாபபதவிகளினும் மேம்பட்டதும், ஒப்புயர்வற்றதும், அழிவிலாததுமான முத்தியுலகம். கங்கை அதிமோகர் என்றது, கங்காநதியை எப்பொழுதும் தம்மிடத்தே கொண்டிருத்தலால். அருட்சாகரத்தர் - நீர் நிரம்பியகடல்போலக் கருணைநிரம்பியவர் கடவுளென்றபடி. மோக்ஷப்பேற்றுச் சாகரமென்றது, கடவுளுக்குச் சமுத்திரத்தையுவமை கூறப்படும் இல்லையாதலின. சாகரம் - சகரசக்கரவர்த்தியின் புத்திரரால் தோண்டப்பட்டதனைக் கடலுக்குக் காரணக்குறி; தத்திதாந்தநாமம். மாசு - குற்றம்; என்றது, இங்கே மும்மலத்தையும். சாமி - எல்லாவுயிர்க்குந் தலைவனாதலாற் பெயர். ஒருகாலத்தில திருக்கயிலாசத்திலே உமாதேவியானவள் உருத்திரமூர்த்தியின்பின்னேவந்து வேடிக்கை விளையாட்டாக அவருடைய இரண்டுதிருக்கண்களையும் தனது இரண்டுதிருக்கைகளால் ஒருகணப்பொழுது மறைக்க, அம்மாத்திரத்திலே சந்திரசூரியாதியரவ்வருடைய ஒளிகளுமொழிந்தது. அப்பொழுது யுகங்கள் பலகழிந்து மன்னுயிர்கள் மிகவருந்த, அவ்வருத்தத்தைப் பொறுக்கமாட்டாச் சிவபிரான சிறிது நெற்றிக்கண்ணைத் திறந்து நோக்க, பார்வதி அதனைக்கண்டு அஞ்சி உடனே கண்களைமறைத்த கைகளிரண்டையும் வாங்கியபொழுது தன் கைவிரல்கள்பத்திலுமுண்டான வியர்வைநீரைக் கீழேயுகுக்க, அவ்வியர்வைகள்பத்தும பத்துக் கங்காநதிகளாய் எழுந்து உலகத்தையொழிக்கலுற, அதுகண்டு அருள்வள்ளலைச் சரணமடைந்த தேவர்களது வேண்டுகோளால் சிவபெருமான் அவற்றைத் தனதுசடையில்தரித்தருளி யடக்கினா ரென்பது, கங்கையதிமோகர் என்பதிலுள்ள கதை. அன்றியும், பகீரதசக்கரவர்த்தி கங்காநதியை மேலுலகத்திலிருந்து பூவுலகத்திற்குக் கொணர்கையில அவனது வேண்டுகோளால் அக்கங்காநதியைச் சடையின்மேலேற்ற சரித்திரமும் உண்டு. (உ)

௩.—(இ - ள்.) பாதகம் செய் - (கொலை முதலிய) பெரும்பாவத தொழில்களைச் செய்த, குற்சகனும் - குற்சகனென்னும் வேடனும், பண்டு - முன்னொருகாலத்தில், கண்டு - (சிவதாண்டவத்தைத்) தரிசித்து, இறப்ப - (தனஎல்லையில்) மாணமடைய, (அவனுக்கு), கதி உவந்து போந்த - நற்கதியில் மகிழ்ந்துசெல்லும்படி, இட்ட - கொடுத்தருளிய, புலியூரே - புலியூரானது,—வேதன் சிரம - பிரமனதுதலையும், மதலை - கொன்றைமலரும், அக்கு - எலும்பும் என்பவற்றை, அணி தார் சேர்த்து - அழகையுடையமாலையாக ஒருங்குஅணிந்து, நரசிங்கத்து ஊம்அது அலைய கணித்தார் - (திருமால்கொண்ட) நரசிங்கவடிவத்தினது வலிமை கெடும்படி கருதியவராகிய சிவபிரானது, ஊர் - இடமாம்; (எ - று.)

சையமலையிலுள்ள வேடர்குலத்திற் பிறந்து கொலை களவு முதலிய கொடும்பாவங்கள்பலவற்றையுஞ் செய்துதிரியுங் குற்சகனென்பானொருவன் ஒருசோழகுலத்தரசர் சிதம்பரதரிசனத்தை விரும்பித் தம்நாட்டினின்று அத்திருப்பதியைநோக்கிச் செல்லுகையில் அவர்பரிசனத்தின்ஏவலால் தான் பொற்சுமையெடுத்துஅவர்சேனையுடனேவந்து சிதம்பரத்தையடைந்துஅங்குத்திருநடனத்தைத்தரிசித்துச்சிலநாட்சென்றபின் சுரநோயால்அங்குஉயிர்நீ

இறைவர் திருக்கைதொட்டு வரைந்தருளித் திருவாயிற்படியில்வைத்த திருவாசகம், திருக்கோவையார் என்னுந் திருமுறையைத் தில்லைவாழந்தணர்களோடு அருச்சித்து வாசித்து இறுதியில் இதுவாதவூரடிகள் கூறினவை, இவையெழுதிமுடித்தவர் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எனவரைந்திருத்தலைப்பார்த்து ஆநந்தபரவசத்தராய்த், திருவாதவூரடிகளைத் தரிசித்து இத்திருமுறையிலடங்கியபொருளைத் தெரித்தருளவேண்டுமென்றிரக்க, நாம உணர்த்தியருளுவோம் வாருமென்று அவ்வந்தணர்களோடு திருவம்பலஞ்சென்று இங்கு நின்ற பெருமானேயிதற்குப் பொருளாவார் எனக்காட்டியாங்கு நின்றோர் யாவருங்காணத் திருவடிநீழற் கீழ்க்கலந்தனர் என்பதும், பிரமன் ஒருகாலத்தில் எல்லாவற்றையும் படைத்தலால் யானே யிறைவனென்று அகந்தைகொண்டு திருமாலொடு போர்செய்யுங் காலையில் அனைவரும் நடுக்கமுற, சிவபெருமானார் கருணைகூர்ந்து இருவருக்கும் இடையே ஓரக்கினிமலையாய் நின்றருளும்போது, அவ்விருவருங்கண்டு திகைத்து இதனடிமுடிகளிரண்டனுளொன்றையறிய வல்லவரே பெரியரென்று கூறுதலுந் திருமுடிகாண அன்னவடிவமாய்ச்சென்ற அப்பிரமன் காணாதிளைத்து அத்திருமுடியினின்றும் வீழ்ந்த தாழைமலரைத் தான்கண்டதாகப் பொய்க்கரிகூறென்றிரக்க, அம்மலர் அவ்வாறுகூறினமையால் அத்தாழைமலரை யினியேற்கோமென்று கழித்தனர் என்பதும் புராணவரலாறுகள். பார்பரத்தலையுடையதென்னும் பொருள்மேல நிற்றலால் முதனிலைதொழிலாகுபெயர் பரபகுதி, முதல் நீளுதல் விகாரம். அகரக்கேடு சந்தி. (௬௩)

நாட்டமுறுமாசிமகநாள்வணிகன்பாசவினைப்
பூட்டறுத்தாளுந்தென்புலியூரே—மாட்டில்
எழுதுங்கரப்பரனேரேடதனிற்கோவை
எழுதுங்கரப்பரனூரில்.

இ-ள். நாட்டம் உறும் (யாவரும்) ஆராயத்தக்க, மாசிமகம்நாள்—மாசியில் மகநக்ஷத்திரத்தில், வணிகன்—தூர்க்கடன் என்னும் ஒருவைசியனது, பாசம் வினைபூட்டு — பாசவினைத்

லையின் கட்டை, அழுத்த ஒருளும்—(சகித்துமுதலியோர் சேர்ந்த) தென்புலியூர்—தென்றிசையிலுள்ள புலியூரானது, மாடு இல் ஏழு—இடபவூர்தியில் அடியார்க்கு அருள எழுந்தருளும், துங்கர்—பெருமையையுடையவரும், அப்பு—கங்கையையணிந்த, அரன் — அரனென்னுந்திருநாமத்தையுடையவரும், எல் அதன் இல் - எட்டின, கோவையைப்பூணும்— திருக்கோவையையேற்றிய, காமம்— திருக்காமத்தையுடைய, மானை—மேலானவருமாகிய இறைவரது, இல்—வீடாம்.

பாதகமொழிய தக்ஷசட்டனென்னும் ஒருசெட்டி, பலரோமும் பட்டவர்க்கிலைமையி பெரியகத்திலே பாசமறுத்த துறையில் நேர்ப்போது படர்போக்காய்ந்து முத்திவாமன் என்பதும், திருவாதவூரடிகள் தில்லையில் பன்னசாலையமைத்து எழுந்தருளியிருக்குங்காலையில், இறைவர் தாமே அந்தணவுருக்கொண்டு வந்தருளியவர் நீங்கள் பாண்டிநாடு நீங்கிய திருப்பாசுரங்களைக் கேட்க விரும்புற்று வந்தனமென்றுகூறியருள, அவரைப்பார்த்திருக்கச்செய்து தாமருளிய திருப்பாசுரங்களைச் சொல்லியருளியபின், வந்தருளிய அந்தணர் நடராசப்பெருமானை . பாட்டுடைத்தலைவராகக்கொண்டு ஒருகோவைகூறவேண்டுமென அதற்கு உயர்ந்த ஒவ்வொரேகோவைத் திருக்கைகொட்டெழுதினர் என்பதும் புராணவரலாறுகள். (௬௨)

செப்புநடத்தைத்தேசிகநமசிவாயர்களிப்
புப்பெறக்காட்டுந்தென்புலியூரே—ஒப்பதில்லா
ஓரேற்றினன்மறையானுள்ளத்திருமடி
யோரேற்றினன்மறையானூர்.

இ - ள். செப்பும் (அயன்முதலியோர்) புகழும், நடத்து ஐ—திருநடனத்தை, தேசிகநமசிவாயர்—குருநமசிவாயர், களிப்புபெற—பேரானந்தமடைய, காட்டும்—தெரித்தருளும், தென்புலியூர்—தென்றிசையிலுள்ள புலியூரானது, ஒப்பு அது இல்லாத—ஒப்பில்லாத, ஓர் ஏற்றினன் — ஓரிடபவூர்தியையுடையவரும், மறையான் (குருபரம்பரைவிளங்க) நான்குவே

சங்கரியருளினைவருமை, உள்ளத்து (தமது) மனத்தில், இருக்கும்—அனிபுகனிங்கிருக்கும், அப்போர் எறதின் ஆல்—அடியவர்கள் (தமது குறைகூறி) இரந்தால், மறையான்—ஒளிக்காமல் அருள்புரிபவருமாகிய இறைவனது, ஊர்—திருநகரமாம்.

இப்பாடல் அதுபகுதிப் பொருள்க்குறி. இல்லாத மதிமையைக் குறிப்பால் பெய்யச்சத்திலீறுவதாகுக்கல குருநமசிவாய நடராசப்பெருமானை அனுமையாலை திருச்சிலம்புஞ் சின்சிணியுஞ் செய்விக்கச் சிலர்கள் எடுத்து வேண்டும் பொருள் தந்தனர். அதுதெரிந்த தில்லையந்தணர்கள் அவரைத் தரிசித்து நமது பெருமானை திருநடனஞ் செய்யப்போகிறோமாவென்ற சொல்லைக்கேள்வியுற்று அவைவந்தபின் சாத்திரத் தில்லையந்தணர்களை வரவழைத்து "அம்பலவாணவொருகாலாடுதிருத் தூழ்வாமோ - உம்பரெலாங் காணக்கொட்டாமோ - சம்புவே - வெறுப்பப்பதஞ்சலிக்கும் வெம்புலிக்குந் தித்தியெனா - ஒத்தப்பதஞ்சலிக்குமோ" என்றுகூற உடனே திருநடனஞ் செய்தருளினார் என்பது வரலாறு (௬௫)

நந்திமுதற்றேவர்பல்ஞானமுனிவோர்பூசை
யந்திமகிழ்ந்தேத்தும்புலியூரே—தந்தனைய
காமருகேசஞ்சரிப்பாரன்பினுக்குமுத்தியிட்டோர்
ஆமருகேசஞ்சரிப்பாரார்வு.

இ-ள். நந்திமுதற்றேவர்—நந்திநாயகரா முதலிய தேவகணங்களும், பல்ஞானமுனிவோர்—சிவஞானம்பெற்ற பல முனிவர்களும், பூசை—பூசனையோடு, புந்திமகிழ்ந்து—மனமகிழ்ந்து, ஏத்தும்—துதிக்கும், புலியூர்—புலியூரானது, தந்தனையை—தமது புத்திரியினது, காமருவு—விருப்பஞ்செய்யும், கேசம்—கூந்தலை, சரிப்பார்—சரித்தமானக்கஞ்சாறநாயனாரது, அன்பினுக்கு—பத்திக்கு, முத்தி இட்டோர்—சிவகதியருளி, ஆம் அருகுஅ—ஆகிய அவர்கள்பக்கலிலே, சஞ்சரிப்பார்—சஞ்சரிக்கும் இறைவர், ஆர்வு—பொருந்துமிடமாம்.

சஞ்சாறென்னுந் திருப்பதியில் வேளாளகுலத்தி [illegible]

தச் சிவநேசமுடையவராய்ச் சிவனடியார்களுக்கு வேண்டிய பொருளை இல்லையென்னாது கொடுத்தொழுகுநாளில், இவரன்பினை யுலகினரறிந்துய்ய இவர் புத்திரியார் திருமணத்திற்கு மாவிரதியர் வேடம்பூண்டு இறைவர் பஞ்சப்பந்தலிலெழுந்தருள, நாயனார்கண்டு அன்புமீதூர்ந்து வணங்கித் தமதுமனைவியை மணக்கோலத்தையுடைய புத்திரியாரையும் வணங்கச்செய்தனர். அப்போது அவர் புத்திரியார் கூந்தலைப்பார்த்து இது பஞ்சவடிக்கு ஆமென உடனே காயதுதாத திருவுருமறைந்தருளி இடபவாகனராயெழுந்தருளிக் காட்சிதந்தனர் என்பது புராணவரலாறு. சாமமருவு சாமநகனைத்தொகைக்கு நின்றது. (௪௬)

வன்பர்புலையோரெனினும்வாசஞ்செயிலவர்தம்
புன்பிறவிமாற்றும்புலியூரோ — அன்புதிகழ்
வத்திரங்களைந்தார்வநத்திருடிமாதரிடை
வத்திரங்களைந்தார்மனை.

இ - ள். வன்பர் — மகாபாதகரும், புலையோர் எனினும் — நீசருமாயிருந்தாலும், வாசம்செயில் — வசிப்பார்களாகில், அவர்தம் — அவருடைய, புன்பிறவி — கொடியபிறவியை, மாற்றும் — போக்கிமுத்தியருளும், புலியூர் — புலியூரானது, அன்புதிகழ் (அடியவரிடத்து) பரிவுகூரும், வத்திரங்கள் ஐந்தார் — ஐந்துதிருமுகங்களை யுடையவரும், வநத்து — தேவதாருவனத்திலுள்ள, இருடிமாதர் — முனிவர் பன்னியர்கள், இடைவத்திரம் — இடையிலுடுத்த ஆடைகளை, களைந்தார் — களைந்தவருமாகிய இறைவரது, மனை — வீடாம்.

தேவதாருவனமுனிவர் பன்னியர் கற்பினிறுமாப்பினைய ளந்துகாட்ட, பிச்சாடனமூர்த்தமா யிறைவரெழுந்தருள, அது கண்டு அம்முனிவர் பன்னியர் கற்பினிலை குலைந்து கலைசோர நின்றனர் என்பது புராணவரலாறு. புன்பிறவி உரிச்சொற்றொடராதலால் பொதுவிதிபெறாது "இடையுரிவடசொலின்" என்ற புறனடைச் சூத்திரத்தால் ஈற்றுலகரம் னகரமெய்யாகத் திரிந்தது.

(௪௭)

சாதல்பிறப்பைப்புலைப்பெற்றானுக்குமாபதியால்
போதல்செய்வித்தபுலியூரே—சோதிப்
பரசங்கரனார்பணிமதிசூடுந்தற்
பரசங்கரனார்பதி.

இ-ள். சாதல்—இறத்தலையும், பிறப்புஐ—பிறத்தலையும், புலைபெற்றானுக்கு — புலையர்குலத்திற் றோன்றிய பெற்றானென்னுந்திருநாமத்தையுடையசாம்பனார்க்கு, உமாபதிஆல்—உமாபதி சிவாசாரியரால், போதல்செய்வித்த—ஒழித்தருளிய, புலியூர்—புலியூரானது, சோதி—ஒளிவாய்ந்த, பரசு—மழுவாயுதத்தையேந்திய, அம்கரனார்—அழகிய திருக்கரத்தையுடையவரும், பணி—குளிர்ந்த, மதிசூடும்—பிறைசூடிய, தற்பரசங்கரனார்—தற்பராகிய சங்கரருமாகிய இறைவரது, பதி—திருப்பதியாம்.

பெற்றான்சாம்பனார் அதிதீவிரபக்குவமுடையவராய் ஞானோபதேசம் பெறும்பொருட்டுக் கொற்றவன் குடியிலெழுந்தருளிய உமாபதி சிவாசாரியர் திருமடத்திற்கு நாள்தோறும் விறகுகொண்டுபோய்க் கொடுக்கும் பணிவிடைசெய்துகொண்டு வந்தனர், இவ்வாறு பலநாள் கழிந்தமையால் தமதுகருத்தை நடராசப்பெருமானார்க்கு உணர்த்த, அப்பெருமானார் "அடியார்க்கெளியன் சிற்றம்பலவன் கொற்றங் - குடியார்க் கெழுதிய கைத்தீட்டுப் - படியின்மிசைப் - பெற்றான்சாம்பானுக்குப் பேதமறத்தீக்கைசெய்து - முத்திகொடுக்கமுறை" எனத்திருமுகமொன்றைத் திருச்சாளரத்தின்வழி நீட்டியருளப்பெற்றுக்கொண்டு நாடோறுஞ் செய்யும் பணியையன்றுசெய்து அங்குநிற்க, பரிசனங்களு ளொருவர்கண்டு இங்கு என் நிற்கின்றாயெனவினவியபோது, இத்திருமுகத்தைச் சுவாமிகள் சந்நிதியிற் சேர்ப்பிக்கவேண்டுமெனக் குறையிரக்க, அதனையேற்று அச்சந்நிதியில் சேர்த்தினர். அதனை உமாபதி சிவாசாரியர் திருக்கண்ணால் நோக்கியச் சாம்பனாரை நீராடிவரச்செய்வித்து ஞானக்கினியோம் பியதனுள்ளே புகச்செய்து முத்திகொடுத்தனர், இதைக் கேள்வியுற்ற அவர்மனைவி தனது மடமையால் கூலிகேட்கச்

சென்ற தன்புருடனை நெருப்பிற்றாக்கிப்போட்டுக் கொன்றனா என அப்போதிருந்த அரசனிடத்தில முறையிட, அவ்வாசன் அமைச்சாகளோடு ஆலோசித்துத் திருமடத்திற்குச்செல்ல, அக்குறிப்பையறிந்த அச்சிவாசாரியா எவல்செய்வோரைநோக்கி நாடோறும் நமக்குப்பயன்படுவது இங்குண்டோவெனவினவியருள, முள்ளிச்செடியுண்டென்றமையால் அதனருகிற்சென்று ஞானோபதேசஞ்செயதகாலையில் அதுபற்றியெரிந்து முத்தியடைந்ததென்பது வரலாறு. (சஅ)

நாட்டிலிறந்தோரான்மா நல்லென்பவ் வெல்லைதனிற்
போட்டிடவீடெய்தும்புலியூரே—கோட்டிபமூர்
வாசவனசத்திறைன் வாழ்த்தித்தொழுஞ்சரண
வாசவனசத்திறைன்வாழ்வு.

இ - ள். நாடுஇல்—புறநாட்டில், இறந்தோர்—இறந்தவரது, நல் என்பு—நல்ல எலும்பினை, அ எல்லைதன் இல்—அத்திருப்பதியினெல்லையில், போட்டிட—போட, ஆன்மா—அவாகளது ஆன்மா, வீடெய்தும்—சிவகதியை யடைதற்குரிய, புலியூர்—புலியூரானது, கோடு—நான்குகொம்புகளையுடைய, இபம்—வெள்ளையானையை, ஊர்—செலுத்தும், வாசவன்—இந்திரனும், அசத்திறைன்—ஆட்டுவாகநத்தையுடைய அக்கினிதேவனும், வாழ்த்திதொழும்—வாழ்த்திவணங்கும், சரணம்—திருவடியாகிய, வாசம்—வாசமமைந்த, வனசத்திறைன்—தாமரைகளையுடைய இறைவர்—வாழ்வு—வாழுமிடமாம்

தில்லைப்பதியி னெல்லையிலிறந்தவர் என்புகிட்டபினும் அவர் முத்தியடைவா என்பதும், இந்திரனும் அக்கினித்தேவனும் பூசித்து வணங்கினா என்பதும புராணவரலாறுகள்

ஏழுலகேத்தொன்பாணிலிங்கப்பிரதிட்டை
யூழியர்கோன்செய்தபுலியூரே—வாழ்சிவலோ
கத்தர் கணிச்சிப்படையார்சாதலித்துஞ்ஞதநெஞ்ச
கத்தர்கணிச்சிப்படையார்காப்பு.

இ - ள். ஏழுலகு — ஏழுலகங்களும், ஏத்து — துதிக்கும் — ஒன்பான் இலிங்கம்பிரதிட்டை — ஒன்பதுசிவலிங்கப் பிரதிஷ்டைகளை, பூழியர்கோன் — பாண்டியமரபில்வந்த அரசன், செய்த — செய்தமைத்த, புலியூர் — புலியூரானது, வாழ் — என்றும் நிலைபேறுடைய, சிவலோகத்தர் — சிவலோகத்தையுடையவரும், கணிச்சிப்படையார் — மழுவாயுதத்தையுடையவரும், காதலித்து — விரும்பி, உன்னுத — சிந்தியாத, நெஞ்சகத்தார்கண் — இதயமுடையவரிடத்தில், இச்சிப்பு அடையார் — விருப்பமில்லாதவருமாகிய இறைவர், காப்பு — காவலாயுள்ள இடமாம்.

ஒன்பது சிவலிங்கப்பிரதிட்டைகளை பாண்டியன்செய்து பேறுபெற்றனன் என்பது புராணவரலாறு. (ரு௰)

ஆணபஞ்சதந்திரத்துமாழ்கமலவாவியினும்
போனகம்பாலிக்கும்புலியூரே — யானெனுந்தப்
போதமொழிவாயினர்புந்திச்சுடரொளியார்
வேதமொழிவாயினார்வீடு.

இ - ள். ஆண (சிற்பநூல்வழி) அமைந்த, பஞ்சத்திரத்து உம் — பஞ்சதந்திரங்களிலும், ஆழ் — ஆழ்ந்த, கமலம் — தாமரைகளையுடைய, வாவியின் உம் — தடாகங்களிலும் (போனகம் — அன்னத்தை, பாலிக்கும் (இரவலர்க்கு) கொடுத்து இரட்சிக்கும்) போன — சென்று, கம்பு — சங்குகள், ஆலிக்கும் — ஒலிக்கும், புலியூர் — புலியூரானது, யான்எனும் — நானென்னும்அகந்தையாகிய, தற்போதம் — சீவபோதம், ஒழிவாயினர் — ஒழிந்தசிவயோகிகளுடைய, புந்தி — இதயத்தில், சுடர் — ஒளியுள்ள சூரியசந்திரர்கள் நட்சத்திரங்களைப்போல, ஒளியார் — ஒளிவீசி விளங்குவோரும், வேதம் — நான்குவேதங்களையும், மொழிவாயினர் — சொல்லியருளிய நான்குதிருமுகங்களிலுமுள்ள திருவாயினையுடையவருமாகிய இறைவரது, வீடு — திருவீடாம்.

நான்கு திருமுகங்களாவன ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம். இதுபிரிமொழிச்சிலேடை யணியாதலால் (சத்திரத்தும் போனகம் பாலிக்கும்) எனவும் ஆழ்கமலவாவியினும் போனகம்பு ஆலிக்கும் எனவுங்கொள்க. பாலிக்குமென்னு

ம்பெயரெச்சம் புலியூர் என்னும் வினைமுதற்பொருளையும், ஆலிக்கும் என்னும்பெயரெச்சம் புலியூர் என்னும் எல்லைப்பொருளையுங்கொண்டன பாலி, ஆலிபகுதிகள். பின்வருவனவற்றிற்கும் இவ்வாறேகொள்க. (௩௧)

ஓதிமமும்வேந்தருலவுநெடுவீதிகளும்
போதகமேநிற்கும்புலியூரே—மாதவர்க்கு
வீடளித்தார்மாட்டினார்வேணிபுயத்தாரிதழி
யேடளித்தார்மாட்டினாரில்.

இ - ள் ஓதிமம் உம்—அன்னங்களும், வேந்தர் உலவும்—அரசர்களுலாவும், நெடுவீதிகள் உம்—நெடிய வீதிகளும் (போது அகம் ஏ—தாமரைமலரிடத்தே, நிற்கும்—நிலைபெறும், போதகம் ஏ—யானைகளாலே, நிற்கும்—நிற்கப்படும்—புலியூர்—புலியூரானது, மாதவர்க்கு—பெரியதவத்தினையுடையவர்களுக்கு, வீடு அளித்தார்—முத்தியைத்தந்தருளினவரும், மாட்டினார்—இடபவாகனத்தையுடையவரும், ஆர்—ஆத்திமலரும், இதழி—கொன்றைமலருமாகிய இம்மலர்களின், ஏடு—இதழ்களாலமைந்த, அளி—வண்டுகள்நிறைந்த, தார்—மாலையை, வேணி மாட்டினார்—சடையினிடத்துள்ளவரும், புயத்து மாட்டினார்—புயத்தினிடத்துள்ள வருமாகிய இறைவரது, இல் இருப்பிடமாம்.

மாட்டுதல் என்னும் வினைக்கு அணிதல் பொருளன்மையால் "வேணிபுயமிதழி—என்னும் பாடத்தைமாற்றுக யாம் இடம். அதனை இரண்டிடத்தும் கூட்டிப்பொருள்செய்க. நிற்கும் செயப்படுபொருளில்வரும் படுவிகுதி குன்றிவந்த செயப்பாட்டு வினைமுற்றாய் நிற்றலால் யானைகளால் நிற்கப்படும் எனப்பொருள்கொள்க (௩௨)

மாத்தயங்குசோலைகளும்வந்தவப்பர்தாமுமகிழ்
பூத்தழைக்கப்பாடும்புலியூரே—வாய்த்தபுலி
யோடப்பதஞ்சலியாருன்மகிழுமன்றினடப்
ஆடப்பதஞ்சலியாராவு.

இ - ள். மா—வண்டுகளால், தயங்கு — விளங்காநின்ற, சோலைகள் உம்—சோலைகளும், வந்த—தரிசிக்கவந்த, அப்பர்தாம் உம்—ஆளுடையரசுகளும், (மகிழ்—மகிழமரத்தின், பூதழை—பூவையுந் தழையையுமுடைய, கப்பு—கொம்புகளால், ஆடும்—ஆடாநிற்கும்) மகிழ்பூத்து—மகிழ்ச்சி கூர்ந்து, அழைக்க—அழைத்தருள்செய்ய, பாடும்—திருப்பாசுரங்கள் பாடாநிற்கும், புலியூர்—புலியூரானது, வாய்ந்தபுலி ஒடு—சிவநேயம் பொருந்திய வியாக்கிரபாதரோடு, அபதஞ்சலியார்—அப்பதஞ்சலி முனிவரும், உள்மகிழ—மனமகிழ, மன்று இல்—பொன்னம்பலத்தில், நடம்ஆட—ஆநந்தநடனஞ்செய்ய, பதம்சலியார்—திருவடி சலியாத இறைவர், ஆர்வு—பொருந்துமிடமாம்.

வாய்த்த வலித்தல் விகாரம். (௫௬)

கட்பங்கயமின்னார்கார்க்குழலிலந்தியினிற்
புட்பஞ்சரஞ்சேர்புலியூரே—நட்பினொடு
மெச்சிக்கும்பிட்டார்மெலிவொழிப்பார்வந்தியிட
இச்சிக்கும்பிட்டாரிடம்.

இ - ள். பங்கயம்—தாமரைபோன்ற, கண்—கண்களையுடைய, மின்னார்—மின்னலையொத்தபெண்களது, கார்—கரிய குழல் இல்—கூந்தலிலும், அந்தியின் இல்—அந்திக்காலத்திலும் (புட்பம் சரம் சேர்—மலாற்றொடுத்த சரம்சேரும்) புள்—பறவைகள், பஞ்சரம்—கூட்டில், சேர்—அடையும், புலியூர்—புலியூரானது, நட்பு இன் ஒடு—சிவநேயமுதிர்ச்சியோடு, மெச்சி—புகழ்ந்து, கும்பிட்டார்—கும்பிடும் அடியாரது, மெலிவுஒழிப்பார்—பிறவித் துன்பத்தை யொழிப்பவரும், வந்தி இட—வந்தியாகொடுக்க. இச்சிக்கும்—விரும்பிய, பிட்டார்—பிட்டினைவையுமுடைய இறைவரது, இடம்—இடமாம்.

அரிமருத்தன பாண்டியனேவலாளர் ஒறுக்கும் ஒறுப்பினையாற்றுதிரங்கிய வாதவூரடிகள் முறையீட்டிற் கிரங்கிச் சிவபெருமான், வையை ஊழிவெள்ளம்போலப் பெருகிவரக் கட்டளையிட்டருளினர், அவ்வாறே பெருகிவரப் பாண்டியன்கண்டஞ்சி யடைக்கும்படி தன்னாட்டிலுள்ளவர்க்கு அளந்துவிட,

அவரவரடைக்குங்காலையில் பிட்டுவிற்கும் வந்தியம் மைதனக்குக் கூலியாள் கிடையாது வருந்துங்காலையில் இறைவர் கூலியாளாய் எதிர்ப்பட்டுப் பிட்டைக் கூலியாகப்பெற்றுண்டு அவர்கள ளந்தகரையையடைக்கத் தொடங்கினர் என்பது புராணவரலாறு. (௫௪)

சாரொலிசீடாவணமுந்தம்பதியைமாதருங்கற்
பூரமணந்துன்னும்புலியூரே—பாரினுடன்
ஊதையங்கியம்புவானுட்புறம்பான்மாதர்பக்கற்
றூதையங்கியம்புவான்றோய்வு.

இ-ள் ஒலிசார் — ஆரவாரம்பொருந்திய, நீடு ஆவணஉம்—நெடியகடைவீதியும், தம்பதிஐ—தமது கணவரை, மாதர்உம்—கற்புடையபெண்களும (கற்பூரம்மணம்—கருப்பூரவாசனையால், துன்னும்—நெருங்கி மணம்வீசும்) கற்புஊர—கற்பு அதிகரிக்க, மணந்து—கலந்து, உன்னும்—கருதிவாழும், புலியூர்—புலியூரானது, பாரினுடன்—பிருதிவியோடு, ஊதை—வாயுவும், அங்கி—தேயுவும், அம்பு—அப்பும், வான்—ஆகாயமுமாகிய பஞ்சபூதங்களின, உள்புறம்பான்—உள்ளும் புறம்பும் கலந்திருப்பவரும், மாதர் பக்கல்--பரவையாரிடத்து, தூதுஐ (ஆளுடைநம்பிகள்பொருட்டு) தூதுமொழிகளை, அங்கு இயம்புவான்--அவ்விடத்துக் கூறுகின்றவருமாகிய இறைவர், தோய்வு—பொருந்தும் இடமாம.

பெருமாட்டியார் தோழியரிருவரு ளொருவராகிய கமலினியார் திருவாரூரில் உருத்திர கணிகைமார் மரபிற் பிறந்துபரவைநாச்சியாரெனத் திருப்பெயர்பூண்டு சிவநேசம் பூண்டொழுகுநாள், ஒருநாள் ஆளுடைய நம்பிகள் எதிர்ப்பட்டுப் பெருமானார் திருவருளால் திருமணஞ்செய்து சிலநாள்சென்றபின், திருவொற்றியூர்க் கெழுந்தருளிப் பெருமானாரைத் தரிசித்து அநிந்திதையார் வேளாளர் மரபிற் பிறந்து சங்கிலிநாச்சியாரெனத் திருப்பெயர்வாய்ந்து அத்திருவொற்றியூரில் திருப்பணிசெய்தொழுகுவாரைக்கண்டு சிவபெருமானார் திருவருளால் திருமணமுடித்திருத்தலை, அப்பரவை நாச்சியார் கேள்வியுற்றுப்பிண

த்தபின், ஒருகாற்செய்தசிவதரிசனத்தின்மகிமையாற் பெரும்பாவங்களெல்லாமொழிந்து உடனே சிவகதிபெற்றனனென்பது* மூன்னடிகளிற் குறித்த கதை. பாதகம் - வடசொல். துற்சகன் - வடசொற்சிதைவு; துஸ்ஸஹனென்னும்வடசொல்லுக்கு - பொறுக்கவொண்ணாதவனென்று பொருள். கண்டு உவந்து என்னும் வினைகளை ஊருக்கேற்றி யுரைப்பாரு முளர். துற்சகனும், உம்மை - இழிவுசிறப்பு; கீழ்ச்செய்யுளில் வந்த துன்மதனையும், மேற்செய்யுளில்வருமதுற்றெரிசனனையும் நோக்கிய இறந்தது தழுவிய எச்சப்பொருளதாகவுங் கொள்ளலாம். போத - புகுத என்பதன்மரூஉ; போ என்னும் பகுதியின்மேல் து - சாரியையென்றுங் கொள்ளலாம். பிரமன் எப்பொழுதும் நான்குமுகங்களாலும் நான்குவேதங்களையும் பாராயணஞ்செய்கின்றமையின், அவனுக்கு வேதனென்று பெயர்; இதனை வேதா என்னும் வடசொற்றிரிபாகக் கொண்டால், விதித்தற்றொழிற்குரிய கடவுளென்று பொருளாம். சர்வசங்காரகாலந்தோறுமழிகிற பிரமரது தலைகளையும் விஷ்ணுக்களது எலும்புகளையும் சிவபிரான் மாலையாகத்தொடுத்து, எப்பொழுதும் அழிவிலாமல் எஞ்சிநின்றபொருள் தாமொருவரே யென்று அப்பிரமாதியோர் அறிந்து வழிபட்டு நற்கதியுடைத்தற்பொருட்டு, ஆபரணமாக அணிகின்றனரென்பதுபற்றி, 'வேதனசிரம் அக்குஅணித்தார் சேர்த்து' என்றார். மதலையென்னுங் கொன்றைமரத்தின்பெயர், அதன்பூவுக்கு முதலாகுபெயர். திருமால் நரசிங்காவதாரமெடுத்து இரணியனைச் சங்கரித்தபின் அவனிரத்தமுழுவதையுங்குடித்து அதனால் மயங்கிச் செருக்குக்கொண்டு மூவுலகங்களுக்கும் வருத்தமிழைத்தபொழுது, அதனைப் பிரமன்முதலிய தேவர்களாலறிந்த பரமசிவன் அவர்களவேண்டுகோளால் சரபவுருக்கொண்டு அச்சிங்கத்தைக்கொன்று அதனதோலைமேற்கொண்டனனென்னுங் கதைபற்றி, 'நரசிங்கத்துரமேயக்கணித்தார்' என்றது. உரமது, அது-முதல் வேற்றுமைச்சொல்லுருபு. நரசிங்கம்-கழுத்துக்குக்கீழ்ப்பட்டது மனிதவடிவமும், முகம் சிங்கவடிவமு மாக அமைந்த திருமாலின் நான்காமவதாரம். அணித்தார் - இரண்டனுருபும்பயனுந்தொக்கதொகை. (௩)

௪.—(இ - ள்.) மறையோன் - ஒருபிராமணனது, உள்-மனம், களிப்ப-மிகமகிழும்படி, பொன் குடையால்-அழகியகுடையொன்றை (அவனுக்கு)க் கொடுத்த புண்ணியமாத்திரத்தைக்கொண்டு, துற்றெரிசனன் - துர்த்தரிசனனென்னும் வேடனுக்கு, நல கதியை - உயர்ந்தபதவியை, நல்கும் - கொடுத்தருளின, புலியூரே - புலியூரானது,—சொல கிளர் நால் ஆரணம் ஆறு அங்கத்தர் - சிறந்தசொற்கள்விளங்குகிற நான்குவேதங்களையும் (அவற்றின்) அங்கமான ஆறுசாஸ்திரங்களையும் வெளியிட்டவரும், அம் பவளம் மேனியின்-அழகியபவழநிறமான தனதுஉடம்பிலே, நாரணன் மால் தங்கு-நாராயணனென்னும் ஒருபெயரையுடைய திருமால் தங்கப்பெற்ற, ஓர் அத்தர் - ஒரு [இடது] பாகத்தையுடையவரும் ஆகிய சிவபிரானது, நாடு - ஊராம்; (எ - று.)

விந்தியமலையையடுத்த வனத்தி லுள்ள வேடர்களின் தலைவனான துற்றெரிசனனென்பவன் வழிப்பிரயாணிகளைக் கொள்ளையடித்துக் கொலைசெய்தொழுகுகிற தன்வழக்கப்படி, ஒருநாள் அவ்வழியில் வயதுமுதிர்ந்த ஓரந்தணன் வரக்கண்டு அவனைக்கொல்வதாக அச்சமுறுத்தி அவனதுபொருள்முழுவதையுங் கவர்கையில், அவ்வந்தணன் அஞ்சி 'பெருமூப்புடையவனாகிய யான் வெயிலால்வருந்தாவண்ணம் நீகவர்ந்தகுடையைமாத்திரம் எனக்குக்கொடுத்துவிட்டுப்போ' என்று வேண்ட, அங்ஙனமே அக்குடையை அவ்வந்தணனுக்குத் தானஞ்செய்து, அந்நல்வினையால், அவ்வேடன் சிலநாட்சென்றபின் இவ்வுலகத்தைநீத்துச் சிவகதியடைந்தன னென்பது இச்செய்யுளின்

க்குற்றனர், அப்பிணக்குப் பிறர்மாற்றுதலரிதாதலால் அப்பெருமானுரே பிணக்கொழியத் தூதுசென்றனர் என்பது புராணவரலாறு. ஊதையங் கிம்புவான் எண்ணும் மைத்தொகை.

தாசிபக்கல் எனப்பாடம் உண்டு புராணமுதலிய வற்றுள் பரவைநாச்சியாரிடத்துச் சிவபெருமானுர் தூதுசென்றருளினமையைக் கூறுமிடத்துத் தாசியென்றுயினும் அவர்கட்குரியமற்றைப் பரியாயநாமங்களாலாயினு மறந்துங் கூறினவரில்லையாதலால் மாதர்பககல் எனப்பாடங் கொண்டாம். (ருரு)

மீத்தாவிமகரனே மீன்பாய்ந்தரம்பையினைப்
பூத்தாறுடைக்கும்புலியூரே—கூத்தாடிப்
பாதஞ்சிவந்தார்பழிக்காலவாயினிலோர்
போதஞ்சிவந்தார்புரி.

இ - ள். மீ—மேலே, தாவு—தாவிச்செல்லும், இமகரன்ஐ—சந்திரனே, மீன்பாய்ந்து — மீன்மேலேபாய்ந்து, அரம்பையின்ஐ—வாழையினை (பூத்த ஆல்—மலர்ந்த ஆலமரம், துடைக்கும்—களங்கம் போக்காநிற்கும்) பூ—பொலிவினையுடைய, தாறு—குலையினை, உடைக்கும்—உடைக்காநிற்கும், புலியூர்—புலியூரானது, கூத்தாடி—ஆநந்தநடனஞ்செய்து, பாதம்சிவந்தார்—திருவடிசெவந்தவரும், பழிக்கு — பழியின்பொருட்டு, ஆலவாயின்இல்—திருவாலவாயில், ஓர்போது—ஒருகாலையில், அஞ்சிவந்தார்—அஞ்சிவந்தவருமாகிய இறைவரது, புரி—திருநகராம்

ஒருமறையவன் திருப்புத்தூரிலிருந்து பிள்ளேயோடு தன் மனைவியுடன் மாமன்வீட்டிற்குச்செல்ல மதுரையைநோக்கி வருங்கால், வழியில் வந்தவேசறவினுல் தன்மனைவிநீர் வேட்கையளாய்மூர்ச்சித்திருத்தலைக்கண்டு அவ்வழியிலிருக்கும் ஓராலமரத்தின் கீழிருத்தித் தண்ணீர்கொண்டுவரச்சென்றனன், அப்போதவளாயுளுலந்தமையால் அம்மரத்திலேறுண்ட அம்பால் உயிரிழந்தனள், தண்ணீர்கொண்டு வரச்சென்ற அம்மறையவன்வந்து நோக்கி யென்மனைவியி னுயிர்வாங்கிய பாவியாரெனச் சுற்றிலும் பார்க்கும்போது வில்லில் அம்பேறிட்டு

வழியில்வரு மிருகங்களைத் தேடியம்மரத்தில் ஓர்பாலொதுங்கி
நின்ற வேடனைநோக்கி இவன்றான்கொன்றனனென்று துணிந்
து அவனைப்பிணித்து அப்போதுள்ள குலோத்துங்க பாண்டி
யன்முன்னே கொண்டுவந்துவிட்டனன், அவன் மிகவும் ஒறு
த்தும் தான்கொன்றவனல்லாமையால் உண்மைகூற அரசன்
மனங்கலங்கி யிறைவர் சந்நிதிக்குச்சென்று குறைகூறுங்காலே
யில், அவர் திருவருளால் இந்நகர்க்குப் புறம்பிலுள்ள வணிகர்
வீதியில் கலியாணம் நடக்கின்றது அங்கு இந்த அந்தணனோடு
வருவாயாகில் உண்மைதெரிவிப்போமென்று ஓரசரீரியெழ, அ
தனைக்கேட்டுமகிழ்ந்துவிடைபெற்று அவ்வணிகர்வீதியில் மண
ம்நடக்கும் வீட்டில்சென்று ஒருபாலிருக்குமிடத்து, மணவாள
ன் ஆயுள்முடிந்தமையால் இயமனேவலப்பட்டு வந்தகாலபட
ரிருவரில் ஒருவன் இவன் மணவாளனாயிருப்பதாலிவனுயிர்வா
ங்குவது எவ்வாறென்று வினவ, மற்றொருவன் நேற்றுநோயில்
லாத ஒருபார்ப்பனியை ஆலமரத்திலேறுண்ட அம்பினைவீழ்த்தி
யெவ்வாறுயிர்கவர்ந்தேமோ. அப்படியே யிங்குள்ள பசுவா
லிவனுயிரைக் கவர்வோமென்று பேசியதுகேட்டு அவ்வேட
னுக்கு மகிழ்ச்சிசெய்தனுப்பினான் என்பது புராணவரலாறு. ()

அற்பகற்சோட்டன்றிலன்பாலாந்தவத்தாலும்பருக்கு
புற்பதிமேலாகும்புலியூரோ—வெற்பினுரு [ம
வந்தக்கழலொளியார்மன்றுளொவருக்குமர
விந்தக்கழலொளியார்வீடு.

இ - ள். அல்பகல்—இரவிலும் பகலிலும், சோடு அன்
றில்—ஆணன்றிலும் பெண்ணன்றிலும், அன்பு ஆல்—அன்பி
னால், ஆம்—ஆகிய, தவத்து ஆல்—தவத்தினால் (உம்பர்—உக்
கும்—தேவர்கள் மனையும் உயர்ச்சியையுடைய, புற்பதிமே
ல்—பனைமரத்தின்மேல், ஆகும்—பிரியாதுவசிக்கும்) உம்பரு
க்குஉம்—விண்ணுலகிற்கும், புல்—வியாக்கிரபாதமுனிவர் வசி
க்கும்—பதி—திருநகர், மேல்ஆகும்—மேற்பட்டுவிளங்கும், பு
லியூர்—புலியூரானது, வெற்பின் உருவம் — மலைவடிவமாய்,
த்க்க அழல் ஒளியார்—கனிந்ததீப்பிழம்பினொளிவாய்ந்தவரும்,

மன்றுஉள்—பொன்னம்பலத்தில், எவருக்குஉம்—யாவருக்கும், அரவிந்தம்—தாமரைமலர்போன்ற, கழல்—திருவடியை, ஒளியார்—கரவாதவருமாகிய இறைவரது, வீடு—திருமனையாம்.

வெற்பினுருவந்தக்கழலொளியார் என்பதைமுன்புகாண்க.

மாவனஞ்சூழ்காவிடத்துமாலுறுமின்னாரிடத்தும்
பூவைவண்டூதுந்தென்புலியூரே—நாவளைந்து
பிட்டிரதமென்றார்பிரமப்பாகாகொடுவா
தட்டிரதமென்றார்தலம்.

இ - ள். மாவனம்சூழ்—பெரியகாடுபோலச்சூழ்ந்த, காஇடத்துஉம்—சோலையினிடத்திலும், மால்உறும்—காமமயக்கங்கொண்ட, மின்னார் இடத்துஉம் — மின்னலையொத்த பெண்களிடத்தும் (பூ—பூவில், வை—வாய்வைத்து, வண்டு ஊதும்—வண்டுகளூதும்) பூவை—நாகணவாய்ப்புள், தூதுஉம்—தூதுமாகும், தென்புலியூர்—தென்பாலுள்ளபுலியூரானது, நாஅளைந்து—நாவிற்கலக்க, பிட்டு—பிட்டின், இரதம்—இரசத்தை, மென்றார்—சுவைத்தவரும், பிரமன்பாகா—பிரமனாகிய பாகனே, கொடுவா—கொண்டுவா, தட்டு—தட்டினையுடைய, இரதம்—தேரை, என்றார்— என்று திருவாய்மலர்ந்தவருமாகிய இறைவரது, தலம்—திருப்பதியாம்.

பிட்டிரதமென்றார் என்பதைமுன்புகாண்க. திரிபுரதகனஞ் செய்தற்குப்பிரமன் சாரதியாயிருந்தமையால் பிரமப்பாகாகொடுவாதட்டிரதம் என்றார் என்றனர். ஆகும் என்னும் வினைமுற்றுச் சொல்லெச்சமாய் நின்றது. கொணர்வா என்று வழக்கின்மையால்கொடுவா எனப்பாடங்கொள்க. கொணர வினைப்பகுதி. கொண்டுவா எனப்பொருள். தொழிற்பெயர் முதலின ஆகுமிடத்து ஈற்றயல் குறுகிரகரமெய்விரிந்து கொணர்தல், கொணர்ந்த, கொணர்ந்து, கொணர்பு, கொணரா, எனவருதலின். (௬௧)

பண்டுதவஞ்செய்திடவும்பள்ளரலத்தாலுழவும்
புண்டரிகமல்கும்புலியூரே—விண்டுமறை
வேந்துமறியாரிருக்குமேயறியார்தீயகலோ
டேந்துமறியாரிருக்குமில்.

இ - ள். பண்டு—முன்பு, தவம்செய்திடஉம்—தவஞ்செய்யவும், பள்ளர்—பள்ளர்கள், அலத்து ஆல்—கலப்பையால், உழஉம்—உழுதொழில்செய்யவும் (புண்டரிகம்—வியாக்கிரபாதர், அல்கும்—தங்கும்) புண்டரிகம் — தாமரைமலர்கள், மல்கும—நிறைந்து விளங்கும், புலியூர — புலியூரானது, விண்டு உம்—திருமால்உம், மறைவேந்துஉம்—பிரமனும் ஆகிய இவர்களால், அறியார்—அறியப்படாதவரும், இருக்கு—இருக்குவேதத்தால், மெய் —பொருந்தி, அறியார் — அறியப்படாதவரும், தீஅகல்ஒடு—தீயகலிேனாடு, ஏந்தும் மறியார்—மானையேந்திய இடத்திருக்கரத்தையுடையவருமாகிய இறைவர், இருக்கும்—எழுந்தருளியிருக்கும், இல—திருமனையாம்.

விண்டு, இருக்கு இரண்டும் வடசொற்களாதலால் குற்றியலுகரங்கெடாது, அதனால்வேந்துஎன்பதின் இறுதியிலுள்ள உம்மையைவிண்டு என்பதனோடு கூட்டியும், மெய் எனப்பிரித்தும் பொருள்கொண்டாம். (௫௯)

சாற்றுதிருத்தொண்டருஞ்செய்ச்சங்கினமுமுந்துமதி
போற்றவளமிக்கபுலியூரே—ஏற்றுருவாய்ச் [தி
சங்கத்தரங்கத்தர்தாங்கமகிழ்வோருமையோர்
பங்கத்தரங்கத்தர்பற்று.

இ - ள். சாற்று—புகழும், திருத்தொண்டர்உம்—அடியாரும், செய்—வயல்களிலுள்ள, சங்கு இனம் உம்—சங்கின் கூட்டங்களும் (உந்து—தூண்டாநின்ற, மதி — பேரறிவால், போற்ற—துதிக்க, வளம்மிக்க—செழுமைமிகுந்த) முந்து—முற்பட்ட, மதிபோல்—சந்திரன்போல — தவளம்மிக்க—வெண்ணிறமிகுந்த, புலியூர்—புலியூரானது, ஏற்று உரு ஆய்—இடபவடிவாய், சங்கம்—சங்குகளையுடைய, தரங்கத்தர்—அலைவாய்ந்ததிருப்பாற்கடலையுடைய திருமால், தாங்க மகிழ்வோர்-விடையாய்ச் சுமக்கமகிழ்ச்சி கூருகின்றவரும், உமை—உமாதேவியாரை, ஓர்பங்கு—இடப்பாகத்திலுடைய, அத்தர்—தலைவரும், அங்கத்தர்—எலும்பாபரணத்தை யுடையவருமாகிய இறைவர், பற்று—அன்பு கூர்ந்திருக்கு மிடமாம். (௬0)

தெள்ளிமையோர்போற்றுதொறுந்தேம்பொழிறோறு
புள்ளிவருமால்சேர்புலியூரே—வெள்ளிச் [ங்கனிச்செம்
சயிலத்திருப்பார்சனிப்பிறப்பிலென்னைப்
பயிலத்திருப்பார்பதி.

இ - ள். தெள்—மனத்தெளிவோடு, இமையோர்—தேவர்கள், போற்றுதொறும — துதிக்குந்தோறும், தேம்பொழில்தோறும்—தேன்வாய்ந்த சோலைகள்தோறும் (கனி—கனிதலையுடைய, செம்புள்—கருட வூர்தியில், இவரும்—ஏறும், மால்சேர்—திருமால்சேரும்) கன்னி—கன்னிராசியும், செம்—செம்மைவாய்ந்த, புள்ளி—கற்கடகராசியும், வரும்—வந்துதங்கும், ஆல்சேர்—ஆலவிருட்சம் நெருங்கிய, புலியூர்—புலியூரானது, வெள்ளிசயிலத்து—வெள்ளிமலையில், இருப்பார் — இருப்பவரும், சனி—சனித்தலாகிய, பிறப்பு இல்—சனனத்தில், என்ஐ பயில—என்னைப்பொருந்த, திருப்பார் — திருப்பாதவருமாகிய இறைவரது, பதி—திருத்தலமாம்.

கனி—பழங்களில், செம்புள்ளி—செவந்தபுள்ளிகள், வரும்—பொருந்திய, ஆல்—ஆலவிருட்சங்கள் எனவும் ஒருபொருள். தோறும் என்னும் இடைச்சொற்கள். முன்னது தொழிற்பயில்வுபொருளிலும், பின்னதுஇடப்பன்மைப்பொருளிலும் வந்தன. கன்னி கனி. தொகுத்தல் விகாரம். (சுக)

தங்கவவை சேவிக்கத்ததண்ணறைவண்டுண்ணவரு
புங்கவரேசேரும்புலியூரே—அங்கைதனில் [ம்
ஏந்துதலையோட்டினரேத்துமன்பர்தாய்முலைப்பால்
மாந்துதலையோட்டினர்வாழ்வு.

இ - ள். தங்க அவை—பொன்னம்பலத்தை, சேவிக்க-துதிக்கவும், தண்—தண்ணிய, நறை—தேனை, வண்டுஉண்ண-வண்டுகளுண்ணவும் (வரும்—வாராநின்ற, புங்கவர்ஏ—தேவர்களே, சேரும்—சேராநிற்கும்) அரும்பும்—முகிழ்க்கும், கவர்ஏ—மரக்கப்புகளே, சேரும்—நெருங்கிய, புலியூர்—புலியூரானது, அங்கைதன் இல்—அழகிய திருக்கரத்தில், ஏந்து—ஏந்திய, தலைஒட்டினர் — பிரமகபாலத்தையுடையவரும், ஏத்தும்

(தம்மை) துதிக்கும், அன்பர்—அடியார்கள், தாய்முலைபால் - தாய்மாரின் முலைப்பாலினை, மாந்துதல்ஐ—உண்ணுதலை, ஒட்டினார்—ஒழித்தவருமாகிய இறைவர், வாழ்வு—வாழ்ந்திருக்கும் இடமாம்.

அடியவர்பிறப்பினையொழிப்பவர் என்பார்தாய்முலைப்பால் மாந்துதலையோட்டினார் என்றார். (௬௨)

முத்திதரும்பூசையென் றுமூகைதனைப்பேசிடென் று
புத்தரவமாற்றும்புலியூரே—சித்திமதி
நேமித்தாரத்தனார்நித்தியகல்யாணிசிவ
காமித்தாரத்தனார்காப்பு.

இ - ள். முத்திதரும்—மோட்சத்தைத்தாராநின்ற,பூசை—சிவபூசனையை, என்றும்—எக்காலத்தும், மூகைதன்ஐ—ஊமைப்பெண்ணை, பேசிடென்று—பேசாயென்று (புது—புதுமைவாய்ந்த, அரவம்—பாம்பாகிய பதஞ்சலியார், ஆற்றும்—செய்யும்) புத்தர்—புத்தர்களது, அவம்—பாவம் விளைக்குஞ்சமயவொழுக்கத்தை, மாற்றும்—போக்கும், புலியூர—புலியூரானது, சித்தி—சித்திகளையும், மதி—புத்திகளையும், நேமித்தார்—நியமித்தவரும், அத்தனார் (அயன்முதலியோர்க்கு) மூத்தவராயுள்ளவரும், நித்தியகல்யாணி — நித்தியகல்யாணியாகிய, சிவகாமி—சிவகாமியம்மையாரை, தாரத்தனார்—மனைவியராகவுடையவருமாகிய இறைவர், காப்பு—காவல்கொள்ளு மிடமாம்.

நியமித்தார் நேமித்தார் வடமொழித்திரிபு. புதுமை அரவம் ஈறுகெட்டுத்தன் னொற்றிரட்டித்துப் புத்தரவம் என நின்றது. (௬௩)

சொற்பழுத்தமாமுநியுஞ்சூழுந் துறவினரும்
புற்பதத்தையாரும்புலியூரே—உற்பவித்த
கஞ்சமனைவிட்டினார்கம்பமுறித்தார்செம்பதத்தால்
வெஞ்சமனைவிட்டினார்வீடு.

இ - ள். சொல்பழுத்த—புகழ்மிக்க, மாமுநி உம்—பெருமைவாய்ந்தவியாக்கிரபாதமுநிவரும், சூழும் துறவினர்உம்—

சூழ்ந்த துறவிகளும் (புல்பதத்துஐ—புலியின்காலினை, ஆரும்-பொருந்திய) புல்பதத்துஐ—புல்லரிசியாலாகிய உணவினை, ஆரும்—உண்ணும், புலியூர்—புலியூரானது, உற்பவித்த—திருமாலுந்தியிற்றோன்றிய, கஞ்சம்—தாமரையாகிய,மனைவீட்டினார்-இல்லத்தையுடையபிரமனது, கம்பறித்தார்—தலையைக்கொய்தவரும், செம்பதத்துஆல்—செவந்ததிருவடியினால், வெம்சமன்ஐ—கொடிய இயமனை, வீட்டினார் — உதைத்தருளினவருமாகிய இறைவரது, வீடு—திருமனையாம்.

யாவையும் படைத்தலால் நானேயிறைவனென்றகங்கரித்தபிரமனுக்கு நான்குவேதங்களும்வந்து நீயிறைவனல்லவெனக்கூறவு மயங்கியிறுமாந்திருத்தலால் வயிரவமூர்த்தி, அவன் செருக்கொழியச் சிரங்கொய்தனர் என்பதும், திருக்கடவூர் என்னுந் திருப்பதியில் சிவபெருமானை வழிபட்டுப் பூசித்துவந்த மார்க்கண்டேயமுனிவர் வாழ்நாளுலந்தமையாலவருயிர் கவரவந்தஇயமன்பாசம்வீசியபோது அவனையுதைத்தனர் என்பதும் புராணவரலாறுகள். (சுசு)

நன்குற்றமாதருமநல்லார்கண்முன்றில்களும்
பொன்கற்படுக்கும்புலியூரே—மென்கட்
கமலவடிவந்தியார்கட்கருளார்ஞான
அமலவடிவந்தியாரார்வு.

இ - ள். நன்கு உற்றமாதர் உம் — நன்மைமிக்கபெண்களும், அநல்லார்கள்—அப்பெண்களது, முன்றில்கள்உம்—முற்றங்களும் (பொன்—இலட்சுமியினது (கற்பையொத்த) கற்பு அடுக்கும்—கற்பினைப்பொருந்திய) பொன்—பொன்கட்டிகளை, கல்படுக்கும்—கல்லாகப்படுத்த, புலியூர—புலியூரானது, மெல்-மெல்லிய, கள்—தேன்வாய்ந்த, கமலம்—தாமரைமலர்போன்ற, அடி (தமது) திருவடியை, வந்தியார்கட்கு—வணங்காதவர்களுக்கு, அருளார்—அருள்செய்யாதவரும், அமலம்—மலரகிதமாகிய, ஞானம்வடிவு—அருள்வடிவம்—அந்தியார்—செவ்வானநிறத்தையொத்தவருமாகிய இறைவர், ஆர்வு—பொருந்தும் இடமாம். (சுஎ)

தேம்பொழின்மேற்சேல்பாயச்செங்கழையைமேதியு
பூம்பழனஞ்சாரும்புலியூரே—மேம்படுமெண் [ணைப்
டோளுக்காசைப்பட்டார்தொண்டாமியற்பகையில்
லாளுக்காசைப்பட்டாரார்வு.

இ - ள். தேம் — தேன்பொருந்திய, பொழில்மேல்—சோலையின்மேல், சேல்பாய—சேல்கள்பாயவும், செங்கழை ஐ—செங்கரும்பினை, மேதி உன்ன — எருமைகளுண்ணவும் (பூ—பொலிவமைந்த, பழன்—பழங்கள், நஞ்சு—நைந்துவீழ்ந்து, ஆரும்—நிறைந்துகிடச்கும்) பூபழனம்—தாமரைமலர்களையுடைய வயல், சாரும்—சேர்ந்துசூழும், புலியூர்—புலியூரானது, மேம்படும்—மேம்பட்ட, எண்தோளுக்கு—எட்டுத்திருப்புயங்களுக்கும், ஆசைபட்டார் — திக்குகளையே பட்டுத்தரீயமாக அணிந்தவரும், தொண்டாம்—அடியவராகிய, இயற்பகை இல்லாளுக்கு—இயற்பகைநாயனார் மனையாள் பொருட்டு, ஆசைப்பட்டார்—விருப்பமுற்றவர்போல்நடித்தவருமாகிய இறைவர், ஆர்வு - பொருந்துமிடமாம்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வைசியர்குலத்தில் திருவவதாரஞ்செய்த இயற்பகைநாயனார் அடியார் திறத்து அன்புபூண்டொழுகு முறுதிப்பாட்டினை யாவருமுணர்ந்துய்ய, சிவபெருமானார் ஒருதூர்த்தவேட முடையவராயவரில்லத்திற்குச் சென்று, அவர்செய்யும் வழிபாட்டிற்கு மகிழ்ந்து உமது மனைவியை வேண்டுமென, அதற்கிசைந்து கொடுக்கப்பெற்றுச் செல்லுங்கால், வழியிலந்நாயனார் சுற்றத்தார் இசையாது இறைவனைத்தடுக்க அவர்களைக்கண்டித்து வழிவிட்டுத்திரும் புகையில், ஒரிடையூறு வந்ததுபோல மீளவுங்கூவி ரிஷபவாகனரூடராயவர் மனைவிக்கும் அவருக்கு முத்திகொடுத்தார் என்பது புராணவரலாறு. ()

கார்ப்புணர்ப்பிற்பொற்கலையைக்காமுகர்க்காவேள்வர
போர்ப்பவனன்பார்க்கும்புலியூரே-பார்ப்பதியாம் [வைப்
பெண்டனகத்தடுத்தார்பேர்மணத்திற்சுந்தரனைத்
தொண்டனகத்தடுத்தார்தோய்வு.

இ - ள். கார்—மேகம்போல நிறம்வாய்ந்த, புணர்ப்பு இல்—திருமேனியில், பொன்கலை—பீதாம்பரத்தை, காமுகர்க்கு ஆக—காமிகளுக்காக, வேள்வரவு—மன்மதனுவருகையை (போர்ப்பவன்—போர்க்குந்திருமால், அன்பு—அன்பினுல், ஆர்க்கும்—பிணிக்கும்) போர்—போர்த்தொழிலையுடைய, பவனன்—வசந்தன், பார்க்கும்—பார்க்காநின்ற, புலியூர்—புலியூரானது, பார்ப்பதிஆம்—பெருமாட்டியாராகிய, பெண்—மாதரசியை, தன் ஆகத்து அடுத்தார்—தமது திருமேனியில் ஓர்பால் வைத்தவரும், பேர்மணத்துஇல்—பெரியதிருமணத்தில், சுந்தரனை—சுந்தரமூர்த்திநாயனுரை, தொண்டன்ஆக—அடிமையாக, தடுத்தார்—தடுத்து ஆண்டவருமாகிய இறைவர், தோய்வு—கலந்திருக்கும் இடமாம்.

திருக்கைலாயத்தில் சிவபெருமானுக்குப் பூமாலைதொடுத்துச் சாத்தும் திருப்பணி பூண்டொழுகும் ஆலாலசுந்தரரென்னுந்திருநாமமுடையவர் ஒருநாள் மலர்கொய்யச் சோலைக்குச்சென்றசாலையில், அங்குவந்த உமையம்மையார் தோழியராகிய அநிந்திதை, கமலினியென்னுந்தோழியரிடத்துக் காதல்கொண்ட காரணத்தால் உன்னையாம் வந்து தடுத்தாட்கொள்வோம் நிலவுலகில் மானிடப்பிறப்புற்று இவர்கள் பாலின் பநுகர்வையென்றிறைவர் கட்டளையிட்டருளினர், அக்கட்டளையைமேற்கொண்டு திருநாவலூரில்சடையனுரென்னுந் திருநாமமுடைய ஆதிசைவருக்கு இசைஞானியாரென்னும் அம்மையின் திருவயிற்றிலவதரித்துப் பருவம்வாய்ந்து அம்மறையவர் குலத்திலோர் பெண்ணைத் திருமணமுடிக்கும்போது, இறைவர் ஓர்விருத்தபிராமணவடிவங்கொண்டு எமக்கு நீயடிமையென்று வழக்கிட்டு நம்பியாரூரனைத்தடுத்தாட்கொண்டனர் என்பது புராணவரலாறு. (சுஎ)

தென்னூர்பொழிலிடத்துஞ்செங்கனகமன்றிடத்தும்
புன்னைகத்தோடார்புலியூரே—நன்னீரை
விட்டுவிளக்கிட்டார்வினைதொலைத்தார்மாட்டினுமன்
பொட்டுவிளக்கிட்டார்நுழைவு.

இ-ள். தென் ஆர்—வண்டுகளினிசைநிறைந்த, பொழில்இடத்துஉம்—சோலையினிடத்தும், செம்—செவந்த, கனகமன்றுஇடத்துஉம்—பொன்னம்பலத்தினிடத்தும் (புன்னாகம்—புன்னாகமலரின், தோடு ஆர்—இதழ்நிறைந்த) புல்—வியாக்கிரபாதர், நாகத்து ஒடு—பதஞ்சலியாரோடு, ஆர்—பொருந்திய, புலியூர்—புலியூரானது, நல்நீர் ஐவிட்டு—நல்லநீரைவார்த்து, விளக்கு இட்டார்—விளக்கெரித்தநமிநந்தியடிகள், வினைதொலைத்து—பிறவிக்குக்காரணமாகிய இருவினைகளைத்தொலைத்து, ஆர்மாடுஇன்உம்—எவரிடத்திலும், அன்புஒட்டு—அன்பாகிய பற்று, விள்ள—நீங்கினால், கிட்டார் (அவர்களை) அணுகாத இறைவர், உறைவு—தங்குமிடமாம்.

சோழநாட்டில் எமப்பேறூரென்னும் ஊரிலவதரித்த நமிநந்தியடிகள் சிவநேயமுடையவராய்த் திருத்தொண்டுபூண்டு திருவாரூர்க்கு நாள்தோறுஞ்சென்று புற்றிடங்கொண்ட பெருமானைத் தரிசனஞ்செய்தொழுகுநாளில் ஒருநாள், அந்த ஆலயத்தின் புறத்திலிருக்குந் திருவரனெறியப் பரைச்சேவிக்கச்சென்றபோது திருவிளக்குக் குறைவாயிருக்கப்பார்த்து நெய்வாயக்கக் கமலாலயமென்னும் திருக்குளத்தி னருகிருக்கும் ஒருவீட்டிற்போய் நெய்கேட்டனர், அவன் சமணனாதலால் உங்கள் தேவன்கையில் அக்கினியிருக்க வேறுதீபமேன், வேண்டுமானால் இந்தக்குளத்து நீரைவார்த்துவையெனக் கேட்டுத், தளர்ந்திருக்கும்போது பெருமானார் திருவருளால் கமலாலய தீர்த்த நீரைவார்த்துத்தீபம்வையென ஓர்திருவாக்கெழக்கேட்டு அவ்வாறே வார்த்துத் திருவிளக்குவைத்துத் தரிசித்துவந்தனர் என்பது புராணவரலாறு. விள்ள என்னும் நிகழ்கால வினையெச்சத்தினது ளகரமெய் தொகுத்தல். (சஅ)

பெட்பின்முகில்கண்டாற்பிறழ்ந்திறந்தாலெல்லாந்தேளைகப்
புட்பரதங்காட்டும்புலியூரே—உட்பரிவாற்
கையாரமாவுனைத்தார்க்காத்தாற்கீழ்நூலுல்வர்க்
கொய்யாரமாவுனைத்தாரூர்.

மூன்பாதியிலுள்ள வரலாறு. ஆர்த்தரிசனன் என்னும்வடசொல்லுக்கு - சோக்குதற்குக்கொடியவனென்று பொருள் 'பொற்கொடையால்' எனப்பாடங் கொள்ளுதற்குப்பொருந்தாது. வேதம் நான்கு - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம். வேதாங்கம் ஆறு - சிக்ஷை, வியாகரணம், சந்தம், நிருக்தம், சோதிடம், கற்பம் என்பன. சொல்கினார் - புகழ்ந்திக்க என்றுமாம். சிவனது திருமேனிநிறம் செம்மையாதலை "வையகமுஞ் செம்மையவாச் சோதியென்ன வாணிலச் சோதியெனை மறைப்பாகம்" எனவருதலுங் காண்க. நாரணன்என்னும் உயர்திணைப்பெயரின் ஈறுகெட்டது. அர்த்தம் - அர்த்தம்: வடசொல்; பாதிவடிவம்: அதனையுடையவர், அர்த்தர். சிவபிரான் தனது இடப்பாகத்தில் உமாதேவியோடொப்பத் திருமாலையும் அடக்கிவைத்துக் கொண்டுள்ளாரெனபது நூற்கொள்கை. பவளமேனியரென்றொ கொண்டுக்கு-பவழநிறமுடையவரென்றுங் கொள்ளலாம். 'மனத்தோருங்கனிதரு' என்று பாடங்கொள்ளலாம். (௪)

௫.—(இ - ள்.) ஓர் - ஒப்பற்ற, புழு முனிவன் - பாலமுனிவர், தாண்டு - பாயுந்தன்மையுள்ள, புலி - புலியினுடைய, கால் - கால்களையும், கை - கைகளையும், உகிர் - நகங்களையும், அன்று ஈன்ற - தாம்பெற்றிருந்து, அர்ச்சிக்கும் - சிவபூசைசெய்கின்றமையால், புலியூர் - புலியூரானது,—பாண்டியற்கு ஆம் - பாண்டியனுக்காக, மாணிக்கம் - மாணிக்கங்களை, காட்டினோர் - காணச்செய்தவரும், மா அந்தணன் - சிறந்தவேதங்களுக்குரிய ஓர் அந்தணச்சிறுவன் (அபிஷேகஞ்செய்த), பாலால் - பாலினால், அங்கு - அப்பொழுது, வேணிக்கு - (தமது) சடையை, ஆட்டினோர் - அசைத்தருளினவருமாகிய சிவபிரானது, வீடு - இருப்பிடமாம்; (எ - று.)

மத்தியந்தினமுனிவர்குமாரர் தமது தந்தையின்கட்டளைப்படி சிதம்பரத்தையடைந்து திருமூலட்டானேசுவரரைப் பூசித்துக்கொண்டு நாடோறும் வருகையில் ஒருநாள், 'பொழுதுவிடிந்தபின் சென்று அருச்சனைக்கு மரங்களினின்று மலரெடுக்கலாமென்றால், அப்பொழுதுக்குள் வண்டுகளால் அம்மலர்கள் எச்சிலாக்கப்படுகின்றனவாதலின், அம்மலர்கள் பூசனைக்குப் பயன்படாவாயின; பொழுதுவிடிதற்குமுன் மலரெடுக்கலாமென்றால், வழிதெரியாது, இருட்பொழுதில் மரங்களின்மேலேறினால், அவற்றில் விழுந்து கைகால்கள் வழுக்குறுகின்றன; அதனால் யானறிந்து மலர்களைக் கொண்டு பூசிப்பதெவ்வாறு' என்று வருந்தியிருக்கையில், சிவபிரான் அவர்க்குக் காட்சி கொடுக்கப்பெற்று அப்பிரானை வணங்கிப் பிரார்த்தித்தபடி, அவனருளால், புலியின் கால்கைகளைப்போன்ற கூரிய வலிய நகங்களையுடைய கால்கைகளையும், அவற்றில் கண்களையும் பெற்று வியாக்கிரபாதரென்னும் பெயருடையவராய் முறைப்படி பூசனைபுரிந்தனரென்பது முன்னடிகளிற்குறித்தகதை. வழுக்காமற்பற்றியேறுதற்குக் கால்கைகளில் நகங்களும்; பார்த்து நடத்தற்கும் பூக்களைப் பழுதுபார்த்தெடுத்தற்கும் அவற்றில் கண்களும் வேண்டப்பட்டன வென்க. மதுரையில் வீரபாண்டியனுக்கு மகுடஞ்சூட்டக் கருதி மந்திரிகள் கருவூலத்திற் சென்று பார்க்கையில், அவனது வேசையர் மக்கள்முன்னமே அங்குள்ள பொருள்களையெல்லாங் கவர்ந்து போய்விட்டமையாற் கிரீடஞ்செய்வித்தற்கு தக்க இரத்தினங்கள் கிடையாமையால், யாது செய்வோமென்று வருந்தி அவற்றை வாங்குதற்குச் செல்லுகையில், சிவபிரான் அருளால் வணிகத்திருவுருவங்கொண்டு வீதியில்வந்து விற்பவராய், தம்மிடத்து நவமணிகளும் உள்ளனவென்று காட்டினரென்பதும்; திருவிரிஞ்சிபுரத்தில் சிவபூசைசெய்யும் ஆதிசைவவேதியருள் . தந்தையையிழந்த ஒருசிறுவனது பூசைமுறை வர, அந்நாளில் பிறரெவருஞ்பெரியோர் வந்து உதவாமையால், அவ்வந்தணச்சிறுவன் தானேசென்று அனபோடு பூசனை

இ - ள். பெட்பு இன் - விருப்பத்தோடு, முகில்கண்டால் - மேகத்தைக்காணில், பிறந்துஇறந்தால் (தன்னிடத்து) பிறந்து இறக்கில் (எல்—விளக்கத்தையுடைய, தோகை—கலாபம் வாய்ந்த, புள்—மயில்கள், பாதம் காட்டும்—நடனஞ்செய்யும்) ஓகை—ஒழிதலை, எற்று—ஒழிந்த, புட்பரதம்(அவ்வான்மாக்கள் சிவலோகஞ்செல்ல) புட்பரதத்தினை, காட்டும்—காட்டாநிற்கும, புலியூர்—புலியூரானது, உள்பரிவு ஆல்—மனத்தில் நிறைந்த அன்பால, கை (தமது) திருக்கையை, ஆரம் ஆக—சந்தனக் கட்டையாகக்கொண்டு,உரைத்தார்—உரைத்தமூர்த்தி நாயனாரை, காத்து—பாதுகாத்து, ஆல்கீழ்—கல்லாலினிழலின்கீழ், நூல்—தர்மார்த்தகாமமோட்சங்களை, நால்வர்க்கு உம்—சனகாமுதலியநால்வருக்கும, ஒய்யாரம் ஆக—மகிழ்ச்சியாக, உரைத்தார்—சொல்லியருளினவருமாகிய இறைவரது,ஊர்—திருநகரம்.

பாண்டிநாட்டிற்சிறந்து விளங்கும் மதுரைத்திருப்பதியில் வணிககுலத்தில் திருவவதாரஞ்செய்து சிவநேயம்பூண்டு சொக்கநாதர்க்குச் சந்தனத்திருக்காப்புச் செய்தொழுகும் மூர்த்திநாயனார் ஓர்நாள், வடதேசத்திருந்துவந்து பாண்டியனோடு போர்செய்து வென்று அவனரசியலைக் கைகொண்டுசமணர்கள் வசப்பட்டிருக்குங் கருநடராசன் தான்செய்யும் திருப்பணிக்குமுட்டுப்பாடுசெய்ய, சந்தனக்கட்டை கிடையாமற் போனாலும் உரைக்குங்கைக்கு முட்டுப்பாடுண்டோவென்று முழங்கையைஎலும்பு நரம்புந்தேயும்படி தேய்த்துப் பெருமானார் திருவருளாலரசுபெற்று முத்தியடைந்தனர் என்பது புராணவரலாறு, கையாரமாவுரைத்தார் எனப்பாடமுமுண்டு, இரண்டிடத்தும் ஆய் என்பதுசெயவெனெச்சத்திரிபாதலால்கையாரமா, ஒய்யாரமா என இயல்பாகப்பாடங்கொண்டாம். (௬௧)

கட்டுறுகோட்டுப்பூநமலப்பூதேனூறிப்
புட்டரிக்கவீறும்புலியூரே—சிட்டர்தொழ
மின்றாடகத்திறன்மேய்ந்தமன்றுளாநந்த
நன்றாடகத்தினனோடு.

இ - ள். கட்டு உறு—முகிழ்த்த, கோடுபூ—கொம்பிலுள்

ளமலரும், கமலம்பூ—தாமரைமலரும் (தேன்—வண்டுகள், நூ ாி—(கட்டினை) சிதைத்து, புட்டு—பிட்டு, அரிக்க (காலால்) அரிக்க, வீறும்—மலர்ந்துதோன்றும்) தேன் ஊறி—மதுவூறி, புண்டரிக்க—வண்டுகள் நிலைபெற்றிருக்க, வீறும்—பொலிவுபெற்று விளங்கும், புலியூர்—புலியூரானது, சிட்டர் தொழ—அயன் முதலியமேலோர்வணங்க, மின்—விளங்கும், ஆடகத்து இன் ஆல்—மாற்றுயர்ந்தபொன்னால், மேய்ந்த—வேயப்பட்ட, மன்று உள்-பொன்னம்பலத்தில், நல்—நல்ல, ஆநந்த நாடகத்திறைன்—ஆநந்த நிருத்தஞ்செய்யு மிறைவரது, நாடு—நாடாம்.

ஆடகம நால்வகைப்பொன்னிலொன்று. பிட்டு எனற்பாலது புட்டு எனவந்தது மரூஉ. (எ௦)

மேகம்பயில்குழலார்மென்களமுந் தண்பணையும்
பூகம்பொருவும்புலியூரே—மாகமொடு
தாலம்பணிந்திடுவார் தாழ்பவளக்கோடீர
மேலம்பணிந்திடுவார்வீடு.

இ - ள். மேகம் பயில்—மேகத்தையொத்த,குழலார்—கூந்தலையுடையபெண்களது, மென்களம் உம்—மெல்லியகண்டமும், தண்பணை உம்—தண்ணியவயலும் (பூகம—கமுகமரத்தை, பொருவும்—ஒத்திருக்கும்) பூ—மலர்களையும், கம்பு—சங்கினையும், ஒருவும்—நீங்கிய, புலியூர்—புலியூரானது, மாகமொடு—விண்ணுலகோடு, தாலம்—நிலவுலகத்தால், பணிந்திடுவார்—வணங்கப்பட்டவரும், தாழ்—தாழ்ந்த, பவளம்—பவளத்தையொத்த, கோடீரம்மேல்—சடாபாரத்தின்மேல், அம்பு அணிந்திடுவார்—கங்கையை யணிந்தவருமாகிய இறைவரது, வீடு—வீடாம்.

உழுதவயல் என்பார் மலரையும் சங்கையும் நீங்கிய என்றார். (எக)

கங்குல்வாய்த்தீபங்களுக்கும்வெயிலுக்குமணிப்
பொங்கராவீடாம்புலியூரே—சங்கரா
என்பாரிடத்தினனிமத்திடைநடித்த
வன்பாரிடத்தினன்வாழ்வு.

இ - ள். கங்குல்வாய்—இரவிலுள்ள, தீபங்களுக்கு உம்-விளக்குகளுக்கும், வெயிலுக்கு உம்—சூரியனுக்கும் (மணி—மாணிக்கத்தைத் தலையிலுடைய, பொங்கு—விளங்காநின்ற, அரா—பாம்பு, ஈடு ஆம்—ஒக்கும்) அணி—அழகிய, பொங்கர்—சோலையிலுள்ள, ஆ— ஆச்சாமரம், வீடு ஆம்—வீடாகும், புலியூர்—புலியூரானது, சங்கரா என்பார்—சங்கரனேயென்று துதிக்கும்அடியவர்களது, இடத்தினன்—இடத்திலுள்ளவரும், ஈமத்து இடை—மயானத்தில், நடித்த—நடனஞ்செய்த, வன்பாரிடத்தினன்—வலியபூதப்படையை யுடையவருமாகிய இறைவர், வாழ்வு—வாழுமிடமாம்.

சர்வ சங்கார காலத்தில் யாவும் மயானமாதலால் ஈமத்திடைநடித்த எனவும், தேவதாருவன முனிவர்கள் கொல்ல ஏவியபூதங்களைத் தனக்குச் சேனையாகக் கொண்டருளினமையால் வன்பாரிடத்தினன் எனவுங்கூறினார். (எஉ)

அல்லிச்சுனைகளினுமாலையினுமநாரியே
புல்லிக்குடையும்புலியூரே—கல்லிற்
றலையைத்தாமோதினர்தம்மையாண்டெண்ணெண்
கலையைத்தாமோதினர்காப்பு.

இ - ள். அல்லி—ஆம்பல்களையுடைய, சுனைகள்இன்உம்—சுனைகளிடத்திலும், ஆலை இன் உம்—ஆலையினிடத்திலும் (நாரி ஏ பெண்களே, புல்லி—பொருந்தி, குடையும்—நீராடும்) நாரி (மன்மதனது) வண்டுநாணும், ஏ—மலரம்பும், புல்—தழுவிய, இக்கு—கரும்புகள், உடையும்—உடையாநிற்கும், புலியூர்—புலியூரானது, கல் இல்—பாறையில், தலை ஐ—தயிருதலையை, தாம்—தாம், மோதினர்தம்ஐ—மோதிய திருக்குறிப்புத்தொண்டரை, ஆண்டு—அடிமைகொண்டு, எண்ணெண்கலை ஐ அறுபத்துநான்கு கலைகளையும், தாம் ஓதினர் (ஆன்மாக்களின் பொருட்டுத் தாம்) ஓதியருளிய இறைவர், காப்பு—காவலாயுள்ள இடமாம்.

காஞ்சிபுரத்தில் ஏகாலியர் மரபில் திருவவதாரஞ்செய்து சிவநேயம் பூண்டு சிவனடியார் வஸ்திரங்களி னழுக்குப்போக்

கித் தூய்தாக்கிக் கொடுத்தொழுநாளில் சிவபெருமானாரிவர்மு
றுகிய அன்பினை யுலகரறிந்துய்ய, விருத்தவடிவங்கொண்டோரா
ழுக்குக்கந்தையைத் தாங்கிக்கொண்டவ் வடியவரில் விற்குள
ழுந்தருளக்கண்டு, வந்த அடியவரைத்தரிசித்துபசரித்து எமதை
யரோ இக்கந்தையைக்கொடுத்தால் மாசுபோக்கித் தருகின்றே
னென, யாம்விருத்தராகையால் குளிருக்காற்றேம் இதைத்தவி
ரவேறுமில்லை விரைவிற்றருகவென்றருள, அவ்வாறேதருகின்
றேனென வேற்று, மாசு போக்கத்தொடங்குங் காலையில்பெரு
மானாரருளால் மழைபெய்யத்தொடங்கினமையால், அடியவா
க்கிடையூறுசெய்தோமேயாது செய்வோமெனத் தேம்பிப்பா
றையில் தமது தலையைமோதியபோது சிவபெருமானார் காட்சி
தந்தருளினரென்பது புராணவரலாறு. (எரு)

வெற்பிணைக்குங்கொங்கைமின்னார் வீடுஞ்செந்தாமரை
பொற்பளிக்குஞ்சாரும்புலியூரோ—கற்புணையா [யும்
ஓதங்கடந்துவந்தாரோதுதமிழ்கொண்டிருபொற்
பாதங்கடந்துவந்தார்பற்று.

இ - ள். வெற்பு—மலையோடு, இணைக்கும்—ஒப்புச்சொ
ல்லத் தோன்றும், கொங்கை—தனத்தையுடைய, மின்னார்—
மின்னல்போலும் இடையையுடைய பெண்களது, வீடு உம்—
இல்லமும், செந்தாமரை உம்—செந்தாமரைமலரும் (பொன்
—பொன்னாலும், பளிக்கும்—பளிங்காலும், சாரும் —அமைந்த)
பொற்பு—அழகிய, அளிகுஞ்சு—வண்டின்குஞ்சுகளால், ஆரும்
—பொருந்தப்படும், புலியூர்—புலியூரானது, கல்—(சமணர்கள்
பிணித்த) தூணை, புணை ஆக—தெப்பமாகக்கொண்டு, ஓதம்—
கடலை, கடந்து வந்தார்—கடந்துவந்த திருநாவுக்கரசுகள், ஓது
—ஓதிய, தமிழ்கொண்டு—திருப்பாசுரங்களைக் கைக்கொண்டு,
இருபொன்பாதங்கள்—பொன்போலும் அரிய இரண்டுதிருவடி
களையும், தந்து உவந்தார்—தந்துமகிழ்கூர்ந்த இறைவா, பற்று
—அன்பு கூர்ந்திருக்கு மிடமாம்.

திருமுனைப்பாடி நாட்டிற்சிறந்த திருவாமூரில் வேளாளர்

குலத்தில் புகழனார் தவத்தால் திருவவதாரஞ்செய்து மருணீக்கியாரென்னும் பிள்ளைத் திருநாமம்வாய்ந்து பலநூல்களையுங் கற்றுணர்ந்து வினைவசத்தால் சமணசமயம் புகுந்து அங்குத்தருமசேனர் என்னும் பெயர்பெற்றொழுகுநாளில், திருவதிகைவீரட்டானத்தில் திருத்தொண்டு செய்திருந்த அவர் தமக்கையார் திலகவதியார் கேள்வியுற்று வருந்திப் பெருமானை வேண்டிக்கொண்டமையால் அப்பெருமானார் திருவருளால் சூலைநோயிற்றொடக்குண்டு அச்சமணர்கள் மணிமந்திரங்களாற் றீராது தமது தமக்கையாரை வழிபட்டுச் சிவநேயம்பூண்டு சூலைநோய்தீர்ந்திருந்த நிலைச் சமணர்கள் கேள்வியுற்றுத் தமது சமயந்தொடக்கிற் கட்டுண்ட அரசனுடையாணையால் திருநாவுக்கரசரை வருவித்துக் கற்றூணிற் கட்டி நடுக்கடலிற்பிணித்துப்போட்டனர், ஸ்ரீபஞ்சாக்கரப்பதிக மோதிக்கட்டுண்ட கற்றூணைத் தெப்பமாக மிதந்து திருப்பாதிரிப் புலியூருக்கெழுந்தருளிப் பெருமானைத் தரிசித்துப் பதிகமோதினரென்பது புராணவரலாறு. இணைக்கும் பிறவினைப்பெயரெச்சம் இணைக்கு பிறவினைப்பகுதி, உகாரகேடு சந்தி, உம் விகுதி (௭௪)

மிக்ககதிர்த்தேர்விசும்பைமேலோர்தவத்தைத்தவிருப்
புக்களவித்தாக்கும்புலியூரே—சக்கரத்தை
நந்தரிக்கிட்டன்புடையானுஞ்சிவகாம
சுந்தரிக்கிட்டன்புடையான்றேய்வு.

இ-ள். மிக்க கதிர்—மிகுந்த ஒளிவாய்ந்த, தேர்—நிலைத்தேர்கள், விசும்பு ஐ—விண்ணுலகினை, மேலோர்—பெரியோர்கள், தவத்து ஐ—தவத்தினை (புக்கு—மேலேசென்று, அளவி—கலந்து, தாக்கும்—மோதும்) விருப்புக்கள்—ஆசைகளை, அவித்து—கெடுத்து—ஆக்கும்—செய்யும், புலியூர்—புலியூரானது, சக்கரத்து ஐ—சுதரிசனமென்னுஞ் சக்கரத்தை, நந்து—பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கத்தை யேந்திய, அரிகு—திருமாலுக்கு, இட்ட—கொடுத்தருளிய, அன்பு உடையான்—கருணையையுடையவரும், நாள் உம்—எந்நாளும், சிவகாமசுந்தரிகு—சிவகாமசுந்தரியார்க்கு, இட்டன்—இஷ்டரும், புடையான்

—ஓர்பாலுள்ளவருமாகிய இறைவர், தோய்வு—கலந்துவசிக்கும் இடமாம். (௭௦)

மன்னுமலைதந்துவந்துமாக்களிற்றைப்பெறறுமைநேர்
பொன்னிநதிசூழும்புலியூரே—சென்னிமதிப்
பெம்மானிடக்கையான்பேரம்பலத்தாடுஞ்
செம்மானிடக்கையான்சேர்பு.

இ - ள் (மன்றும்—மிக்க. அலைதந்துவந்து—அலைகளை வீசிவந்து, மா—பெரிய, களிறுஐ பெற்று—யானைகளையடைந்து) மன்னும்—நிலைபெற்ற, மலைதந்த—இமயமலையால்தரப்பட்டு, உவந்து—சந்தோஷித்து, மாகளிறுஐ—பெருமைவாய்ந்தயானைமுகக்கடவுளாகிய மூத்தபிள்ளையாரை, பெற்ற—ஈன்ற, உமைநேர்—பார்வதிப் பெருமாட்டியாரையொத்த, பொன்னிநதி—காவிரிநதி, சூழும்—சூழ்ந்த, புலியூர்—புலியூரானது, சென்னி—சடாபாரத்தில், மதி—இளஞ்சந்திரனையணிந்த, பெம்மான்—பெருமானும், இடக்கையான்—தமருகத்தை யேந்தினவரும், பேர் அம்பலத்து ஆடும்—பெருமைவாய்ந்த பொன்னம்பலத்தில் நடனஞ்செய்யும், செம்மான்—செவந்தமானை, இடக்கையான்—இடத்திருக்கரத்திலணிந்தவருமாகிய இறைவர் சேர்பு—சாருமிடமாம். (௭௧)

மேதகுவிண்டாவுறலான்மேலம்புலியுறலாற்
பூதரமொப்பாகும்புலியூரே—மோதிப்
பொருமாதங்கத்துரியார்போற்றுலகேழுந்
தருமாதங்கத்துரியார்சார்பு.

இ - ள். மேதகு—மேன்மைமிக்க, விண்—மேகம், தாவுறல் ஆல்—தவழ்தலாலும், மேல்—விண்ணிலுள்ள, அம்புலி உறல் ஆல்—சந்திரன்தவழ்தலாலும்) மேதகு—மேன்மைமிக்க விண்—ஆகாயத்தை, தாவுறல் ஆல்—அளாவுதலாலும், மேல்—தன்மேல், அம்—அழகிய, புலி உறல் ஆல்—புலிவசித்தலாலும், பூதரம்—மலையை, ஒப்பாகும்—ஒக்கும், புலியூர்—புலியூரானது, மோதி—தாக்கி, பொரும்—போர்செய்யும், மாதங்கத்து

—யானையினது, உரியார்—தோற்போர்வையையுடையவரு
போற்று—துதிக்கும், ஈரேழுலகு உம்—பதினான் குலகத்தை
ம், தரும்—பெற்ற, மாது—பெருமாட்டியாரை, அங்கத்து உ
யார்—தமது திருமேனியினிடப்பாலிற் பெற்றவருமாகிய இறை
வா, சார்பு—சாரந்திருக்குமிடமாம்.

பூதாம் உலகுதரிக்கச்செய்வது என்னும் பொருள்மேல்
ற்றலால் காரணப்பெயா. (எஎ)

அங்காடியகம்பலைசங்கா ரஞ்செறிவாற்
பொங்காழிநேராம்புலியூரே—சங்காழி
மாலாஞ்சாத்தர்மணமலிசெம்பொன்மடலைப்
போலாஞ்சாத்தர்புரி.

இ - ள். அங்காடி—கடைகள் (ஆம்—அமைந்த, கம்பலை
—ஆரவாரத்தையும், சங்கு—வளையலையும், ஆரம்—முத்தையு
ம், செறிவுஅல்—நெருங்கியிருத்தலால்) ஆம்—சலத்தையும், கம்
பு—சங்கையும், அலை—அலையையும், சங்காரம்—அழித்தற்றொ
ழிலையும், செறிவு ஆல்—பொருந்தியிருத்தலாலும், பொங்கு—
பொங்கும், ஆழி—கடலை, நேர் ஆம்—ஒக்கும், புலியூர்—புலி
யூரானது, சங்கு—சங்கினையும், ஆழி—சக்கரத்தையும்(ஏந்திய)
மால் ஆம சாத்தர்—திருமாலாகிய அம்பினையுடையவரும், மண
ம்மலி—வாசமிக்க, செம்பொன்மடல் ஏ—செம்பொன்னாலாகி
யமடலினை, போல் ஆம்—போல அமைந்த, சாத்தர்—கொன்
றைமாலையையணிந்தவருமாகிய இறைவர், புரி—திருநகராம்.

ஆம் முன்னது வினையிடைச்சொல். பின்னது இடை
யிலுயிர் மெய்கெட்டு நின்ற ஆகும் என்னும்பெயரெச்சம். செ
ம்பொன்மடல் நிறம்பற்றி வந்தவுவமையணி. (எஅ)

வாய்ந்தவலம்புரிப்பூமாத்தழுவிநந்தவநம்
பூத்துளவத்தோறும்புலியூரே—ஆய்ந்தமலர்ச்
செங்கைக்குழையினார்திண்டோடொடுங்காதிற்
சங்கைக்குழையினார்சார்பு.

இ - ள். (நந்தவநம்—நந்தவநமானது, வாய்ந்த—பொருந்திய, வலம்புரிபூ—நந்தியாவட்டமலரையும், மா—வண்டையும், தழுவி—பொருந்தி) வாய்ந்த—பொருந்திய, வலம்புரி—வலம்புரிச் சங்கையும், பூமா—தாமரையில்வசிக்கும் இலக்குமியையும், தழுவி — பூதுளவத்தோன் — பொலிவமைந்தது ழாய் மாலையையணிந்த திருமாலே, ஆம்— ஒக்கும், புலியூர்—புலியூரானது, ஆய்ந்தமலர்—ஆராய்ந்த தாமரைமலரையொத்த, செங்கைகு—செவந்ததிருக்கரத்தில், உழையினா—மானையேந்தினவரும், திண்தோள்— திண்ணியதோளை, தொடும்—அளாவும், காதில—திருச்செவியில், சங்குழை குழையினார்—சங்ககுண்டலத்தையுடையவருமாகிய இறைவர், சார்பு—சார்ந்திருக்குமிடமாம்.

சங்கைஐ சாரியை எழனுருபு நிற்குமிடத்தில் நான்கனுருபுநிற்றலால் உருபுமயக்கம். தேவதாருவநமுனிவர் கொல்லவேவிய மானைத் திருக்கரத்திலேந்தினர் என்பது புராணவரலாறு (எக)

தாலம்படைத்தலாக்கட்டாளொழுகலாற்பிரமன்
போலும்பொழில்சூழ்புலியூரோ—ஆலம்
அருந்தக்கண்டறுங்கறுத்தாரல்லல்வினையம்பா
வருந்தக்கண்டங்கறுத்தார்வாழ்வு.

இ - ள். (தாலம்படைத்து-கூந்தற்பனையைப்படைத்து, அலர்—மலரினின்று, கள்தான் ஒழுகல் ஆல்—மது ஒழுகப்பெறுதலால்) தாலம்படைத்து—உலகினைப்படைத்து, அலர்கண்-தாமரைமலரில், தான் ஒழுகல் ஆல்—தான்வசித்தலால், பிரமன்போலும்—பிரமனையொக்கும், பொழில்சூழ்-சோலைசூழ்ந்த, புலியூர்—புலியூரானது, ஆலம்அருந்த-விஷத்தையுண்ணுதலால், கண்டம்கறுத்தார்—ஸ்ரீகண்டங்கறுத்தவரும், அல்லல்வினை-பிறவித்துன்பத்தை விளைக்கும் இருவினைகளை, அன்பர்வருந்த-அடியவர்துதித்துவருந்த, கண்டு—நோக்கி, அங்கு அறுத்தார்—அப்பொழுது ஒழித்தவருமாகிய இறைவர், வாழ்வு—வாழுமிடமாம்.

அமுதந்தோன்றத் திருப்பாற்கடலைப் பிரமன்முதலியோர் கடைந்தகாலையில் விஷந்தோன்றியதனுல் நிலைகுலைந்து அவர்கள் வேண்டுகோளுக்கருள்கூர்ந்து உண்டருளினர் என்பது புராணவரலாறு கண்டங்கறுப்பார் எனஎதிர்காலம்படப்பாடம் ஓதுவாருமுண்டு. (அ0)

மின்னுமணிவேழத்தான்மேவரம்பையால்வயல்கள்
பொன்னுலகுக்கொப்பாம்புலியூரே—உன்னியொரு
காலமாவென்றூர்கருத்துற்றுருத்தெதிர்ந்த
தானமாவென்றூர்தலம்.

இ - ள். (மின்னும்—விளங்காநின்ற, மணி — அழகிய, வேழத்துஆல்—கரும்பினாலும், மேவு—பொருந்திய, அரம்பை ஆல்-வாழையாலும்) மணி—சிந்தாமணியாலும், வேழத்துஆல்-வெள்ளையானையாலும், மேவுஅரம்பைஆல்-விரும்பும் அரம்பையர்களாலும்,வயல்கள்—வயல்களானவை, பொன்னுலகுக்கு—பொன்னுலகத்துக்கு, ஒப்புஆம்—ஒப்பாகும், புலியூர்—புலியூரானது, உன்னி—தியானித்து, ஒருகால்—ஒருதரம், நமா என்றூர்—நமாஎன்றுசிந்திக்கும்அடியவரது, கருத்து—மனத்தில், உற்று—பொருந்தி, உருத்துஎதிர்ந்த—கோபித்தெதிர்ந்த, தானம்—மதத்தையுடைய, மா—யானையை, வென்றூர்—வென்றவராகிய இறைவரது, தலம்—திருப்பதியாம்.

கயமுகாசுரன் என்பவன் பிரமனிடத்துப் பலவரங்களையும் பெற்று இந்திரன்முதலியோரையெல்லாம்வென்று நிலவுலகில்வந்து காசியில் வசிக்குமுனிவர்களைக் கொல்லத்துரத்தியகாலையில் விசுவநாதரை யடைந்தனர், அங்கும் அவன்சென்றமையால் சிவபெருமானூர் உக்கிரவடிவங்கொண்டுதோன்றச்சிறிது மஞ்சாதுபோர்செயயப் புகுந்தமையாலவனை மிதித்துக்கொன்று தோலையுரித்துப் போர்த்தனர் என்பது புராணவரலாறு. ()

மாசுமுறைந்தாமைவெள்ளைவாரணமூர்ந்தோடைமகப்
போகிநிகராகும்புலியூரே—தோகைமயிற்
புள்ளேறிவருவார்போதமழலைக்குவந்தார்
வெள்ளேறிவருவார்வீடு.

இ - ள். (மா—பெரிய, கம் உறைந்து—நீர்ப்பெருக்கு அமைந்து, ஆமை—ஆமையும், வெள்ளைவாரணம்—வெள்ளிய சங்குகளும், ஊர்ந்து—தவழப்பெற்று) மாகம்உறைந்து—விண்ணுலகில் வசித்து, ஆம—நீர (பருகிய) மை — மேகத்தையும், வெள்ளைவாரணம்—வெள்ளையானையையுநடத்தி, ஓடை—மலரோடையானது, மகம்—யாகத்தையுடைய, போகி — இந்திரனுக்கு, நிகர் ஆகும்—ஒக்கும், புலியூர்—புலியூரானது, தோகைமயில்புள்—கலாபத்தையுடைய மயிலின்மேல், ஏறிவருவார்—ஏறிவரு முருகக்கடவுளது, போதம் மழலைகு—உபதேசமாகிய மழலைக்கு, உவந்தார்—மகிழ்ந்தருளினவரும், வெள்—வெள்ளிய, ஏறு—இடபத்தில், இவருவார்—ஏறிவருவோருமாகிய இறைவரது, வீடு—திருமனையாம். (அஉ)

தேன்றிகழுமாமலரேந்திப்பரவித்தாழ்ந்தடியார்
போன்றகழிசூழும்புலியூரே—ஊன்றி
உளத்தினயனத்தனுவந்துதொழுதேத்தும்
குளத்தினயனத்தன்குடி.

இ - ள். (தேன்—வண்டுகளையும், திகழும்—விளங்கும், மா—பெருமைபொருந்திய, மல்லர்—வீரரையும், ஏந்தி—பொருந்தி, பரவிதாழ்ந்து—அகன்று ஆழ்ந்து) தேன்திகழும்—தேன்பொருந்திய, மா—பெருமையமைந்த, மலா ஏந்தி—மலர்களையேந்தி, பரவிதாழ்ந்து—துதித்து வணங்கி, அடியார்போன்று—அடியவரையொத்து, அகழிசூழும—அகழிசூழ்ந்த, புலியூர்—புலியூரானது, உளத்து இன்—மனத்தில், ஊன்றி—பதித்து, அயன்—பிரமனும், நத்தன்—பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கினையேந்தியதிருமாலும், உவந்து—விரும்பி, தொழுது ஏத்தும்—தொழுது வணங்கும், குளத்து இல்—நெற்றியில், நயனத்தன்—அழற்கண்ணையுடைய இறைவர், குடி—குடியிருக்கும் ஊர். (அகூ)

ஆசின்மதிஞாலளவிட்டாங்குயர்ந்துநீறணிந்து
பூசுராபோலாகும்புலியூரே—மாசு

செய்யத்தொடங்குகையில், அச்சிவலிங்கப்பெருமான் அவன்பால் இரக்கமுற்று, அவன் தமக்குப் பாலபிஷேகம்முதலியன எளிதிற்செய்யுமாறு அச்சிறுவனுக்கு எட்டும்படி தமது திருமுடி தாழ்ந்தருளினரென்பதாம் கதைகள். ஆய் ஆக: எச்சத்திரிபு; இனி, பாண்டியற்கு-பாண்டியன்பொருட்டு, ஆய் மாணிக்கம் - ஆராய்ந்தெடுக்கப்பட்ட மாணிக்கங்களை, காட்டு மென்றுமாய் உரைக்கலாம். வேணிக்கு-நான்காம்வேற்றுமையுருபு செயப்படுபொருளில் வந்ததனால், உருபுமயக்கம். வேணி - வடசொல். மாணிக்கம் - மாணிக்யம்

இனி, மாமறைப்பாலனை பாலால் வேணிக்கு அங்கு ஆட்டினார் என்பதற்கு - சிறந்தபிராமணருமாரான விசாரசருமரால் பாலைக்கொண்டு திருமுடிக்கு அக்காலத்தில் அபிஷேகஞ்செய்யப்பட்டவரென்றுரைத்தல் நேராமென அறிக; சோழமண்டலத்திலே திருச்சேய்ஞலூரில் பிராமணசாதியிற் பிறந்து வேதமுதலியன ஓதிவரும் விசாரசருமர் இடையர்பசுக்களை அடிப்பதைப்பார்த்துப் பொறுமையிலராகி அவ்வூர்ப்பசுக்களையெல்லாம் அவ்வவற்றிற்குடையவரின் அனுமதிபெற்றுத் தாமே மேய்த்துவருங்காலத்திலே மண்ணியாற்றங்கரையிலே மணலாற் சிவலிங்கத்தைத் தாபித்து அப்பசுக்களின்பாலைக் கறந்து குடங்குடமாகக் கொண்டுபோய் அபிஷேகஞ்செய்துவர, அதைத்தெரிந்த அவ்வூரவர்கள் அவர் பிதாவாகிய யச்சதத்தனிடத்திற் போய் 'உமதுபுத்திரன் பசுக்களை அன்புடன் மேய்ப்பதுபோலக் கொண்டுபோய்ப் பாலைக்கறந்து மணலிற்கொட்டிப் பாழாக்குகிறான்' என்றுசொல்லி முறையிட, அத்தத்தனை மைந்தனறியாதபடி மறைந்துசென்று அங்ஙனஞ்செய்தலைக்கண்டு மிகுந்தகோபங்கொண்டு விசாரசருமரைத் தன்கைத்தண்டினாற்பலமுறையடித்துத் திருமஞ்சனப்பாற்குடங்களைக் காலாலிடறிச்சிதற, அந்நாயனார் தம்முன்கிடந்த ஒருகோலை எடுத்து உடனேசிவனருளால் மழுவாகிய அதனால் சிவாபராதஞ்செய்த தாதையின் கால்களைவெட்டிவிட்டு முன்போலவே அருச்சனைசெய்ய, பரமசிவன் பிரத்தியட்சமாகி அவருக்குச் சண்டேசுரபதத்தை அளித்தருளினரென்பது கதை இனி, மறைப்பாலனை - மார்க்கண்டேயரும், வியாக்கிரபாதருமாகலாம். (ரு)

சு.—(இ - ள்) அழும் - அழுகிற, வெம் - விரும்பத்தக்க, புலியின் புதல்வனுக்கு - வியாக்கிரபாதமுனிவரது குமாரனாகிய உபமன்யுவுக்கு, தத்து - மோதுகின்ற, திரை - அலைகளையுடைய, பால் உததிதன்னை - பாற்கடலை, ஈயும் - கொணர்ந்துகொடுத்தருளுதற்கு இடமான, புலியூரே - புலியூரானது,—பத்தி - சிவபக்தியாகிய, தவம் - சிறந்ததவம், தழைத்த - நிரம்பின, சித்தனார் - மனத்தையுடைய சிறுத்தொண்டநாயனார், தாம சமைத்த - தாம் பாகஞ்செய்த, சேயை - (அவரது) குமாரனை, உவந்து - விரும்பி, அழைத்த - (முன்போலுருவங்கொண்டுவரும்படி) அழைத்தருளின, சித்தனார் - சித்தவடிவங்கொண்டவராகிய சிவபிரானது, ஊர் - ஊராம்; (எ - று.)

வியாக்கிரபாதமுனிவர் தமது தந்தையின் கட்டளைப்படி வசிட்டமகாமுனிவரது உடன்பிறந்தவளை மணஞ்செய்து உபமன்யுவென்னுங் குமாரரைப் பெற, அக்குழந்தையை மாமனாகிய வசிட்டரும் அவர்மனைவியான அருந்ததியும் எடுத்துக்கொண்டுபோய்த் தமது பர்ணசாலையிற் காமதேனுவின்பாலையூட்டிவளர்த்துவருகையில், ஒருநாள் தந்தைதாயரான வியாக்கிரபாதரும் அவர்மனைவியாரும் அங்குச்சென்று அக்குழந்தையைத் தமது பர்ணசாலைக்கு எடுத்துக்கொண்டுவந்து தமக்குப் பால்கிடையாமையால் மாவை நீரிலே கரைத்து ஊட்ட, அதனை அக்குழந்தை உட்கொள்ளாது உமிழ்ந்துவிட்டுக் காமதேனுவின்பாலைக்கருதி விரும்பியழுதலும் பாலூட்டிச்சமாதானப்படுத்த வழியில்லாமல் அக்குழந்தையைத் தந்தை சிவசந்நிதானத்திற் கொண்டுவிட, அங்கு அக்குழந்தை பசியாற்றாது அழுது சிவபிரானருளாற் பாற்கடலைப்பெ

கழலாதவன்மதியார் கண்ணுறூர்கண்ணும்
அழலாதவன்மதியாரார்வு.

இ - ள் ஆசுஇல்—குற்றமில்லாத, மதில்—மதிலானது (நூல் அளவு இட்டு—எற்றுநூலாலளவிடப்பட்டு, ஆங்கு உயர்ந்து—அவ்விடத்திலுயர்ந்து, நீறுஅணிந்து—சுண்ணத்தாற் பூசப்பட்டு) நூல் அளவிட்டு — வேதமுதலிய நூல்களை யளவுசெய்து, ஆங்கு—அப்பொழுதே, உயர்ந்து (அறிவால்) உயர்ந்து, நீறு அணிந்து—திருநீறணிந்து விளங்கும், பூசுரர்போல் ஆகும்—மறையவரையொத்த, புலியூர்—புலியூரானது, மாசுகழலாத—குற்றத்தினின்றும்நீங்காத, வல்மதியார்கண்—தற்போதமுடையவரிடத்து, உறூர்—பொருந்ாதவரும், கண்—திருநேத்திரங்கள், ஆம்—அமைந்த, அழல்—அக்கினியும், ஆதவன்—சூரியனும், மதியார் - சந்திரனுமாகவுடையவருமாகிய இறைவர், ஆர்வு—பொருந்து மிடமாம்.

அழலாதவன் மதி உம்மைத் தொகை. (அ௫)

எற்கோவரையாகிவரலாலைங்கரனேர்
பொற்கோபுரஞ்சேர்புலியூரே—நற்காற்
கிசைக்குஞ்சிலம்பினனீரைம்முகத்தான்
அசைக்குஞ்சிலம்பினனார்வு.

இ - ள். (எல்குஒ—சூரியமண்டிலத்துக்கோ, வரைஆகி- ஓரளவாகி, வரல்ஆல்—வருகையால்) எல்—விளக்கம்வாய்ந்த, கோ—அரசத்தன்மையையுடைய, வரை—மேருவையொத்த, ஆகு—பெருச்சாளியின்மேல், இவரல் ஆல்—ஏறுதலால்—ஐங்கரன்—ஐந்துதிருக்கரங்களையுடையமூத்தபிள்ளையாரை, நேர்-ஒக்கும், பொன்—பொன்னாலமைந்த, கோபுரம்சேர்—கோபுரமமைந்த, புலியூர்—புலியூரானது, நல்காற்கு—பொலிவமைந்ததிருக்கால்களுக்கு, இசைக்கும் சிலம்பினன்—இசைந்த சிலம்பினையுடையவரும், ஈரைம்முகத்தான் - பத்துமுகங்களையுடைய இராவணன், அசைக்கும்—அசைக்காநின்ற, சிலம்பினன்—கயிலைமலையை யுடையவருமாகிய இறைவர், ஆர்வு—பொருந்து மிடமாம்.

முனிவர்களோடு மாறுபட்டு பெருச்சாளிவடிவங்கொண்டு ஓராசுரன் என்றும் இடையூறவர்களுக்குச் செய்துவந்தமையால் முனிவர்வேண்டுகோளால் அவ்வசுரனைப் பாசாங்குசங்களால் அடக்கித் தமக்கு வாகனமாகக்கொண்டார் என்பதும், இராவணன் இந்திரன்முதலிய தேவர்களோடு போர்செய்து செருக்குற்றுச்சிவபெருமான் திருக்கயிலைவழி வருங்காலையில் அவன் விமானஞ் செல்லாமையால் அத்திருமலையை எடுக்க முயன்றானென்பதும் புராணவரலாறுகள். ஈரைந்தபணைப்புத்தொகை,()

கால்காட்டியாறுதலைக்காட்டியடுத்தோர்க்கயில்மேவும்
போர்க்காவலன்குருபுலியூரே—பாற்சோர்க
குட்டிக்கங்கூட்டினார்கொச்சைமுகமாயனுக்கன்
றொட்டிக்கங்கூட்டினாரூர்.

இ - ள். (அடுத்தோர்க்கு—அடுத்தவர்களுக்கு; கால்காட்டி—தென்றற்காற்றைக்காட்டி, ஆறுதலைகாட்டி—ஆறுபோறு தலைக்காட்டி அடுத்தோர்க்கு—தம்மை அடைந்த அடியவர்க்கு, கால்காட்டி—திருவடியைக்காட்டி ஆறுதலைகாட்டி—ஆறுதிருமுகங்களையுங்காட்டி, அயில்—வேலையேந்திய. மேவும்போர்—முருகக்கடவுளைப்போல, காவலன்குரு—காவலனாகிய குருவாக, புலியூர்—புலியூரானது, பால்—பாலை, சோர—குட்டிக்கு—பன்றிக் குட்டிக்கு, அங்கு ஊட்டினார்—அங்குத்தாயாயமர்ந்து ஊட்டினவரும், கொச்சைமுகம்—ஆட்டுமுகத்தை, மாயனுக்கு—தக்கனுக்கு, அன்று—அக்காலையில், ஒட்டி—சேர்த்து, சம்கூட்டினார்—தலையாகக் கூட்டினவருமாகிய இறைவனது, ஊர்—ஊராம்

பாண்டி நாட்டிலுள்ள குருவிருந்த துறையென்னும் ஊரில் வாழுஞ் சுகலனென்னும் ஒரு வேளாளன் பெற்ற பன்னிரண்டு பிள்ளைகளும் தமது தந்தை தாயிறந்தபின் வேடரோடு கூடி க்காட்டில் வேட்டையாடுங் காலையில் அங்கிருந்து தவஞ்செய்த பிரகஸ்பதியின் தவங்குலைய, கல்முதலியவற்றை வாரிவீசினார்கள், அவர் சினங்கூர்ந்து நீங்கள் உழுதொழிலினராதலால்மு

பனேழும் பன்றியாகக்கடவீரென்று சபிக்க அன்றே அவ்வூரி லடியுந்திருள்ள காட்டில் பன்றிகளாகப் பிறந்தார்கள், அக்கா லத்திலுள்ள இராசராசபாண்டியன் வேட்டையாடுங் காலையி லம்பெய்கையில் அவற்றின் தந்தை தாய்களகப் பட்டிறக்க அக் குட்டிகள் வருந்தும்போது சிவபெருமானவற்றின் தாயாய்வ ந்து முலையூட்டினர் என்பதும், தம்மைப்பழித்ததக்கன் தலையை யாகசாலையிலறுத்து ஆட்டின் றலையை யிசைத்தனரென்பதும புராணவரலாறுகள். ஆறுதலைகாட்டி இரண்டாம் வேற்று மையுத்தொகையில் வருமொழி வல்லெழுத்தியல் பாதலால்வலி ததல் விகாரம். (அசு)

மெய்ப்பவளமாமேனி மிக்கசிவகங்கையது
பொய்யின்மறையோர் பொலிபுலியூரே—மைப்பனை
நெய்க்குருந்துணரைச்சேர்க்குமெல்வனையார் [போற்
றுஞ்சுந்தரனுக்கிடமாம் |.

இ-ள். மெய்ப்பவளமாக்கு மேனியுடைக்கும் பிறவி யை மாய்க்கும், [illegible] - ஆகிய தாமரைகள்மிகு ந்த வயல் [illegible] (ஆறாம்வேற்றுமைக்கு) [illegible] - அங்குக்கனங்க [illegible] - இலக்கமையானது, பொய்யில் - பொய்யாமையில்லாத, மறைக்கு ஒப்பு ஆம் - வே தத்துக்கொப்பான [illegible] ஆனது, மை - கரிய, பனைபோ ல - பனைபோன்ற [illegible] ஐயர் - தொங்கா [illegible] நாயகக்கடவுளுக்குப் பிதாவாயி னவரும், தூய - [illegible] - நீண்ட, மால்வரை ஆம் —பெரியமேருவாகிய, தங்கம் தனு - தங்கமலையை யேந்திய, கையா - திருக்கரத்தையுடையவருமாகிய இறைவர், சார்பு— பொருந்தும் இடமாம். (அஎ)

காலாயிரந்தாற்கரிமரமொட்டாற்சேடன்
போலாவயஞ்சேர்புலியூரே—பாலாழி
தந்தகுஞ்சமப்பார்த்தலையுமொருசடையிட்
டிந்தகுஞ்சமப்பாரிடம்.

இ-ள். (கால் ஆயிரத்து ஆல் - ஆயிரங்கால்களாலும், கதிர்—ஒளியையுடைய, மணி—இரத்தினங்களழுத்திய, சூட்டு ஆல்-கலசத்தாலும்) கால் ஆயிரத்து ஆல்—அளவில்லாத கால்களாலும், கதிர்—ஒளியமைந்த, சூட்டு ஆல்—உச்சிக்கொண்டையாலும், சேடன்போல் - ஆதிசேடனைப்போல, ஆலயம் சேர்—ஆலயம்நெருங்கிய, புலியூர்—புலியூரானது, பால் ஆழ்—பாற்கடலானது, தந்தாஞ்சு உம்—தந்தநஞ்சினையும், அப்பு ஆரம் உம்—கங்கையையும் ஆத்திமாலையையும், களம்—ஸ்ரீ கண்டத்திலும், சடை—சடாபாரத்திலும், இட்டு—அணிந்து, இந்தமம—விறகினை, சுமப்பார்—சுமந்தருளுகின்றவராகிய, இடம்—இடமாம்

இசைப்பாணர் பகைவராகிய ஏமநாதனையெல்லை மதுரைத்திருநகரில் விறகுசுமந்தருளினார் என்பது புராணவரலாறு நஞ்சினைக்களத்திலும் அப்பு ஆரமயைச் சடையிலும் எனக்கொள்ளா நிற்றலால முறைநிரனிறைப்பொருள்கோளணி சூட்டுஎன்றதால், பெயராய்க் கலசத்தினைப்போல் நின்றது (அ௪)

தக்கயலே கெரிபருங் குஞ்சவியாசனையொப்
புக்கொடிக்கம்பமுஞ்சேர் புலியூரே—எச்சயத்தில்
பல்லுக்கெட்டாதவனும் பாரப்புனைந்துநறுஞ்
சொல்லுக்கெட்டாதவனுந் தோய்வு.

இ-ள் (தக்க—கலை (ஆகமங்களிலுள்ள) அமையாத்துறை தெரியலதனை ஆல்—தெரிதலால், தக்கு—மேம்பட்ட, கலை—மேல் தமுதலிய நூல்களை, தெரியல் தன் ஆல்—ஆராய்தலால், வியாசன்—வேதவியாசனை, ஒப்பு—ஒக்கும், கொடிக்கம்பம் சேர்—துவசத்தம்பம் சேர்ந்த. புலியூர்—புலியூரானது, எச்சயத்து இல்—தக்கன் யாகத்தில், பல்லுகெட்டு-பல்லிறந்து. ஆதவனுற பாற—சூரியனோடே, புடைத்து—தகர்த்து, மறைசொல்லுக்கு வேதவாக்கியத்துக்கு, எட்டாதவனும்—எட்டாதவருமாகிய இறைவர், தோய்வு—பொருந்துமிடமாம்.

தக்கன்யாகத்தில் வீரபத்திரக்கடவுளால் சூரியன்பல்லையிழந்தான் என்பது புராணவரலாறு. (அ௫)

பாடுமிசையாற் றனைக்குடைபத் தாற்சிகரம் வெண்
பூடணமின் றாளாம் புலியூரே — வேடன்
அடித்தரிக்குநோ வா ரமரர்துயா ராலங்
குடித் தரிக்குங் கோவார் குடி.

இ-ள். (பாடும் இசை ஆல் - பாடலும் சொல்லும் புகழு ளும், தனம் குடைபத்து ஆல் - பொன்னால் செய்த கலசங்களாலு ம்) பாடும் - பாடாநின்ற, இசை ஆல் - இசையினாலும், தனம் குடைபத்து ஆல் - குடம்போன்ற தனத்தாலும், சிகரம் - சிகர க்கோயிலானது, வெண் பூடணம் - வெள்ளிய ஆபரணத்தை அ ணிந்த, மின் தாள் ஆம் - காமகளுக்கு நிகராகும், புலியூர் - புலி யூரானது, வேடன் - கண்ணப்பநாயனாரது, அடி - திருவடியை தரிக்கும் - தரித்த, நோவார் - நேத்திரத்தையுடையவரும், அம ரர் துயர் - தேவர்கள் துன்பங்களை, ஆலம்குடித்து - விஷத்தை யுண்டு, அரிக்கும் - கெடுக்கும், கோவார் - தலைவருமாகிய இறை வர், குடி - குடியிருக்கும் ஊராம்.

¹ தொண்டைநாட்டில் திருக்காளத்தியென்னுந் திருப்பதி யினருகிருக்கும் உடுப்பூரில்வாழும் வேடர்குலபதியாகிய நாக னென்பவன் தவப்பயனால் திருவவதாரஞ்செய்து திண்ணனெ ன்னும் பிள்ளைத் திருநாமம்பெற்று வில்வித்தையில் வல்ல வராய் வேட்டையாடுங்காலையில், ஓர்பன்றியின் பின்தொட ர்ந்து அதனைக்கொன்று பொன்முகலி யாற்றங்கரையிலிட்டு அரு கிருக்குங் குடுமித்தேவரைத் தரிசிக்கச்சென்றனர், அத்திரும லையிலேறும்பொழுது சந்நிதிபாதயவாய்ந்து முறுகிய அன்பே யபெருமானைத் தழுவித் தேவர் பசித்திருக்கின்றீர் இறைச்சி கொண்டு வருகின்றேனென்று சென்று அப்பன்றியினிறைச்சி யைத் தீயிற்காய்ச்சி வாயிலிட்டுப் பக்குவம்பார்த்துச் சுவையா யுள்ளதைப் பெருமானுக்கூட்டி யிவ்வாறொழுகுநாளில், அங்கு அதிசயமாயிருத்தலைக்கண்டு மனம்பொறாத சிவகோசரியார்க்கு அவர் முறுகிய அன்பினையுணர்த்த ஏழாநாளில் ஒருதிருக்கண் ணில் உதிரமொழுகும்படியா யிருந்தனர், ஊனமுது கொண்டு வரச்சென்ற அத்திண்ணனார் அதனைக்கண்டு 'பதைபதைத்துப்

பர்கிலேமூலிகைபிளந்து விட்டும் திருகாதிருந்தலை ...
னுக்கு, ஊனேயுறுநியென்று தயந்து வலக்கண்ணைப் பெயர்த்
தப்ப வுடனே யுதிரநிற்பக்கண்டு மகிழ்ந்தனர். பின் வலம் ...
யினையுணர்த்த மற்றொருகண்ணிலும் உதிரம்பெருகும்படி ...
டி யருள, நான் மருந்துகண்டமையா என்றுசென்று ...
ண்ணைப்பெயர்த்தப்ப அவ்வாளத்துக்காகத் தயந்து ...
கி, அக்கண்ணிடத்தில் வைத்துக்கொண்டு பெயர்க்கப்பிறையா
ன்பது புராணவரலாறு. சத்தியபாதம் திருவருட்பதிய. ([illegible])

வான்மீதெழும்புகையான் மாவிரதத்தாற் கதிரோன்
போன்மாமகஞ்செய் புலியூரே — தேன்மாறாத்
தோடாயிரந்தான் றுலங்கம்புயன்றலையை
ஓடாயிரந்தா னுறைவு.

இ - ள். வான்மீது - ஆகாயத்தின்மேல், எழும்புகை ஆல் - எழாநின்றபுகையினாலே, மாவிரதத்து ஆல் - (பெரியவிரதமுடையால்) வான்மீது - ஆகாயத்தின்மேல், எழும்புகை ஆல் - உதயஞ்செய்தலாலும், மா - குதிரைபூண்ட, இரதத்து ஆல் - ஒற்றையுருளையுடைய தேராலும், கதிரோன்போல் - சூரியனைப்போல, மா மகம் செய் - பெருமையமைந்த யாகங்களைச் செய்யும், புலியூர் - புலியூரானது, தேன்மாறாத - தேனீங்காத, ஆயிரந்தோடுதான் - ஆயிரம் இதழ்கள், துலங்கு - விளங்கும், அம்புயன் - தாமரையில்வசிக்கும் பிரமனது தலையை — சிரத்தை, ஓடு ஆய் - ஓடாகக்கொண்டு, இரந்தான் - இரந்த சிவனையார், உறைவு - வசிக்குமிடமாம்.

இறுமாப்புற்ற பிரமன் தலையைக்கொய்து செருக்குற்ற தருமால் காலாரம்பிற் சூலத்தால் வயிரவமூர்த்தி குத்தியுதிரப் பலியேற்றனர் என்பது புராணவரலாறு. ஆய் செயவெனெச்சத் திரிபு. ([illegible])

ஆங்கருணைமேயார் முதிர்கங்கைலைநீக்கியம்
பூங்கலையிற்றொப்பாம்புலியூரே — வாங்கும்
வராங்கம்பலவானைன்வாயில்காத்தன் பார்த்
திரங்கம்பலவாணனில்.

இ-ள். (ஆர - அமைந்த, கருணை ஒடு - பொரிக்கறியோடு, அமுது ஈந்து - அன்னத்தைக் கொடுத்து, கவலை நீக்கி - பசித்துன்பத்தைப்போக்கி) ஆம் - உண்டாகும், கருணை ஒடு - கிருபையோடு, அமுது ஈந்து - அமுதினைக் கொடுத்து, அங்கு - அவ்விடத்தில், அ அல்லை - அந்த இருளினை, நீக்கி - ஒழித்து, மடம்-[illegible], பூங்கலை - பொலிவமைந்த கலைகளையுடைய, இந்து ஆம் - சந்திரனையொக்கும், புலியூர் - புலியூரானது, வாங்கும் - பெற்ற, வரம் - வரத்தையும், கம் - தலையையும், பல-பலவாகவுடைய, வாணன் - வாணசுரன், வாயில்காத்து - வாயிலைக்காக்க, அன்பர்க்கு - அடியார்களுக்கு, இரங்கு - இரங்காநின்ற, அம்பலவாணனை - அம்பலவாணனது, இல் - திருமனையாம்.

காத்து செயமெனைப் பத்திரிபு. (௯௨)

ஐயம்பெய்தேதாரணிமகிழ்வி ட்டங்கசன்போல
பொய்யிற்சந்திரஞ்சூழ்புலியூரே —பையரவு
மீதாம்புயத்திறைவன்மிக்கமுயன்மேலழுத்தும்
பாதாம்புயத்திறைவன்பற்று.

இ-ள். (ஐயம்பெய்து (இரப்பவர்க்கு) பிச்சையிட்டு, தாரணி - உலகிலுள்ளோர், மகிழ்வு இட்டு மகிழ்வுணவுதந்து,) ஐ அமுது எய்து - பஞ்சாமிர்தங்களைப் பிரயோகித்து, தார் அணிமகிழ் இட்டு மகிழ்மாலையையணிந்து, அங்கசன்போல் - மன்மதனைப்போல, பொய்ய இல் - உண்மைவாய்ந்த, சந்திரம் சூழ் - சந்திரியகள் சூழ்ந்த, புலியூர் - புலியூரானது, பை அரவு-படத்தையுடைய பாம்புகள், மீது ஆம் - மேலேயாகிய, புயத்திறை - திருப்புயங்களை யுடையவரும், மிக்கமுயல்மேல் அழுத்தும்-வலிமை மிகுந்த முயலகன்மேலழுத்திய, பாத அம்புயத்திறைவர்-திருவடித்தாமரையை யுடையவருமாகிய இறைவர், பற்று - அன்புகூர்ந்திருக்கு மிடமாம்.

தேவதாருவனமுனிவர்கள் ஏவியமுயலகன்மேல் திருத்தாளூன்றிநடித்தனர் என்பது புராணவரலாறு. முயலகன் எனற்பாலது முயல் எனவந்திருக்கின்றது. (௯௩)

மாப்புணர்ந்துநீறணிந்துமாமதிமேவிட் டுயர்ந்தோர்
போற்பமைமாடஞ்சேர்புலியூரே — சூற்பெறுவெள்
ளைநாகுந்தலைவினைப்பார்கூப்பமறைநாவோய்க்கயன்முன்
தேடுந்தலைவனிருப்பிடமாம்.

இ-ள். (மாப்புணர்ந்து - யாகத்தைச்செய்து, நீறுஅணிந்து - விபூதியைத்தரித்து, மா - பெருமைவாய்ந்த, மதி - சந்திரனை, மேவிட்டு - மேல்கொண்டு) மால்புணர்ந்து - பெருமையைப்பொருந்தி, நீறு அணிந்து - விபூதியைத்தரித்து, மாமதி - அழகிய அறிவை, மேவிட்டு - சேர்ந்து, உயர்ந்தோர்போல - உயர்ந்தவர்களைப்போல, மாடம்சேர் - மாடங்கள் நெருங்கிய, புலியூர் - புலியூரானது, சூல்பெறு - சூல்வாய்ந்த, வெள்ளைநாகு - வெள்ளியசங்குகளை, உந்து - கொழிக்கும், அலைவயினை அலைகளையுடைய கடலையினை தலையுடைய, பார் - உலகிலுள்ளோர், கூப்ப - கைகுவிக்க, மறைநாவோய்க்கு - பார்ப்பனச் சிறுவன்பொருட்டு, அயன்முன்தேடும் - பிரமன்முன்பு தேடிய, தலைவனிப்பார் - திருமுடியையுடையவனாகிய இறைவனை, சேர்வு — சேருமிடமாம்.

பார்ப்பனச் சிறுவன் புலிக்கால்முனிவரது மைந்தனாகிய உபமன்யு முனிவர். இவர்க்குப் பாற்கடலளித்தமை முன்பு கூறியதுபோலவே. மெய்ப்பொருளில் நின்று பொய்ப்பொருள் மேய உருவும் பயனும் உடன்பட்டார்க்கு இரங்காள் என்றுமறைநாவோய்க்கு வருதலாற்முதல் வல்லெழுந்து மிக்கது. (௬௭)

எப்போதுநன்மணந்தோய்ந் தேற்பவர்க்கிட் டைந்தரு
வொப்பேசும்வீதிப்புலியூரே — மெய்ப்பா [வொர்
நந்திப்பரியார்களினைத்தயவாரிக்குஞ்
சந்திப்பரியாத்தலம்.

இ-ள். (எப்போது உம் - எந்தக்காலத்திலும், நல்மணம் தோய்ந்து - நல்லகலியாணங்களைப் பொருந்தி, ஏற்பவர்க்கு இட்டு - இரப்பவர்க்குக்கொடுத்து) எப்போது உம் — எந்நாளிலும், நல்மணம் தோய்ந்து - நல்லவாசனையைப்பொருந்தி, ஏற்பவர்க்கு இட்டு — இரப்பவர்க்குக்கொடுத்து, ஐந்தரு — பஞ்சதரு

களுக்கு, தப்பு பேசும - நகரும், வீறு — வீறினையுடைய, புலியூர் - புலியூரானது, மெய்ப்பு ஆன — உண்மையமைந்த, நந்தி — இடபமாகிய, பரியார் - குதிரையையுடையவரும், நளினத்தான் — தாமரையிலிருக்கும், அயன்கு உம் - பிரமனுக்கும், அரிக்கு உம் - திருமாலுக்கும், சந்திப்பு அரியார் - சந்திக்கற்கரியவருமாகிய இறைவரது, தலம் - திருப்பதியாம்.

உண்மை நினைக்கென அறிபொருளில்லாத முற்று. (௯௫)

சோபனத்தைச்சேர்ந்து செங்கோறூக்கியுயர்தாரணை
பூபதிக்கொப்பாகும்புலியூரே — தாபரமெண் [ந்தான்
டிக்கெனுமாசாரத்தார்சிட்டர்நெஞ்சுட்டித்திக்கும்
இக்கெனுமாசாரத்தாரில்.

இ - ள். (சோபனத்து ஐ சேர்ந்து - படிகளைப்பொருந்தி, செங்கோல் தூக்கி - கோலைத்தூலாராசியளவுந் தூக்கப்பட்டு) சோபனத்து ஐ சேர்ந்து - சுபத்தையடைந்து, செங்கோல்தூக்கி - செங்கோலையேந்தி, உயர்தாரணைந்தான் - உயர்ந்த தாரணைமானது, பூபதிக்கு ஒப்பு ஆகும் - அரசனுக்கொக்கும், புலியூர் - புலியூரானது, தாபரம் - அசையாத, எண்திக்கு என்னும் - எட்டுத்திக்கென்கின்ற, ஆசாரத்தார் - ஆடையையுடையவரும், சிட்டர் நெஞ்சு உள் - பெரியோர் மனத்தில், தித்திக்கும் - தித்திக்கின்ற, இக்கு என்னும் - கரும்பாகிய, மாசாரத்தார் - பெரிய சாரமாயுள்ளவருமாகிய இறைவரது, இல் - திருமனையாம்.

சோபானமு சோபனம் குறுக்கல். (௮௯)

அம்மழைக்கண்ணாற்காலாலாடுதலாற்கேதனங்கள்
பொம்மன்முலையாராம்புலியூரே — சம்மதியாய்ப்
பொங்கரவினன்பணிவார் பொற்சடைக்கிட்டார்கிரணச்
செங்கரவினன்பணிவார்சேர்வு.

இ - ள். (அமழைகண் - அந்தமேகமண்டலத்தில், கால் ஆல் ஆடுதல் ஆல் - காற்றுலாடுதலினால்) அம் - அழகிய, மழை — மேகம்போன்ற, கண் ஆல் - கண்களாலும், கால் ஆல்-காலி

ஞல், ஆகிதல் அல் ஆகுசொல்லாலும். சேகரன் - செகரன், பொம்மல் - பருத்த, முலையார் ஆம் - தனத்தையுடைய மகட்டியமகளிரை யொக்கும், புலியூர் - புலியூரானது, சம்மதித்து, பொங்கு - சோபிக்கும், அரவு - பாம்பாகிய, பணி - கல்லாபரணத்தை, பொன் - பொன்போலவிளங்காநின்ற, சடை (க்) இட்டார் - சடையிலணிந்தவரும், கிரணங்கொண்ட கரம் - செவ்விதகிரணத்தையுடைய, இனன் - சூரியனும். பணிவார் (பூசனைசெய்து) பணிய பாட்டுடையராகிய இறைவர், சேர்வு - சேர்ந்திருக்குமிடமாம்.

முன்னின்ற உவமைகளைக் கூறுமிடத்து அசைச்சொல்லாகக்கொள்க. (கூஎ)

மாலைகலமுற்றுவானகனிலைப்பூண்டிலங்கிநோயாப
போலிரதமாருமப்புலியூரே—பாலைக்கொல
வானகத்தையுதைத்தோர்வாளரக்கன்மாமுடிமேற்
கானகத்தையூன்றினார்காப்பு.

இ - ள். (மாலை) மேகமாலைகளுக்கின், அகலம் - விசாலத்தை, உற்று - அடைந்து, மணிவானப்பூண்டு - இரத்தினங்களைத்தொகுத்துப்பூண்டு) பால் ஆலயம் ... மணிவடம்பூண்ட - இரத்தினமாலைகளைப்பூண்ட, இலங்கையாளல் - திருமகள்போல, இரதம் ஆரும் - தேர்கள் நிறைந்த, புலியூர் - புலியூரானது, பாலைக்கொல்வான் - நமது புத்திரனைக்கொல்லச் சிறுத்தொண்டநாயனாரது, அகத்து - திருமனையில், ஐ - அழகிய, ஊன் தின்றார் - ஊனைத்தின்றவரும், வாள் அரக்கன் - வாளையேந்திய இராவணனது, மா முடி மேல் - பெருமை வாய்ந்த சிரத்தின்மேல், கால்நகத்து ஐ - பெருவிரல்நகத்தினை ஊன்றினார் - ஊன்றினவருமாகிய இறைவரது, காப்பு - காவலாயுள்ள இடமாம்.

சிறுத்தொண்டநாயனார் சரித்திரத்தை முன்னர்க்காண்க—இரதமூரும் எனப்பாடமுமுண்டு அது உவமைக்குப் பொருத்தமின்மையால் ஆருமெனப்பாடங்கொண்டாம். (கூஅ)

செல்வந்திருந்திடலாற்சேர்முடத்தாழ்ப்பிங்கலனோ
புல்லுக்கெங்கோஞ்ரும்புலியூரே—மெல்லிதழ்வாய்

ற்று உண்டுவளர்ந்த தென்பது முன்னடிகளிற்குறித்தகதை. உதகம் - நீர்க்குடம்: வடசொல்; இங்கே, கடலென்னுமாத்திரையாய் நின்றது. பதிரன்னென்னும்வடசொல்லுக்கு - [illegible] தாயமைப் [illegible] ஊனுமாகத்தின்ன்று காப்பவ னென்று பொருள்; புமை - மக்களிலொருவராமைவழித்தார் [illegible] கம். திருச்செங்காட்டங்குடியில் அந்தணர்குலத்தில் அவதரித்த சிறுத்தொண்டநாயனாரது அன்புடைமையைப் பரீக்ஷிக்கும்பொருட்டுச் சிவபிரான் பைரவத்திருவுகொண்டு வந்து [illegible] அரியபிள்ளையையறுத்துக்கறிசமைத் [illegible] அமுதுபடைப்பவர் [illegible] குடன்பட்டுத் தமதருமைத்திருக்குமாரனாகிய சீராளனை அறுத்துக் கறிசமைத்து அமுதுபடைக்கையில், [illegible] யைக்கூப்பிடுமென்ன, [illegible] இவர் பிள்ளையையழைக்க, அப்பிள்ளை [illegible] தென்பது பின்னடியிற் குறித்த கதை. ககுதம் - மாபலிகதை [illegible] வனென்றுங் கொள்ளலாம். (௬)

எ.—(இ - ள்) [illegible] சேடன் - [illegible] ஆதிசேஷன், [illegible] பதஞ்சலியென்னும் முனிவ [illegible] வந்த [illegible] வர்த்தனை [illegible] கட [illegible] யார் - வைலகத்தில் [illegible] மாமுனிக்கு [illegible] திருப்பாற்கடலில் [illegible] வைபிரானே, காப்பு - (உயிர்களைக்) காவலைசெய்[illegible] (ஏ - று.)

முனிவொருகாலத்தில் [illegible] ஆதிசேஷனை [illegible] தருஞ்செய்தி அவா [illegible] பத்தில் [illegible] அவ்வாறு [illegible] ஸ்தானஞ்செய் [illegible] அஞ்சுதலைச்சர்ப்பமாகி [illegible] ஆதிசேஷன் அவா [illegible] பெயரைப் பெற்றான், [illegible] காலம் சிவபிரானது நடனத்தின் மகிமையைத் [illegible] ஆதிசேஷன் அதனைத்தரிசிக்கவிரும்பித் திருக்கைலையையடைந்து தவஞ்செய்ய, சிவபிரான் பிரதியக்ஷமாய் "நீ இவ்வடிவத்தோடு சென்றால் உலகம்தாங்காதலின், முனிவொருகால [illegible] நாகலோகத்திற்சென்று, அங்கு [illegible] பிலத்துவாரம் [illegible] தில்லைவனத்தில் [illegible] நீ அவ்வழியாய்ச் [illegible] வியாக்கிரபாதமுனிவனோடு நமதாடலைத் தரிசிப்பாய்'என்று அருள, அவ்வனமே நாகராசன் பிலத்துவாரத்தின்வழியாய்த் தில்லைவனத்தையடைந்து திருவருத்தரிசித்தன னென்பது முற்பாதியிலுள்ளகதை. சிதம்பரத்தில் திருவம்பலத்துக்குமேற்கேயுள்ள நாகசேரியென்னும் புண்ணியதீர்த்தமே ஆதிசேஷனெழுந்த பிலத்துவாரத்தின் எல்லையாம். மெய்த்திகழும் - உண்மைவிளங்குகின்ற என்றுமாம். சேடன் - வடசொற்றிரிபு; (பிரளயகாலத்திலும் அழியாது) மிகுபவ னென்று பொருள். வாதவூரடிகளை வருத்தியதன்பொருட்டு அரிமர்த்தனபாண்டியன்மீது உண்டான கோபத்தால் சிவபிரான் வையையாற்றை அவன்நகர்மேல் ஏவ, அந்நதி மதுரையையழிக்குமாறு பெருகிவர, அந்நகரத்தார்யாவரும் அரசன்கட்டளைப்படி கூலியாட்களைவைத்துக் கரைகோலுகையில், சோமசுந்தரக்கடவுள் பிட்டுவிற்றுண்ணும் வந்தியென்

விண்டகங்கை யார்மேனியா ருக்கா
உண்டகங்கை யாரு.

இ-ள். செல்வந்து இருந்திடல் ஆல் - மேகம் வந்து தங்குதலாலும், சேர் முடக்து ஆல் - பொருந்திய முடத்திறனாலும்) செல்வம் இருந்திடல் ஆல் - செல்வத்தினிறைவாலும், சேர் முடக்கு ஆல் - பொருந்திய முடக்கிறலுடைய, பிங்கலன் நேர் புல்லும் - குபேரனை யொத்த, ஓங்கு - தென்மை மரங்கள், ஓங்கும் - உயர்ந்து தோன்றும், புலியூர் - புலியூரானது, மெல் இதழ் - மெல்லிய இதழ்கள், வாய் மலிந்த - வாய்மலர்ந்த, கடுக்கை யார் - கொன்றைமலர் மாலையை யணிந்தவரும், மேல் நாள் - முன்னாளில், அமரருக்கு ஆக - தேவர்களுக்கு ஆக, உண்ட கடு - உண்ட விடத்தை, கையார் - வெறுக்காதவருமாகிய இறைவரது, ஊர் - ஊராம்.

குபேரனுக்கு முடத்தன்மையமைந்த இடத்திற்காண்க. ()

மாகமண்டலந் தாங்கிவண்டப் பூத்தாறுவிட்டு
ஆகமுங் கும்பன்சீர்ப் புலியூரே — ஆகமங்கள்
கூறிடுமா வாக்கினார் கூடலிறைக் காநரியை
ஏறிடுமா வாக்கினா ரில்.

இ-ள். மாகமண்டலம் - விண்ணுலகவட்டத்தை, தாங்கி - தமைந்து, வண்டு ஆர்ந்து - வண்டுகள் மொய்த்த, பூத்தாறு விட்டு பூங்குலைகளை விட்டு) மா - பெருமைவாய்ந்த. கமண்டலம் தாங்கி - கமண்டலத்தை ஏந்தி, வளர் மிகு பூத்து - வளமைவாய்ந்த தவத்தை முடித்து, ஆறுவிட்டு - காவிரியைக்காட்டி, ஆகம் உம் - தமுடம்பும், கும்பன் சீர் - அகத்தியமுனிவரது சீரைவாய்ந்த. புலியூர் - புலியூரானது, ஆகமங்கள் - இருபத்தெட்டாகமங்களை, கூறிடும் - சொல்லியருளிய, மா - பெருமைவாய்ந்த, வாக்கினார் - திருவாக்கினையுடையவரும், கூடல் இறைக்கு ஆக - மதுரையிலுள்ள அரிய சுந்தர பாண்டியனுக்காக, நரி ஏறு - நரிகளை, ஏறிடும் - ஏறுகின்ற, மா ஆக்கினார் - குதிரைகளாகச் செய்தவருமாகிய இறைவரது, இல் - திருமனையாம்.

அமைச்சராக இருந்து குதிரைகள் வாங்கக் கொண்டுசென்ற பொன்னைச் சிவபெருமானார் திருப்பணிகளுக்குப் போக்

கிச் சிவாநந்தத்திலழுந்திய வாதவூரடிகளை, அரிமருத்தனபாண்டியன் வருவித்துக் குதிரைகளுக்காக வருத்தியகாலத்தில அச்சிவபெருமானார் நரிகளைப்பரிகளாக்கினார் என்பதுபுராணவரலாறு. ஆக என்னும் வினையெச்சத்தினீறு தொக்கது மண்டிலம் என்பது மண்டலம் என்பது சிராமியம். (கoo)

மன்னுபுலியூர்க்கு வகுத்தவெண்பாநூறவற்றில்
உன்னிலிருபத்தைந்தோர் வயனம்—பின்னுமுள
ஐயைந்தொருவயன மையைந்தொருவயனம்
ஐயைந்தொருவயன மாம்.

புலியூர் வெண்பாவிலுள்ள நூறு செய்யுள்களில் இருபத்தைந்து இருபத்தைந்தாகப் பகுத்து அவற்றுள் ஒவ்வொருவகையும் ஒவ்வொருவிதமாக வருதல்காண்க.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
அ	கக	அவருடைய	கூப்பிய
கூ	எ	திருநடனத்தினைக்காட்டியருளிய.	காட்டியருளிய
உஎ	எ	அரிவாட்டநாயனார்	அரிவாட்டாயநாயனா
கஅ	எ	வாதவூராளிகளுக்குக்குணர்த்தும்.	வாதவூராளிகளுக்குணர்த்தும்
	கக	கமலப்போதுள்ளவன்	கமலப்போதுள் அவன்
	கக	பிரமனும்	அப்பிரமனும்
	உ௫	கொண்டுவாஎனப்பொருள்.	கொண்டுவருதல் எனப்பொருள்,

கஉம் செய்யுளில் முன்வசியமாதனித்த எனப்பாடமுண்டு வசியர் எனயமகம் திரிபுகளில் முதனிலைப்போலியாக வருமேயன்றி மற்றையிடங்களில் வைசியரெனவருமாதலால்வணிகமாது எனப்பாடங்கொண்டாம்.

கூஉம் செய்யுளில் சோதிவளை மும்மடியாய் எனப்பாடமுண்டு, அதுபுராணத்திற்குப் பொருந்தாமையால் சோதிவளைமம்மடியாய் எனப்பாடங்கொண்டு.

னுமமலட்டுக்கிழவிக்குத் தன்கருணையால் வேலையாளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்ததும், முடியின்மேற் கூடையிலமண்ணைச்சுமந்துகொண்டுபோய்க் கொட்டினதும் ஆகிய வரலாறு பிரசித்தமானதொன்றாகலின் அதனைக் கூறுமிவ்வெண்பாவின் கதை. புகட்டு - புகவிடு என்பதன் மரூஉ. (எ)

அ —(இ - ள்.) மாசு இலா - குற்றமில்லாத, அம் புலிக்கும் - அழகிய புலியினவடிவத்தைத் தனக்குரியதாகக் கொண்ட வியாக்கிரபாதமுனிவருக்கும், ஓர் உமைக்கும் - மகளிரிற் சிறந்த உமாதேவிக்கும், மா நடத்தை - சிறந்த (தமது) திருநடனத்தை, பூசமதில் - (தைமாதத்துப்) பூசநட்சத்திரத்தில், காட்டும் - (சிவபிரான்) தரிசனங்கொடுத்தருளிடமான, புலியூரே-புலியூரானது,—பேசு அரிய - சொல்லுதற்குமுடியாத, வித்தகத்தார் - ஞானவடிவமாகவுள்ளவரும், கண்டு இறந்தார் வீடு உற செய்து - (தம்மைத்) தரிசித்தபின் மரணமடைந்தவர்கள் முத்தியடையும்படி அருள்செய்து, அங்கசன்றன் அங்கத்தை அன்று இறந்தார் - மன்மதனையழிக்கும்பொருட்டுத் திருநெற்றியிலுள்ள நெருப்புக்கண்ணை விழித்துப்பார்த்தவருமாகிய சிவபிரானது, வாழ்வு - வாழுமிடமாம்; (எ - று.)

மாசுஎன்றது - ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலத்தொடக்கை. தைமாதத்தில் வியாழக்கிழமையும் பௌர்ணமியும் பூசநக்ஷத்திரமும் பொருந்திய நன்னாளில் திருநடனத்தைக் காட்டியருளினரெனக. பூசம - புஷ்யம், மத்தகம் - மஸ்தகம் இவை - வடசொற்றிரிபுகள். வித்தகத்தார் கண்டு இறந்தார் வீடு உற எனவெடுத்து - ஞானமுடையவர்கள் தம்மைத்தரிசித்து மரித்து முத்திபெற என்றுங்கொள்ளலாம். அங்கஜன் என்னும் வடசொல்லுக்கு - (திருமாலின்) உடம்பினின்று உண்டானவனென்றுவது, (பிராணிகளின்) உடம்பினிடமாகத் தோன்றுகிறவனென்றுவது பொருள் கொள்க. அங்கம் - ஆகம்; சரீரம். வாழ்வு - தொழிலாகுபெயர். பார்வதிதேவி தன் அபிப்பிராயமானவுடனே பரமசிவனை மணஞ்செய்தற்குத் தவஞ்செய்யவிரும்பியவளாய்த் தனகருத்தைத் தன் பெற்றோர்க்குத்தெரிவிக்க, அவர்களால் "அன்னைகேளெயாவிரிங்கி யருநாதவ மாற்றும் கொக்க, இன்னதோர் பருவமனறு வியாளெரிமேதனைக்கேசென்ற, நின்னுடல் பொருதா லீண்டிங் கிலைமையக் குமிழி" என்றுகூறி மறுக்கப்பட்டதனால், அவளுக்கு உமையென்று ஒரு திருநாமமுண்டாயிற்று; உ, மா எனபதற்கு - அம்ம, வேண்டாம என்று பொருள். (அ)

கூ —(இ - ள்.) சிங்கவன்மன் சிங்கவர்மனென்னுமரசன், முன் ஆக - முற்பட [முற்காலத்தில்], சிவ கடத்தில் - சிவகங்கையிலே, மூழ்க - வந்து மூழ்காட, பொன் ஆகம் ஆக்கும் - (அவனுடைய உடம்பைப்) பொன்னிறமான உடம்பாகச் செய்யும், புலியூரே - புலியூரானது,—முன்றோர்க்கு ஆ பகைவர்களை யொழித்தற்காக, போர் கொள - போரைச்செய்ய, குன்று வளை வில்-மேருமலையாகிய வளைந்த வில்லை, எட்ட போர் - எடுத்தருளுந்தன்மையுள்ளவரும், கூடல் தனில் - மதுரையிலே, சென்று - (வீதிகளிற) போய், வளை விற்போர் - கைவளையல்களை விற்குந்தன்மையருமாகிய சிவபிரான, செறிவு - பொருந்துமிடமாம்; (எ - று.)

உடம்புமுழுவதுஞ் சிங்கம்போன்றநிறத்தையுடைமையாற் சிங்கவன்மனெனப் பெயர்பெற்ற கௌடதேசத்து இராசகுமாரன் தலயாத்திரை செல்லுதற்குத் தந்தையிடம் விடைபெற்றுவருகையில் தில்லைவனத்தையடைந்து அங்குச் சிவசங்கையென்னும் புண்ணியதீர்த்தத்தில் நீராடிப் பொன்னிறமானவடிவத்தையடைந்து அதனால் இரணியவன்மனெனப் பெயர்பெற்றனனென்பது முற்பாதியின்கதை. சிவகங்கை- இது கனகசபைக்கு வடக்கேயுள்ளது. 'சர்மா' என்பது பிராமணர்க்குப்போல, 'வர்மா' என்பது

க்ஷத்திரியர்க்குச் சாதிக்குரியபெயர்; இவை - [illegible] சன்மன், வன்மன் எனத்திரிந்துநிற்கும். ஒன்றார் - ஒன்றார் என்பதன் [illegible] : கலவாதவ ரென்று பொருள். இங்கே 'ஒன்றார்' என்றது, திரிபுரத்து அசுரரை. ஒருகாலத்தில் வருணன் சோமசுந்தரக்கடவுளது [illegible] பரி சோதிக்குமாறு எவ்வளி ஏழுமேகங்களையும் அளவின்றி மழைபொழிந்து மதுரையை அழிக்கும்படி ஏவ, அவ்வாறே அவ்வேழுமேகங்களையும் தடு க்கும்பொருட்டு அக்கடவுள் கட்டளைப்படி [illegible] நான்குமே கங்களும் மேலுயர்ந்து நான்குமாடமாகக்கூடி [illegible] க் கூடலென்றும் மாடக்கூடலென்றும் [illegible]: "வா ரிறல் வருணன் விட்ட மாரியை விலக்க [illegible] நீங்கிய மேக நான்கும் [illegible] மாடமாக [illegible] லாலே, அன்றுநான் மாடக்கூடல் [illegible] லத்துப் பழையவனா [illegible] ன கற்புநிலையைப் பரிக்ஷிக்க [illegible] கொண்டு அவரில்லிற்சென்று [illegible] கள் அவனைநோக்கிக் [illegible] கைவளைகள் [illegible] கள் அம்மகளிரை [illegible] படி சபித்து. அம்மகளைக்கடவுள் [illegible] பொழுது இச்சாபம்நீங்குமென்று அவர்க்கு [illegible] சியகுலப்பெண்களாய் [illegible] சோமசுந்தரக்கடவுள் [illegible] களது வடிவத்தைப் புனைந்து [illegible] ளுக்கெல்லாம் வளையல் [illegible] அவர்கள்சாபத்தைப்போக்கியருளினரென்பது [illegible] கதை. செறியு - தொழிலாகுபெயர். (௯)

௰.—(இ - ள்) அரிய வாய் - [illegible] ; ஓதனம ஒன்று - ஒருசோற்றவிழை, அந்தணன் வாய் வீழ்த்த - முதியபிராமணனது வாயிலே விழும்படிசெய்த, கொடி புள் - காக்கையாகிய பறவை, அருள் பெறு - (சிவனது) திருவருளை யடைந்து, உயர் - [illegible] இடமான, புலியூரே - புலியூரனது,— உளமது சோதிக்க வருபவா - (திருநீலகண்டநாயனாரது) மனைவியைப் பரிசோதிக்கவெண்ணி வருபவராய், [illegible] உன வசம என்று ஓதி - அடியயிரே (இந்தப்) பிச்சையோட்டை யுன்வசத்திருக்கக்கடவ தென்றுசொல்லி (கொடுத்து), கவருபவா - (பின்பு அதனை) எடுத்துச்சென்றவராகிய சிவபிரானது, [illegible] - [illegible], (எ - று.)

சிதம்பரந்திரிசிக்கவந்த அந்தணனொருவன் [illegible] ஓர் பால் வாய்திறந்து உறங்குகையில், ஆகாயத்தில் அன்னத்தையெடுத்துச்சென்ற ஓர்காக்கையினது வாயிலிருந்து ஒருவிழ் அவ்வந்தணன்வாயில் விழ, அதனை அவன் உண்ணவே, அந்தச்சிவபுரியின் பயனால் அக்காக்கை சிவகதிபெற்ற தென்பது முதலாயினகதை; "அன்னமொருபதிலு மருந்துயில்வசத்திலு லறியாளன், பன்னுமுலென்றியே [illegible] விழுங்கினனம்மா, வென்னசொலலுகோமீதறியாதுசெயகாகம, பன்னுப்பயனுற சிவபதமடைந்ததுவால்" என்பது சிதம்பரபுராணம். ஓதனம, வடம்-வடசொற்கள். திருநீலகண்டநாயனார் மனைவியாரோடும் சிவனடியார்களுக்குத்திருவோடுதருநியமங்கொண்டு ஒழுகுநாளில், அவர்களன்பை உலகமறிய வெளியிடும்பொருட்டுச் சிவபிரான் ஒருநாள் ஒருசிவயோகியாய்த் திருவுருவங்கொண்டு வந்து தமது கையிலுள்ள ஓட்டை அவர் கையிற்கொடுத்து இதனைக்

காமனை நீறாக்கினை, மென்று கூறிச் சென்ற பின்பு அதனை மறைத்தருளினரெ
ன்பது பிறபுராணங்களால் அறிக. கொடியர் - இருபெயரொட்டுப் பண்புத்
தொகை. (௧௦)

௧௧.—(இ - ள்.) சென்று - (தனதிளமையிலே) வந்து, நலம் தீது
செய்யும் - நல்வினையாகவும் தீவினையாகவும் செய்தால், (அவை), பொ
ன்றாது - கெடாமல், மூன்று கோடியாகு ஆம் தீமை - ஒவ்வொன்றுங் கோடி
யொன்றுக்கொன்றாகப் பெருகுந் தன்மையதான, புலியூரோ - புலியூ
ரானது,— இன்று - (இதுகாலத்தும்) நின்று, ஆடும் - (திருக்கூத்தாடுகின்ற)
நாத்தனஞ்செய்கின்ற, பொன் அம்பலவர் - பொன்மயமான சபையையுடையவ
ரும், உகல் மறையினால் உணரா - (யாவராலும் பரிச்சேதிக்கப்படா) கூறும் வேதங்க
ளாலும் அறியப்படாத, வன்னம் பலவர் - பல நிறங்களையுடையவரும் ஆகி
ய சிவபிரானது, பதி - இருப்பிடமாம்; (எ - று.)

முறைபாதிப் பொருத்தத்து, க்ஷேத்திரமகிமை. பொன்னம்பலம் - கனகச
பை. வன்னம் - வர்ணம், வடசொற்றிரிபு. 'வன்னம்பல' என்றது-குணம்,
செயல், தோற்றம் ஆகியவற்றால் பல. தீது-வினைகளுக்குப் பண்பாகு
பெயர். கோடி - நூறுலட்சம். பொன்றாது என்றும் எதிர்மறை வினையெச்
சத்தில், பொன்று - பகுதி. தீமை, தீய - பகுதி (தீ)வி, தீதுசென்று நலம்
செய்யின் எனப் பொருளுரைப்பர், தீவினை நல்வினைசெய்தால் என்று உரை
த்தலும் ஒன்று. பன்மை - கூறுமை, செயலை, வண்ணமை. (௧௧)

௧௨.—(இ - ள்.) மாக்கள்-(தங்களறிவில்லாத) மனிதர்களது, வினை-
தீவினையை, பாலவயிரவன் கை சூலத்தால் போக்கி - பாலவயிரவமூர்த்தி
யினுடைய திருக்கையிலுள்ள சூலாயுதத்தால் துமித்து, நலம் தந்த - (அவ
ர்களுக்கு) நற்கதிகொடுக்குந் தன்மையதான, புலியூரோ - புலியூரானது,—
சாக்கியர் - சாக்கியநாயனார், கல் யோக - கல்லெறிதலையடிக்க, கனிவு இருந்
தார் - (அவர்பால்) மகிழ்வோடிருந்தவரும், முன - முன்னே, வணிகமாது-
வைசியகுலத்திலே தோன்றின புனிதவதியார், அளித்த - (அன்பால்) கொடுத்
த, சுதபக்கனி மாங்கனிதனை உண்ட, விருந்தார் - விருந்தினரு மாகிய சிவ
பிரான், தோய்வு - பொருந்துமிடமாம்; (எ - று.)

பிறமபாத்தில் பாதகஞ்செய்பவர் தீவினைசெய்வாராயின் அவர்க்கு யமத
ண்டனைகிடையாதென்றும், அவர்கள் பாலவைரவமூர்த்திதிருக்கையிலேந்
திய சூலாயுதத்தால் யுகமூகூர்த்தகாலத்தவர் தண்டிக்கப்பட்டுப் பின்நற்க
திபெறுவரென்றும் நூற்கொள்கை. மாக்கள் - மனவுணர்வில்லாமல் ஐம
பொறியுணர்வுமாத்திரத்தையுடையவரும், மக்கள் - ஐம்பொறியுணர்வோடு
மனவுணர்வையுமுடையவருமாதலால், இங்கே, விவேகமின்றித் தீவினைசெய்
பவரை 'மாக்கள்' என்றது. பாலவயிரவமூர்த்தி, சிவாம்சமானவர். திருச்சங்க
மங்கையில் வேளாளர்குலத்திலுதித்த ஒருவர் பௌத்தமதத்தில் இணையானை
சாக்கியசமயத்திற் பிரவேசித்து அதுசரசமயமன்றென்று தெளிந்து பரமசி
வனேபதியென்றறிந்து அச்சாக்கியசமயவேஷத்தைத் துறவாமலே தினந்
தோறுஞ் சிவலிங்கத்தைத் தரிசனஞ்செய்த பின்பே போசனஞ்செய்யவேண்டு
மென்றுவிரும்பிச் சமீபத்திலிருக்கிறவொருசிவலிங்கத்தை நாடோறுந்தவறாமல்
தரிசித்து அருகிலகிடக்குங்கல்லையெடுத்து அன்பினோடு அதன்மேல்எறிந்து
அருச்சித்துவர, ஒருநாள் பரமசிவன் உமாதேவியாரோடும் இடபாரூடராய்
ஆகாயத்திலேதோன்றிக்காட்சிதந்து அச்சாக்கியநாயனாரைத் தமதுதிருவ
டியிற்சேர்த்தருளினரென்பதும்; காரைக்காலில் வைசியர்குலத்தில்தோன்
றிய (பின்பு காரைக்காலம்மையெனப் பெயர்பெறும்) புனிதவதியாரைப்
பரமதத்தனென்பவன் மணம்புரிந்து இல்லறநடத்திவருகையில், சிவபிரான்

ஒருஅடியவர்வேடங்கொண்டு மிக்கபசியால் இளைப்புற்றவர்போல வந்தடைய, அப்புனிதவதியார் அவர்க்கு அன்னம்படைத்துத் தமகணவன் அன்புடனனுப்பிய மாங்கனியிரண்டனுள் ஒன்றையும் உடன்பரிமாறி உபசரித்து அருள்பெற்றனரென்பதும் பிற்பாதியின்கதைகள். 'வசியமாது' என்றபாடத்திற்கு வைசியவென்னும்வடசொற்றிரிபெனபர். விருந்து - புதுமை; புதிதாய்வந்தவர், விருந்தார். தோய்வு - தொழிலாகுபெயர். சுதம - வடசொல். வயிரவன் - பைரவன்; வடமொழி. (௧௦)

௧௧.—(இ - ள்.) சொல்லா - (அவாமறந்தைகள்) சொல்லாத, சிவசன்மா - சிவசர்மாஎன்னும் அந்தணனுக்குரிய, சோமநாதற்கு - சோமநாதனென்பவனுக்கும், விலை பொருளாய்ந்து-(முறைதெரிந்து செய்த) இவிவனாய் [illegible] திங்களை, அகற்றாய் - ஒழித்தாய், [illegible] — மால் மலை - பெரிய மேருகிரியை, வில் ஆய் வளைக்கும் - வில்லாகவளைத்த, சமர்த்து இயலார் - சாமர்த்தியத்தையுடையவரே, [illegible] மேல் - (நுட்பம்) [illegible] மலைமேல், மாசுணம குஞ்சு - பாம்புக்குட்டிகளை, [illegible] - (ஆபரணங்களாகத்) தங்கவைத்தவரு மாகிய [illegible], தோய்வு [illegible]; (எ - று.)

மேலகடற்கரையிலுள்ள சோமநாதவென்னுந் தலத்திலே இருக்கார்த்திகையுற்சவத்தைச் சேவிக்கச்சென்ற [illegible] சோமநாதனென்பவன் [illegible] புமுதலாய் [illegible] ஒருமையாகவே வீழ்ந்து விளக்குநிலைய, அவன் [illegible] செய்யாமையானும், அருகிலிருந்த சிவசன்மாவும் அங்ஙனம் [illegible] தவிட்டதனாலும் [illegible] உடையவனை [illegible] இரண்டுபேர்களாகி [illegible] வாமதேவமுனிவனைக் கண்டு வணங்கி அவரால் [illegible] அடிமைபூண்டு [illegible] கதை. சோமநாதற்கு என்பதிலுள்ள [illegible] சிவசன்மா என்பதனோடுங் கூட்டுக. 'சோமநாதர்க்கு' என்று [illegible] சோமநாதர் என்ட அம்பலர்பாலாமுடிந்த உயர் இணையடி [illegible] சமர்த்து - திறமை. குஞ்சு - இளமைப்பெயர். ஒருகாலத்தில் [illegible] தமைமதியாத தாருகவனத்திலுள்ள முனிவர் [illegible] பரீக்ஷிக்கவெண்ணித் தாம் ஒருவிடசங்கமத்திருவுருவங்கொண்டு அவர்களகத்தேறு [illegible] க்ஷாடனஞ்செய்து தமமைமோக்கிக்கொண்ட அம்முனிபத்தினியரது கற்புநிலைமையைக் கெடச்செய்ய, அதுகண்டு [illegible] அம்முனிவர்கள் அபிசாரயாகமொன்று செய்து [illegible] நாகங்கள் பூதங்கள் மான் புலி முயலகன் வெண்டலை முதலியவற்றைச் சிவனைக்கொன்றுவரும்படி ஏவ, [illegible] தம்மேற்பொங்கிவந்த நாகங்களை ஆபரணங்களாகவும், பூதங்களைத் [illegible] கணங்களாகவுங் கொண்டு, மானைக் கையிலேந்தி, புலியைத் தோலுரித்துடுத்து முயலகனை முதுகிற்காலாலூன்றி, வெண்டலையைக் கையிற்பற்றி [illegible] மேலணிந்து, இங்ஙனமேஅவற்றையெல்லாம்பயனிலவாகச்செய்துவிட்டனரென்பது கதை. (௧௧)

௧௨.—(இ - ள்.) ஆழ்ந்த கடல் செல்வற்கு-ஆழமாயுள்ள கடலுக்குத் தலைவனான வருணனுக்கு, அடா - நெருங்கிய, பிரமகத்திதனை - பிரமஹத்திதோஷத்தை, போழ்ந்து அறுத்து - பிளந்தொழித்து, ஆளும் - அடிமைகொள்ளுந்தன்மையுடைய, தென் புலியூரே - அழகிய புலியூரானது, தாழ்ந்தவரை -(தம்மைவணங்கின) அடியார்களை, தூய கதி ஏற்றினார் - பரிசுத்தமான உயர்கதியில் அடையச்செய்தவரும், சோதி-ஒளியையுடைய, வெள்ளி வெற்பு அனைய - வெள்ளிமயமான கைலாசகிரியைப் போன்ற, வெ

ய்ய கதி ஏற்றினர் - வேகமான நடையையுடைய வெண்ணிறமான இடபத்தை யுடையவரும் ஆகிய சிவபிரானது, வீடு - ஸ்தானமாம்; (எ - று.)

வருணனுக்குப் பகைவனாகவுள்ள ஒருவனை வெல்லுமுபாயத்தை அவ் வருணனுக்குத் தெரிவிக்கும்பொருட்டு அவனுடையகுரு இரவில் வருணனிடம் வர, அப்பொழுது வருணன் அவனைப்பகைவனென்றுகருதி அவன் மேல் தனதுபாசாயுதத்தை யெறிய, அதனால் அவ்வாசிரியன் இறக்கவே, அப்பார்ப்பனக்கொலைப்பாவம் ஒரு பிசாசவடிவமாய்த் தோன்றி வருணனைக் கைகால்கழுத்துக்களைக்கட்டிக் கடலிற் போகட்டுவிட, நெடுநாள் கடலி லழுந்திக்கிடந்த வருணனுக்கு நடேசப்பெருமான் ஒருமாசிமகத்தில் காட்சிதந்து அக்கட்டுக்களையறுத்து விட்டருளின வரலாறு முற்பாதியின்கதை. அதுமுதல் அத்துறை பாசமறுத்ததுறை யெனப் பெயர்பெற்றது. பிரமன் - அந்தணன்; பாத்தி-சொலை. இடபத்துக்கு வெள்ளையாகிய நிறம் பருமை வலிமை சிவனுக்கிடமாதல் இவற்றால் உவமை. தென் - தெற்குத்திசையிலுள்ள என்றுமாம். கடற்செல்வனை - நீரையே செல்வமாகவுடையவனை. ஏறு - எருது; ஆண்மைப்பெயர். (கசு)

கஎ —(இ - ள்.) வன்மதி - கொடுமையான மனத்தையுடைய, நீசன் - புலையனொருவன், கடல்நீர் - சமுத்திரதீர்த்தக்கரையில், மாசிமகத்து - மாசி மாதத்து மகநட்சத்திரத்தில், ஆட - நீராட, (அதனால்), அவன் - அப்புலையனது, புன்மை - நீசத்தன்மையை, தவிர்த்து - நீக்கி, ஆளும் - கருணைசெய்து அவனையடிமைகொண்ட, பெரியோர் - பெரியோனது,—தென் மதுரை - தென்திசையிலுள்ளமதுராபுரியிலே, கல் கரிக்கு - ஒருகல்யானைக்கு, இக்கு - கரும்பை, அளித்தார் - (தின்னும்படி உணவாகக்) கொடுத்தருளியவரும், காளவன் - வேடர்குலத்திலே தோன்றியவராகிய கண்ணப்பநாயனார் தந்த, எச்சில் - (அவரால்) எச்சில்செய்யப்பட்ட ஊனை, உவக்க - உருசி பார்த்து உட்கொள்ளும்பொருட்டு, பற்கள் இறுதகு - (தமது) பற்களால் மென்றுதின்று, களித்தார் - களிப்படைந்தவருமாகிய சிவபிரான், பற்று - பொருந்துமிடமாம்; (எ - று)

மாசிமகநாளில் தன்னில்வந்து நீராடுபவர்யாவர்க்கும் முத்தியளிக்குந் தன்மையுள்ள பாசமறுத்ததுறையென்னுங் கடல்தீர்த்தத்தில் ஒருமாசிமகத்திலன்று ஒருசண்டாளன் அம்மகிமையையுணராமலே தான் இயல்பிலே மூழ்கியெழுந்து அப்பயனால் அவ்வுடம்பிறந்தபொழுதே உயர்கதிபெற்றனனென்பது முற்பாதியின்கதை; "மாசிமாமகத்திசெய்காற்றவகையில்லாத் தீமை, நீசனங்கவனுநன்கு நிலைந்திடாததவிர்மூழ்கித், தேசுறுமுத்திசேர்ந்தான செப்பவேதனமேற" என்பது சிதம்பரபுராணம். இது சூய்ய தீர்த்தமெனப்படும். மதி - அறிவு; வடசொல். வன்மை - அருளில்லாமை; கொலை களவு முதலிய தீச்செயல்களைப்பலவற்றிலும் விரைந்துசெல்லுதல். நீசன் - யாவரினுங் கடைப்பட்டவன். புன்மை - இழிவு; பண்புப்பெயர். வடமதுரையொன்று உண்மையின், தென்மதுரையென்றது-இனம்விலக்கவந்த அடைமொழியாம். இனி, தென் - அழகிய என்றுமாம். மதுரை - பாண்டியநாட்டிலுள்ளதும், தன்பெயர்கேட்டமாத்திரத்தில் முத்திதருந் தன்மையதும் ஆகியதொரு சிவதலம். குலசேகரனென்னும் பாண்டியன் காடுகெடுத்து நகராக்கி அந்நகரத்திற்குச் சாந்திசெய்யக்கருதியபொழுது சோமசுந்தரக்கடவுள் திருவுளத்தறிந்து தமதுதிருச்சடையிலணிந்த சந்திரனிடத்தினின்றும் அமிர்தத்தையுகுக்க, அவ்வமுதம்சென்று அந்நகர்முழுவதும் பரவிச் சாந்திசெய்து மதுரமயமாக்கியதனால், மதுரையெனப்பெயர்பெற்றது; இதனை "மணிமலர்த் தாரோன் மாளிகை தனக்கம் மாநகர் வடகு

ணை பார்க்கின், டணிகர் சாந்தி செய்வது குறித்தா னென்னெலா மறிந்து செய்வார்." "பொன்மய மான சடைமதிக் கலையின புத்தமுது அருந்தனராகி போய்ச், சின்மய மான தமமடியடைந்தார்ச் சின்மய மாக்கிய செயல்போல, தன்மய மாக்கி யன்னார் புழுக்கு சாந்திசெய் தருவது மதுரானமய மான தனமையியான் மருவா ராகலினை வுணாத்தனர் நாமம்" என்னுந் திருவிளையாடற்செய்யுள்களா லறிக. அபிடேகபாண்டியனகாலத்தில் சோமசுந்தரக்கடவுள் எல்லாமவல்லசித்தராகுவாகிய பல விசித்திரமான செயல்களைச் செய்ய, அதுகேட்டு அவரைவரவழைக்க முயன்ற பொன்னடியான் அவரைத் தேவாலயத்தின்கட்பிரதக்ஷிணத்தில்மேற்றுப்பக்கத்திற்கண்டு, கடவுளென்று அறியாமல் மனிதரென்றுகருதி ஒருகரும்பை கையிலெடுத்துக்கொண்டு அவருக்குக்காட்டி 'இதனை இவ்விடத்திலுள்ளதானைக்குக் கொடுத்தால் அவ்யானை உண்ணுமாறு செய்வீராகில் உமதுசித்தியைக் காணலாம்' என்று இயம்ப, அதற்குசசமமதித்தசசித்தர் கடைக்கண்ணுறுத்தலைசெய்து காட்ட, உடனே அக்கல்யானை உயிர்பெற்றெழுந்து அக்கரும்படையை பிடுங்கித்தின்ற தென்பதும், உடுப்பூரில் வேடர்குலத்தில்தோன்றிய திண்ணனென்னும் இயற்பெயருடைய கண்ணப்பநாயனார் வேட்டையில் தாம் கொன்றிருக்கத்தனை கொணர்ந்த தசையை அம்பாலரிந்து அதுக்கு நெருப்பிற்றித்தமாக்கக் காய்ச்சி வாயிலிட்டுச் சுவைத்துச் சுத்தமாக்கின தசையைப் படைத்து ஊட்டக் கடவுள் உண்டருளின திருவிளையாடல்களைக் கேட்க. இக்கு - இக்ஷு; வடசொல். கானவன் அந்தப்பல்பொருளுக்கு காட்டுவையாம்பவன். எருக்கு வது, எச்சில்; இல் - பெயர் அருத்து: எருக்குதல் - ஒடுதல், பருகுதல் இறக்கி - இறுக்கக்கொண்டு. பாவத (கரு)

கசு.—(இ - ள்.) எவர்க்கும் - எல்லோர்க்கும், மேவும் - பொருந்துகிற, நடுக்கங்கள்தமை - அச்சங்களை, காயாம்பூ வன்னன் - காயாம்பூவனனென்றுசெடியின தாமலர்போறகரிய நிறத்தையுடைய திருமால், வீட்டி - ஒழித்து, காக்கும் - காத்தருளுதற்கிடமானோ, அதனை - அழுகிய, புயபுரே - பெரும்பற்றப்புலியூரிலே, — கோவணம் - (தமது) கோவணத்தைச், சீர் கூட்டு இடு - உண்ற - பெருமையையுடைய தராசுத்தட்டிலேவைக்க நிறையொப்பாக வைத்த அமர்நீதிநாயனாரை, பிறவி வல இருளா - பிறவியாகவுள்ள வலிய இருட்டை, அட்டிட - அழித்தருளுதற்கு, என்ற - ஓலாமலமாகிய வாழ்த்தினவராகிய சிவபிரான், ஆவு - விருப்பமுடையனாய் (எ - று.)

கைலாசத்திலிருந்து திருமால் சிவபிரானிடம் அருமை பெற்றவர் இதம்பரத்திலிருந்து கனகசபையில் திருநடனமியற்றித் திருமான் ஆண்டு அடியவருள் சிவமாயமானைப்போலப் போதலின் என்று என்பது வரலாறு. நடுக்கம் - மனமுடம்பு யாதுக்குச் சக்காரணமான அச்சமுறுத் தும் செய்கைகளுக்குக் காரியவாகுபெயர். வீட்டுதல் - ஒழித்தல். காயா + பூ = காயாம்பூ; மரப்பெயர்முன்னர் இனமெல்லெழுத்து வரப்பெற்றது. வன்னன் - வண்ணன்: விகாரம். வணிகர்குலத்தவராகிய அமர்நீதிநாயனார் திருநல்லூரில் மடங்கட்டுவித்துச் சிவனடியார்களுக்கெல்லாம் பலவகைக்கோவணமீந்து அவர்களைஉடசரித்துவருகையில், சிவபிரான் இவருடைய அன்பின் தகுதியை வெளியிடும்பொருட்டு ஒருநாள் ஒருபிரமசாரிவடிவமாய்வந்து தமதுகோவணமிரண்டனுள் உடுத்துள்ளதொழிய மற்றதொன்றை அவரிடங்கொடுத்து 'நாம்நீராடிவரும்வரையில் இதனைவைத்துக்காத்திருந்து பின்பு எமக்குக்கொடும்' என்றுகூறிச்சென்று, அதனை மாயையால் தாமே மறைத்தருளி, நீராடி மழையில்நனைந்துவந்து, நமதுகோவணத்தைக்கொடுமென்றுகூற, நாயனார் வைத்தவிடத்திற்சென்று தேடிப்பார்த்துக் காணாமையால் அஞ்சியிருக்க, கடவுள் கண்டு 'அதுபோனாலும் அதற்குச்சமமாகவுள்ள இந்தமற்றொருகோவ

னத்திற்கு ஒப்பான எடையுடையதைக் கொடுத்தால் உடன்படுவோம்' என்று கூற, நாயனார் துலைநாட்டி ஓர்தட்டில் அக்கோவணத்தையிட்டு மற்றொருதட்டில் தமது உடைமைப்பொருளாகிய பொருள்களனைத்தையுமிட்டும் அதற்கு ஒப்பாகாமையால் தாமும் ஏறி எடையைச் சமஞ்செய்து சிவகதியையடைந்தன ரென்பது அமர்நீதியின்கதை. சீர்த்தட்டு - சீர்தூக்குந்தட்டு என்றுமாம். இட - அகரவீற்றுவியங்கோள். பிறவி - இனைப்பதற்கு ஆகுபெயர். பிறவி - தொழிற்பெயர்: வி விகுதி. பிறப்புத்துன்பம், முசகுடார்க்கும் ஒழியாத இருளை போலுமாதலின், வல் இருளென்றது. ஆர்வு - தொழிற்பெயர். (கசு)

கஎ.—(இ-ள்) நேயம - அன்பையுடைய, மனையாளுடனே - (தமது) மனைவியுடனே, நீலகண்டனார் - திருநீலகண்டநாயனார், முதுமை போய் - மூப்பு நீங்கப்பெற்று, இளமை பெற்ற - இளமைப்பருவமடைதற்கு இடமான, பதியோ - பதியாவது,—தீயமலத்தைக் கெடுப (ஆணவமுதலிய) மும்மலத்தினையும், அறிய - விலக்குகின்ற, போதம் - (சிவ) அறிவு, கெட்டார் - ஒழிந்த அடியார்களையுடைய, உள்ளத்தார் - மனத்திலெழுந்தருளியிருப்பவரும், அன்று - அக்காலத்தில், இருவர் - (பிரம விஷ்ணுக்கள்) இரண்டுபேரும், தேடும் போது - தேடினபொழுதில், அயர்ந்து - அவ்விடத்து, எட்டார் - (அவர்களுக்கு) எட்டாமல் நின்றவருமாகிய சிவபிரான், சேர்வு - சேர்ந்துள்ள இடமாம்; (எ-று) - புலியூரென [illegible] திருக்க.

சிதம்பரத்திலே குயவர் குலத்திலே தோன்றிய திருநீலகண்டநாயனார் சிவனடியார்களுக்குத் திருவோடு கொடுக்குந் தொழில் பூண்டு இல்லறவாழ்க்கையிலிருந்தாராயின், அவர் பிறமகளிரிடத்து ஆசையுடையவராக அறிந்து அவர்மனைவியார் 'இனி எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்' என்று ஆணையிட்டுக்கூற, அவர் அதுகேட்டு அதுமுதல் மனைவியாரைமாத்திரமேயன்றி (மனைவியார் எம்மையென்று பன்மையாகச் சொன்னதனால்) பிறமகளிரையும்பரிசியாமலேயிருவருமுதுமையடைய, இவர்களின் அன்பை வெளிப்படுத்தற்பொருட்டு சிவபிரான் ஒரு சிவயோகிவடிவமாய்வந்து தமது திருவோட்டை அவரிடங் கொடுத்து நாம் மீண்டுங்கேட்கும்போது கொடுக்கவேண்டுமென்று கூறிச் சென்று, அதனைத் தாமே மறைத்தருளி, மீண்டுவந்துகேட்கையில், நாயனார் அதனைக்காணாமையால் அஞ்சிவருந்திக்கூற, சிவயோகியார் 'நாம் நம்பமாட்டோம், உமதுமனைவி கையைப் பிடித்துக்கொண்டு நீர் இக்குளத்தில்மூழ்கியெழுந்து சொல்லும்' என்ன, உடனே அவர் ஒருதடியின்இருதலையையும் மனைவியுந்தாமுமாகப்பிடித்துக்கொண்டு அக்குளத்தில் மூழ்கியெழுகையில், இருவரும்இளமைபெற்றனரென்பது, முற்பாதியின்கதை. மனையாள் - வீட்டிலிருந்து சமுசாரகாரியங்களைச்செய்பவள்; காரணப்பெயர். நீலகண்டன் - நீலநிறமுள்ள கழுத்துடையவன்; இது-கடவுள்பெயர் அடியவர்க்குஇட்டு வழங்கிய ஆகுபெயர். ஆர்என்னும் பலர்பால்விகுதி,உயர்வுகுறிக்கவந்தது. முதுமை, இளமை - பண்புப்பெயர்கள். தீயமலத்துஞ்சும்போதம் கெட்டார் உள்ளத்தார் - கொடியமலங்களையொழிக்குந் தத்துவஞானமுடையவராய் இயற்கையறிவுபரவசப்பட்ட அடியார்களது இதயகமலத்தில் அவர்கள்கருதியவடிவத்தோடு எப்பொழுதும்வீற்றிருப்பவர். தாம்தாம் கடவுளென்னுங் கருத்துக்கொண்டு ஒருவர்க்கொருவர் பகைமைபூண்ட பிரமவிஷ்ணுக்களின மாறுபாட்டை யொழிக்கும்பொருட்டுப் பரமசிவன் அவ்விருவர்க்கும் நடுவில் ஒருபெரியஅனற்பிழம்பினுருவமாய்த் தோன்றி நின்று,'இப்பிழம்பின் அடியையும் முடியையுந் தேடுமின்' என்ன,அவ்வடிமுடிகளில்ஒன்றை முன்னங்கண்டவரேமுதல்வ ரென்றுசொல்லிப் பிரமன் ஹம்ஸரூபியாய் முடியினைக் காண விண்பறந்தும், விஷ்ணு வராகரூபியாய் அடியினைக்காண மண்ணிடந்துஞ் சென்று பலகாலந்தேடியும் முடிவுகண்டிலராய்ப்போயின ரென்பது

கதை. அன்று - முன்பு. இருவர் - தொகைக்குறிப்பு. சேர்வு - தொழிலாகு பெயர். மலம், போதம் - வடசொற்கள். (கஎ)

கஅ.—(இ - ள்.) அந்நாள் - அந்தக்காலத்தில், கைவிளக்கு ஏற்று - (தமது) மயிர்முடியைத் திருவிளக்காக எரித்தருளின, அன்பினுக்கு - பக்தி மிகுதிக்காக, கணம்புல் நாயர்க்கு - கணம்புல்லநாயனாருக்கு, முத்தி - வீட்டுலகத்தை, ஈயும் - கொடுத்தருளின, புலியூரே - புலியூரானது,—எந்நாளும் - எப்பொழுதும், அன்பர் கருத்து உடையார் - அன்பையுடைய தமது அடியார்களது உள்ளத்தை (தங்களுக்கு வாழுமிடமாக) உடையவரும், அன்பரிடத்து - (தமது) அடியார்களிடம், அன்பு இலா - அன்பையுடைத்தாகாத, வன்பர் - கொடியவர்களது, கரு - பிறப்பை, அடையார் - அடைந்தருளாதவருமாகிய சிவபிரான், வாழ்வு - வாழுமிடமாம்; (எ - று)

புள்ளிருக்குவேளூரில் அவதரித்தவரும் சிவாலயத்தில் திருவிளக்கிடுதலையே சிறந்த திருப்பணியாகக் கொண்டொழுகுபவருமாகிய அந்நாயனார், சிதம்பரத்துக்குவந்து தம்பொருள்களை யெல்லாம் விற்று திருப்புலீச்சரமென்னுமாலயத்தில் அத்திருப்பணியை வழுவாது நடத்திவருகையில், பொருளில்லாமையால் கணம்புல் அரிந்துவந்து அதனை விற்று அப்பணியை நடத்துகையில், அதுவும் ஒருநாள் விலைபடாமற்போகவே, அப்பொழுது திருப்பணிக்கு முட்டுவாராதபடி அப்புற்களையே கோயிலில்வைத்து எரித்து அதுபோதாதாகவே தமது சிகையை உடனேவைத்தெரித்துப் பணியைநடத்தி அப்பிறப்பொழிந்து சிவகதிபெற்றனரென்பது, முற்பாதியின்கதை. அந்நாள் - முற்காலத்திலென்றபடி. விளக்கு - விளங்குதலைச் செய்வது, காரணக்குறி. முத்தி - வடசொல்; (எல்லாப்பற்றுக்களையும்) விட்டு அடையுமிடம். கணம்புல் - ஓர்வகைப்புல்; அதனைக்கொண்டு பணிநடத்தினதனால் இவர்க்கு இப்பெயர். நாயர் - நாயகனென்னும் வடசொல்லின் விகாரம்; உயர்வுப்பன்மை. நாயகனென்பது நாயனென விகாரப்படுதலை "நாயனும் பூமையு நாட்டிய தாருந்" எனக் கலிங்கத்துப்பரணியிலும், "வானோர்க ளேவல்செய, நாயனும் பூமகன்" என வில்லிபுத்தூரார்பாரதத்திலும் காண்க. கரு - கர்ப்பம்; வடசொற்றிரிபு; பிறப்புக்கு ஆகுபெயர். வன்பர் - வன்பினையுடையவரென்றபடி. உடையார் - பண்பு குறிப்பாய்ப்பிறந்த உடன்பாட்டுக் குறிப்புவினையாலணையும்பெயர். அடையார் - வினைப்பகுதியடியாய்ப் பிறந்த எதிர்மறைத் தெரிநிலைவினையாலணையும்பெயர்.

கக.—(இ - ள்.) நாளை போவோம் எனபார் - (சிதம்பரத்துக்கு) நாளைக்குச்செல்வோம் என்று நாள்தோறுங்கூறிச் சிலகாலங்கழித்ததனால் திருநாளைப்போவாரெனப் பெயர்பெற்றவர். தாவு - மேலெழுந்தெரிகிற, ஓமத்தால் - (தில்லைவாழந்தணர் வளர்த்த) ஓமஅக்கினியினால், நீசம் - (தமது) சண்டாளத்தன்மை, போய் - நீங்கி, கதி - முத்தியை, சேர் - பெறுதற்கிடமான, புலியூரே - புலியூரானது,—சம்புவை - நரிகளை, மா ஆக செய்து - குதிரைகளாக்கி, முன் - முற்காலத்தில், இந்தார [சுந்தார] - கொடுத்தருளினவரும், தந்த - (சமணர்கள்) கொணர்ந்தேவிய, அத்தி - யானை, சாய - இறக்கும்படி, வில்லில் - வில்லிலே, அம்பு - பாணத்தை, வைச்சு - வைத்து, எய்து - பிரயோகித்து, முனிந்தார் - கோபங்காட்டினவருமாகிய சிவபிரான், ஆர்வு - விரும்பித்தங்குமிடமாம்; (எ - று)

ஆதனூரிற்புலையர்குலத்திற்பிறந்த நந்தனார் சிதம்பரத்துக்குவந்து அங்கு அந்தணர்செய்யும்வேள்விகளினின்றுஎழும் ஓமதூமத்தைக் கண்டு உட்செல்லஅஞ்சிப் பின்பு சிவபிரான்கட்டளைப்படி தில்லைவாழந்தணர்வளர்த்த தீயில் மூழ்கிச் சண்டாளசன்மத்தையொழித்து முனிவடிவமாகியெழுந்து உட்சென்று சுவாமிதரிசனம்பெற்றுஉயர்கதியுற்றனரென்பது முற்பாதியின

[illegible]. தாவேமம் - வினைக்கொதகை. [illegible] - மோமை; வடசொற்றிரிபு. [illegible], [illegible] - வடசொற்கள். [illegible] தொசகுஞ்செய்தலவேண்டுமென்று ஓப் [illegible] கருக்கருக்கு, [illegible] தலை [illegible] குலத்திக்கு இயலா [illegible]. [illegible] போமியாம் [illegible] போமோய் என்று சிலகாலங்கழி [illegible] (இ) [illegible]. [illegible] தானமங்கிரியா [illegible] கதிரை [illegible] பொருட்டு அவர்கொடுத்தபொருளை [illegible] காட்சியைத் தரிசித்து [illegible] செலவுசெய்து [illegible], பின்பு [illegible] கைகட்டப்பட்ட அவ்வடியவரது அனபத் [illegible] கடவுள் [illegible] குதிரைகளாக் [illegible] தவனம் [illegible] இருப்பதால் சம [illegible] மதயானையை [illegible] கொலுமட்டி [illegible] [illegible] அவ்வரசனவேண்டுகோளால [illegible] காரியகபான [illegible] திருவிளையாடற்கதைகள். [illegible], இங்கே [illegible] குதிரை யைக் [illegible] - [illegible]; வடசொற்றிரிபுகள். பின் [illegible], முன் [illegible] - [illegible]; பின்னது - அசை [illegible] - (இ) [illegible] றுக்கலென்றுஞ் செய் [illegible]; [illegible], சந் [illegible] யாத்த [illegible] - கை, இங்கே [illegible] அ [illegible], [illegible]. [illegible] - போமி. எய்து, எய்- பகுதி. [illegible] (கக)

[illegible] —(இ) [illegible]) [illegible] - [illegible] வடிவமாக [illegible] (அ [illegible] ப்படுதல்),[illegible] அகத்தை- [illegible] (முன் - முறகா [illegible], [illegible] - [illegible] ([illegible]) க்கொடுத்து, [illegible] - [illegible], [illegible] - [illegible] —நல் கொடிக்கு - ந [illegible], [illegible] - [illegible] தாயாக இருந்த [illegible] - கொடுத்தனமையுடையவர் [illegible] பொறித்தருளாதவ [illegible], [illegible] கொடியா - [illegible] நனமையுள்ள இடபத் [illegible] சிவபிரான், பறறு-விரும் [illegible]: ([illegible])

[illegible] திருவமுதுசெய் வித்து இவ்வாறு [illegible] செலவமெலலாமொழிந்து வறு மைய, [illegible] அவனமனைவி நோக்கித் தனது மங்கலநாணையவிழ்த்துக்கொடுக்க, கணவன அதனைவாங்கிச்சென்று விற்று க்கொணடுவந்துகொடுத்த [illegible] சமைத்தபின்னர் அவன்பூசைமுடித் [illegible], நடேசப்பெருமான் ஒரு அடியவர்வடிவங்கொண்டுவந்து தமது [illegible] பெரும்பசியைத் தீர்க்கவேண்டு மென்றுகூற, அவர்கள் தமதுமக்கள்பசியையும் நோக்காமல அவ்வடியவரதுபசியைத் தீர்க்கத் தொடங்க, கடவுள அவ்வுணவுமுழுவதையுந தாஉண்டு அவர்கள்பசியைத் தீரத்து அவர்களுக்கு முத்திதநதன ரென்பது முற்பாதியின்கதை. சித்தக நதத்ஸ்வருபம என்னும் வடசொற்றொடர், திரிந்தது. அகத்தைப்பெற்ற எ னஇயையும. சேந்தனும் எனறஉம்மை-பிறர்பலர் நற்கதிபெற்றதைக் குறிப்

பித்தலால், எச்சப்பொருளது. கொடி - கொடிபோல்மெல்லிய அழகியவடிவமுடைய பெண்ணுக்கு உவமவாகுபெயர். திரிசிராப்பள்ளியில் தனகுப்தனென்னும் வணிகன், காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள இரத்தினகுப்தன்மகளை மணஞ்செய்துவாழ்கையில், சிவபக்திகொண்டு சிராமலைப்பெருமானைவழிபட்டொழுகும் அவள் கருப்பமுற, அச்செய்திகேள்வியுற்ற அவள்தாய் அவளைக்கருவுயிர்ப்பிக்கும்பொருட்டு அதற்கு இன்றியமையாத பொருள்களெல்லாவற்றையும் அமைத்துக்கொண்டு காவிரிப்பூம்பட்டினத்தினின்று திரிசிராப்பள்ளிக்குவருகையில், வழியில் காவேரிநதி கரைபுரண்டோடிய வெள்ளப்பெருக்கால் தடைப்பட்டுநின்றுவிட, பிரசவகாலநெருங்கியமகளுக்கு சிவபிரான் அருளால் அவ்விரத்தினகுப்தன்மனைவிபோலவே வந்து அவளது பிரசவத்துக்கு இனிதாகத்துணைசெய்தருளினமையால் தாயும் என்ற உம்மை - உயர்வுசிறப்பு; கடவுளாகவேயன்றி மகளுடைய பெற்றோரைக் குறித்தலால், எச்சப்பொருளதுமாம். கொடியாரதுகைகள் கடைத்தீர்ந்த அடி. யார் - நல்லடியாரது வினைப்பயன்களை யொழிப்பவன் எனற்படி. ஆன், ஏன் - சாரியை. ஆர்க்காடு - கைகொடுத்தாளை. (உ0)

உ௧.—(இ - ள்.) விண் தலையே போற்றும் - தேவலோகத்தவரும வணங்கும்படியான, விராட புருடனார் - (உலகவடிவாகவுள்ள) விராட்புருஷனது, இதய புண்டரிகம் ஆன - இருதயகமலஸ்தானமாகவுள்ள, புலியூரே - புலியூரானது,—சண்டன் - யமனென்னும் பெயருடைய, வன்மை - உறுதியையுடைய, தாம்பு - பாசபந்தத்தை, முரிவித்து - நீங்கச்செய்து, ஆர்வத்தொடு - அருளுடனே, மார்க்கண்டனுக்கு - மார்க்கண்டேயருக்கு, அன்பை தாம் பொழிவித்தார் - அன்பைத் தாம் சொரிவித்திட்டவராகிய சிவபிரான், பற்று - விரும்பிவாழுமிடமாம்; (எ - று.)

தலையே, ஏ - உயர்வுசிறப்பு. ஆர்வம் - இயற்கை விருப்பமென்றும், அன்பு - செயற்கைவிருப்பமென்றும் வேறுபாடு கொள்க. பொழிவித்தார் - பிறவினை தன்வினைப்பொருளது. மார்க்கண்டருக்கு - மார்க்கண்டரிடத்திலென்க. இனி, மார்க்கண்டருக்குத் தம்பால் அன்பை மிகச்செய்தவரென்று உரைப்பாருமுளர். (உ௧)

உஉ.—(இ - ள்.) குஞ்சிதத் தாள் கண்டவரை - (மேலெடுத்தாடிய) வளைந்த (சிவபிரானது) திருவடியைத் தரிசித்தஅடியார்களை, கும்பிட பெற்றோர்கள் - வணங்கப்பெற்ற பாக்கியமுடையவர்கள், விரும்பும் சிவ வீடு எய்தும் - (யாவரும்) விரும்புதற்கேற்ற சிவகதியை யடைவதற்குக்காரணமான, புலியூரே - புலியூரானது,—செம் சடையில் - சிவந்த (கபர்த்தமென்னுந் தமது) சடையிலே, சின்ன ஞானம் பிறையார் - சிறியஇளஞ்சந்திரனையுடையவரும், 'தில்லை மறையோர் உரு நாம' - தில்லைவாழந்தணர்களது வடிவம் யாம்', என்ன - என்று, விளம்பு - கூறியருளின, இறையார் - தலைவருமாகிய சிவபிரானது, இல் - இடமாம்; (எ - று.)

குஞ்சிதத்தாள்கண்டவர் - சிதம்பரத்திற் கனகசபையில் நடேசப்பெருமான் ஒருதாளையூன்றி ஒருதாளைத்தூக்கியாடும் ஆநந்ததாண்டவநடனத்தைத் தரிசித்தவரென்றபடி. சிவன்-(யாவர்க்கும்) மங்களத்தைச்செய்பவன்; சிவம் - சுபம். சின்ன - சிறியஎனபதன் மரூஉ: சின்னம் எனஎடுத்து - அடையாளமான என்றும் பொருள்கொள்ளலாம். சந்திரன் தக்ஷமுனிவரது புத்திரிகளாகிய அசுவினி முதலிய இருபத்தேழு நட்சத்திரங்களையும் மணஞ்செய்துகொண்டு அவர்களுள் உரோகிணியென்பவளிடத்து மிகவுங்காதல் கூர்ந்து அவளுடனே எப்பொழுதுங் கூடிவாழ்ந்திருக்க, மற்றைமகளிரது வருத்தம்நோக்கி அவனை 'க்ஷயமடைவாயாக' என்று சபித்த அம்முனிவர்சா

சந்திரன் பதினைந்து கலைகளுங்குறைந்து மற்றைக்கலையொன்றோ டொழிப்பதற்குமுன்னம் சிவபிரானைச்சரணமடைய, அப்பெருமான் அருள் கூர்ந்து அவ்வொற்றைக்கலையைத்தம் தலையிலணிந்து மீண்டுங்கலைகளவளா நவருமபடி அநுக்கிரகித்தா ரென்பது கதை; குருவாகிய தமது மனைவியா ளாகிய தாரையைச் சந்திரன்புணர்ந்ததனால் பிருகஸ்பதி சபித்தசாபத் தால் அச்சந்திரனுக்குக் கலைகுறைந்தனவென்றுங் கதைகூறப்படும். இவ்வா றாதலால், கடவுள் தமது திருவடிகளையடைந்தார்க்குக் குறைதீர்த்தருளுந்தன் மையரென்பது தெரிகின்றது. இரணியவர்மராசன் வியாக்கிரபாதமுனிவர து கட்டளைப்படி தில்லைவாழந்தணர்மூவாயிரவரையும் தன்தேரிலேற்றிக் கொண்டு பிரயாணஞ்செய்த அந்தர்வேதியினின்றுந் தில்லைப்பதியை யடைகையில், அந்தணர்மூவாயிரவருள் ஒருவர் குறையவே, அப்பொழுது ந டேசப்பெருமான் 'இவர்களையெல்லாம் நம்மையொப்பார், நாம் இவரை யொப்போம், ஆதலால், நாம் இவருள் ஒருவர்' எனக்கூறித் தொகையை நிறைத்தன ரென்பது கதை. (௨௨)

௨௩.—(இ - ள்.) தேவம் - தெய்வத்தன்மையுள்ள, மறை - வேதங் களும், ஆகமங்கள் - சிவாகமங்களும், தென் கயிலை என்று - தக்ஷிணகை லாசமென்று ஓதுந்திருநாமங்கூறி, நாளும் - (நாடோறும்) வணங்க, பூ உலகில் - பூலோகத்தில், ஓங்கும் - உயர்வுற்றுவிளங்கும், புலியூரே - புலியூரானது,—மூ உலகும் - மூன்றுலோகங்களும், வாழ்வு உதிக்கும் முன்பு - வந்துதோன்றுமு ன்னமே, உணர்வார் - (அவற்றின் உற்பத்திவிநாசங்களை) அறியுந்தன்மைய ரும், அப்பர் - திருநாவுக்கரசுநாயனார், தம் பாதம் சூடிக்கும் முன் - தமது தி ருவடியைத் தோத்திரஞ்செய்யுமுன்னே [செய்தவளவிலென்றபடி], வாழ் வு அருள - (அவருக்குப் பேரின்ப) வாழ்க்கையைக் கொடுத்தருளும்பொரு ட்டு, புணர்வார் - (அவர்பக்கல்) வந்துசேருந்தன்மையருமாகிய சிவபிரான், சார்பு - சேர்ந்துதங்குமிடமாம்; (எ - று.)

தேவ என்னும் அடைமொழியை ஆகமங்களுக்குங் கூட்டுக. ஆகமங்க ள் - சிவபிரானால் அருளிச்செய்யப்பட்ட காமிகம் முதல் வாதுளமீறாகிய இருபத்தெட்டு. பூ - வடசொல். அப்பரென்னுஞ் சொல்லுக்கு-தலைவரென் றுபொருள்; இது, திருநாவுக்கரசுநாயனாருக்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதற்சந்திப்பின்போது இட்டழைத்த திருநாமம். கயிலை - வட சொற்றிரிபு. (௨௩)

௨௪.—(இ - ள்.) நல் மா தவத்து - சிறந்தபெருந்தவத்தையுடைய, ஒருவன் - ஒருத்தன், நாடும் படிக்கு - விரும்பியவிதத்திற்கு, இரங்கி - (கட வுள்தாம்) அன்புகொண்டு, பொன் மாரி பெய்யும் - பொன்மழையைப் பொ ழிந்தஇடமான, புலியூரே - புலியூரானது,—முன் மார்பில் - (தமது) மார் பின் முன்னிடத்திலே, பல் நாகம் தந்தார் - பலபாம்புகளாகிய உபவீதத்தை யுடையவரும், பகர் தமிழ்க்கு ஆ - (சுந்தரமூர்த்திநாயனார் தமமேற்) பாடி ய தமிழ்ப்பாட்டுக்காக,(அருள்கொண்டு),செங்கல்தனை பொன் ஆக தந்தார்- செங்கல்லை (அவருக்கு) ப்பொன்மயமாகக் கொடுத்தருளியவருமாகிய சிவ பிரானது, புரி - திருநகரமாம்; (எ - று.)

பெருந்தவமுயற்சியுள்ள ஓரடியவர் தில்லையில் திருப்பணியைநடத்திவ ருகையில், இடையிற பொருளில்லாமையால் வருந்த,அவ்வருத்தத்தை அக ற்றும்பொருட்டுச் சிவபிரான் கருணைகூர்ந்து சுவர்ணவர்ஷத்தைச் சொரிவி த்தன ரென்பது முற்பாதியின்கதை. பன்னாகம்என ஒருசொல்லாக எடுத்து, பந்நகமென்னும் வடசொல்லின் திரிபெனக்கொண்டு, பாம்பென்று உரைக்க லாம். தந்து - நூல்; வடசொல்: இங்கே, முப்புரிநூல், பூணூல். தந்தி

என்னும் வடமொழி, ஆர் என்னும் பலர்பால்விகுதியோடு சேர்கையில் சிவ பான்மை உயிர்வரக் குற்றியலுகரம் கெட்டது. தமிழ்-பாட்டுக்குக் கருவியாகு குபெயர். சுந்தரமூர்த்திநாயனார் பங்குனியுத்திரத்திருநாள் சமீபித்தலும் தமது மனைவியாரான பரவையாருக்குத் திருவிழாச்செலவிற்குப் பொருள் கொடுப்பதற்குப் பொன்கொண்டுவருவதற்காகத் திருப்புகலூருக்குச் சென்று பரமசிவனைக் குறித்துப் பதிகம்பாடி அக்கோயிலுக்கு வெளியே ஓர்பால் கோயில் திருப்பணிக்குவந்த செங்கற்களைத் தலையணையாகவைத்துக்கொண்டு மேலாடையை விரித்து அதன்மேற் படுத்துறங்குகையில், கடவுள் அருளால் அச்செங் கல்லைப் பொன்னாகச்செய்துவிட, நாயனார் துயிலுணருகையில் அதனைக்கண்டு மிக்கமகிழ்ச்சிகொண்டனரென்பது கதை. ... மான வடசொல.

உரு.—(இ - ள்.) நாமகள் - சரஸ்வதி, தனது கீழ்திசையில் - தெற்கிழக்குத் திக்கிலும், பூமகள் - இலக்குமி, நாடோறும் தனது திசையில் - (முதலாதாக) நிறைந்துபயமிக்க வடக்குத்திக்கிலும், அரசுசெலுத்தும் ... பெறு பெறுதற்கிடமான, புலியூர் - புலியூரானது,—வாழ்த்தும் அடியார்கட்கு - (தம்மைத்) துதிக்கிற அடியார்களுக்கு, தாம் அன்றி வேறு ஒன்று இலரா - தம்மையன்றி வேறொரு பற்றுக்கோடில்லாதவருமாய், செங்கையில் - அழகிய திருக்கையிலே, பொன் பூதரம் வில்லார் - பொன்மயமாகிய மேருமலையை வில்லாகக்கொண்டவருமாகிய சிவபிரான், வாழ்-(என்றும்)வாழ்ந்தருளுகிற, புரம் - திருநகரமாம். (எ - று.)

'நாமகடென்' என்ற பாடத்திற்கு... நாமகள் - பிரமனது நாவில் வாழுமமகள்; எல்லோராலும் நாவினால் வாழ்த்தப்படுபவளுமாம். பூமகள் - தாமரைப் பூவில் வாழும் மகள். வாழ்த்தும் அடியார் தமக்குத் தாம் அன்றித் துணை வேறு இலலார் - தம்மைவாழ்த்தும் அடியாருக்குத் தாமே பற்றுக்கோடாக உள்ளவரென்றபடி. பூதரம்-(பூமியைத்தாங்குவது) பூமியைத்தாங்குவது, மலை; வடமொழி, காரணப்பெயர். ... - வடமொழி. தெற்கு + கிழக்கு + திசை = தென்கீழ்த்திசை, குணக்கு + திசை - குணதிசை; "திசையொடு திசையும்" என்னுஞ்சூத்திரவிதி. (உரு)

உசு.—(இ - ள்.) பாசக்கர சேர் மலரோன் - பிரமனைப் பொருந்தின சிறந்த தாமரைப்பூவில் தோன்றிய பிரமனும், பன்மறையும் வாயினர்-அறிந்த வேதம்வல்ல தில்லைவாழந்தணர் மூவாயிரவரும், பூசனை செய்து - சிவபூசையைச்செய்து, எத்தும் - வணங்குகின்ற திருப்பதி, புலியூர் - புலியூரானது,—ஓசை தரு - முழக்கத்தைச் செய்கின்ற, பால் வெண் - பால்போலவெண்ணிறமான (பாஞ்சசன்னியமென்னும்) சங்கத்தையுடைய, அரி-திருமாலினுடைய, ஆர்-அருமையான, பதும திருக்கண் - தாமரைமலர்போலுந் திருக்கண்ணை, அணிந்தோர் -(தமது திருவடியில்) தரித்தவரும், பாகம் - (தமது) வாமபாகத்தில், சங்கரியார் - உமாதேவியையுடையவரும் ஆகிய சிவபிரானது, பதி - திவ்வியதலமாம்; (எ - று.)

'மலரான்' என்ற பாடத்துக்கு - பூக்களைக்கொண்டு என்க. சிவபெருமானது திருவடிவிரலால் தரையிற்கீறி யுண்டாக்கப்பட்டுச் சலந்தராசுரனைக்கொன்ற சக்கராயுதத்தை அரக்கர்முதலியோரையழித்தற்குப் பெறும் பொருட்டுத் திருமால், சிவபெருமானை நாள்தோறும் ஆயிரந்தாமரைமலர்களைக்கொண்டு அருச்சித்து வழிபட்டுவருகையில், ஒருநாள் பரமசிவன் அவ்விஷ்ணுவினது அன்புநிலைமையைப் பரிசோதிக்கவெண்ணி ஒருமலரை மறைத்திட, திருமால் மனந்தளர்ந்து தமது செந்தாமரைமலர்போலுங்கண்களுளொன்றைப் பறித்து அருச்சித்தா ரென்பதும்; பிருங்கியென்னும்மகாமுனிவர் பரமசிவனைமாத்திரம் பிரதக்ஷிணஞ்செய்யக் கண்ட பார்வதிதேவி

தன்டகிலையநோக்கி 'முனிவர் என்னைப்பிரதக்ஷிணஞ்செய்யாமைக்கு ஏதுஎன்ன' என்றவர்க்கு, உருத்ரமூர்த்தி 'இஷ்டசித்திபெறவிரும்புபவர் உன்னையும், மோக்ஷம்பெறவிரும்புபவர் என்னையும் வழிபடுவர்' என்ன, அதுகேட்ட தேவி பெருமானினின்று பிரியாதிருக்குமாறு தவம்புரிந்து வாமபாகம்பெற்றாளென்பது கதைகள். பத்மம் - பத்மம். த்ருக்கு - த்ருக்; வடசொற்றிரிபுகள். ஆர்பத்மம் - (பெருமை) பொருந்திய தாமரை யென்றுமாம். அணிந்து ஓர்பால என்றும் பிரித்து உரைக்கலாம். சங்கரி - சங்கரன் என்பதன் பெண்பால்; இன்பத்தைச் செய்பவ ளென்று பொருள்: சம்-சுகம். (உ௬)

உஎ.—(இ-ள்.) ஓதும் - (ஒழிக்கமுடியாததாகச்) சொல்லப்படுகிற, பசியால் - பசியினாலே, எருவை - ஒருபருந்து, உண்ண-உட்கொள்ள, இறக்கும்-உயிர்விட்ட, கயற்கு - கயல்மீனுக்கு, அப்போது - அப்பொழுதே, கதி - உயர்ந்தபதவியை, ஈந்தருளும் - கொடுத்தருளின, புலியூரே - புலியூரானது,— பூதி - விபூதியை, வெருகு ஆய் - பூனையாக, இட்ட - தரித்த, ஆகத்தர் - திருமேனியையுடையவரும், வலி - வலிய, கமர்வாய-நிலவெடிப்பிலே, மாவடுவை - மாம்பிஞ்சை, வாய் இடும் - (தமது) திருவாயிற்கொண்டு அமுது செய்தருளினவரும், கர்த்தா-சகலத்தையுஞ்செய்பவருமாகவுள்ள சிவபிரான், வாழ்வு-வாழ்ந்திருக்கப்பெற்றதாம்; (எ - று)

ஒருகாலத்து பசிமிகுந்த ஒரு பருந்து கயல்மீனைக் கௌவியெடுத்துக்கொண்டு தில்லைப்பதியின்மேல்வழியாகப் பறந்துசெல்லுகையில், அவ்வெல்லையில் உயிரைவிட்ட அக்கயல்மீனுக்கு நடேசப்பெருமான் முத்திதந்தருளினரென்பது முறபாதியின்கதை; "பொருவிலாவடமனையிற் பணைமொருமீனை, யெருவைமுன் கொணர்ந்தணிதில்லை யெல்லைமேற்போதத்தின், மருவியக்கயல்கொன்றணை மாய்ந்தவவ்வுயிர்போய்க், கருதரும்பெருமுத்தியைப்பெற்றதக்கணத்தில்" எனபது சிதம்பரபுராணம். "ஒருநாளுணவை யொழியென்றா லொழியாய், இருநாளைக்கேலென்றா லேலாய்-ஒருநாளும், என்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே,யுன்னோடு வாழ்த லரிது" என்பவாதலால்,ஓதுபசி யெனப்பட்டது. பசி-உணவின்வேட்கை. எருவை- ஒருபறவை. நல்கும், நல்கு-பகுதி. பூதி-திருநீறு. வெருகு - பூனை, கர்த்தன்-காத்தன; வடசொற்றிரிபுகள். "கலப்பான திருமேனி யணிந்த நீற்றுக கதிர்முத்தின் சோதியன" என்றார் வில்லிபுத்தூராரும். கணமங்கலமென்னுந் திருப்பதியில் வேளாளர்குலத்தி லுதித்த தாயனாரென்பவர் வறுமையடைந்தபின்பும் தமதுவழக்கத்தை விடாமல் செந்நெலரிசி செங்கீரை மாவடு இவற்றைச் சிவாலயத்தில் அமுதுசெய்வித்தற்குக் கொண்டுபோய்க் கொடுத்துவரும் நாளில், ஒருநாள் அரிசிமுதலியவற்றை யெடுத்துச்செல்லுகையில்,பசியினாற் கால்தடுமாறி விழ, அப்பொழுது நிலவெடிப்பில் எல்லாஞ்சிந்திவிடவே, மிகவருத்தமுற்றுத் தமதுசன்மத்தைவெறுத்து அரிவாளால் தமதுகழுத்தை அறுக்கத் தொடங்குகையில், அவ்வெடிப்பினிடமாகச் சிவபிரான் கையைநீட்டி அவர்கையைப் பிடித்துக் கொலையைத்தடுத்துவிட்டதுமல்லாமல் அங்குச்சிந்தின மாவடுமுதலியவற்றை ஓசையுண்டாகக்கடித்து அமுதுசெய்தருளினரென்பது கதை. இவர்தாம் அரிவாட்டாயநாயனார். வடு - இளங்காய். கர்த்தா எனனும் வடசொல்லுக்கு- (எல்லாவற்றையுஞ்) செய்பவ னென்று பொருள். (உஎ)

உஅ.—(இ - ள்.) பத்தரை கொண்டே - (சிவபிரான் தாம்நேரிலல்லாமல் தமது)அடியவராகிய மாணிக்கவாசகரைக்கொண்டே,பேசா பாவைதனை பேசுவித்து - ஊமைப்பெண்ணைப் பேசும்படிசெய்து, புத்தரை ஆள்கொள்ளும் - புத்தசமயத்தவரை அடிமைகொள்ளுதற்கிடமான, புலியூரே-புலியூரானது,—முத்தி தரும்- (தன்னை ஜபித்தவர்களுக்கு) மோக்ஷத்தைக்

கொடுக்கிற,பஞ்ச அக்கரனார்-ஸ்ரீபஞ்சாக்ஷரமகாமந்திரத்தையுடையவரும், பணிவார் வினை - (தம்மை) வணங்கும் அடியார்களது கருமங்களை, அழல் முன் பஞ்சு ஆக்கு - நெருப்பின்முன் பஞ்சையாக்கும்படி செய்கிற [இருந்தவிடந்தெரியாதபடி அழிக்கவல்ல], ஆரனார்-ஆரனென்னுந் திருநாமமுடையவருமாகிய சிவபிரானது, பதி - தலமாம்; (எ - று.)

இலங்கையினின்றுவந்த புத்தர்கள் பலர் சிதம்பரத்தையடைந்து தில்லைவாழந்தணர்களை வாதிக்கு அழைக்க, அவர்கள் கடவுட்கட்டளைப்படி மாணிக்கவாசகருக்குத் தெரிவிக்க, அவர் புத்தர்களை வாதத்தில் வெல்ல, அதனையறிந்த சோழன் தனது ஊமைப்பெண்ணை அங்குக்கொணர்ந்துவிட்டு இவளது ஊமைரோகத்தைத் தீர்க்குஞ்சமயமே மெய்ச்சமயமென்று கூற, புத்தர்களது மணிமந்திரௌஷதங்களால் நீக்கமுடியாதாய்விட, மாணிக்கவாசகர் விபூதியைக்கொடுத்தருளி அம்மகளைப் பேசும்படிசெய்தருளினரென்பது கதை. பத்தர் - பக்தர். பேசாப்பாவை - பேசாத அழகியபெண். புத்தர் - புத்தனைத் தெய்வமாகக்கொண்ட மதத்தவர். பஞ்சாக்கரம்-ஐந்தெழுத்துடைய மந்திரம்; தீர்க்கசந்திபெற்ற வடசொற்றொடர். ஆரன் - ஹரன்; அழித்தற்கடவுள். (உஅ)

உகூ.—(இ - ள்.) கண்ணுறு போதும்-(தம்மிடம் சூழ்காமல் தம்மைத்) தரிசித்தமாத்திரத்திலும், பவத்தை - (அவர்களது) பிறப்புக்களை, காய்ந்து - ஒழித்து, அருளும் - (அவர்கட்கு) நற்கதிகொடுத்தருளுகிற, ஈரைந்து புண்ணிய தீர்த்தம் - பரிசுத்தமான பத்துத்தீர்த்தங்கள், சேர் - பொருந்தியுள்ள, புலியூரே - புலியூரானது,—பெண் ஒரு பாகத்து இருந்தார் - உமாதேவி ஒருபாகத்தில் இருக்கப்பெற்றவரும், கட்டு அரியார் - (ஆபரணமாகக்)கட்டியுள்ள நாகங்களையுடையவரும், கைகூப்பி நின்று துதிக்க திருந்தார்கண் தரியார் - (தம்மை) அஞ்சலிசெய்து வணங்கிநின்று துதிக்கும்படி திருத்தமடையாதவரிடத்துத் தங்காதவருமாகிய சிவபிரானது, காப்பு - (எல்லாவுயிர்களையும்) காக்குமிடமாம்; (எ - று.)

சிதம்பரதீர்த்தம் - சிவகங்கை, குய்யதீர்த்தம், புலிமடு, வியாக்கிரபாததீர்த்தம், அனந்ததீர்த்தம், நாகசேரி, பிரமதீர்த்தம், சிவப்பிரியை, திருப்பாற்கடல், பரமானந்தகூபம் என்பன. கண்ணுறும்போதும் என்ற உம்மை-இழிவுசிறப்பு. 'கண்ணுறும்போதே' என்றும் பாடம். பவம்-வடசொல். இரண்டடியிலும் 'கட்டரியார்' என மூலத்தைத் திருத்துக. கூப்பு-கூம்ப என்பதன் பிறவினை. கட்டு அரியார் என்பதற்கு - (இயல்பாகவே) பாசத்தினின்றுநீங்கினவரென்றும் பொருள்கொள்ளலாம். கட்டரியார் கைகூப்பிநின்று துதிக்க எனஎடுத்து - பாசமொழிந்த அடியவர்கள் கைகுவித்துத் தொழுதுநின்று துதிக்க வென்று உரைப்பாருமுளர். திருந்தார்கண் தரியார் என்றதனால், திருந்தினஅடியவரிடத்துத் தங்குபவரென்றதுபோதரும். (உகூ)

௩௦.—(இ - ள்.) மூந்த - முற்பட்ட [முன்காலத்திலே என்றபடி.], முத்தீ இடையின் - மூன்றுவகை அக்கினிகளிலே, அவி - அவிகளை, சொரிந்து - பெய்து, மறை புத்தேள்-(எப்பொழுதும்) வேதங்களை ஓதும் பிரமதேவன், ஓமம் செய் - வேள்விசெய்யப்பெற்ற, புலியூரே - புலியூரானது,—மெய் தோளில் மா இளவன் - (தனது) திருமேனியின் பகுதியான தோளில் பெரியதிருத்துழாய்மாலை யுடையவனும், நத்தன் - சங்கத்தையுடையவனுமாகிய திருமாலால், வணங்கு - வணங்கப்பட்ட, பதன் - திருவடிகளையுடையவரும், ஆகத்து ஓர் மாது உளவன் - (தமது) திருமேனியிலே ஒப்பில்லாத உமாதேவியையுடையவரும், அத்தன் - (யாவர்க்கும்) தலைவருமாகிய சிவபிரானது, மனை - இடமாம்; (எ - று.)

அவி - ஹவிஸ் என்னும் வடமொழித் திரிபு; யாகத்தில் தேவர்க்கு இடும் நெய்முதலிய உணவுகளுக்குப் பெயர். கங்கைக்கரையில் அந்தர்வேதியில் [illegible]மன் ஓர்யாகத்தை [illegible] செய்யத்தொடங்கி அதனை முடிக்கும்பொருட்டுத் [illegible]ல்லைவன[illegible] [illegible] திருநடனத்தைத் தரிசிக்கும் தில்லைவாழந்தணர்களை [illegible] யாகசாலைக்குப் போதருமாறு அழைத்ததோடு வியாக்கிரபாதமுனிவரையுந் துணைகொண்டு வேள்வி முடித்தான் என்பது கதை. சங்கம் - சங்கம். (௯௰)

௯௧ —(இ - ள்.) ஓர் கலை - ஒரு அம்சமானது, எங்கும் எங்கும் - எல்லாச் சிவதலங்களிலும், உலாவி - சஞ்சரித்து, அத்த யாமத்தில் - நடு இராத்திரியில், பூரணம் ஆய் - நிறைவாகி, ஒன்றும் - பொருந்தப்பெற்ற, புலியூரே - புலியூரானது,—காரணம் ஆம் - (திருநடனஞ்செய்தருளுதற்குக்) காரணமான, பார் - தில்லைவனத்தினிடத்தில், தாண்டவன் - ஆனந்த தாண்டவ நடனத்தையுடையவனும், ஆர் உயிர் தாலும் - யாவர்களையும், உள் அன்பு உடையார்க்கு - (அவர்களது) மனத்திலுள்ள அன்பினை நோக்கி, ஆண்டவன் - (அவர்களை) அடிமைகொண்டருள்பவனும் ஆகிய சிவபிரான், ஆர் - பொருந்திய, பதி - தலமாம் ; (எ - று.)

சிவபிரானது பூர்ணவடிவம் சிதம்பரதலத்தில் எழுந்தருளியிருப்பதென்றும், அதனது அம்சகலைகளுள் ஒருகலை கைலாசம் முதலிய எல்லாத்தலங்களினும் சென்று வியாபித்து நள்ளிரவில் மீண்டு அவ்வடிவத்தில் ஒடுங்கி நிறைவதென்றும் கொள்கை. "எப்பதிகளினுமுள்ள இறைவருநண் மூர்த்தியாவுந், செப்பரிய சிதம்பரத்தர்த்தயாமந்தனில், ஒப்புறவடைதலாலுமைக் கொப்பக்காலத்தன்று, மப்பெருங்காலச்சேவையதிக வுத்தமமாமென்றே" என்றார் சிதம்பரபுராணத்தும். அர்த்தம் - அர்த்தம், பூரணம் - பூர்ணம்; வடசொற்றிரிபுகள். யாமம் - மூன்றுமணிநேரங்களையுடையதெனக் காரணப்பெயர். சிதம்பரத்தை 'காரணமாம் பார்' என்றது, தேவதாருவனம் சிவபிரான்திருநடனஞ்செய்தலைப் பொறுக்கமாட்டாமையாலும், பூமிக்கு நடுவாகிய தில்லைவனம் அந்நடனத்தைப் பொறுக்குந்தானமாக இருத்தலாலும், அங்குத்திருநடனஞ்செய்தருளினமையின்; இனி, காரணமாம் பார் - (முத்திபெறுதற்குக்) காரணமான இடமென்றுமாம். அன்றியும், (மற்றைத்தலங்களைத் தரிசித்தபயன்கள் இத்தலத்தைத் தரிசித்தற்குக்) காரணமாகப்பெறற இடமெனலாம்; "சொற்றதின்னதேற் சுருதிநாயகனிடங் கொண்ட, நற்றலங்களாலாயதெனவெனணின்மறைகள், முற்றுநாடருஞ் சிதம்பரமூர்த்தியைக்காண்டற், குற்றவத்தலக்காட்சிகளேதுவாமுணரில்" என்பது சிதம்பரபுராணமாதலின். (௯௧)

௯௨.—(இ - ள்.) சோதி வரை - ஒளியையுடைய மகாமேருகிரியினது, மும் முடி ஆய் - மூன்றுசிகரங்களாக, எவர்க்கும் - யாவர்க்கும், தோன்றாது - காணப்படாமல், அனுபூதி - (சிவாநுபவமுடையவர்களுக்கே) அவ்வநுபூதியிலேயே, வெளி ஆகும் - புலப்படுகின்ற, புலியூரே - புலியூரானது,—அங்கம் - எலும்பை, மாது என - பெண்ணாக, தர வல்லான் - செய்துகொடுக்கவல்லவராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், நாளும் - தினந்தோறும், கை கொள - கையிலேவைத்துக்கொண்டு உபயோகிக்கும்படி, பொன் தாளம் இடும் - (அவர்க்குப்) பொன்னிலைமைந்ததாளத்தைக்கொடுத்தருளின, கந்தரம் அலலான் [அல்கந்தரத்தான்] - இருள்நிறமான கண்டத்தையுடைய சிவபிரான், ஆளும் - (உயிர்களை) அடிமைகொள்ளுகிற, காப்பு - காவலிடமாம் ; (எ - று.)

மேருவின் வடசிகரம் திருமூலட்டானமும், தென்சிகரம் கனகசபையும், மேலைச்சிகரம் கோபுரத்துவாரமுமாகச் சிதம்பரதலம் மேருவின்மூன்

றுகிகாரங்களாகும் உண்மை பிறர்கண்களுக்குப் புலப்படாமல் சிவாநுபூதியுடையவருக்குமாத்திரமே புலப்படுமென்பது,முற்பாதியினாலாறு. அநுபூதி-வடசொல். திருமயிலையில் வணிகர்குலத்திலே தோன்றின சிவநேசரென்பவர் கபாலீசுவரர்நுளாற்பெற்ற தமதுபுத்திரியாகிய பூம்பாவையைச் சம்பந்தமூர்த்திநாயனாருக்கு உடைமையாகக்கருதி வளர்த்துவருகையில், ஒருநாள் நந்தவனத்திற்சென்று மலர்கொய்கையில் அம்மகளைப் பாம்புதீண்டியிறக்க, அவளைச் சம்பந்தமூர்த்திநாயனாருடைமையாகக் கருதியதனாற்றிப்பற்றி,அவளைத்தகனஞ்செய்தவென்பை எடுத்தெறிந்துவிடாமல் ஒருகுடத்திலிட்டுவைத்து அவ்விருந்தகன்னியாமாடத்திலேசேர்த்துவைத்து அவர்வரக்காத்து வருகையில், அந்நாயனார் அத்தலத்திற்குவந்தருள அவர் அச்செய்தியையறிந்து அக்குடத்தைத்தருவித்துப் பதிகம்பாடிச் சிவனருளால் அவ்வெலும்பைப் பெண்ணுருக்கினர். அப்பெண்ணைப் பூம்பாவைதிருக்கோலக்காவென்னுந்திருப்பதியில் முதற்கண்ணே கையால் தாளமொத்துக்கறுத்துத் திருப்பதிகம்பாடுகையில், சிவபெருமான் அந்நாயனாருக்குப் பொற்றாளம் அளித்தருளினரென்பதும் கதைகள். கர்த்தாய்-தலைமைத்தனம்பண்ணுந்தாலாம் கருமத்துக்குக் காரணக்குறி; கம் - தலை. (௩௨)

௩௩.—(இ - ள்.) வானம் முதலிய உலகுக்கு - மேலுலகோர்களுக்கும் முதல்வனாக நிற்கப்படுகிற, துர்வாசர் - துர்வாசமுனிவர், முன் - முன்னே, நூறு - நூறுவயது, உமை - உமாதேவி, போனகம் - உணவை, அன்கருளால் - (அவர்க்குக்)கொடுத்தருளின, புலியூரே - புலியூரானது,—ஆன சாமம் முதலியவற்றைத்தானே ஆகிய யார் - பத்தினிகையானவர் தப்பாமல் யுடைய திருநடமான பூசையேயறிந்தருளுகருணையானவரும், மோனத்தார் - மௌனத்தார் அத்துவைதத்தார் - மௌனவிலைமையையுடைய சிவயோகிகள் விரும்புகிற அத்துவைதக்கலப்பையுடையவரும் ஆகிய சிவபிரானது, நாடு - தலமாம்; (எ - று)

துர்வாசமுனிவர் திருநடனம் தரிசிக்கவிரும்பி சிதம்பரத்துக்கு வருகையில், பசியால் இளைப்புற்று எங்கும் உணவு கிடையாமல்வருந்தி "எருக்கு முளைத்த இலை யீசனு மிங்கிலை" என உடைக்கல்லைத் தடவுகின்றபொழுது, சிதம்பரத்திலுள்ள சிவகாமியம்மை முதியபார்ப்பனச்சுமங்கலி வடிவங்கொண்டு அவர்க்குத் திருவமுதுபடைக்க, அம்முனிவர் அதனையுண்டு பசிதணிந்து "எருக்கு முளைத்தது இலை யீசனு மிங்குண்டு" என மாற்றியுரைத்தனரென்பது கதை. 'வானமுலகு' என்பதற்குக்காணாதே-விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் எனவும் உரைக்கலாம். திருமால் அவதாரம் பத்து—மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனம், பரசுராமன், தசரதராமன், பலராமன், கண்ணன், கற்கி என்பன. அத்துவைதம், மௌனம்-வடசொற்றிரிபுகள். மௌனம் - பேசாவிரதம். அத்துவிதம் - சிவமும் பரமான்மாவினின்றும் பிரிவறநிற்கும் நிலை; அத்துவிதம் - இரண்டற்றது. ஆன்மபோதமுங் கண்ணொளியும் போலச் சிவமும் ஆன்மாவும் தம்முள் இரண்டறக் கலக்கும் என்பது சைவசித்தாந்திகள் கருத்து; மாயாவாதிகளோ ஆகாயமும் குடவாகாயமும் போலப் பிரமமும் ஆன்மாவும் தம்மிற்சேர்ந்தொன்றுமென்பர். (௩௩)

௩௪.—(இ - ள்.) வாள் - ஒளியையுடைய, நகையால் -(தமது) புன்சிரிப்பினாலே, தீ - எரிகின்ற, புரத்தின் - திரிபுரத்திலே, வாழ் - வாழ்ந்திருந்த, மூவரை - மூன்று அசுரர்களை, காவல் பூண - (திருவாயில்) காக்குந்தொழிலைக் கொள்ளும்படி, அளித்து -(சிவபிரான்) கருணைசெய்துகாத்து, ஆளும் - அடிமைகொள்ளுதற்கிடமான, புலியூரே - புலியூரானது,—ஆணவத்து ஆம் - ஆணவமலத்தினாலாகின்ற, மெய் கரு - உடம்பின் தோற்றத்தினுடைய,

6642

ஙவாதனையால் - தொடர்ச்சியினால், மிக்கு உழலா - மிகுந்து வருந்தாத,
மிக்கோர்கள் - (சிவஞானமுடைய) பெரியோர்களது, மெய் கருத்து-உண்
மையையே கருதுந் தன்மையுள்ள மனத்தினாற் செய்யப்படுகின்ற, வந்த
னையான் - வணக்கத்தை யேற்றுக்கொள்பவனு மாகிய சிவபிரானது, வீடு-
இடமாம்; (எ - று.)

திரிபுரத்தில் வாழும் அசுரர்களுள் மூவர்மாத்திரம் புத்தவேஷங்கொ
ண்ட திருமாலின் உபதேசத்தாற் சிவபத்தி குலையாமலிருக்க, பின்பு
சிவபிரான் தமது சிரிப்பினாலாகிய நெருப்பினால் அம்முப்புரத்தையும் அவற்
றில்வாழும் அசுரர்களனைவருடனே யெரித்திடுகையில், அம்மூவரைமாத்திர
ம் அழித்திடாமல் சிதம்பரத்தில் திருக்கோயில்வாயிற்காவலாளராம்படி
அருள்செய்து ஆட்கொண்டன ரென்பது கதை. "முப்புரங்களை முக்கணன்
முனிந்தநாள் மூவரம் முழுத்தீயிற், றப்பினாருளர்" என்றார் வில்லிபுத்தூரா
ரும். அம்மூவர் - சுதருமன், சுசீலன், சுபுத்தி எனபவர். திபுரம் - வினைத்
தொகை. மும்மலங்களுள் ஆணவமலம் கன்மமலத்துக்கு மூலமாதலால்,
'ஆணவத்தாம் மெய்க்கருத்துவந்தனை' எனப்பட்டது. 'ஆணவமாம்' என்ற
பாடத்துக்கு - காரணகாரியங்களை ஒற்றுமைப்படக் கூறிய தென்க.
கரு - கர்ப்பம்; இங்கே, இலக்கணையால், பிறப்பு. துவந்தனை - ஒன்றற்
கொன்று தொடர்ந்திருத்தல்: அலைவுமாம். ஆணவமாமெய்க்கருத்துவந்த
னையால் மிக்குழலா மிக்கோர்கள் என்றது - கடவுளருளாற் கருமமொழி
ந்து பிறப்பறுத் தவருந்துமுந்திப்பெறும்நிலையி லுள்ளவர்களை, இவர்கள் சீவ
ன்முக்த ரெனப்படுவர். உழலா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்; அப்
படிப்பட்ட வினையெச்சமாக் கொண்டு, பிறப்புத்தொடர்ச்சியால்மிக்குஅலை
யாதபடி என்றும் பொருள் கொள்ளலாம். மிக்கோர்கள்மெய்க்கருத்துவந்
தனையான்என்றதில், கீழ்மக்களது பொய்க்கருத்தாற்செய்யப்படும் வந்தன
த்திக்கு எட்டாதவ னென்றும கருத்து ஏற்படும். (௫௪)

௫௫.—(இ - ள்.) சம்பந்தர்க்கு - திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்கு,
அந்தணர்கள்தம்மை - தில்லைவாழந்தணர்களை, சிவ கணம ஒப்பும் - சிவபி
ரானைச் சூழ்ந்துள்ள கணங்களை யொத்திருக்கின்ற, பண்பை - உண்
மைத்தன்மையை, காட்டும் - புலப்படுத்தற்கிடமான, புலியூரே - புலியூரா
னது,—அம்புலி வான் எட்டு ஆகம் - சந்திரனுலாவப்பெற்ற ஆகாயத்தை
அளாவிய [மிகநீண்ட] (தனது) திருமேனி, மஞ்சு ஆர்ந்தான் - மேகத்தை
யொத்திருக்கப்பெற்ற திருமால், ஏத்த - (தம்மைத்) துதிக்க, மறையோடு
இருபான எட்டு ஆகமம சார்ந்தான் - வேதங்கள்நான்கிலும் இருபத்தெட்டு
ஆகமங்களிலும் பொருந்தியுள்ளவராகிய சிவபிரானது, இல - இடமாம்.

சம்பந்தமூர்த்திநாயனார், திருநீலகண்டயாழ்ப்பாணநாயனாருடன் சித
ம்பரத்திற்குச்சென்று நடேசப்பெருமானைத்தரிசித், சந்நிதாமமிய தலத்தில்
நிரந்தரவாசஞ்செய்தற்கு அச்சமுற்று அருகிலு்ாத்திரமே இ்ாத்திலே
வசித்திருக்கும்நாளில்,ஒருநாள், நடராசமூர்ார கூற, நாயனார் ீபறுபெற்
ற தில்லைவாழந்தணர்களது மகிமையைச்~, அவ்யானை உயிர்பெ தம்பரத்து
க்குச் செல்லுகையில், அவ்வர் அத்திருநாலைத் துதிக்கையாலெ ருளாற் சிவகண
நாதராகப் புலப்படத் தரிசி வத்தன்மையைவிளக்கி அந்ரா யத்தில் உமா
மகேசுவரர்களால் அருளுட தன்றும், அதனால் அந்நாலுத்பற்றுச் சிவபிரானை
ருளால் உமாதேவி ஞானப் பெயர் வந்த தென் உண்டாகிய தத்துவஞானத்
தின் சம்பந்தத்தை யுடை ணிஜ்யும்என்னு, இந்நாயனார்க்குத் திருஞானசம்
பந்தரென்று திருநாமம். ஒப்பும் எனபதில், ஒப்பு - பகுதி. 'ஒக்கும்' என்றும்
பாடங்கொள்ளலாம். அஞ்சு ஆர்ந்தான் எனப் பிரித்து - தனது திருமேனியில்
பஞ்சாயுதங்கள் பொருந்தின திருமா லென்றும் உரைக்கலாம்; அஞ்சு

எண்ணலளவாகுபெயர். இனி, சந்திரனும் ஆகாயத்திலுளாவும வடிவத்தையு டைய மேகத்தை (வாகனமாக)ப் பொருந்தின இந்திரனுந் திக்க என்றும் பொருள்கொள்ளலாம். இருபத்தெட்டுச்சிவாகமம் — காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம, அம்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிசசுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம, ரௌரவம், மகுடம், விமலம, சந்திரஞானம், முகவிம்பம், புரோத்கீதம, லளிதம், சித்தம், சந்தானம், சருவோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் என்பன. இருபத்து + எட்டு = இருபானெட்டு; ஆன்சாரியை வர நிலைமொழியின துகெட்டது: [நன் - உருபு - ௧௦.] கணம்-கூட்டம். (௩௫)

௩௬.—(இ - ள்.) வாதவூரன்- திருவாதவூரில்அவதரித்த மாணிக்கவாசகசுவாமிகள, கோவை - திருக்கோவையாரென்னும் நூலை, புகல - பாடிச்சொல்லிவர, (அதனை), வைத்த அருளால் - (அவர்பக்கல்) வைத்த திருவருளினால, புத்தகத்தில தீட்டும்-ஏட்டுச்சுவடியில (சிவபிரான்) எழுதுதற்கு இடமான, புலியூரே - திருப்புலியூரானது,—துத்தி அரா - படப்புள்ளியையுடைய நாகங்களும், வானத்து அமர் இந்து - ஆகாயத்திலே பொருந்தகி ற சந்திரனும், ஆர் - பொருந்திய, மா மவுலியார் - சிறந்த சடையையுடையவரும், எழு நா - ஏழு (சுவாலைகளாகிய) நாக்குக்களையுடைய அக்கினிதேவனது, வான் அத்தம - பெரிய (ஏழு) கைகளையும், அரிந்தார் - அறுத்தவருமாகிய சிவபிரானது, வாழ்வு - இருப்பிடமாம்; (எ - று.)

மாணிக்கவாசகர் தில்லையி லெழுந்தருளியிருக்கையில், சிவபிரான், பாண்டியநாட்டில் அவரோடு முன் பழக்கமுள்ள ஒருஅந்தணனது வடிவத்தை எடுத்து வந்து அவரதுஅனுமதிபெற்று அவர்பாடியதிருவாசகத்திருப் பாடல்களை எழுதியபின்பு, ஒருகோவைப்பிரபந்தம் பாடவேண்டு மென்று கூறி, அங்ஙனமே அவரால் திருவாய்மலர்ந்தருளப்பட்ட திருச்சிற்றம்பலக்கோவையாரென்னுந்திவ்வியநூலையுந் தாமேயெழுதிமுடித்தன ரெனபது கதை. கோவை - இங்கே அகப்பொருட்கோவை; அது - இருவகைப் பட்ட முதற்பொருளும், பதினான்குவகைப்பட்ட கருப்பொருளும பத்துவகைப்பட்டஉரிப்பொருளும்பொருந்திக்கைக்கிளைமுதல்உற்றஅன்புடைக்காமப்பகுதியவாங்களவொழுக்கத்திணையுங்கற்பொழுக்கத்திணையுங் கூறுதலேயெல்லையாகக் கட்டளைக்கலித்துறை நானூற்றால் திணைமுதலாகத் துறையீறாகக் கூறப்பட்ட பன்னிரண்டு அகப்பாட்டுறுப்பும் வழுவின்றித் தோன்றப் பாடுவது. அருளால் தீட்டும என இயையும். அருளால் புகல என இயைத்து -(அடியார்களை உய்விக்கவேண்டு மென்று அவர்களிடத்து உண்டான) கருணையினால் வாதவூரடிகள் பாட என்று முரைக்கலாம். புத்தகம் - புஸ்தகம், அத்தம், ஹஸ்தம்; வடசொற்றிரிபுகள். இந்து, மௌலி- வடசொற்கள். எழு[illegible]ம் பிரிவுநிதொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரண[illegible] கன்றெளியுட'து அக்கினிக்குப் பெயராதலை "அமிழ்தென வெழுநா [illegible]ம் என்பது சைவசூரும் விண்ணோர் மிசைகுவர்" என்ற பழம்பாடலினுங் [illegible]காயமும் போலப் [illegible]க்கு'ஸப்தஜிஹ்வா' என்று ஒருபெயர் கூறுவர். எழு[illegible] ந்த பெயராகவும் எடுக்கலாம். அக்கினியின [illegible]ள்.) வாள் - ஒளியையுடைய[illegible], தக்கன்வேள்வி தகர்த்த பொழுதி லென்க. (௩௬)

௩௭.—(இ - ள்.) சீர் [illegible]புரத்தின் - திரிபுர[illegible] காவல் புண[illegible]பொருந்தின, அசரீரி - உடம்பு விளங்காத ஆகாயவாணி, சேக்கி[illegible]கரு[illegible]க்கிழார்நாயனருக்கு, ஆதிமொழி - (பெரியபுராணம்பாடுதற்கு) முத[illegible]சால்லை, பூரித்து - மகிழ்ச்சி மிக்கு, உரைக்கும் - சொல்லுதற்கிடமான, புலியூரே - புலியூரானது,—நீரை கரந்து வைத்த வேணியார்- கங்காநதியின் வெள்ளத்தை உள்ளடக்கி

வைத்த சடையையுடையவரும், காதினில தாவி கூய் - (தமது) திருச்செவியில தாவிக் கூவிக்கொண்டு, கரம் நவைத்த - (தமதுஇடத்)திருக்கையிற் பொருந்தி ஒலிக்கின்ற, ஏணியார் - மானையுடையவரும ஆகிய சிவபிரான், காப்பு - காக்குமிடமாய்; (எ - று.)

சமணசமயக்கொள்கையைப் பாராட்டத்தொடங்கின அநபாயசோழமகாராஜாவை உய்விக்கும்பொருட்டுச் சிவனடியார்சரித்திரத்தை ஒருபெருங்காப்பியமாகப் பாடுதற்கு அவ்வரசனது முதல்மந்திரியாகிய சேக்கிழார்நாயனார் சிதம்பரத்தையடைந்து சபாநாயகரைத்தரிசித்து, அடியெடுத்துத்தந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, உடனே சபாநாயகரது திருவருளினாலே "உலகெலாமுணர்ந் தோதற்கரியவன" என்று ஓரசரீரிவாக்கு எழ, அதிசவாக்கையே முதலாகக்கொண்டு அவர் திருத்தொண்டர்புராணம் பாடிமுடித்தன ரென்பது கதை. உற்றசரீரி - பெயரெச்சவீறு தொகுத்தல். உற்ற எனப்பிரித்து - சிறப்புப் பொருந்தி என்றுமாம். அசரீரி - தெய்வவாக்கு. தொண்டைமண்டலத்தில குன்றத்தூரில் வேளாளவருணத்தில் சேக்கிழார்மரபிலே உதித்த அருண்மொழித்தேவர், தாம் உதிக்கப்பெற்ற சேக்கிழார்மரபை விளக்கினமையால், அவருக்குச் சேக்கிழார் என்னும் பெயர் உண்டாயிற்று. பூரித்து எனபதைப் பூரிக்க என்னும் எச்சத் திரிபாகக் கொண்டால், பாடிமுடிக்க என்று பொருள்படும. தமது திருச்செவியருகில் ஒலிமையாகக்கூவும்படி சிவபிரான் காதிலேந்தினது, தாருகவனத்து முனிவர்களாலேவப்பட்டு அண்டம்வெடிபட ஆரவாரித்து வந்ததொரு மானையெனக. (௩௭)

௩௮ —(இ - ள்.) வாள் - வாளாயுதத்தையேந்திய, கை - கையையுடைய, அச வாணிபர் - ஆட்டுவணிகர்குலத்தில் தோன்றிய உய்யவந்ததேவநாயனார், சொல் - கூறின, மா நூலினை - சிறந்ததொரு சைவசித்தாந்தசாஸ்திரத்தை, படி கல் பூட்கை - படியிலுள்ள கல்யானை, எடுக்க - எடுத்துத்தர, கொள் - (அதனை யாவரும்) அங்கீகரித்தற்கிடமான, புலியூரே - புலியூரானது,—தாள் கமலம் போது உளவன் - நாளத்தையுடைய தாமரைமலரில உள்ளவனான பிரமனும், நத்தன - சங்கத்தையுடைய திருமாலும், புருகூதன் - இந்திரனும், (என்னும் இவரால்),போற்றும்- துதிக்கப்படுகிற, அந்தி போது உள வனத்தன் - மாலைப்பொழுதுபோலுள்ள செந்நிறத்தையுடைய சிவபிரானது, புரி - நகரமாம; (எ - று.)

சிதம்பரத்திலிருந்த திருக்கடவூருய்யவந்ததேவநாயனார், தமதுஞானாசாரியராகிய உய்யவந்ததேவநாயனாரால் உரைக்கப்பட்டதும் சைவசித்தாந்தசாஸ்திரம் பதினான்கினுள் முற்பட்டது மான திருவுந்தியாரென்னும் நூலின உட்பொருளை விளக்கும்பொருட்டுத் தாம் ஒருநூலியற்றிச் சபாநாயகர்சந்நிதானத்தில் வாசிக்கத்தொடங்கும்பொழுது, 'சந்நிதானத்தின் படியிலுள்ள கல்யானை இந்நூலை யெடுத்துவைத்தால்மாத்திரமே இதனைவாசிக்கத்தகும்' என்று தில்லைவாழந்தணர்முதலியோர் கூற, நாயனார் அதற்கு உடன்பட்டு அக்கல்யானைமேல் நூலைவைக்க, அவ்யானை உயிர்பெற்று எழுந்து தன்மேல்வைக்கப்பட்ட அத்திருநூலைத் துதிக்கையாலெடுத்துப் படியின்மேல்வைத்து அதன்தெய்வத்தன்மையைவிளக்கி அந்நூலைஅனைவரும் அங்கீகரிக்கும்படி செய்த தென்றும், அதனால் அந்நூலுக்குத் திருக்களிற்றுப்படியாரென்று காரணப்பெயர் வந்த தென்றுங் கதை. அஜம் - ஆடு. வாணிபம் - வியாபாரம்; வாணிஜ்யம்என்னும் வடசொற் சிதைவு. 'பூழைக்கை' என்பது, ஐகாரங்கெட்டு ழகரம் டகரமாத்திரிந்து பூட்கையெனநின்றது; துவாரத்தையுடைய துதிக்கையை யுடைய தெனப் பொருள்படுகிற வேற்றுமைத்தொகையன்மொழி. அத்தன் எனப் பதம்பிரித்து - பிரமனது

தந்தையானை திருமாலென்று உரைப்பாருமுளர். புருகூதனென்னும் வடசொல் - புருஎன்னும் அசுரனைக் கொன்றவனென்றும், வேள்வியில் அழைக்கப்படுபவனென்றும் பொருள்படும். அந்தி - ஸந்த்யா என்னும் வடமொழித் திரிபு; இது - இங்கே, சிறப்பாய், மாலைச்சந்தியை யுணர்த்திற்று. இனி, அந்தி - (பகற்பொழுதின்) அந்தமாகவுள்ளதென மாலைக்கால மாகலாம. அந்திப்போது உளா வன்னத்தன் என்றது - செவ்வானம்போன்ற திருநிறமுடையவனென்றபடி. 'அந்திவண்ணன்' என்று சிவபிரானுக்கு ஒருதிருநாமம். வனம் - வர்ணம்; வடசொற்சிதைவு. (௫௮)

௫௯.—(இ - ள்.) ஆசை எட்டினுக்கு இறையும - எட்டுத்திக்குகளுக்குத் தலைவரான (இந்திரன் முதலிய) திக்குப்பாலகர் எண்மரும், ஆசை எட்டி - அன்பு மிகுந்து, ஆசை விட - (தமது) மலக்குற்றத்தை ஒழியுமாறு, பூசை இட்டு - (சிவபிரானைப்) பூசனை செய்து, போற்றும் - துதித்தற்கிடமான, புலியூரே - புலியூரானது,—பேச எட்டா - (தமது அருமையெடுத்துப்) பேசுதற்குமுடியாத, வேத அந்தர் - வேதமுடிவின்பொருளாகவுள்ளவரும், உம்பர் அமர் விண் நாடு அளந்த - தேவர்கள் வசிக்கின்ற சுவர்க்கலோகத்தை யளாவியுயர்ந்த, நெல்லை - திருநெல்வேலியிலுள்ள, வே - மூங்கில்கள், தாம் தரும் - தாம் பெறப்பெற்ற, பரமர் - சிறந்தகடவுளு மாகிய சிவபிரானது, வீடு - இருப்பிடமாம்; (எ - று)

அஷ்டதிக்பாலகர்களும தில்லையில் தத்தம்திசையெல்லையிலிருந்து சிவபிரானைப்பூசித்துக் குறைதீர்ந்து பேறுபெற்றன ரென்பது கதை. ஆசு - குற்றம். ஆசையெட்டி ஆசைவிட என்றது-முரண்விரோதத்தொனி. ஆசைவிட என்பதற்கு-தம் ஆசைதீர வென்று உரைப்பாருமுளர். பூசை-பூஜா என்னும வடசொற் றிரிபு. பேசவெட்டா என்பதற்கு - சொல்லுதற்கரிய சிறப்பையுடைய என்று முரைக்கலாம். விண்ணுடளந்த வே என இயையும். எல்லாமழியும் பிரளயகாலத்தில் தமக்கும்அழிவுநேரிடுமென்று கவலையுற்று வேதங்கள் பலநாள் சிவனைக்குறித்துத் தவம்புரிந்து அவரது தரிசனத்தைப்பெற்று 'பிரளயகாலத்தில் தேவரீர் தாமிரசபையில் நின்று செய்யுந் திருநடனத்தை நாங்கள் தரிசிக்கவேண்டும்; பிரளயத்திலுமழிவில்லாத அத்தலத்தில நாங்கள் மூங்கிலாய்நின்று எப்போதும் நிழலைச்செய்ய, நீர எங்களிடம் முத்தாய்த்தோன்றி எங்களுக்குப் பிள்ளையு மாகவேண்டும்' என்று வரங்கேட்க, கடவுள் அதற்கிணங்கித் திருநெல்வேலியில் வேணுவனத்தில் மூங்கில்முத்தாகி அம்மூங்கிலின்கீழ் எழுந்தருளியிருக்கின்றன ரென்பது கதை. "அரியிறந்த தன்று தூணி லரனும் வேயி லாயினன்" என்றார் வில்லிபுத்தூராரும். நெல்லை - நெலவேலி; மரூஉமொழி. தாம்-அசை. வேய் என்பது வே என விகாரப்பட்டது; சிந்தாமணியில் பேய் எனபது பே என நின்றாற்போல. (௫௯)

௬௰.—(இ - ள்.) சூரியனும்—, பச்சை துழாய் முகிலும - பசுநிறமான திருத்துழாய்மாலையையணிந்த மேகம்போற்கருநிறமுடைய திருமாலும, தென் பூருவ திக்கில் - தென்கிழக்குத்திசையிலே, பூசனை செய் - பூசைசெய்தற்கிடமான, புலியூரே - புலியூரானது,—கூரிய வேல் - கூர்மையையுடைய வேலாயுதத்தை யேந்திய, ஆறு முடி குமரனால் - ஆறுதிருமுடிகளையுடைய முருகக்கடவுளினால், உபதேசம பெறுவான் - (பிரணவப்பொருளின்) உபதேசத்தைப் பெற்றவனும், ஆறு முடிக்கும் - கங்காநதியை(ச்சடையில்) தரித்தருளின, அரன் - அரனென்னுமொருதிருநாமமுடையவனு மாகிய சிவபிரான், ஆர்வு - விரும்பியெழுந்தருளியிருக்குமிடமாம்; (எ - று.)

ஒருகாலத்தில் பிரமன்முதலிய தேவர்களனைவரும் வந்து சிவபெருமானைத்தரிசித்துக் கைலாசத்தினின்று மீண்டுசெல்லும்பொழுது, அங்கிருந்த முருகக்கடவுளைப் பிரமனொழிந்த பலதேவர்களும் வணங்கிச்செல்ல, பிரமன்

மாத்திரம் அச்சிவகுமாரனைச் சிறுபிள்ளையென்று கருதி அலட்சியஞ்செய்து வணங்காதிருப்ப, அக்கடவுள் அவ்வயனுக்கு அறிவுவருவிக்கவெண்ணி அவனைநோக்கி 'பிரணவமந்திரத்துக்குப் பொருள் சொல்வாய்' என்ன, அவன் அதுகூறத்தெரியாது மயங்க, குமாரக்கடவுள் 'பிரணவத்துக்குப் பொருளறியாதவன் படைப்புத்தொழிலை நடத்தத்தக்கவனல்லன்' என்றுசொல்லி அயனைத் தலையிலே வலியக்குட்டிச் சிறையிலிட, சிவபிரான் தான் சென்று குமாரனுக்கு நல்வார்த்தைகூறி அயனைச் சிறையினின்று விடுவித்தபின், குமாரனையெடுத்து மடியின்மீது வைத்து உச்சிமோந்து 'குழவீ! பிரணவப்பொருள் உனக்குத் தெரியுமோ? தெரியுமாயின் சொல்லாய்' என்ன, முருகமூர்த்தி 'அது இரகசியமாகவன்றி வெளிப்படையாக உரைக்கத்தகாதது' என்று கூற, உடனே சிவபிரான் செவிதாழ்த்துக்கொடுத்து அதனைக்கேட்டுஆனந்தித்தனரென்பது கதை. உமையையன்றுப் பயந்தபெயர், வகாரப்பட்டு ஐகாரச் சாரியைபெற்றுப் பகைக்கென்றுநின்றது. குமாரம் - குமாரீ என்னும் வடசொற்சிதைவு. முதிர்-வயதையுடையபெயர். (சo)

சக —(இ - ள்.) கௌட - சிறப்பாதலால், கவுடர் கோன் - கௌடதேசத்தார்க்கு அரசனான இரணியவர்மன், செம்பூ சாம்பூநதத்தால் - சிறந்த பொன்னினால், மேலை விலகும் புரை ஆலயங்கள் - மேலுலகங்களிற்பொன்மயமான தேவலோகத்தை நடமாடும் உயர்ந்த ஆலயங்களை, செய்யும் - செய்தற்கிடமான, பல்புரை - ... — ஞானசம்பந்தர் அத்தர் - திருஞானம் பொருந்திய சம்பந்தமூர்த்திநாயனார்க்குத் தந்தையானவரும், தராதலம் எல்லாம் புணரும் சம்பு - எல்லாவுலகங்களிலும் கலந்த சம்புவென்னுந் திருநாமமுடையவரும், அகாரந்தர் - ஆகாயவடிவமாயுள்ளவருமாகிய சிவபிரானது, தலம் - இடமாம்; (எ - று.)

கௌடதேசத்தரசனான இரணியவர்மன் தந்தைகட்டளைப்படி தில்லையையடைந்து சிவகங்கையில் மூழ்கி உடம்பிற்குறைதீர்ந்து பொன்னுருப்பெற்று இரணியவர்மனெனத் திருநடனந்தரிசித்துத் தனநாட்டைவிட்டுச் சோழநாட்டையாண்டு திருவம்பலம் முதலிய திருப்பணிகள் பலவற்றைச் சுவர்ணமயமாகச் செய்வித்தனனென்பது கதை. ஆலயம் - திருக்கோயில். கவுடர் - முதற்போலி. சாம்பூநதம் - நால்வகைப்பொன்களுள் ஒன்று; மற்றவை - ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம் என்பன. மேருவிலுள்ளதொரு நாவன்மரத்தின்கனிகளின் சாரமாகப்பாயுஞ் சம்புநதியிற் பிறத்தலால், சாம்பூநதமென்று பெயர்; "நாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழை" என்பர் நக்கீரதேவரும். சீகாழியில் திருஞானசம்பந்தர் மூன்றும்பிராயத்தில் தமது தந்தையாராகிய சிவபாதவிருதயர் ஸ்நானம்பண்ணுதற்குப் போம்போது தாமுங் கூடச்சென்று அவர் தீர்த்தத்தில் மூழ்கியபொழுது அவரைக்காணாமல் கதறியழுது சிவபிரானுடைய திருத்தோணிவிமானத்தைப்பார்த்து 'அம்மே! அப்பா!' என்று அழைக்க, சிவபிரான அக்குழந்தையினிடம் தந்தைபோல அன்புடையவராய் உமாதேவியைக்கொண்டு அக்குழந்தைக்குப் பாலூட்டி ஆட்கொண்டருளின ரென்பது கதை. சிவபிரானது இளையகுமாரராகிய சுப்பிரமணியமூர்த்தியே சம்பந்தமூர்த்தியாயின ரென்பது நூற்கொள்கையாதலாலும், சிவபிரானைச் சம்பந்தரத்த ரென்னலாம். தராதலம் - பூமியினிடம். தராதலமெலாம் புணருஞ் சம்பு என்றது, யாதாமொன்றையறியுமிடத்து உடலுமுயிருந் தன்னில்ஒன்றுபட்டுஅறியும்அறிவைப்பிரிக்கவொண்ணாதாற்போலவும், யாதாமொன்றைக் காணுமிடத்துக் கண்ணிளொளியும் ஆதித்தப்பிரகாசமுந் தன்னிலொன்றுபட்டுநிற்குந் தன்மையைப் பிரிக்கவொண்ணாதாற்போலவும், சிவனும் பிரபஞ்சமுந் தன்னிற்பிரித்தற்கரியதாய் அநந்யமாயிருக்கு மாதலின். பஞ்சபூதங்களுக்குரிய சிவஸ்தலமைந்தனுள்

சிதம்பரம் ஆகாசலிங்கஸ்தானமாதலால், அந்தரத்தர்தலம் என்றது. கவுடர்கோன் செய்யும் - ஏவுதற்கருத்தா. (௪௧)

௪௨.— இ - ள். பண்டு - முற்காலத்தில், வாய்ந்த நடத்தால் - (சிவபிரான்) மேல்கிழாகச் செய்த திருநடனத்தினாலே, உக்கிர சாமுண்டி - பயங்கரத்தன்மையுடைய காளிதேவியும், நாணம் புக்கு - வெட்கத்தையடைந்து, வந்தித்து - வணங்கி, ஏத்தப் - துதித்தற்கிடமான, புலியூரே - புலியூரானது,— அக்கு வடம் கழுத்து உளவன் - ருத்திராக்ஷமாலையைக் கண்டத்திலே தரித்துள்ளவனும், வாரியில் மீனுக்கு ஆ - கடலினுள்ளதொரு மீனைப்பிடித்தற்பொருட்டாக, வலை - வலையை, அங்கு - அக்கடலிலே, அழுத்து - அழுந்தச்செய்த, உளவன் - சூழ்ச்சியையுடையவனுமாகிய சிவபிரானது, வாழ்வு - இருப்பிடமாம்; (எ - று)

மகிஷாசுரசங்காரஞ்செய்து காவிகூறிருந்த பத்திரகாளியைப் பயங்கரஞ் செய்விக்கும்பொருட்டுச் சபாநாயகர் பலவற்றாடனஞ்செய்ய, அவளும் தோல்வியடையாமல் அப்படியே உடன்கூடிவர, பின் சுவாமி தமது குண்டலங் கழன்றதைக் காலிலே தானே சேர்ந்தபடி ஊர்த்துவ பாதமாக நடனஞ் செய்ய, அவளும் அப்படியாடுதற்கு நாணித் தோல்வியுற்றனளென்பது முற் பாதியின்கருத்து. சர்வசங்காரகாலத்து ரௌத்திரமுடைய காளி நாணத்தக்கவளென்று இருந்ததலால், உக்கிர சாமுண்டியென்றோர் பெண்மை - உயர்வுசிறப்பு. ஊர்த்தம் - ஊர்த்துவம் என்பதன் விகாரம். நாணம் - தோற்புகழ்ச்சியா; அம் - விகுதி. அக்கு - அக்ஷமெனும் வடசொற்றிரிபு. வலயம் - வலயம்; இடைப் போலி. அக்குவலயம் - எலும்புமாலையுமாம். பாண்டிநாட்டில் துறைப்பாக்கமென்னுங் கடற்கரைச்சேரியில் வாழுகின்றவொரு வலைஞர்தலைவன், பலநாளாகப் பலவாறுவலைவீசி முயன்றும் பிடிக்கப்படாததொரு கடலினுள்ளபெருமீனைப் பிடிப்பவனுக்குத் தனமகளை மணஞ்செய்துகொடுப்பதென்று நிச்சயித்திருக்க, சோமசுந்தரக்கடவுள் தாமொருவலைஞருருக்கொண்டுசென்று யாவரும் வியக்கும்படி வலையைவீசி, தம்மால் முன்னேசபிக்கப்பட்ட நந்திதேவரது வடிவமாகிய அம்மீனைப் பிடித்துக்கரைமேறபோகட்டுவிட்டுத் தமதுசாபத்தாற்பிறந்த உமாதேவியின் வடிவமான அம்மகளை மணஞ் செய்துகொண்டாரென்பது கதை. ஒருகாலத்தில் உமாதேவி சிவபிரான செய்த உபதேசத்தையும், அக்காலத்தில் நந்திதேவர் சிவபெருமானசெய்த கட்டளையையும் பராமுகஞ் செய்ததனால் சாபமேற்றனரென்க. உளவு - தந்திரம். (௪௨)

௪௩.—(இ - ள்.) மா தவத்து - சிறந்த (சிவஞானமாகிய) தவப்பயனையுடைய, மாணிக்கவாசகர் - திருவாதவூரடிகள், மன்றுள - கனகசபையிலேயுள்ள, ஒளிக்குள் - சோதியினுள்ளே, பூதியத்தோடு - பஞ்சபூதசம்பந்தத்தாலாகிய (தமது) மானுடசரீரத்துடனே, ஒன்றும் - கலப்பதற்கிடமான, புலியூரே - புலியூரானது,—பூ கேதகை தாமம் கழித்து - அழகிய தாழைமலரை அணியாதுநீக்கி, அளி பார்தனொடு அண்டம் - குளிர்ச்சியான நிலவுலகத்தோடு பலஅண்டகோளங்களையும், ஊழிதொறும் - யுகாந்தகாலந்தோறும், தாம் அங்கு அழித்து - தாமே அவ்விடத்தில் (ருத்திரரூபியாய்ச்) சங்கரித்து, அளிப்பார் - (பிரம விஷ்ணுரூபியாய் மீட்டும்) படைத்துக் காப்பவராகிய சிவபிரான, சார்பு - சேர்ந்திருக்குமிடமாம்; (எ - று.)

மாணிக்கவாசகசுவாமிகள்செய்த திருவாசகம் திருக்கோவையார் என்னுந்திருமுறைகளைச் சபாநாயகர் அந்தணவடிவமாய் எழுதிமுடித்தபின்பு, தில்லைவாழந்தணர்கள் மாணிக்கவாசகரைத்தரிசித்து 'இத்திருமுறையினுள்ளபொருளை எமக்குத்தெரிவித்தருளல்வேண்டும்' என்றுவேண்ட, சுவாமிகள் 'நாம் உணர்த்துவோம் வாரும்' என்று அவர்களையழைத்துச்சென்று

திருவம்பலஞ்சேர்ந்து 'இவ்வசனை யெல்லாம் நமக்கே இதற்குப்பொருளாவார்' என்க்காட்டி அவருக்கன்றோர் பாவநாசனை, சோதிப்பட்டோதியாய் இரண் டாக்கவெதனை வெளிட்டு நோதாதி திபேர்கலந்த. இவர் வாய்மொழிகள் மாணிக்கம் போலச் சிவபிரானால் எடுத்துக்கைக்கப்பட்டமையின், மாணிக்கவாசகர் என்றிருநாமம். பூசைப்பாத்திரமான்ற, புநிடம்; வடமொழித்தத்திதாந்த நாமம். தமதுகையிலே அனற்பிழம்பு வடிவமாய்நின்ற சிவபிரானது அடிமுடிகளைத் தேடத்தொடங்கிய பிரமவிஷ்ணுக்களுள், அன்னப்பறவை வடிவமாய் முடியைநோக்கிச் சென்றுபார் பிரமன் அதன்காணாதிளைத்து, அடவோறது அத்திருமுடியினின்று வீழ்கின்ற தாழமலரைநோக்கி, தான் முடியைக்கண்டதாகப் பொய்ச்சாட்சி கூறவேண்டுமென்று இரக்க, அம்மலர் அவ்வாறு பொய்ச்சாட்சி கூறினமையின், அதனை இன்று பூசிப்பதில்லையென்று கடவுள் கூறியிட்ட தென்பது கதை. தாழமென்னும் மாலையின் பெயர், இங்கே பூக்குக்காகியவாகுபெயர். (௬௩)

௬௪ —(இ - ள்) நாடப்படுவது - (யாவரும்) விரும்பத்தக்க, மாசிமகம் நாள் - மாசிமாதத்து மகநக்ஷத்திரத்தினன்று, வணிகன் - ஒருவைசியனது, பாசம் வினை பூட்டு - அவ்விஸ்காரியமான கருமத்தின் பந்தத்தை, அறுத்து - ஒழித்து, ஆளும் - (அவனை) அடிமைகொண்ட, தென் புலியூரே - அழகியபுலியூரானது,— மாட்டிலொரு நாயகர் - இடபத்தின்மேல் எழுந்தருளுகிற பெருமையையுடையவரும், அப்பா அவனை - (எல்லாவுயிர்களுக்குந்) தந்தையாரைப்போலபவரும், ஏட்டுத்தனில் கோவை எழுதிய சாமபாளூர் - ஏட்டுச்சுவடியிலே (மாணிக்கவாசகரது) திருக்கோவையாரென்னும் நூலையெழுதியருளின திருக்கையையுடைய (யாவரினும்) மேம்பட்ட கடவுளுமாகிய சிவபிரானது, இல - இடமாம்; (எ - று.)

பாதகனாகிய அர்க்கடனென்பானொருவணிகன பலரோடுந் தோணியிலேறி மாசிமகத்தினன்று கடலிற்பாசமறுத்ததுறையில்வருகையில், தோணியுடனமிழ்ந்து தீவினையொழிந்து நற்கதிபெற்றனனென்பது கதை. "அற்கடனென்றோர் பாவி அணிதருவணிகனென்போன், கற்கடமனைய சிந்தைக் காதகனாகமாதத், திறகடலுக்குநாளுற் நிறைதருதுறையிறதில்லை, நற்கடற்படிய முத்திநணவினுலெண்ணிலார்கள்" எனபது கோயிற்புராணம். நாட்டம - நாடுதல, விரும்புதல்: தொழிற்பெயர்; அம் - விகுதி. அப்பு அரனூர் எனப்பிரித்து - (கங்கா) சலத்தை யேந்தின அரனென்னுந்திருநாமமுடையவ ரென்றும பொருள்கொள்ளலாம். (௬௪)

௬௫ —(இ - ள்.) தேசிக நமசிவாயர் - குருநமசிவாயரென்பவர், களிப்பு பெற - பேரானந்தமடையும்படி, செப்பும் நடத்தை - (யாவருஞ்) சிறப்பித்துக்கூறுந் திருநடனத்தை, காட்டும் - (சிவபிரான்) தரிசனங்கொடுத்தற்கிடமான, தென் புலியூரே - அழகியபுலியூரானது,—ஒப்புஅது இலா ஓர் ஏற்றினை - உவமையற்றதொரு இடபத்தை வாகனமாகவுடையவனும், மறையான் - வேதங்களைக்கூறினவனும், உள்ளத்து இரங்கும் அடியோர் ஏற்றினால் - மனத்தில்அன்புகனிந்துஉருகுகிற அடியவர்கள் (ஒருஅர்ச்சாவிக்கிரகத்தில்) ஏறியருளப்பண்ணினால, மறையான் - (அங்குத்தன்னை) மறையாமற்புலப்படுத்துபவனுமாகிய சிவபிரானது, ஊர் - இடமாம்;(எ-று.)

குருநமசிவாயர் சபாநாயகருளால் அவருக்குச்சாத்தும்பொருட்டுத் திருச்சிலம்புங்கிண்கிணியுஞ் செய்விக்கத்தொடங்குகையில், தில்லைவாழந்தணர்கள் 'இவற்றைச்சாத்தினால் எம்பெருமான் திருநடனஞ்செய்வரோ' என்று பராமுகமாகச்சொல்ல, நமசிவாயர் அவ்வணிகலங்களைச்செய்வித்து அச் சாத்தித் தில்லைவாழந்தணர்களை வருவித்து "அம்பலவா வோர்க்காலாடினாற் றாழ்வாமோ, வும்பரெலாங் கண்டதெனக் கொப்பாமோ—சம்

புலே, வெற்றிப் பதஞ்சலிக்கும் வெம்புலிக்கு நத்தியென, வொத்திப் பத ஞ்சலிக்குமோ” என்று கடவுளை நோக்கிக்கூற, உடனே சிவபிரான் திருநட னஞ்செய்தருளின ரென்பது கதை. நடம் - வடசொல். மறையான - வேத ங்களிற் புகழப்படுபவ னென்றுமாம். மறப்பிலை - ஆனந்தாண்டவஞ்செய்தா லென்ற படி. அடியோர் ஏறப்புலை மறையான் என்பதற்கு - அடியவர்கள் (தம்மைக் காக்கும்பாரத்தைத் தம்மீது) வைத்தால் (அதனை) மறக்காதவ னென்றும் உரைகொள்ளலாம். இனி, ‘ஏத்திடும்’ என்பது யமகப்பொருத்தத்தின் பொருட்டுத் தகரம் நகரமாத்திரிந்த தெனக்கொண்டு, துதித்தாலென்று உரைப்பாரு முளர். (௬௫)

௬௬.—(இ - ள்.) நந்தி முதல தேவர் - நந்திதேவர்முதலிய தேவ கணங்களும், பல ஞான முனிவோர் - பலஞானமுடைய முனிவர்கள்பல ரும், பூசை - சிவபூசையை, புரிந்து மகிழ்ந்து - மனமகிழச்செய்து, ஏத் தும் - துதித்தற்கிடமான, புலியூரே - புலியூரானது,—தம தனையைக்கு - தமதுபெண்ணுக்கு, ஆம் மரு கேசம் - அழகாகிய நறுமணத்தையுடைய கூந்தலை, சரிப்பார் - அரியச்செய்தவரான மானக்கஞ்சாறநாயனாரது, அன் பினுக்கு - பத்தியைநோக்கி உவந்து அதற்காக, முத்தி இட்டோர் - (அவர் க்குச்) சிவகதி யருளியவரும், ஆ மருங்கே சஞ்சரிப்பார் - எருதினிடத்திலே றிச் சஞ்சரிப்பவரு மாகிய சிவபிரானது, ஆலயம் - தங்குமிடமாம்; (எ - று.)

நந்திமுதலதேவர் - நந்தியாகிய தலைமைத்தேவரென்றும், பலம் ஞா னம் எனப்பிரித்து - எல்லாப்பயன்களையுந் தருந் தத்துவஞான மென்றும் பொருள்கொள்ளலாம். கஞ்சாறூரில் வேளாளர்குலத்தில் தோன்றிய மா னக்கஞ்சாறநாயனார் சிவனருளாலொருபெண்ணைப்பெற்று ஏயர்கோன்கலி க்காமநாயனாருக்கு விவாகஞ்செய்துதர நிச்சயிக்கப்பட்ட சுபதினத்திலே பரமசிவன் ஒருமகாவிரதியடிவங்கொண்டு மானக்கஞ்சாறநாயனார்வீட்டுக் குச்சென்று அங்குத்தம்மைவணங்கியெழுந்த தமனப்பெண்ணினுடைய கூந்த லைப்பார்த்து ‘இப்பெண்ணின் தலைமயிர் நமக்குப் பஞ்சவடியாக மார்பிலதரிக் கப்படுதற்கு உதவும்’ என்று உகந்துகூற, கஞ்சாறர் உடனே உடைவாளை யுருவி அக்கூந்தலை அடியோடு அரிந்துகொடுக்க, கடவுள் மகாவிரதிவடிவத் தையொழித்து நிஜரூபத்தோடு தோன்றி நாயனாருக்குத் தம்முடைய சன்னி தானத்தைக் கொடுத்து மறைந்தன ரென்பது கதை. மருக்கேசமென்பது மருகேசமென்றும், மருங்கே என்பது மருகேயென்றும் தொடையொற்றுக் கெட்டு நின்றது, யமகத்தைநோக்கி. ஆ - இங்கே பசுவின் ஆணைமை குறித் தது. சரித்தல் - சரியச்செய்தல. (௬௬)

௬௭.—(இ - ள்.) வன்பர் புலையோர் எனினும - கொடும்பாவிகளும் நீச சாதியருமாயினும், வாசம் செயில - (தனை எல்லையில) வசித்தல்செய்தால், (அதுமாத்திரத்தைக்கொண்டு), அவர்தம புல பிறவி மாற்றும் - அவர்களது இழிவான பிறப்புக்களை யொழிக்கவல்ல, புலியூரே - புலியூரானது,—அன்பு திகழ் வத்திரங்கள் ஐந்தார் - (அடியார்களிடத்து) அருளவிளங்குகிற ஐந் துதிருமுகங்களையுடையவரும், வனத்து - தாருகவனத்திலுள்ள, இருடி மாதர் - முனிவர்மகளிரது, இடை - அரையிலுடுத்துள்ள, வத்திரம் - ஆடை களை, களைந்தார் - நீக்கியருளினவரு மாகிய சிவபிரானது, மனை - இருப்பிட மாம்; (எ - று.)

ஐந்துதிருமுகங்களாவன - ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம என்பன. இவற்றுள், ஈசானம் - ஊர்த்துவமுகம், தத்புரு ஷம் - கிழக்குமுகம், அகோரம் - தெற்குமுகம், வாமம் - வடக்குமுகம், சத்தியோசாதம் - மேற்குமுகம். ஐந்துமுகங்களையுமுடைமை, சதாசிவ மூர்த்திக்கு உள்ள தென்க. மூன்றுமடியில், வத்திரம் - வக்த்ரம; நான்கா

[illegible] வடமொழித் [illegible] இருடி - [illegible] பத்தினி [illegible] கணைகொண்டு கொன்று [illegible] இட - [illegible] [illegible] - சண்ட [illegible] [illegible] ''[illegible] என்றது.

[illegible] - [illegible] குலத்திலே தோன்றிய [illegible] [illegible] பதிவ்வாசாரியரைக் [illegible] மறைபடிந்த [illegible], [illegible] [illegible] தகிடமான, [illegible] [illegible] [illegible] யையுடைய [illegible], பனி மதி [illegible] [illegible] - சிவானமா [illegible] [illegible] இயப [illegible]

[illegible] [illegible] [illegible] கால் [illegible] [illegible] [illegible] கவில், [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] முதலி [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] (சஉ)

[illegible] — (இ - ள்) [illegible] - [illegible] தேசங்களில், இ[illegible]நேரா - மாண [illegible] [illegible] - [illegible] [illegible] - அத்திலேயே [illegible], போட்டிட - கொண்டுவந்தே போகட்டமாத் திரத்தில். [illegible] -(அ[illegible] ருடையவர்களது) உயிர்கள், வீடு எய் தும் - முத்தியைப் பெறும் மகிமையையுடைய, [illegible] - [illegible],— கோடு [illegible] வாசவன் -(நான்கு) தந்தங்களையுடைய (ஐராவதமென் னும்) வெள்ளையானையை (வாகனமாகக்கொண்டு) ஏறிநடத்துகிற இந்திர னும், அசத்திலன் - ஆட்டுக்கடாவாகனத்தையுடைய அக்கினியும், வாழ்த்தி [illegible]ம் - துதித்து வணங்கப்பெறுகிற, சரணம வாசம் வனசத்தினன் - பரிமளத்தையுடைய தாமரைமலர்போன்ற திருவடிகளையுடையவனாகிய சி வபிரானது, வாழ்வு - தங்குமிடமாம்; (எ - று.)

இறந்தவர்களுடைய எலும்புகள் இந்நதியிற் போகட்டமாத்திரத்தில் அவ்வி றந்தவர் முத்திபெறுவ ரென்பதும், தேவேந்திரனும் அக்கினிதேவனும் அத்திருப்பதியிற் சிவபூசைசெய்து பேறுபெற்றன ரென்பதும் இதிற்குறித்த வரலாறுகள். ஆன்மா - ஆத்மா; வடசொற்றிரிபு. வாசவன் - அஷ்டவசுக்க

ளுக்குத் தலைவன்: அல்லது, செலவமுடையவன்; வஸா - தேவர்களில் ஒரு வகையார் : அல்லது, ஐசுவரியம். வாசவனசச்சானைத்திலுள் என விகுதி பிரித்துக் கூட்டுக. "அன்னியதலத்துட்பொன்றிரேறிவான், பற்றாநாள்கோன்ன டத்தலத்திற்புதைக்கில்லிலேசெட்முத்திபெறுவான்றே" எனபது சிதம்பர புராணம். (ருகூ)

ருo.—(இ - ள்.) ஏழ் உலகு ஏத்தும் - ஏழுலோகத்துயிர்களுந் துதிக்கத்தக்க, ஒன்பான் இலிங்கம் பிரதிட்டை - ஒன்பதுசிவலிங்கப்பிரதிஷ்டை களை, பூழியர் கோன் - பாண்டியர்மரபிலவந்த ஓரரசன், செய்த - செய்தற் கிடமான, புலியூரே - புலியூரானது,—வாழ் சிவலோகத்தர் - (என்றும்) அழியாதநிலைபெறுகிற சிவலோகத்தையுடையவரும், கனல் சிபடையார் - மழுவாயுதத்தையுடையவரும், ... உன்னாத நெஞ்சகத்தார்கண் - (தம்மை) விரும்பித்தியானியாத மன ... பவர்களிடத்து, இச்சிப்பு அடையார் - விருப்பத்தைப்பொருந்தாதவரு ... சிவபிரானது, காப்பு - பாதுகாக்குமிடமாம்; (எ - று.)

ஒருபாண்டியநாட்... ஒன்பதுசிவலிங்கப்பிரதிஷ்டை செய்து சிறப்புப்பெற்றான ... . பிரதிட்டை - ப்ரதிஷ்ட்டா என்னும் வடசொற்றிரிபு; மந்திரபூர்வகமாகச் சடங்குமுடித்துத் தாபித்தல். பூழியர் - பாண்டியர். உன்னாத - நினையாத (ருo)

ருக.—(இ - ள்.) ஆன பல சத்திரத்தும் - பொருந்திய அநேகசத்திரங்களிலும், போனகம் பாலிக்கும் - உணவைக் கொடுக்கப்பெற்ற: ஆழ் கமலம் வாவியினும் - ஆழ்ந்த தாமரைத்தடாகங்களிலும், போனகம்பு ஆர்க்கும் - சௌறசங்குகள் ஒலிக்கப்பெற்ற: புலியூரே - புலியூரானது,—பான் எனும் தற்போதம் ஒழிவு ஆயினோர் - (தானெ...) யானென்கிற சீவபோதம் [அகங்காரம்] ஒழி... , பாதி - மனத்திலே, சுடர் - விளங்குகிற, ... யானவரும், வேதம் மொழி வாயினர் - நான்கு வேதங்களையும் சொல்லுகின்ற நான்குதிருவாயையு முடையவரு மாகிய சிவபிரானது, வீடு - தங்குமிடமாம; (எ - று.)

போனகம் பாலிக்கும் என்றது, வேறு வேறுவகையாகப் பிரிந்து இருபொருள்பட்ட தனால், பிரிமொழிச்சிலேடையணி. சத்திரம் - போசனவிடம். தற்போதம் - வடசொல; தத் - ஜீவன், போதம்-அறிவு. வேதமொழிவாய்- சத்தியோசாத மொழிந்த நானகு மென்பர் (ருக)

ருஉ.—(இ - ள்.) ஓதிமமும் - அன்னப்பறவைகளும், போது அகமே நிற்கும் - தாமரைமலரினிடத்தே தங்கப்பெற்ற: வேந்தர் உலவும் நெடு வீதிகளும் - அரசர்கள் சஞ்சரிக்கின்ற பெரிய இராசவீதிகளும், போதகமே நிற்கும் - யானைக்குட்டிகள் நிற்கப்பெற்ற: புலியூரே -புலியூரானது,—மாதவர்க்கு வீடு அளித்தார் - பெருந்தவமுடைய சிவயோகிகளுக்கு முத்தியுலகத்தைத் தந்தருளினவரும், மாட்டிஞர் - இடபத்தை வாகனமாகவுடையவரும், வேணி புயத்து - (தமது) சடையின்மேலுந் தோள்களின்மேலும், அளி - வண்டுகள்மொய்த்தற்கிடமான, இதழி ஏடு - கொன்றைமலர்களின் இதழ்களாலமைந்த, ஆர் தார் - நிறைந்தமாலையை, மாட்டினர் - அணிந்துள்ளவரு மாகிய சிவபிரானது, இல - இடமாம்; (எ - று.)

வேணிபுயம் - உம்மைத்தொகை. புயத்து - ஏழனுருபுத்தொகை; அத்து - சாரியை. ஆர் - ஆத்திமலரென்றுங் கொள்ளலாம். 'புயமீதிதழ்' என்றும் பாடம். ஏடென்னும் பூவிதழின்பெயர் பூவுக்குச்சினையாகுபெயரென்றுங் கொள்ளலாம். மாதவர்க்குவீடளித்தார் என்பதற்கு - திருமாலுக்கு நற்கதி தந்தவரென்றும், வேணி புயத்தார் என எடுத்து - சடைதொங்குந் தோள்களையுடையவ ரென்றும் பொருள்கொள்ளலாம். (ருஉ)

௫௩.—(இ - ள்.) மா தயங்கு சோலைகளும - பெருமைவிளங்குகிற சோலைகளும், மகிழ் - மகிழமரத்தினது, பூ தழை கப்பு - மலர்களையுந்தழைகளையுமுடைய கிளைகள், ஆடும் - அசையப்பெற்ற; வந்த அப்பர்தாமும்-(தரிசிக்க வந்த திருநாவுக்கரசுநாயனாரும்,மகிழ் பூத்து அழைக்க-(சிவபிரான்)மகிழ்ச்சியுற்று(த்தமமைப் பாடுதற்கு) அழைத்தருளும்படி, பாடும்-(தமிழ்ப்பதிகம்) பாடுதற்கிடமான; புலியூரே - புலியூரானது,—வாய்த்த - (சிவபத்தி) பொருந்தின, புலியோடு - வியாக்கிரபாதமுனிவருடனே, அ பதஞ்சலியார் - அந்தப் பதஞ்சலிமுனிவரும், உள மகிழ- (தரிசித்து) மனங்களிக்கும்படி, மன்றில் - கனகசபையிலே, நடம் ஆட - ஆநந்ததாண்டவஞ் செய்த நாது, பதம சேர்பார் - (தமது) திருவடி இளைப்புறுதவராகிய சிவபிரானது, ஆர்வு - தங்குமிடமாம; (எ - று)

மா - வண்டென்றும், அழகென்றும், மாப்பொதுப்பெயரென்றும்,மாமரமென்றுங் கொள்ளலாம். அப்பதஞ்சலி- அகரச்சுட்டு பிரசித்தியைக் காட்டிற்று. (௫௩)

௫௪.—(இ - ள்) கஞ்ச பங்கயம் - 'தாமரைமலர்போலுங் கண்களையுடைய, மின்னார் - மின்னலையொத்த மகளிரது, கார் குழலில் - மேகத்தைபொத்த [கரிய] கூந்தலிலும், புட்பம் சாய் சேர் - மலர்கள் மாலைகளாகப் பொருந்தப்பெற்ற; ஆர் தியலில - மாலைப்பொழுதிலும, புள் பஞ்சரம் சேர் - பறவைகள் (தத்தம்) கூடுகளில் அடையப்பெற்ற; புலியூரே - புலியூரானது,—நட்பில் ஏறு - அன்பினுடனே, மெசசி - (தம்மைத்) துதித்து,கும்பிட்டார்- வணங்கின அடியார்களுடைய, மெலிவு - பலவகைத்துன்பங்களையும், ஒழிப்பார் - நீக்கியருள்பவரும், வந்தி இட - வந்தியென்னும மலட்டுக்கிழவி கொடுக்க, இசக்கும - விரும்பியுண்ட, பிட்டார் - பிட்டினையுடையவருமாகிய சிவபிரானது, இடம் - இடமாம; (எ - று.)

புட்பம - புஷ்பம்; வடசொல. பிட்டு - ஒருவகைச்சிற்றுண்டி. வந்தியிடும் பிட்டுக்களை யிச்சித்தது, கரைபுரண்டவைகையாற்றை அடைப்பதற்கு அவளது வேலையாளாகச் சிவபிரான் வந்துஅமர்ந்தபொழுதி லெனக. கஞ்சபங்கயம் மின்னார்- தேனையுடைய தாமரைமலரில் வாழுந் திருமகள் போன்றவ ரென்றுமாம. (௫௪)

௫௫.—(இ - ள்., சார ஒலி நீடு - பொருந்தியஓசைமிக்க, ஆவணமும்- கடைவீதிகளும், கற்பூரமமணந்தனனும் - பச்சைக்கர்ப்பூரத்தின்பரிமளம் மிகப்பெற்ற; தம பதியை மாதரும் - தங்கள்கணவனை மகளிரும், கற்பு ஊர மணந்து உன்னும்-கற்புநிலைமைமிகக்கலந்து(அவனையேதெய்வமாகக்) கருதப்பெற்ற; புலியூரே - புலியூரானது,—பாரினுடன்- பூமியும், ஊதை - வாயுவும், அங்கி - அக்கினியும், அமபு - சலமும, வான் - ஆகாயமும், (ஆகிய பஞ்சபூதங்களினுடைய), உள புறம்பான் - உள்ளிலும் வெளியிலும் உள்ளவனும், மாதர்பக்கல் - ஒருபெண்ணினிடத்து, அங்கு - அக்காலத்தில், தூதை - தூதுமொழிகளை, இயம்புவான் - சொல்லுந்தன்மையனுமாகிய சிவபிரான, தோய்வு - பொருந்துமிடமாம்; (எ - று.)

ஆவணம - ஆபணம்; வடசொல். செய்யுளாதலின், ஐம்பெரும்பூதங்களின்முறை பிறழவைக்கப்பட்டது. சுந்தரமூர்த்திநாயனார் திருவொற்றியூரிலே சங்கிலியாரை விவாகஞ்செய்துகொண்ட சங்கதியைக் கேள்வியுற்று அதிககோபங்கொண்டிருந்த அவரது முதல்மனைவியாராகிய பரவையார், நாயனார் தம்மிடம்வருதற்கு உடன்படாமல 'வந்தால் பிராணத்தியாகம் பண்ணுவேன' என்றுசொல்ல, அதனையறிந்த சுந்தரமூர்த்தி பரமசிவனைத் தியானித்து'பரவையாருடையவீட்டுக்குத் தூதுசென்றருளவேண்டும்' என்று பிரார்த்திக்க, சிவபெருமான் அவார்ச்சனைசெய்கின்ற ஒரு ஆதிசைவ

ந்து வடிவங் கொண்டும் தாமாந்தன்மையையறிதற்கேற்ற திருக்கோலத்தோடும் அர்த்தராத்திரியில் இருமுறை தூதாக நடந்துசென்று சமாதானஞ் சொல்லி அவள்கொண்ட கோபத்தைத் தணிவித்து நாயனாரை அவளிடத்துப் போம்படி அருள்செய்தனரென்பது கதை 'தூதுபக்கல்' என்றபாடத்துக்கு, பரவைநாய்ச்சியாரைத் தூதியென்றது - அவர் திருக்கைலாசகிரியிலிருந்த பார்வதிதேவியாருடைய சேடியரிருவருள் ஒருவராகிய கமலினியென்பவரது அவதாரமாதலாலும், அவர் திருவாரூரில் பதியிலாரெனப்படுகிற உருத்திர கணிகையர் குலத்திற் பிறந்தவராதலாலுமென்க: தூதி - அடியவள், சேடிமகள். தோய்வு - தொழிலாகுபெயர. (௫௩)

௫௪.—(இ - ள்.) மீ தாவு திங்களை - ஆகாயத்திலே தவழ்கின்ற சந்திரனையும், ஆல் பூச் சடைக்கு அம் - ஆலமரத்தின் விழுதுகள்போன்ற சடையில் அடைக்கப்பெற்ற: மீன் பாய் நதி அம் அடைக்கும் - மீன்கள் பாய்கின்ற நதியில் வளர்ந்த வாழைமரங்களையும், பூ தார் அடைக்கும் - பூமாலைகளையும் உடைக்கப்பெற்ற: புலியூரே - பெரும்பற்றப்புலியூரே,—கூடல் நகர் - திருவாலவாய் நகரம்; பரிந்து, பாதம் சிவந்தார் - திருவடி சிவக்க நடந்தவராயும், ஆலவாயினில் - மதுரைப்பதியில், ஓர் போது - ஒருகாலத்தில், பழிக்கு அஞ்சிவந்தார் - பழிக்கு அச்சங்கொண்டுவந்தவராகிய பெருமானது பதி - திருநகரமாம்.

மதுரைமாநகரத்தின்பழமையான எல்லையை அறிவிக்கவேண்டுமென்று வேண்டிய வம்சசேகரபாண்டியனுக்குச் சோமசுந்தரக்கடவுள், தம் கையிலே ஆபரணமாக அணிந்துள்ள நாகத்தை நோக்கி 'இவ்வெல்லையைக் காட்டுக' என்று கட்டளையிட, அது தன்வாலும் வாயும் ஒன்றுபடும்படி வளைந்து அந்நகரைச் சுற்றிநின்று அதன் எல்லையைக் காட்டியதனால் மதுரை - ஆலவாயென்ட பெயர்பெற்றது; ஆலவாய் என்றசொல்லுக்கு - விஷத்தைத் தன்வாயிலுடையதென்று பொருள்: இது - ஹாலாஸ்யமென்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு. அனந்தகுணபாண்டியனகாலத்தில் ஒருபிராமணன் தன்மனைவியோடுங் குழந்தையோடும் பக்கத்திலிருந்த ஊருக்குப் போம்போது வழியிலே ஒருமரத்தினிழலிலே மனைவியையிருக்கச்செய்து தாகத்துக்குத் தண்ணீர் கொண்டுவரப் போய் மீண்டுவந்தபொழுது, மனைவி அம்புதைத்து இறந்துகிடக்கக் கண்டு கலங்கி, அங்கே இளைப்பாறியிருந்த ஒரு வேடனைக் கொலையாளியென்று கருதிப் பிடித்து அரசனிடங் கொண்டுபோய்விட, அரசன் வேடன்மேற் குற்றஞ் சார்த்துதற்கு உண்மையில்லாமையால், சொக்கநாதனைப் பிரார்த்திக்க, அவர் ஆவாலயமண்டபத்தில் அந்தணனோடு மாறுவேடம்பூண்டு ஒருவணிகன் மனையிற் சென்று அங்கேயிருந்தபோது ஆலமரத்தின் இலையிற் பலாருக்குமுன் ஒருவன் எய்துவைத்திருந்த அம்பு காற்றின் விசையால் தற்செயலாய்விழப் பார்ப்பினி இறந்துபோயினளென்று அறிந்து தெளிந்து வேதியனையுந் தெளிவித்தாரென்பது கதை. பெண்கொலைகாரணமாக வேடனுக்கும் அரசனுக்கும் வரும்பழியை யகற்ற அதனைச் சிவபிரான் உண்மையறிய உபாயஞ்சொல்லித் தீர்த்ததனாலே, 'பழிக்கு ஆலவாயினிலோர்போது அஞ்சிவந்தார்' எனப்பட்டது. அஞ்சிவந்தார் என்றது, அசரீரி வாணியாக வந்தெழுந்து விளங்கக்கூறினமையின். இமையோனை - ஹிமயோனை; பனியைச்செய்பவ னென்றுபொருள்; குளிர்ந்தகிரணங்களையுடையவ னென்றுமாம். அரம்பை - ரம்பா என்னும் வடமொழித் திரிபு. (௫௪)

௫௫.—(இ - ள்.) அல் பகல் - இராத்திரியிலும் பகலிலும், சோடு அன்றில் - இணையான ஆணன்றிலும் பெண்ணன்றிலும், அன்பால் - அன்பினால், உம்பர் உக்கும் புறபதிமேல் - தேவலோகமுஞ் சிதைதற்குக்காரணமான [மிகவுயர்ந்த] பனைமரத்தின்மேல், ஆரும் - (பிரியாது) வசிக்கப்பெற்ற: ஆம் தவத்தால் - சித்திபெற்ற தவத்தினாலே, புல்பதி - புலிக்காலையுடையவியாக்கிர

[illegible]ளைவர், [illegible]ருக்கும் மேலாகும் - தேவர்களினும் மேன்மையடை [illegible]; புலியூரே - புலியூரானது,—வெற்பினை ஒருவம் தக்க - மலை [illegible] வில்லாகப் [illegible], அழலை [illegible] - அக்கினி [illegible] பாணவரும், [illegible] - கனகசபையில், எவருக்கும் - யாவருக்கும், [illegible] - தாமரை மலர்போன்ற (தமது) திருவடிகளை [illegible] தரிசனத் தருபவருமாகிய சிவபிரானது, [illegible] - இடமாம்; (எ - று.)

[illegible]

[illegible] விகாரம்; 'புகககம' போல. (௫௭)

௫௮.—(இ - ள்) [illegible] - [illegible] தொங்கியாகச் சூழ்ந் [illegible], கா இடத்தும் - சோலைகளினிடங்களிலும், பவை [illegible] - மலர்களை வண்டுகள் (வாயால்) ஊதி மலர்த்தப்பெறுதற்: [illegible] - அழகிய, மாலை உறு மின்னார் இடத்தும் - காமங்கொண்ட மகளிரிடத்தும், [illegible] உந்தி என் - [illegible] நோக்கி (நீ, [illegible]) [illegible] சொல்லுதலை [illegible]: புலியூரே - புலியூரானது,—[illegible] [illegible], பெட்டு இந்தம் [illegible] - (வந்து கொடுத்த) பிட்டின் [illegible] [illegible], '[illegible] - [illegible] சாரதியே! [illegible] - தட்டையுடைய [illegible], கொடுவா - கொண்டுவா,' என்றார் - [illegible] (திரிபுரத்தைக்காலத்தில்) கூறினவருமாகிய சிவபிரானது, தலம் - இடமாம்; (எ - று.)

'கொணர்வாய' என்ற பாடத்துக்கும், கொண்டுவருவாயென்றே பொருள்; ஏவல்லொருமைமுற்று: கொணர் - பகுதி. மூன்றாமடியில், இரதம் - ரதம்; வடசொல். 'மாலுறுமின்னார்' என்ற பாடத்துக்கு-இவ்வுரை; 'மாலுருமின்னார்' என்ற பாடத்துக்கு - ஆசையைவிளைக்கும் அழகியவடிவமுடைய மகளிரென்க. வேட்கைகொண்ட ஆடவரும் மகளிரும் ஒருவரிடத்து ஒருவர் பறவைகளைத் தூதுவிடுதல் மரபு. (௫௮)

௫௯.—(இ - ள்) பண்டு - முன்னொருகாலத்தில், தவம் செய்திடவும் - பெருந்தவத்தைச் செய்ததனாலும், புண்டரிகம் - புலிவடிவம், அல்கும் -(மழமுனிவருக்குத்) தங்குதற்கிடமான: பள்ளர் - பயிர்செய்யுஞ் சாதியார், அலத்தால் - கலப்பையைக்கொண்டு, உழவும் - உழுதலாலும், புண்டரிகம் - தாமரைமலர்கள், மல்கும் - (எங்கும்) நிறைந்துவிளங்குதற்கிடமான: புலியூரே - புலியூரானது,— விண்டும் - திருமாலும், மறை வேந்தும் - வேதங்களுக்குத்தலைவனான பிரமனும், (என்னும் இவர்களால்), அறியார் - உண

றப்படாதவரும், இருக்குமே அறியார் - சிறந்தவேதங்களாலும் அறியப்பட்டாதவரும், தீ அகலோடு ஏந்தும் மறியார் - (வலத்திருக்கையில்) நெருப்புத்தகழியையும் (இடத்திருக்கையில்) மானையுந் தரித்துள்ளவருமாகிய சிவபிரான், இருக்கும் - எழுந்தருளியிருக்கிற, இல - இடமாம்; (எ - று.)

தவஞ்செய்திடவும் என்பதற்கு - எல்லாத்தவங்களினும் மேலான சிவபூசனையை நன்குசெய்யும்பொருட்டு என்றும் உரைக்கலாம். அலம் - ஹலம், விண்டு - விஷ்ணு, இருக்கு - ருக்; வடசொற்றிரிபுகள். பிரமனை மறைவேந்து என்றது, எப்பொழுதும் நான்குமுகங்களாலும் நான்குவேதங்களையும் ஓதுகின்றமையின். இருக்குமே, ஏ-உயர்வுசிறப்பு. இருக்குமேய் அறியார் எனப்பிரித்து - வேதங்களாற்பொருந்தியறியப்படாதவரென்றுரைக்கலாம். மறி - மான். நீர்வளத்தாற் கழனிகளில்மிகுதியாயுள்ள தாமரைகள் உழவருழுபடைகளாற் சிதைவுண்டு எங்கும் நிறைந்திருக்குமென்க. (௫௯)

௬0 —(இ - ள்.) சாற்று - (சிறப்பித்துச்) சொல்லப்படுகிற, திருத்தொண்டரும் - மேன்மையையுடைய சிவனடியார்களும், உகந்து போற்ற - (தம்மைத்) துதிக்கிறாலன்றிவு சுதிக்க, வளம் மிக்க - சிறப்புமிகுந்தஇடமான: செய் சங்கு இனமும் - சழனிகளிலுள்ள சங்குகளின்கூட்டமும், மதி போல் தவளம் மிக்க - சிறந்தசந்திரன்போலவெண்ணிறம்மிகப்பெற்ற: புலியூரே - புலியூரானது,—சங்கம் தாங்கத்தர் - சங்குகளையுடைய பாற்கடலிற் பள்ளிகொள்ளுந் திருமால், ஏறு உரு ஆய் - இடபத்தின்வடிவமாய், தாங்க - (தம்மைச்) சுமக்க, மகிழ்வோர் - திருவுள்ளமுகந்தருளுபவரும், உமை ஓர் பங்கத்தர் - உமாதேவியை ஒருபாகத்திலுடையவரும், அங்கத்தர் - எலும்புமாலையையுடையவருமாகிய சிவபிரான், பற்று - விரும்பிவசிக்குந்தலமாம்; (எ - று.)

திரிபுரசங்காரகாலத்தில் அமைந்த பூமியாகிய தேர் சிவபிரானேறியமாத்திரத்தில அக்கடவுளைச்சுமக்கஆற்றலில்லாமல அச்சுமுறிந்து சிதையவிருக்க, அச்சமயத்தில் திருமால் இடபவடிவமாய்க்கீழ்நின்று அத்தேரை வீழ்ந்திடாதபடி தாங்கினாரென்பது கதை. தரங்கம் - அலை; கடலுக்குச் சினையாகுபெயர். தரங்கம் - பிரளயசமுத்திரமுமாம். தரங்கத்தர் - கடலபோலுங்கருநிறமுடையவரெனினுமாம். சங்கம - தரங்கத்துக்கு அடைமொழி. தரங்கத்தர்க்கு அடைமொழியாயின, பாஞ்சசன்னியமென்க. சங்கத்து அரங்கத்தர் எனப்பிரித்து - கையிற்சங்கையுடைய திருவரங்கமென்னுந்திருப்பதிக்குஉரியவரான திருமாலென்று உரைப்பாருமுளர். பங்கு அத்தர் எனறும் பிரித்துப் பொருள்கொள்ளலாம். அம் கத்தர் எனப்பிரித்து - அழகிய கடவுளெனினுமாம்; கத்தர் - கர்த்தர். அங்கத்தர் - உத்தமஅங்கமாகிய பிரமகபாலத்தை யுடையவருமாம். (௬0)

௬௧.—(இ - ள்.) தெள் இமையோர் - (மனந்) தெளிந்த தேவர்கள், போற்று தொறும் - (சிவபிரானை வந்து) துதிக்கும்பொழுதெல்லாம், கன்னி - இளமையையுடைய, செம - செந்நிறமுள்ள, புள் - கருடனாகிய வாகனத்தில, இவரும் - ஏறுந்தன்மையுள்ள, மால - திருமால், சேர் - (அவர்களுடன் வந்து) சேரப்பெற்ற: தேம் பொழில் தொறும் - இனிய சோலைகளிலெல்லாம், கனி செம் புள்ளி வரும் - பழங்களிற் சிவந்தபுள்ளிகள் பொருந்திய, ஆல் - ஆலமரம், சேர் - பொருந்தப்பெற்ற: புலியூரே - புலியூரானது,—வெள்ளி சயிலத்து இருப்பார் - வெள்ளிமலையாகிய திருக்கைலாயத்தில் வீற்றிருப்பவரும், சனி பிறப்பில் - சனிபோலக் கொடிய ஜன்மத்திலே, என்னை பயில இருப்பார் - என்னைப் பொருந்தும்படி மீளச்செய்யாதவருமாகிய சிவபிரானது, பதி - தலமாம்; (எ - று.)

6642

கனி - கன்னி; தொகுத்தல். கன்னி - அறியாத என்றுமாம். முத்தி பெற்றவர் இங்கு மீண்டுவந்து பிறப்பதில்லையாதலின், பிறப்பிலென்னைப் பழுலத்திருப்பா ரெனப்பட்டது. சனி - நவக்கிரகங்களி லொருவன். இனி, சனித்தலாகிய பிறப்பென்றுங் கொள்ளலாம். சனிப்பூஇறப்பில் எனப் பதம்பிரித்து, பிறப்பு இறப்புக்களி லென்றுமாம. (௬௧)

௬௨.—(இ - ள்.) தங்கம் அவை - பொன்னம்பலத்தை, சேவிக்க - தரிசிக்கும்பொருட்டு, அரும் புங்கவரே - அருமையான புருஷசிரேஷ்டர்கள்தாம், சேரும் - வந்துசேருந்தறகிடமான: தண் நறை வண்டு உண்ண - குளிர்ச்சியான தேனை வண்டுகள் பருகும்படி, அரும்பும் கவரே சேரும் - முகிழ்க்கின்ற மாக்கிளைகள்தாம் பொருந்தப்பெற்ற: புலியூரே - புலியூரானது,—அம் கைதனில் ஏந்து தலை ஓட்டினார் - அகங்கையிலே ஏந்தின பிரமகபாலத்தையுடையவரும், ஏத்தும் அன்பர் தாய் முலை பால மாந்துதலை ஓட்டினார் - (தம்மைத்) துதிக்கின்ற மெய்யடியார் (மீளவும்பிறந்து) தாயின் முலைப்பாலையுண்ணுதலை யொழித்தருளுந் தன்மையரு மாகிய சிவபிரான், வாழ்வு - வாழுமிடமாம்; (எ - று.)

முதலுரைக்கு - வரும் புங்கவ ரென்றும உரைக்கலாம் ஒருகாலத்திற் பிரமன் தானேமுதற்கடவு ளென்று கூறிச் செருக்குற்றிருக்கையில், சிவபிரான் தாமேமுதல்வரென்று தெரிவிக்குமாறு திவ்வியசொரூபத்தோடு எதிரிலதோன்ற, அவ்வயனது ஐந்தாம்முகம் 'எனதுநெற்றியினின்றுந் தோன்றிய நீயோ முதல்வன்' என்றுகூறிச சிவனைப்பரிகசித்தவளவில், அப்பெருமான் தமது அம்சமாகிய வைரவரை நோக்கியருள, அவர் தமதுஇடக்கைவிரலின் நகத்தினுனியால அவ்வயன்தான்தலையைக் கொய்திட, அக்கபாலம் அப்படியே அவர்கையிலொட்டிக்கொள்ளுதலும், உருத்திரமூர்த்தி, தருமத்தை உலகத்தவர் அறிந்து அனுஷ்டிக்குமாறு தாம அநுஷ்டித்துக்காட்டும்படி வைரவரைநோக்கி 'இப்பாவநதொலையப பிக்ஷையெடுக்கவேண்டும்' என்று உரைக்க, அவர் அங்ஙனமே பலகாலம பலதலங்களிலுஞ் சென்று கைக்கபாலத்தோடு பிக்ஷாடனஞ்செய்துதிரிந்து, பின்பு காசியிற்சேருகையில், அந்தக்ஷேத்திரமகிமையால் உடனே கையைவிட்டு அது நீங்கிற் றென்பது கதை. அன்பர் தாய்முலைப்பால் மாந்துதலை யோட்டினார் - பக்தர்கள்பிறப்பை யொழித்தருள்பவ ரென்றபடி. (௬௨)

௬௩.—(இ - ள்.) பூசை - சிவபூசை, முத்தி தரும் - மோக்ஷத்தைக் கொடுக்கும், என்று - என்றுநிச்சயித்து, புது அரவம் - புதுமையானபாம்பின் வடிவமான பதஞ்சலிமுனிவர், ஆற்றும் - (அப்பூசனையைச்) செய்தற்கிடமான: மூகைதனை பேசிடு என்று - ஊமைப்பெண்ணைப் பேசுவாயென்று அருள்செய்து [பேசுவித்து], புத்தர் அவம் மாற்றும் - (மாணிக்கவாசகர்) புத்தசமயத்தாரது கொடுமையை ஒழித்தற்கிடமான: புலியூரே - புலியூரானது,—சித்தி மதி நேமித்தார் - (எட்டுவகைச்) சித்திகளையும் (பலவகை) அறிவுகளையும் ஏற்படுத்தியவரும், அத்தனார் - (யாவர்க்குந்) தலைவரும், நித்திய கல்யாணி - எப்பொழுதும் மங்களமுடையவளாகிய, சிவகாமி - சிவகாமியம்மையை, தாரத்தினார் - மனைவியாகவுடையவரு மாகிய சிவபிரான், காப்பு - (உயிர்களைக்) காக்குமிடமாம்; (எ - று.)

முத்திதரும் பூசை - மோக்ஷங்கொடுக்கவல்ல பூசையை, என்றும் - எப்பொழுதும் எனறும் பொருள் கொள்ளலாம். மூகை, தாரம் என்பவை - மூகா, தாரா: என்னும் வடமொழித் திரிபுகள். புதுமையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய்த் தன்னொற்றிரட்டிற்று. புத்தரவம் என்றது - ஆதிசேஷன் தனக்கு இயல்பாகவுள்ள பெரியவுருவத்தை நீத்துச் சிறியதோருருவைக் கொண்டமையின். சித்தி - அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிரா

ப்தி, பிராகாமியம். ஈசத்துவம், வசித்துவம் என்பன; இவற்றுள், எல்லாப் பொருளினும் நுண்ணியதாதல் அணிமா, பெரியதாதல்-மகிமா, பாரமுள்ள தாதல்-கரிமா, இலேசாதல்-லகிமா, வேண்டியவை அடைதல்-பிராப்தி, நினைத்த வுள்ளவனுதல் பிராகாமியம், ஆட்சியுள்ளனாதல்-ஈசத்துவம், எல்லாந்தன்வசத்தாக்க வல்லவனாதல் - வசித்துவம். நேமித்தார் - நியமித்தார் என்பதன் மரூஉ. சிதம்பரத்திலுள்ள உமாதேவிக்குச் சிவகாமியம்மையென்று பெயர்; சிவனால் வேட்கைகொள்ளப்படுபவ ளென்றும், சிவன்பால் வேட்கையுள்ள வளென்றும் பொருள்படும். (௬௩.)

௬௪.—(இ - ள்.) சொல் பழுத்த - புகழ் மிகுந்த, மா முனியும் - சிறந்த பாலமுனிவரும், டல் பதத்தை ஆரும் புலியின்காலைப் பொருந்தற்கிடமான: குழும் அறவினரும - (அரசுச்) சுற்றிலுமுள்ள அறவறத்தவர்களும், புல் பதத்தை ஆரும்-பலவிரியிலுளைகிற உணவை விரும்பியுண்ணுதற்கிடமான: புலியூரே-புலியூரானது, — உற்பவித்த - (திருமாலுக்கு) சோன்றின, கஞ்சம மலர - தாமரைமலராசனத்தையுடைய, வீட்டினோர் - (தமக்கு) இருப்பிடமாகவுடைய பிரமதேவர்க்கு, தம - தம்முடைய, பறித்தார் - கொய்தவரும், செம் பதத்தால் - சிவந்த (தமது) திருவடியால், வெம் சமனை வீட்டினோர் - கொடிய யமனைச் செறுத்துக்கொன்றவரு மாகிய சிவபிரானது, வீடு - ஸ்தானமாம்; (எ - று.)

அறவினர் - இல்லறத்தின் கறங்களைச் செய்தலையுடையவர்; அறத்தல்-நீங்குதல். உற்பவித்த - உற்பவி; த் - இறந்தகாலம். கஞ்சம - நீரிற்பிறப்பது; வடசொல். மலர வீடு-மலர்ப்பாடையனுமாதியாகலாம். மன் ஐ வீடு எனப்பிரித்து - நிலைபெற்ற அழகிய தாமரைவீட்டையென்று உரைப்பாருமுளர். அறவினர், புல்பதத்தை ஆரும்- அறவோர்களைத்திரட்டுப்பொருந்துதற்கிடமான என்றுமாம். சொல் பழுத்த-சாபானுக்கிரகசக்திகள் முதிர்ந்தவென்றுங்கொள்ளலாம்.

௬௫.—(இ - ள்) எல்லா உருவங்களும் - (எல்லா) அழகுகளும் மிக்க பெண்களும், பொன் கலை அரக்கும் - அழகிய பதுமராகங்களும் பொருந்தப்பெற்ற: அ நல்லார்கள் முன்றில்களும் - அந்த அழகிய பெண்களின் வீட்டின் முன்னிடங்களும், பொன் கல் படுக்கும்-பொன்னும் இரத்தினங்களும் பொருந்தப்பெற்ற: புலியூரே - புலியூரானது,—மெல-மென்மையான, வன் - தேனையுடைய, கமலம - தாமரைமலர்போன்ற, அடி-(தமது) திருவடிகளை, வந்தியார்கட்கு - வணங்காதவர்களுக்கு, அருளார் - கருணைசெய்யாதவரும், ஞானம அமலம வடிவு - ஞானமயமான சுத்தமான (தமது) திருமேனி, அந்தியார் - சாயங்காலத்துச் செவ்வானத்தின் நிறமாக வுள்ளவருமாகிய சிவபிரான், ஆர்வு -விரும்பியெழுந்தருளியிருக்குமிடமாம்; (எ-று.)

நன்கு - பண்புப்பெயர்; நல - பகுதி; கு - விகுதி. நல்லாள் என்று இலக்குமிக்குப் பெயராதலால், நல்லாரென்றது - பொருமபாலும் மகளிரையே யுணர்த்தும். கள் - விகுதிமேல்விகுதி முன்றில - இல்முன் என்பது முன்பின்னாக மாறிவழங்கிய இலக்கணப்போலி பொன் - இலக்குமி போல எனறுமாம். கற்பு - கொழுநனையே தெய்வமென்று ஒழுகும் மேற்கோள்; இது- பெரியோர்கள் கற்பித்தலால் ஆகுவது. இரண்டாமுறைக்கு, பொன் கல் படுக்கும் - பொன்னிழைக்கப்பட்ட கற்கள் பதிக்கப்பெற்ற என்றுங்கொள்ளலாம். வடிவம் தியார் எனப்பிரித்து - தமதுசொரூபம் அக்கினியானவரென்றும் உரையிடலாம்; தியார் - தீயார் என்பதன் குறுக்கல்: "நன்றென்றேன் தியேன்" என்பதில 'தியேன்' என்பதுபோல. (௬௫)

௬௬.—(இ-ள்.) தேம் பொழில்மேல்- இனியசோலைகளின்மேலே, சேல் பாய - சேல்மீன்கள் தாவிப்பாய்தலால், பூ பழன் - அழகியபழங்கள்,நஞ்சுகளைந்துவிழுந்து, ஆரும் - நிறையப்பெற்ற: மேதி- எருமைகள், செம் கழை

யை - சிவந்தகரும்புகளை, உண்ண-உண்ணும்பொருட்டு, பூ பழனம் சாரும்-(நீர்வளமிகுதியால் தாமரைமுதலிய) பூக்களையுடைய கழனிகளிற் சேரப்பெற்ற: புலியூரே - புலியூரானது,—மேம்படும் எண் தோளுக்கு- சிறப்புற்ற (தமது) எட்டுத்திருத்தோள்களுக்கும், ஆசை பட்டார் - எட்டுத்திக்குக்களையே பட்டாடையாக வுடையவரும், தொண்டு ஆம் இயல் பகை இல்லாளுக்கு - (தமக்கு) அடிமையான இயற்பகைநாயனாரது மனைவியின்பொருட்டு, ஆசைப்பட்டார் - விருப்பமுற்றவரு மாகிய சிவபிரான், ஆர்வு - விரும்பியெழுந்தருளியிருக்குமிடமாம்; (எ - று.)

பழன் - இறுதிப்போலி. ஞஞ்சு - நைந்தென்பதன்போலி. சிவபிரானுக்கு எண்டோளுடைமை காலவிசேஷத்தி லென்க; திரிபுரதகனகாலத்[illegible] ண்டர்: "மாருப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி" என்[illegible] தொகையிலும். ஆசைப்பட்டார் -(வேறுஆடைதரிக்காமல்)திக[illegible] ன்றவர். காவிரிப்பூம்பட்டினத்தில் வைசியர்குலத்தி லுதித்த இயற்பகைநாயனார் சிவனடியார்திறத்தில் அன்புபூண்டொழுகும் உறுதியை [illegible] யிடும் பொருட்டுச் சிவபிரான் ஒருவிடவடிவங்கொண்டவராய் அவர்வீட்டுக்குச்சென்று அவர்செய்யும் உபசாரத்துக்கு மகிழ்ந்து 'உமதுமனைவியை எனக்குத் தரவேண்டும்' என்ன, அதற்கு இசைந்து அவர்கொடுக்கத் தாம்பெற்றுச்செல்லுகையில், அந்நாயனாரது சுற்றத்தார் வந்துசூழ்ந்து அத்தீச்செய்கைக்கு இசையாது இறைவரைத்தடுக்க, நாயனார் சென்று அவர்களைக் கண்டித்து இறைவர்க்கு வழிவிட்டுமீளுகையில், சிவபிரான் ஒரிடையூறுவந்தவர்போல நாயனாரை மறுபடி கூவியழைத்து இடபவாகநாரூடராய்க் காட்சிதந்து அவர்க்கும் அவர்மனைவியார்க்கும் முத்தியளித்தன ரென்பது கதை. உலகத்தாரியல்புக்குமாறாக மனைவியைப் பிறர்க்குத்தந்தமையின், இவர்க்கு இயற்பகையென்று பெயர்போலும். இல்லாள் - வீட்டிலிருந்து சமுசாரகாரியங்களை நடத்துபவள்; இல்-வீடு. ஆசைப்பட்டார் - ஆசைப்பட்டவர்போலநடித்தவ ரென்றபடி. பழுமணையுமபடி சேல் நீரினின்று துள்ளி மரங்களின்மீது பாய்தல், நீர்வளச்சிறப்பினு லாகும். (௬௬)

௬௭—(இ- ள்.) கார் புணர்ப்பில் - மேகம்போன்ற (தனது) உடம்பிலே, பொன் கலையை - பொன்னுலாகிய பீதாம்பரத்தை, போர்ப்பவன் - தரித்துள்ள திருமால், அன்பு ஆர்க்கும் - சிவபக்தியாகிய தளையாற் கட்டுண்ணப்பெற்ற: காமுகர்க்கு ஆ - காமமுடையோரை வருத்தும்பொருட்டு, வேள் வரவை - மன்மதனது வருகையை, போர் பவனன் - போர்செய்யவல்ல வாயுதேவன் [மந்தமாருதம்], பார்க்கும் - எதிர்பார்த்தற் கிடமான: புலியூரே - புலியூரானது,—பார்ப்பதி ஆம் - பார்வதிதேவியாகிய, பெண் - சிறந்த பெண், தன் ஆகத்து - தம்முடைய திருமேனியில், அடுத்தார் - பொருந்தப்பெற்றவரும், பேர் மணத்தில் - பெரிய கலியாணகாலத்திலே, சுந்தரனை - சுந்தரமூர்த்திநாயனாரை, தொண்டன் ஆக - (தமக்கு) அடியவனாகும்படி, தடுத்தார் - தடுத்து ஆட்கொண்டவரு மாகிய சிவபிரான், தோய்வு - பொருந்துமிடமாம்; (எ - று.)

போர்ப்பவனன் என்றது, காமுகரைத் தென்றலிளங்காற்று மிகவருத்துதலால். பார்ப்பதி - (இமய)மலையின்மக ளென்று பொருள்; வடசொற்றிரிபு. அடுத்தார் என்றதற்கேற்ப, தம் ஆகத்து என்னாமல், தன்ஆகத்து எனறது - ஒருமைப்பன்மைமயக்கம்; இனி, பெண்தன் ஆகத்து அடுத்தார் - உமாதேவியினது உடம்பிற் பொருந்தினவ ரென்றும்பொருள்கொள்ளலாம். திருக்கைலாசமலையில் சிவபெருமானது அடியார்கூட்டத்தில் ஒருவராகிய ஆலாலசுந்தரர் சிவபூசனைக்காகப் பூப்பறித்தற்குத் திருநந்தனவனத்துக்குப்போனபொழுது அங்குப் பார்வதிதேவியாருக்காக அலர்கொய்

துகொண்டுநின்ற அத்தேவியாரதுசேடியர்களாகிய அநிந்திதை கமலினி யென்னும் பெண்களிருவரையுங் கண்டு அவர்கள்மேற்கொண்ட ஆசையாற் கடவுள்கட்டளைப்படி மானுடசன்மமெடுத்துத் திருநாவலூரில் ஆதிசைவர் குலத்தில் இசையனார் என்பவருக்குச் சிவஞானியார்வயிற்றிற் பிறந்து வளர்ந்து புத்தூரிலிருக்கிற சடங்கவிசிவாசாரியருடையபுத்திரியை மணஞ்செய்ய இருக்கையில், சிவபிரான் ஒருவயோதிகப்பிராமணவடிவங்கொண்டு 'நீ எனக்கு அடியவன்' என்று சொல்லி வழக்கிட்டு அத்திருமணத்தைத் தடுத்து அச்சுந்தரமூர்த்தியை யழைத்துச்சென்று திருவெண்ணெய்நல்லூரை யடைந்து தரிசனந்தந்து அவர்க்குச் சமுசாரபந்தந் தொடராதபடி அவரையாட்கொண்டருளின தென்பது கதை. (சுஎ)

சுஅ.—(இ - ள்.) தென் ஆர் பொழிலிடத்தும் - அழகுமிக்கசோலைகளினிடங்களிலும், புன்னாகம் தோடு ஆர் - சுரபுன்னைமரத்தின் பூவிதழ்கள் நிறைந்த: செம் கனகம் மன்று இடத்தும் - சிவந்தபொன்மயமான திருவம்பலத்தினிடத்திலும், புலி நாகத்தோடு ஆர் - வியாக்கிரபாதமுனிவர் பதஞ்சலிமுனிவரோடு பொருந்தப்பெற்ற. புலியூரே - புலியூரானது,—நல நீரை விட்டு விளக்கு இட்டார் - சுத்தஜலத்தைவார்த்து விளக்கேற்றிய நமிநந்தியடிகள்நாயனாரது, வினை - கருமத்தை, தொலைத்து - ஒழித்து, அன்பு ஒட்டு - (தம்மிடத்துப்) பக்தியாகிய சம்பந்தம், விள [விள்ளா] - நீங்காமல், ஆர்மாட்டினும் - எவரிடத்திலும், இட்டார் - நெருங்காதவராகிய சிவபிரான, உறைவு - தங்குமிடமாம், (எ - று.)

தென்ஆர்-தென்னாதெனாவென்று வண்டுகளொலிக்குமொலி மிக்க என்றுமாம். சோழநாட்டிலே ஏமப்பேறூர் நமிநந்தியடிகள்நாயனார் திருவாரூரில் அரனெறியெனுமாலயத்திலுள்ள சிவபிரானைத் தரிசிக்கையில் திருவிளக்குக்குறைவாயிருக்கக்கண்டு அதற்குத் தீபகைங்கரியஞ் செய்யக்கருதி அருகிலுள்ளதொருவீட்டிற் சென்று நெய்கேட்க, அவ்வீட்டுக்குடையவன் சமணசமயத்தவனாதலின் நெய்கொடாது இகழ்ந்துபேச, அதுகேட்டுத் தளர்ந்தநாயனார் உடனே அசரீரிவாணியருளியபடி அருகிலுள்ள குளத்தின நீரை யெடுத்து வார்த்து அத்திருத்தொண்டைப் பெரிதாகநடத்திப் பேறுபெற்றுய்ந்தன ரென்பது கதை. விள-தொகுத்தல். உறைவு - தொழிலாகுபெயர். புல் - புலி. (சுஅ)

சுகூ.—(இ - ள்.) பெட்பின் - விருப்பத்துடனே, முகில் - மேகத்தை, கண்டால் - பார்த்தால், எல் தோகை புள் - ஒளியையுடைய கலாபத்தையுடைய(மயிலாகிய) பறவை, பரதம் காட்டும் - கூத்தாடுதலைச்செய்துகாண்பித்தற்கிடமான: பிறந்து இறந்தால் - (தன் எல்லையிலே) பிறந்துமரித்தால், எற்று ஓகை புட்ப ரதம் காட்டும் - (ஜநநமரணங்களை) ஒழிக்கத்தக்க மகிழ்ச்சியைத்தருகிற புஷ்பவிமானத்தை (அவ்வுயிர்களுக்கு அந்திமதசையில்) அடையச்செய்கிற: புலியூரே - புலியூரானது,—உள் பரிவால் - மனத்திலேயுள்ள சிவபக்தியினால், கை ஆரம் ஆ உரைத்தார் - (தமது) கையைச் சந்தனக்கட்டையாகக்கொண்டு (கல்லில்) தேய்த்த மூர்த்திநாயனாரை, காத்து - பாதுகாத்து, ஆல் கீழ் - கல்லாலமரத்தின்கீழிருந்து, நூல் - சாஸ்திரங்களை, நாலவர்க்கு - நான்குமுனிவர்களுக்கு, ஒய்யாரம் ஆ - ஒழுங்காக, உரைத்தார் - உபதேசித்தருளினவராகிய சிவபிரானது, ஊர் - தலமாம்.

பெட்பு - தொழிற்பெயர்; விரும்புதல்: பெள் - பகுதி, பு - விகுதி. "எல்லே யிலக்கம்" என்னுந் தொல்காப்பியஇடையியற்சூத்திரத்தால், 'எல்' என்பது-ஒளியைக்குறிக்கும்பொழுது, இடைச்சொல்லாமென்று அறிக. மதுரைப்பதியில் வணிகர்குலத்திலுதித்துச் சிவபக்திகொண்டு அத்தலத்துச் சொக்கநாதக்கடவுளுக்கு நாள்தோறும் சந்தனக்காப்புஅரைத்துக்கொடுத்

திருப்பணியை மேற்கொண்டொழுகும் மூர்த்திநாயனார், வடதேசத்தினின்று வந்து பாண்டியனைவென்று அவனரசாட்சியைக் கைக்கொண்டு சமணர்கைவசப்பட்டிருக்குங் கர்ணாடராசன் தமக்கு எங்கும் சந்தனக்கட்டை கிடைக்கவொண்ணாதபடி பண்ணித் தமது திருப்பணிக்குத் தடைசெய்ய, நாயனார் 'சந்தனக்கட்டை கிடையாமற்போனாலும் அரைக்கிற கைக்குத் தடையில்லையே' என்று தமது முழங்கையை மிகுதியாகத் தேய்த்து, அப்பொழுது சிவபிரான் அருளியபடி அக்கர்ணாடராசனிறந்தவுடனே அரசாட்சியையடைந்து இறுதியில் முத்தியடைந்தன ரென்பது கதை. ஆரம் - ஹாரம்; வடசொல். உரைத்தார்க்கு ஆர்த்து - உயர்திணையில் சிறுபான்மை ஐயுருபு தொக்கது; [நன் - உருபு - கறு] நால்வர் - தொகைக்குறிப்பு; ஸநகர், ஸநந்தனர், ஸநத்குமாரர், ஸநத்ஸுஜாதர் என்பவர். இவர்கள் ஒருகாலத்திற் கைலாசகிரியையடைந்து சிவபிரானைத் திருவடிதொழுது 'எங்களுக்குத் தத்துவஞானத்தை உபதேசித்தருளவேண்டும்' என்று பிரார்த்திக்க, சிவபிரான் கருணைகொண்டு அவ்வெள்ளிமலையின் தென்சிகரத்திலே கல்லாலமரத்தின்கீழ் தக்ஷிணாமூர்த்திவடிவமாய்த் தனியேயெழுந்தருளியிருந்து அவர்களுக்குச் சரியை கிரியை யோகம் என்னும் மூவகையினையும் முதலிற்போதித்தருளிப் பின்னர் நான்காவதாகிய ஞானநெறியையும் அனுக்கிரகிக்கக்கருதி அதனைத் தன்மையாலன்றி அறிவிக்குமாறு சின்முத்திரையாகப் பிடித்திருக்கையோடு ஒருகணப்பொழுது மௌனமாய் வீற்றிருந்தன ரென்பது கதை. ஓகை - உவகையென்பதன் மரூஉ. ரதம் - இங்கே, வாகன மென்னும்மாத்திரையாய் நின்றது. ஆரம் - சந்தனமரம். (சுகூ)

எ0.—(இ - ள்.) கட்டு உரை - முறைக்குப் பொருந்தின [தளையவிழாத], கோடு பூ - மரக்கிளைகளிலுள்ள பூக்கள், தேன் - வண்டுகள், நூறி - (கால்களால்) தகைத்து, புட்டு - விண்டு, அரிக்க - துளைக்க, வீறும் - மலரப்பெற்ற: கமலம் பூ - தாமரைமலர்கள், தேனை ஊறி - தேன்சுரந்து, புள் தரிக்க - அன்னப்பறவைகள் தங்க, வீறும் - சிறப்புப்பெற்றுத்திகழ்கிற இடமான: புலியூரே - புலியூரானது,—சிட்டர் தொழ - நல்லொழுக்கமுடைய வியாக்கிரபாதர் முதலியோர் வணங்க, மின் ஆடகத்தினால் மேய்ந்த மன்றுள் - மின்னல்போலவிளங்குகிற பொன்னினாலே அமைந்த திருவம்பலத்திலே, (செய்கிற) ஆனந்தம் நல் நாடகத்தினன் - பேரானந்தத்தைத்தருகிற சிறந்ததிருநடனத்தையுடையவராகிய சிவபிரானது, நாடு - ஊராம்; (எ - று.)

பிள் என்னும் பகுதியடியாய்ப் பிறந்த பிட்டு என்னும் இறந்தகாலவினையெச்சம், ஈங்கே சிலேடைப்பொருத்தத்திற்காக, புட்டுஎனச் சிதைந்து மருவிற்று. மேய்ந்த - வேய்ந்த என்பதன் மரூஉ. சிட்டர் - சிஷ்டர்; வடசொல். ஆடகம் - ஹாடகம்; நால்வகைப் பொன்களுள் ஒன்று. புள் - வண்டாகிய பறவை யென்றுங் கொள்ளலாம். (எ0)

எக.—(இ - ள்.) மேகம் பயில் குழலார் - மேகத்தையொத்த கூந்தலையுடைய மகளிரது, மெல் களமும் - கண்ணுக்கினிய கண்டமும், பூகம் பொருவும் - பாக்குமரத்தையொத்திருக்கப்பெற்ற: தண் பணையும் - குளிர்ந்த [நீர்வளமுள்ள] கழனிகளும், பூ கம்பு ஒருவும் - (உழுகிறகாலத்தில்) நீர்ப்பூக்களுஞ் சங்குகளும் நீங்கப்பெற்ற: புலியூரே - புலியூரானது,—நாகமொடு - பெரியவிண்ணுலகத்தாரோடு, தாலம் - மண்ணுலகத்தாராலும், பணிந்திடுவார் - வணங்கப்படுபவரும், தாழ் - தொங்குகின்ற, பவளம் கோடீரம் மேல் - பவழம்போலச்செந்நிறமான சடாபாரத்தின்மேல், அம்பு - (கங்காநதியின்) நீரை, அணிந்து - தரித்து, இடுவார் - (அதனைப் பகீரதன்பொருட்டுச் சிறிது) கொடுத்தவருமாகிய சிவபிரானது, வீடு - தங்குமிடமாம்; (எ-று.)

பயில் - உவமவுருபு; இனி, மேகம் பயில் குழலார் - மேகத்தின்தன்மை

தன்னிடத்திற்பொருந்தின கூர்தலையுடையவ ரென்றுமாம. இளங்கமுகமரத்தினது கழுத்து-வரையிலும் நெய்ப்பிலுங் கண்டத்துக்கு உவமையாம்; "ஈனாத விளங்கமுகின் மரகதமணிக் கண்ணும், ...தானுமி......, கானார்ந்த திரள்கழுத்து" என்றார் சிந்தாமணியிலும். மேகம், களம், பூகம், கோடீரம், அம்பு - வடசொற்கள். இனி, மகளிர்கண்டம், பூ கம்பு ஒருவும் - அழகிய சங்கம் வடிவிற்றோற்றுநீங்குதற்கிடமான என்றும்; குளிர்ந்தகழனி, பூகம் பொருவும் - பாக்குமரம்பொருந்தப்பெற்ற என்றும் பொருள்கொள்ளலாம். தாலம் - ஸ்தலம்என்னும் வடசொல்லின் திரிபாகிய தலம் என்பதன் நீட்டல். மாகம், தாலம் - இங்கே இடவாகுபெயர்கள். (எக)

எஉ.—(இ-ள்.) கங்குல்வாய் - இராத்திரிகாலத்தில்(வைக்கப்படுகிற), தீபங்களுக்கும் - திருவிளக்குக்களுக்கும, பொங்கு அரா மணி - விளங்குகிற நாகத்தின்மாணிக்கங்கள், ஈடு ஆம் - ஒப்பாகப்பெற்ற: வெயிலுக்கும் - வெயில்வெப்பத்துக்கும், மணி பொங்கர் ஆ - அழகியசோலையிலுள்ள ஆச்சாமரங்கள், வீடு ஆம் - தங்க நிழலைத்தரும்இடமாகப்பெற்ற: புலியூரே - புலியூரானது,— சங்கரா என்பார் இடத்தினான் - சங்கரனேயென்று துதிக்கும் அடியார்களிடத்திலுள்ளவனும், ஈமத்திடை - மயானத்தில, நடித்த - (தன்னுடன்) கூத்தாடின, வல் பாரிடத்தினான் - வலியபூதகணங்களையுடையவனுமாகிய சிவபிரான், வாழ்வு - வாழ்ந்திருக்குமிடமாம; (எ - று.)

மணிப்பொங்குஅரா என்றது, பதஞ்சலிமுனிவரது ஐந்துதலைகளிலுமுள்ள மாணிக்கங்களையு மாகலாம். எல்லாவுயிர்களுமொடுங்குஞ் சர்வசங்கார காலத்தில் உலகமுழுவதும் மயானமாகு மாதலால்,ஈமத்திடை யென்றது. பூதங்கள் - தாருகவனமுனிவர் ஏவியவை. பொங்கர் - விளங்குந்தன்மையதெனச் சோலைக்குக் காரணக்குறி: பொங்கு - பகுதி, அர் - பெயர்விகுதி.

எங.—(இ-ள்.) அல்லி சுனைகளினும் - ஆம்பல்களையுடைய நீர்நிலைகளிலும், நாரியே புல்லி குடையும் - மகளிரே பொருந்தி நீராடப்பெற்ற: ஆலையினும - கருப்பியந்திரங்களிலும், நாரியே புல் இக்கு உடையும் - தேனைபோலினியஇரசம் பொருந்தின கரும்புகள் சிதையப்பெற்ற: புலியூரே - புலியூரானது,—கல்லில் தலையை தா மோதினார்தமமை - பாறையிலே தமது தலையைத் தாவித் தாக்கின திருக்குறிப்புத்தொண்டநாயனாரை, ஆண்டு - அடிமைகொண்டு, எண்எண்கலையை தாம ஓதினார் - அறுபத்துநான்குவகைக் கல்விகளைத் தாம் (உயிர்களின்பொருட்டு) வெளியிட்டுக்கூறியவ ராகிய சிவபிரானது, காப்பு - காக்குமிடமாம்; (எ - று.)

அல்லி - பிறநீர்ப்பூக்களுக்கும உபலக்ஷணம். நாரிஎன்னுந் தேனின்பெயர், இங்குக் கருப்பஞ்சாற்றுக்கு இலக்கணை. காஞ்சீபுரத்தில ஏகாலியர்குலத்திற்பிறந்த திருக்குறிப்புத்தொண்டநாயனார் மிக்கசிவபக்திகொண்டு சிவனடியார்களுக்கு வஸ்திரங்களை அழுக்குப்போக்கிச் சுத்தமாக்கிக்கொடுத்துவருநாட்களி லொருநாள, அவரதுபக்தியுறுதியை வெளிப்படுத்தும்பொருட்டுச் சிவபிரான் ஒருவிருத்தவடிவங்கொண்டு அவரது வேண்டுகோளால் தமது அழுக்குக்கந்தையைத் தோய்த்து உலர்த்தி அனறுமாலைப்பொழுதினுள் தரும்படி அவரிடங்கொடுத்து,அதற்குஉடன்பட்டஅவர் அங்ஙனம் செய்யவொண்ணாதபடி பெருமழையையும் வருவித்துவிட, நாயனார், அச்சிவனடியார்க்கு வேறுஆடையில்லாமையால், அவர்வருந்தும்படி அடியார்திருப்பணிக்கு நமக்கு இடையூறுவந்ததே யென்று வருந்தி, தமதுதலையைத் துணிதோய்க்கும் பாறையில் மோதுமபோது, சிவபிரான் வந்துதரிசனந்தந்து நற்கதியளித்தன ரென்பது கதை. எண்ணெண்கலை - பண்புத்தொகைப்பன்மொழித்தொடர்; அவை-அக்கரவிலக்கணம்முதல் அவத்தைப்பிரயோகம்

சுருக நூல்களிற் கூறப்படுவன. தா - தாவியென்பதன் விகாரம்; பகுதியே வினையெச்சப்பொருள்பட்ட தென்னலாம். புல்இக்கு-வினைத்தொகை.

எச.—(இ - ள்.) வெற்ப - மலைகளோடு, இணைக்கும் - உவமிக்கப்படுகிற, கொங்கை - தனங்களையுடைய, மின்னார் - மின்னற்கொடிபோன்ற மகளிரது, வீடும் - மாளிகைகளும், பொன் பளிக்கும் சாரும் - பொன்னோடு ஸ்படிகக்கல்லும் அமையப்பெற்ற; செம் தாமரையும் - செந்தாமரைப்பூக்களும், பொற்பு அளி குஞ்சு ஆரும - அழகியஇளவண்டுகள் நிறையப்பெற்ற; புலியூரே - புலியூரானது,—கல் - கருங்கல்தூணையே, புணை ஆ - தெப்பமாகக்கொண்டு, ஓதம் - கடலை, கடந்து வந்தார் - தாண்டிமீண்டுவந்தவராகிய திருநாவுக்கரசுநாயனாரை, ஓது - கூறிய, தமிழ் - தமிழ்ப்பாடல்களை, கொண்டு ஏற்றுக்கொண்டு, இரு பொன் பாதங்கள் - பொன்போலரிய தமதுஇரண்டு திருவடிகளை, தந்து - கொடுத்து, உவந்தார் - மகிழ்ந்தவராகிய சிவபிரான், பற்று - விரும்பிவாழுமிடமாம்; (எ - று.)

பளிக்கு - ஸ்படிகமென்னும்வடமொழிச்சிதைவென்பர். குஞ்சு - இளமைப்பெயர். திருமுனைப்பாடிநாட்டில திருவாமூரில் வேளாளர்குலத்தில் புகழனார் என்பவருக்குக் குமாரராய்ப்பிறந்த மருணீக்கியாரென்பவர் முதலிற சமணசமயத்தையடைந்து அங்குத் தருமசேனரென்னும்பெயர்பூண்டு ஒழுகுநாளில், திருவதிகை வீரட்டானத்தில திருத்தொண்டுசெய்திருந்த அவர்தமக்கையாராகிய திலகவதியாரது வேண்டுகோளால் சிவபிரான் அத்தருமசேனருக்குச் சூலைநோயை யுண்டாக்கிச் சமணசமயமந்திரங்களால் தீராதஅதனைப் பின்னர்த் தமஅருளால் தீர்த்து அவரைச்சைவசமயத்தவராக்கி அவருக்குத் திருநாவுக்கரசென்னுந்திருநாமந்தந்து ஆட்கொள்ள, அதனையறிந்த சமணர்கள் தமது மதத்தைச்சேர்ந்துள்ள அரசனது அனுமதிபெற்று அந்தத் திருநாவுக்கரசுநாயனாரைக் கல்தூணிற்கட்டிக் கடலிடையிற் கொண்டுபோய்ப் போகட்டுவிட, அவர் ஸ்ரீபஞ்சாட்சரப்பதிகம் பாடிச் சிவனருளால் அக்கல்லேபுணையாக மிதந்துமீண்டுவந்து கெடிலநதிவாயிலாய்த் திருப்பாதிரிப்புலியூரிற் கரையேறின ரென்பது கதை. இணைக்கும், இணை - பகுதி; கு - சாரியை. (எச)

எரு.—(இ - ள்) மிக்க - மிகுந்த, கதிர் - ஒளியையுடைய, தேர் - இரதங்கள், விசும்பை - ஆகாயத்தை, விரு - விரைவாக, புக்கு - சேர்ந்து, அளவி - கலந்து, தாக்கும் - மோதப்பெற்ற: மேலோர் - பெரியோர், தவத்தை - தபசை, விருப்புக்கள் அவித்து ஆக்கும் - (பலவகை) ஆசைகளையும் அடக்கிச் செய்யப்பெற்ற: புலியூரே - புலியூரானது,—சக்கரத்தை - சக்கராயுதத்தை, நந்து அரிக்கு - சங்கத்தையுடைய திருமாலுக்கு, இட்ட - கொடுத்த, அன்பு உடையான் - கருணையையுடையவனும், நாளும் - எப்பொழுதும், சிவகாமசுந்தரிக்கு - சிவகாமியம்மைக்கு, இட்டன் - இஷ்டனாகவுள்ளவனும், புடையான் - (எப்பொழுதும் அவளைப்) பக்கத்திலுடையவனுமாகிய சிவபிரான், தோய்வு - தங்குமிடமாம்; (எ - று.)

விரு - விரைவுக்குறிப்பிடைச்சொல். 'விருவிரு' என்பதன் விகாரமென்னலாம். இனி, விரு - விருட்சங்கள், விசும்பை அளவி - ஆகாயத்தையளாவி, மிக்க கதிர் தேர் புக்கு - சிறந்தஒளியையுடைய (சூரியனுடைய) இரதத்தைச்சேர்ந்து, தாக்கும - மோதப்பெற்ற எனவுரைப்பாரும் உளர்; இவ்வுரைக்கு, விரு- வடசொற்சிதைவு. சிலேடையில் ஒருரைக்கு விருஎன்பதை யொழித்து மற்றவற்றிற்குமாத்திரம் பொருள்கொள்வாருமுளர். நந்து அரி - வினைத்தொகையாய், நீண்டுவளருந் திருமாலுமாம். இட்டன்பு - தொகுத்தல்; 'வேட்டகம்' போல. சுந்தரி - அழகியவள். (எரு)

எசு.—(இ - ள்.) மன்னும் மலை தந்த - நிலைபெற்ற [அசலமான] இமயமலையாற் பெறப்பட்ட, மா களிற்றை - சிறந்த யானைமுகக்கடவுளாகிய விநாயகமூர்த்தியை, உவந்து பெற்று - மகிழ்ச்சியோடு ஈன்று, [மன்னும் அலை தந்து வந்து - மிகுந்த அலைகளை வீசிவந்து, மா களிற்றை பெற்று - பெரிய களிற்றுமீன்களை யுடையதாய்], உமை நேர் - உமாதேவியை யொக்கிற, பொன்னி நதி - காவேரியாற்றினால், சூழும் - சூழப்பட்ட, புலியூரே - புலியூரானது,—சென்னி மதி பெம்மான் - முடியிற்பிறையையுடைய எம்பெருமானும், இடக்கையான் - டமருகமென்னும் வாத்தியத்தைக் (கையில்) உடையவனும், பேர் அம்பலத்து ஆடும் - பெருமையையுடைய கனகசபையிலே திருநடனஞ்செய்கின்ற, மான் செம் இடம் கையான் - மானையேந்தின சிவந்த இடத்திருக்கையை யுடையவனு மாகிய சிவபிரான், சேர்பு - சேருமிடமாம்; (எ - று.)

முதலடி, சிலேடைபற்றிவந்த உவமையணி. களிறு - மீனின்ஓர்வகை; ஆண்சுறு வென்பர். இனி, நதிவிஷயத்திலும், களிறைப்பெற்று என்பதற்கு - யானைகளைப் புரட்டி யென்றும் பொருள்கொள்ளலாம். பொன்னைக் கொழித்துவருதலால், பொன்னியென்ற பெயர். பெம்மான் - பெருமான் என்பதன்மரூஉ. டம்பம்என்பது இடம்பம்என வருதல்போல, டக்கா என்னும் வடமொழி-இடக்கையென முதலில் இகரம்பெற்று விகாரப்பட்டது.()

எஎ.—(இ - ள்.) மேதகு விண் தாவுறலால் - மேலுள்ள விண்ணுலகத்தை அளாவியிருத்தலாலும், மேல அம்புலி உறலால் - தன்மேலேசந்திரன் பொருந்துதலாலும், [மேதகு விண் தா உறலால்-மேன்மைபொருந்தினதேவலோகத்தவர் இடமாகக்கொண்டு வசிக்கப்பெறுதலாலும், மேல அம்புலி உறலால் - மேன்மையையுடைய அழகிய வியாக்கிரபாதமுனிவர் வசித்தலாலும்], பூதரம் ஒப்பு ஆகும் - மலைக்குச்சமானமான, புலியூரே - புலியூரானது,—மோதி பொரு மாதங்கத்து உரியார் - தாக்கிப்போர்செய்தயானையின் தோலையுடையவரும், போற்று - (யாவராலும்) துதிக்கப்படுகிற, உலகு ஏழும் தரு - பதினான்குலோகத்துஉயிர்களையும்பெற்ற, மாது - உமாதேவியை, அங்கத்து உரியார் - (தமது) உடம்பில் உரிமையாகச் சேர்த்துக்கொண்டுள்ளவரு மாகிய சிவபிரான், சார்பு - சேருமிடமாம்; (எ - று.)

யானைத்தோலுடுத்த கதை;—அருந்தவமியற்றிப் பெருவரம்பெற்ற கஜாசுரனென்பவன் தேவர்முனிவர்முதலியோரை இடைவிடாது வருத்தித் திரத்த, அஞ்சியோடின அவர்களது பிரார்த்தனையால் பரமசிவன் தம்மை யெதிர்த்துப்போர்செய்யவந்தஅவ்வசுரனைக் காலா லுதைத்துத் தள்ளிக் கொன்று தோலையுரித்துப்போர்த்தருளின தென்றுயினும்;தாருகவனமுனிவர் ஏவியயானையி னுட்சென்று உருத்திரமூர்த்தி உடலைப்பிளந்து அதனுரிவையைப்போர்த்துக்கொண்ட தென்றுயினுங் கொள்க. உரி - உரிக்கப்படுவது; செயப்படுபொருள்விகுதிபுணர்ந்துகெட்டபெயர்: கொடாக்கால உரிவையெனகிறதும். "சிவன் சத்தியோடுறிற செகம்விரிந்திடும், சிவன் சத்திநீங்கிடிற செகமில்லையே" என்றபடி சிவபிரான் தன்னுடைய பராசக்தியான உமையாளுடைய உதவியைக்கொண்டே உயிர்களைப்பெற்றருளுதலால், 'உலகேழுந் தருமாது' எனப்பட்டாள்; "பெற்றாள் சகதண்டங்க ளனைத்தும்" என்றார் வில்லிபுத்தூராரும். 'தேவலோகத்தினுந் தில்லை சிறத்தலாலும் தமது சிவபக்தி மிகுதியாலும் தேவர்கள் தம்முலகினின்று இங்கு வந்து வசிக்கின்றன ரென்க. (எஎ)

எஅ.—(இ - ள்.) ஆம் - நீரையும், கம்பு - சங்குகளையும், அலை - அலைகளையும், சங்காரம் - (உலகத்தை) அழிக்குந்தொழிலையும், செறிவால்-பொருந்தியிருத்தலால், [ஆம் - மிக்க, கம்பலை - ஓசையும், சங்கு - சங்குவளை

யல்களும, ஆரம் - முத்துக்களும், செறிவால் - (தன்னிடம்) பொருந்தியிருத்தலால்], அங்காடி - கடைவீதி, பொங்கு ஆழி சேர் ஆம் - பொங்குந்தன்மையுள்ள கடலுக்கு ஒப்பாகப்பெறற, புலியூரே - புலியூரானது,—சங்கு ஆழி மால் ஆம - சங்கசக்கரங்களையுடைய திருமாலாகிய, சாத்தர் - அம்பையுடையவரும, மணம்மலி - வாசனைமிகுந்த,செம் பொன் மடலே போல் ஆம் - சிவந்தபொன்னிறமுள்ளதாகிய பூவிதழை யொக்கின்ற, சாத்தர் - கொன்றைப்பூமாலையையுடையவருமாகிய சிவபிரானுடைய, புரி - நகராம்; (எ - று.)

அங்காடி - இது தெலுங்கில் அங்கடியெனவழங்கும். கம்பலையென்னும் சொல் ஒலியையுணர்த்தும் உரிச்சொல்லாதலை "கமபலை சும்மை கலியே யழுங்க, லென்றிவை நான்கு மரவப் பொருள" எனனுந் தொல்காப்பியத்தா ற்க. சஙகாரம் - ஸம்ஹாரம்; வடசொறறிரிபு. (எஅ)

எகூ.—(இ - ள்.) வாய்ந்த வலமபுரி - (தனக்குக்) கிடைத்த (பாஞ்சன்னியமென்னும) வலம்புரிச் சஙகத்தையும், பூ மா - நிலமகளையுந் திருமகளையும், தழுவி - கலந்து, [வாய்ந்த வலமபுரி பூ - பொருந்தின நஞ்சாவட்டைப்பூக்களும், மா - வண்டுகளும, தழுவி - (தன்னிடம்) பொருந்தி], நந்த வனம் - பூந்தோட்டம, பூ அளவு அதேதோன் ஆம - அழகிய திருத்துழாய்மாலையையுடைய திருமாலே யொத்திருக்கப்பெறற, புலியூரே - புலியூரானது,— ஆய்ந்த மலர் - சிறந்த தாமரைமலரபோன்ற,செம் கைக்கு - சிவந்ததிருக்கையிலே, உழையினா - மானையுடையவருமு, திண் தோள தொடும் - வலிய தோளகளை பரிசக்குமபடி தாழ்ந்துள்ள, காதில் - காதுகளிலே, சங்கு குழையினர் - சஙகினாலாகிய அழகிய தோடெனனும் அணியையுடையவருமாகிய சிவபிரான், சார்பு - சார்ந்துள்ளஇடமாம்; (எ - று.)

வலம்புரி - பிரதக்ஷிணமாகச சுழ்ந்துள்ளது. சாதாரண சங்கத்தினும் ஆயிரமடங்கு சிறந்தது, வலமபுரி. பூ,மா - பூதேவிஸ்ரீதேவிகளைக் குறிக்கும்போது, வடசொறகள். கைககு - உருபு மயககம. "சஙகவெண் டோடுடையான்" எனறார் பெரியாரும். (எகூ)

அ0.—(இ - ள்.) தாலம படைத்து - உலகத்தைச் சிருஷ்டித்து, அலர்க் கண் தான ஒழுகலால் - தாமரைப்பூவில் தான் வசித்தலால், [தாலம் படைத்து - பனைமரங்களையுடைத்தாய், அலர் கள் தான் ஒழுகலால் - விளங்குந்தன்மையுள்ள மதுவைத் தான் பெருகவிடுதலால்], பிரமன்போலும் - பிரமதேவனை ஒக்கின்ற, பொழில் - சோலைகள், சூழ் - சூழ்ந்துள்ள, புலியூரே - புலியூரானது,—ஆலம் அருந்த - (பாற்கடலிற்றோன்றிய) ஆலாகல விஷத்தை உண்டதனால், கண்டம கறுத்தார் - (தமது) திருக்கழுத்துக் கருநிறமடைந்துள்ளவரும, அனபர் - (தமது) அடியார், அலலல் வினை வருந்த - துன்பங்களைவிளைக்குங் கருமங்களால் வருத்தமடைய, கண்டு - பார்த்து, அங்கு அறுத்தார் - (அவறறை) அப்பொழுதே ஒழித்தருள்பவருமாகிய சிவபிரான், வாழவு - வாழுமிடமாம்; (எ - று.)

ஆலம - ஹாலமு; வடசொல். பாற்கடல் கடைந்தகாலத்து அதினின்று எழுந்த பயங்கரமான விஷத்தின் வெப்பத்தைப் பொறுக்கமாட்டாமல் அஞ்சியோடின தேவர்கள்முதலியோரது வேண்டுகோளாற் சிவபிரான் அதனை உட்கொண்டு கண்டத்தில் நிறுத்தி அவர்களைக் காத்தருளினரென்பது கதை. (அ0)

அக.—(இ - ள்.) மின்னும் மணி வேழத்தால் - விளங்கியசைகிற அடிக்கும்மணிகளையுடையஐராவதயானையை யுடைமையாலும், மேவு அரம்பையால் - விரும்பப்படுகிற ரம்பையென்னுந்தெய்வமகளை யுடைமையாலும், [மின்னும் அணி வேழத்தால் - விளங்குகிற அழகிய கரும்புகளை யுடைமையாலும், மேவு அரம்பையால் - பொருந்திய வாழைமரங்களை யுடைமையா

னும்], வயல்கள் - கழனிகள், பொன் உலகுக்கு ஒப்பு ஆம் - பொன்மயமான தேவலோகத்திக்குச் சமமாகப்பெற்ற, புலியூரே - புலியூரானது,—உன்னி - (நம்மைத்) தியானித்து, ஒரு கால் நமா என்றார் - ஒருதரம் 'நமஃ' என்று கூறி வணங்கிய அடியார்களது, கருத்து - மனத்திலே, உற்று - பொருந்தி, உருத்து எதிர்ந்த தானம் மா வென்றார் - கோபித்து எதிரிட்ட மதசலத்தையுடைய விலங்காகிய யானையை வென்றிட்டோராகிய சிவபிரானது, தலம் - இடமாம்; (எ - று.)

அரம்பை, நமா - வடசொற்றிரிபுகள். நமஃ - வணக்கம். (அக)

அஉ.—(இ - ள்.) மா கம் உறைந்து - சிறந்த விண்ணுலகத்தில் வசித்து, ஆம் மை - பொருந்திய மேகத்தையும், வெள்ளை வாரணம - (ஐராவதமென்னும்) வெள்ளையானையையும், ஊர்ந்து - (வாகனமாகக்கொண்டு) ஏறிநடத்தி, [மா கம் உறைந்து - மிகுந்த நீர் பொருந்தி, ஆமை வெள்ளை வாரணம் ஊர்ந்து - ஆமைகளும் வெண்ணிறமான சங்கங்களும் தவழ்ந்து], ஓடை - நீரோடைகள், மகம் போகி நிகர் ஆரும் - (நூறு) அசுவமேதயாகத்தையுடைய தேவேந்திரனுக்குச் சமமாகப் பெற்ற, புலியூரே - புலியூரானது,—தோகை மயில் புள் ஏறி வருவார் - கலாபத்தையுடைய மயிலாகிய பறவையின்மேல் ஏறிவருகிற முருகக்கடவுளுடைய, போதம் மழலைக்கு - ஞானோபதேசமாகிய குதலைச்சொற்களுக்கு, உவந்தார் - மகிழ்ந்தவரும், வெள் ஏறு இவருவார் - வெண்ணிறமான இடபத்தின்மேல் ஏறுபவருமாகிய சிவபிரானது, வீடு - தங்குமிடமாம்; (எ - று.)

போகி - போகமுடையவன்; போகம் - சுகாநுபவம். வெள்ளை - பண்புப்பெயர்; ஐ - விகுதி. இவருவார், இவர் - பகுதி, உ - சாரியை. (அஉ)

அங.—(இ - ள்.) தேன் திகழும் - வண்டுகள் மொய்க்குமபடியான, மா மலர் - சிறந்த பூக்களை, ஏந்தி - (கைகளில்) எடுத்து, பரவி - துதித்து, தாழ்ந்து - வணங்கி, [தேன் திகழும் ஆம் அலர் ஏந்தி - தேன்போல இனிமையாய் விளங்குகிற மிகுதியான நீரை யுடைத்தாய், பரவி - விசாலமாய், தாழ்ந்து - ஆழமாய்], அடியார் போன்ற - சிவனடியாரையொத்த, அகழி - அகழியினால், சூழும - சூழப்பட்ட, புலியூரே - புலியூரானது,—உளத்தின் ஊன்றி - (தத்தம்) மனத்திலே பதியவைத்து, அயன் - பிரமனும், நத்தன - சங்கத்தையுடைய திருமாலும், உவந்து - விரும்பி, தொழுது - வணங்கி, ஏத்தும் - துதிக்கப்படுகிற, குளத்தில நயனத்தன - நெற்றியில (நெருப்புக்) கண்ணையுடைய சிவபிரானது, குடி - வசிக்குமிடமாம்; (எ - று.)

போன்றகழி - விகாரம். அகழப்படுவது, அகழி; அகழ்தல் - தோண்டுதல், இ - செயப்படுபொருள்விகுதி. (அங)

அச.—(இ - ள்.) நூல் அளவிட்டு - சாஸ்திரங்களை அளவுசெய்து முழுவதுமறிந்து, உயர்ந்து - மேன்மைபெற்று, நீறு அணிந்து - விபூதியைத் தரித்து, [நூல் அளவு இட்டு - எற்றுநூலால் அளவுசெய்யப்பட்டு, உயர்ந்து - ஓங்கி, நீறு அணிந்து - வெண்ணிறச்சுண்ணம பூசி], ஆசு இல் மதில் - சிறப்புக் குற்றமில்லாத மதில்கள், பூசுரர்போல் ஆரும் - அந்தணர்போலாகப்பெற்ற, புலியூரே - புலியூரானது,—மாசு கழலாத - குற்றம் நீங்காத, வல் மதியார்கண் - கொடிய அறிவையுடைய அடியவரலலாதவரிடத்து, உறார் - பொருந்ாதவரும், கண் ஆம் - (தமது மூன்று) கண்களாகிய, அழல் ஆதவன் மதியார் - அக்கினியையுஞ் சூரிய சந்திரரையும் உடையவருமாகிய சிவபிரான், ஆர்வு - தங்குமிடமாம்; (எ - று.)

பூசுரர் - பூமியில் தேவர்போல விளங்குபவர். ஆங்கு - அசை. (அச)

அரு.—(இ - ள்.) எல் கோ - விளக்கமான கண்களையுடைய, வரைமலைபோலப் பெரிய, ஆகு - பெருச்சாளியை, இவரால - (வாகனமாக) ஏறு

தலால், [எல் கோ வரை ஆகி வாலால் - பகற்பொழுதிக்குத் தலைவனான சூரியன்வரையிலும் உயர்ந்துவருதலால்], ஐங்கரன் நேர் - விநாயகமூர்த்தியையொத்த, பொன் கோபுரம் சேர் - அழகிய கோபுரங்களை யுடைய, புலியூரே - புலியூரானது,—நல் காற்கு இசைக்கும் -(தனது) நல்ல [அழகிய] காலகளில் ஒலிக்கின்ற, சிலம்பினான் - சிலம்பையும் அணியையுமுடையவ[illegible], ஈரைம் முகத்தான் அலைக்கும் - பத்துத்தலைகளையுடைய இராவணனை அசைக்கப்பட்ட, கலமியினான் - (கைலாச) பருவதத்தை யுடையவனுமாகிய சிவபிரான், ஆர்வு - விரும்பிவாழு மிடமாம். (எ - று)

[illegible] பெருச்சாளிவடிவங்கொண்டு முனிவர்களை வருத்த, அவர் கள்வேண்டுகோளால் விநாயகமூர்த்தி அதனுருவத்தை யடக்கி வாகனமாகக் கொண்டனரென்பது கதை. ஐங்கரன் - ஞான [illegible] திருக்கைகளோடு கூடிய ஐந்தை யுடையவன. (௭௫)

[illegible] —(இ - ள்) அடுத்தோர்க்கு - (தன்னை) அடுத்த அடியார்களுக்கு, [illegible] - (தனது) [illegible] அளிக்கின்றதுவும், ஆறு தலை [illegible] - ஆறு [illegible], [illegible] - (தன்னி [illegible]) [illegible] - [illegible] (தன்னிடம்) காண [illegible] காணப்பெறும் [illegible] காணப்பித்தது], [illegible] - [illegible] பொருந்த [illegible] முகக்கடவுளை யொத்த, [illegible] - [illegible] புலியூரானது,— [illegible] - [illegible], [illegible] - [illegible] குட்டிகளுக்கு, பால் ஊட்டினோர் - [illegible] அதிகாலத்தில், மாமனுக்கு - (தமது) [illegible] தக்க [illegible] - ஆட்டுத் தலையை, [illegible] - [illegible], [illegible] - பொருந்தினவருமாகிய சிவபிரானது, ஊர் - தலமாம், (எ - று.)

[illegible] தையை [illegible] தந்தை மது [illegible] தாய்ப் பன்றியினை [illegible] காத்தருளின [illegible] இழிந்த [illegible] கடவுளாகிய [illegible] காட்டுதற்கு [illegible] ஒருவிதந்தனை யென்னும் [illegible] பன்னிரண்டுபிள்ளைகளும் [illegible] கூடி வனத்திற்சென்று அங்குத் தவஞ்செய்துகொண்டிருந்த பிருகஸ்பதிபகவானது யோகத்தின் குலையும்படி அவர்மேற் கல்முதலியவற்றை வாரிவீச, அவர் சினங்கொண்டு பன்றிகளாம்படி சபிக்க, அங்ஙனமே அப்பிள்ளைகள் பன்றிக்குட்டிகளாயின ரென்றும், இவற்றின் தந்தையுந் தாயு மாகிய பன்றிகள் ராஜராஜபாண்டியனால் வேட்டையிற் கொல்லப்பட்டு இறந்தன வென்றும் அறிக. சிவபிரான்கட்டளைப்படி வேள்வியையழித்துத் தக்கமுனிவனைத் தலையைத்துணித்த வீரபத்திரக்கடவுள், பின்பு பிரமன்வேண்டுகோளால் அச்சிவனருளிய ஆணையின்படி ஓராட்டுத்தலையைத் தக்கனுடம்பின்மீது வைத்துப்புணர்த்தி அவனையுய்ந்தெழும்படி செய்தருளின ரென்பது கதை. உமாதேவி ஒருகாலத்தில் தக்கன்மகளாய்ப் பிறந்து பரமசிவனை மணஞ்செய்துகொண்டதனால், தக்கன் சிவனுக்கு மாமனாராவன்: மாமன்-இங்கே, மனைவியின்தந்தை. (௭௬)

௭௭.—(இ - ள்) மெய் பவம் காய்ந்து - உண்மையாக (த்தன்னைப்போது வாராது) பாவங்களை ஒழித்து, அங்கு அமலம் மிக்க - அவ்வாறு தூய்மை மிகுந்த, [மெய் பவம் காய்ந்து - (தன்னில்மூழ்கியவரது) உடம்போடுகூடிய

பிறப்புக்களை யொழித்து, அம் கமலம் மிக்க - அழகியதாமரைமிறைந்த], சிவகங்கையது - சிவகங்கையென்னும் புண்ணியதீர்த்தமாளது, பொய்ப்பு இல் மறைக்கு ஒப்பு ஆம் - பொய்படுதலில்லாத வேதங்களுக்குச் சமமாகப் பெற்ற,புலியூரே - புலியூரானது,—மை பனைபோல் தொயகு-கரியபனைமரம் போல(ப்பரியதாய்)த்தொங்குகிற,அத்தனுக்கு-(துதிக்)கையையுடையவிநாயகமூர்த்திக்கு, ஐயர்-தலைவரும், தூய நெடு மால் வரை ஆம்-தூய்மையையுடைய உயர்ந்த பெரிய மேருகிரியாகிய, தயகம் தனு - பொன்மயமான வில்லை ஏந்திய, கையர் - கையையுடையவருமாகிய சிவபிரான், சார்பு - சார்ந்துள்ள இடமாம்; (எ - று.)

பொய்ப்பு இல மறை - உண்மையேகூறும்வேதம். அத்தன்-ஹஸ்தன்; வடசொற்றிரிபு. மேரு பொன்மலையாதலின், தங்கத்தனு என்றது. (௮௭)

௮௮.—(இ - ள்.) கால் ஆயிரத்தால் - ஆயிரங்கால்களையுடைமையாலும், கதிர் மணி சூட்டால் - ஒளியையுடைய மாணிக்கத்தையுடைய உச்சிக்கொண்டையையுடைமையாலும், [கால் ஆயிரத்தால் - ஆயிரந்தூணைகளையுடைமையாலும், கதிர் மணி சூட்டால் - விளங்குகிற இரத்தினங்களைப் பதித்த சிகரத்தையுடைமையாலும்], சேடன் போல் - ஆதிசேஷனையாக்கின்ற, ஆலயம - மண்டபம, சேர் - பொருந்திய, புலியூரே - புலியூரானது,—பால் ஆழி தந்த நஞ்சும - பாற்கடலுண்டாக்கிய விஷத்தையும, அப்பு ஆர்தமையும் - கங்காஜலம் ஆத்திப்பூமாலை என்பவற்றையும, களம சடை இட்டு - (முறையே) கண்டத்திலுஞ் சடையிலும் வைத்து, இந்தம் சுமப்பார் - விறகைச்சுமந்தவராகிய சிவபிரானது, இடம - வீடாம்; (எ-று.)

பாம்பிற்கு உடம்புமுழுவதிலும் கால்களுள்ளன வென்பாராதலின், 'காலாயிரத்தால்' என்றது. ஆலயம் என்றது, இங்கே கோயிலின் ஒருபகுதியாகிய ஆயிரக்காலமண்டபத்தை. நஞ்சு களத்து இட்டு, அப்பு ஆர்தமைச் சடையிட்டு என்று முறையே சென்று இயைதலால், மூன்றாமடி - முறைநிரனிறைப்பொருள்கோள். வடதேசத்திலிருந்து அநேகருசயவிருதுகளுடனே தனதுமாணாக்கர்பலரோடும் மதுரைக்குவந்து அரசனால் பலவாறு சம்மானிக்கப்பட்டு அளவுக்குமிஞ்சினசெருக்குக்கொண்டு இருந்த ஏமநாதனென்பானொரு வீணைப்பாடகனை வெல்லவிரும்பிய அம்மதுரையில்ராஜஸமஸ்தானபாடகனாகிய பாணபத்திரனென்பவனது வேண்டுகோளாற் சோமசுந்தரக்கடவுள் ஒருவிறகுதலையனாய்ச்சென்று ஏமநாதன்வீட்டையடைந்து வீணைமீட்டி அதிரசாதாரியென்னுமிராகத்தைமத்துவாசித்துக் கருவியுங்கண்டமுமொக்கயாவருமவியக்குமாறு பாடி அவனை அன்றைக்கேநாணங்கொண்டு அஞ்சியோடிப்போமபடி செய்தன ரென்பது கதை. இந்தனம் - வடசொல.

௮௯.—(இ - ள்.) தக்க கலை தெரியல் தன்னும - அநந்தசாஸ்திரங்களை ஆராய்தலினால், [(ஆகமவிதிப்படி தனக்கு) ஏற்றஆடையையும்பூமாலையையுமுடைமையாலும்], வியாசனை ஒப்ப - வேதவியாசமுனிவனைப போலுந்தலையுடைய, கொடி கம்பம் - த்வசஸ்தம்பம், சேர் - பொருந்தப்பெற்ற, புலியூரே - புலியூரானது,—எக்கியத்தில் - (தக்கமுனிவனது) வேள்வியில, ஆதவனை-சூரியதேவனை, பல்லு கெட்டு - பலழுமுடைந்து, பாற - தூளம்படி, புடைத்து - அடித்து, மறை சொல்லுக்கு எட்டாதவனர்-வேதவாக்கியங்களுக்கு எட்டாதவராகிய சிவபிரான், தோய்வு- பொருந்துமிடமாம் ; (எ - று.)

கலைதெரியல் - உபமானத்தில, இரண்டனுருபுத்தொகை ; உபமேயத்தில்,உம்மைத்தொகை. வியாஸர் என்னும் வடசொல்லுக்கு - (வேதங்களை) வகுத்தவ ரென்று பொருள். கம்பம - ஸ்தம்பம், எக்கியம் - யஜ்ஞயம், ஆதவன் - ஆதபன்; வடசொற்றிரிபுகள். ஆதபன் - நன்றாய்த்தபிப்பவன். வீரபத்திரக்கடவுள் தக்கன்வேள்விதகர்த்தகாலத்திற் பல்லுதிர்ந்தவனை

துவாதசாதித்தருள் பூஷாஎன்பவனென அறிக. வியாசர் தக்கலைதெரியல் - வேதங்களையும் புராணங்களையும் ஆராய்ந்து வரையறைசெய்து ஒழுங்குபடுத்தல். (அக)

௮௰.—(இ - ள்.) பாடும் இசையால் - பாடுகிறசங்கீதத்தையுடைமையாலும், தனம் கும்பத்தால் - கொங்கைகளாகிய குடங்களையுடைமையாலும், [பாடும் இசையால் - (யாவராலும்) துதித்துப்பாடப்படுகிற கீர்த்தியையுடைமையாலும், தனம் கும்பத்தால் - பொன்னினாலாகிய கலசத்தையுடைமையாலும்], கனகம் - தேவாலயம், பூடணம் ஒவ்வ மின்னார் ஆம் - ஆபரணங்களை யணிந்த ஒளியையுடைய மின்னல்போன்ற [illegible] யொக்கின்ற, புலியூரே - புலியூரானது,—வேடன் அடி தரிக்கும் - வேடர் [illegible] கண்ணப்பநாயனாரது பாதத்தை மேற்கொண்ட, கோவார் - கண்ணினையுடையவரும், ஆலம் குடித்து - விஷத்தையுண்டு, அமரர் [illegible] - தேவர்களைப் [illegible] யாற்றிய, கோவார் -(யாவர்க்கும்) தலைவராகிய சிவபிரானது, அடி - இருப்பிடமாம்; (எ - று.)

இல்லை [illegible] தெரிவிக்கும்பொருட்டு, சிவபிரான், [illegible], தமது வலக்கண்ணினின்று இரத்தஞ்சொரியும்படி [illegible], திண்ணனார் [illegible] மருந்துகள்செ [illegible] அம்பினாலே [illegible] இரத்தந் தடைப்பட்டதைக் கண்டு [illegible], திருக்காளத்தீசுரர் [illegible] சொரியப்பண்ண, அங்கும் [illegible], அக்கண்ணையிழ [illegible] திருக்கிறதென்று தமக் [illegible] அவர்கண்ணினருகிலே ஊன்றிக்கொண்டு, பின்பு தம்கண்ணைத் தோண்டத்தொடங்கினரென்பது கதை. தனம் என்னுஞ்சொல்வடமொழியர், இங்கே இலக்கணையாய்ப் பொன்னையுணர்த்திற்று. கனகம் - ஜிநக்ருஹம் என்னும்வடசொல்லின் சிதைவு; இது ஜிநாலயத்தின்பெயர், பின்பு எல்லாஆலயங்கட்கும் பொதுப்பெயராய வழங்கலாயிற்று: இதற்கு அஜநக்ருஹமென்றதன் சிதைவென்றுங் கொள்ளலாம்: பிறப்பில்லாத கடவுளின்கோயி லென்று பொருள்படும். பூஷணம் - வடசொல்; அலங்காரஞ்செய்வதென்று பொருள். (௮௰)

௮௧.—(இ - ள்.) வான்மீது எழும்புகையால் - ஆகாயமார்க்கத்திலே உயர்ந்துசெல்லுதலாலும், மா இரதத்தால் - குதிரைபூண்ட தேரையுடைமையாலும், [வான்மீது எழும் புகையால் - ஆகாயத்தின்மேல் எழுகிற புகையையுடைமையாலும், மா விரதத்தால் - சிறந்த விரதங்களை அநுஷ்டித்தலாலும்], கதிரோன் போல் - சூரியன்போன்ற, மா மகம் - பெரிய யாகங்களை, செய் - செய்தற்கிடமான, புலியூரே - புலியூரானது,—தேன் மாறா - தேன் நீங்காத, ஆயிரம் தோடு இலங்கு - ஆயிரம் இதழ்கள் விளங்குகிற, அம்புயன் - தாமரைப்பூவில் வாழும் பிரமனது, தலையை - சிரசை, ஓடு ஆய் - பிச்சையோடாகக்கொண்டு, இரந்தான் - பிச்சையெடுத்தவனாகிய சிவபிரான், உறைவு - வசிக்குமிடமாம்; (எ - று.)—தான் - அசை.

ஆய் - ஆக; செயவெனெச்சத்தின்திரிபு. அம்புஜம் - நீரிற்பிறப்பது.

௮௨.—(இ - ள்.) ஆம் கருணையோடு - பொருந்தின அருளுடனே, அமுது ஈந்து - (தனது) அமிர்தகிரணங்களைக் கொடுத்து, அங்கு அ அலை நீக்கி - அவ்வாறு அப்படிப்பட்ட இருளை ஒழித்து, [ஆம் கருணையோடு - நிறைந்த பொறிக்கறியுடனே, அமுது ஈந்து - இனியவுணவை (எவர்க்கும்) கொடுத்து, அம் கவலை நீக்கி - நீரைப்பற்றிய தாகக்கவற்சியையுமொழித்து],

மடம் - சத்திரங்கள், பூ கலை இர்து ஒப்பு ஆம் - அழகிய கலைகள்நிறைந்த சந்திரனுக்குச் சமமாகப்பெற்ற, புலியூரே - புலியூரானது, — வாங்கும் - பெற்ற, வரம் - வரத்தையுடைய, கம்பலம் - அச்சந்தருந் தன்மையுள்ள, வாணன் - பாணாசுரனது, வாயில் - வீட்டுவாயிலில, காத்து - காவல்பூண்டு, அன்பர்க்கு இரங்கு - தன்அடியார்க்கு அருள்செய்யுந்தன்மையுள்ள, அம்பலம் வாணன் - பொன்னம்பலத்தில் வாழ்பவனாகிய சிவபிரானது, இல் - இடமாம்; (எ - று.)

பாணாசுரனென்பவன் ஒருகாலத்தற் சிவனைக்குறித்தநேக பலநாள் அருந்தவஞ்செய்து முடிக்க, சிவபிரான் அவனுக்குப் பிரத்தியட்சமாய்த் திருநடனக் காட்சி தந்தருள, அப்பொழுது அவன் இரண்டு கைகளாலும் அழகாக மத்தளந்தட்ட, சிவபிரான் அருள்கூர்ந்து அவனுக்கு ஆயிரங்கைகளையும் ஒரு ப்புமதிலையும் அளவிறந்தபலத்தையும் மிக்கசெல்வத்தையும் மற்றும் பல வரங்களையுங் கொடுத்தருள, பெற்றுவாழ்ந்திருந்த அவ்வசுரராசன் மற்றொருகாலத்தில் கைலாசத்துச்சென்று பரமசிவன் நடனஞ்செய்கையில் தனது ஆயிரங்கைகளாலும் மிருதங்கம் அடிக்க, சிவபிரான் அவன்பக்கல் மிக்க அன்புகொண்டு, 'வேண்டியவரங்கேள்' எனன, அவன் அப்பொழுது 'யான் உன்னை எப்பொழுதும் தரிசிக்கும்படி நீ அம்பிகையோடும் விநாயக சுப்பிரமணியரோடும் பிரமதகணங்களோடும் என்மாளிகைவாயிலில் இருந்தருள வேண்டும்' என்று வேண்ட, அவனுக்கு அங்ஙனமே அருளினது அவன்வாயிலிற் கடவுள் காவல்செய்திருக்கின்றானென்பது கதை. கம்பலமென்பது, கம்பலமென ஈறுதிரிந்தது; அன்றி, கம்பலம் - போர்வையுடைய வாணனென்றும் உரைக்கலாம்; ஒருகாலத்தில் சிவபிரானையே வாணன் செருக்கிற் போருக்கழைத்தான். கம் பல என்று பிரித்து, பலதலைகளையுடைய என்று உரைத்தல் கதைக்குப்பொருந்தாது. வாணன் - வடசொற்றிரிபு. வாயில் - இல்வாய் என்பதன் இலக்கணப்போலி; வீட்டின் முன்னிடமென்று பொருள். அல்லென்பதனை இரண்டாம்வேற்றுமையாகிய அல்லென்பது, அலையெனத் தொக்கது. வாணன் - வாழ்நன். மடம் - பெரியோர்வசிக்குமிடம்.

கூ௩. — (இ - ள்.) ஐ அம்பு எய்து - ஐந்துமலரம்புகளைப் பிரயோகித்து, தார் அணி மகிழ் இட்டு - மாலையாகப்பொருந்தின மகிழம்பூவைத் தரித்து, [ஐயம் பெய்து - (இரப்பவர்க்குப்) பிச்சையிட்டு, தாரணி மகிழ் இட்டு - உலகத்தவர்க்கு மகிழ்ச்சியைச்செய்து], அயர்களைபோல - மன்மதனையொக்கின்ற, பொய் இல சத்திரம் - (எவர்க்கும்) தவறுதலில்லாத சத்திரங்கள், சூழ் - சுற்றிலுமிருக்கப்பெற்ற, புலியூரே - புலியூரானது, — பை அரவு மீது ஆம் - படத்தையுடைய பாம்புகள் (ஆபரணமாக) மேலே பொருந்தப்பெற்ற, புயத்தினர் - திருத்தோள்களையுடையவரும், மிக்க முயல் மேல் அழுத்தும் - வலிமைமிகுந்த முயலகன்மேலே அழுந்த வைத்த, பாத அம்புயத்தினர் - திருவடித்தாமரையையுடையவருமாகிய சிவபிரான், பற்று - விரும்பியெழுந்தருளியிருக்குமிடமாம்; (எ - று.)

"விலக்கில் சாலை யாவர்க்கும்" என்றார் சிந்தாமணியாரும். முயல் - முயலகன் என்பதன் விகாரம். தாருகவனமுனிவர் ஏவிய முயலகனென்னுங் கொடியவனது முதுகின்மீது பரமசிவன் திருவடியை ஊன்றி நடித்தனனென்பது பிரசித்தம். மன்மதனது பஞ்சபுஷ்பபாணங்கள் - தாமரை, அசோகம், மா, மல்லிகை, நீலோற்பலம் எனபன. தாரணி - தரணி; வடசொல்விகாரம். ஏ - அசை (கூ௩)

கூ௪. — (இ - ள்.) மால் புணர்ந்து - பெருமையைப் பொருந்தி, நீறு அணிந்து - விபூதியைத் தரித்து, மா மதி மேலிட்டு - சிறந்த அறிவு மிகுந்து, [மால் புணர்ந்து - மேகமண்டலத்தைச்சேர்ந்து, நீறு அணிந்து - வெண்ணிறச் சுண்ணம் பூசப்பட்டு, மா மதி மேல் இட்டு - பெரிய சந்திரன் தன்மீது

பொருந்தப்பெற்று], உயர்ந்தோர் போல் - பெரியோர்களை ஒக்கின்ற, பல மாடம் - அநேக உபரிகைவீடுகள், சேர் - பொருந்தப்பெற்ற, புலியூரே - புலியூரானது,—சூல் பெறு - சினையைப்பெற்ற, வெண் கோடு - வெண்ணிறமான சங்குகளை, உந்தி - கொழித்துத் தள்ளுகிற, அலை - அலைகளையுடைய கடல், வளை - சூழ்தலையுடைய, பார் - நிலவுலகத்திலுள்ளவர்கள், கூப்ப - (தம்மைக்) கைகுவித்து வணங்க, மறை சேய்க்கு - வேதம்வல்ல பிராமணகுமாரன்பொருட்டு, அயன் முன் தேடும் தலை வளைப்பார் - பிரமன் முன்னொருகால் தேடிக்காணாமற்போன (தமது) முடியை வளைக்குபவராகிய சிவபிரான், சேர்வு - தங்குமிடமாம்; (எ - று.)

பிற்பாதியிலுள்ள கதை, கீழ் ஐரதாஞ்செய்யுளுரையிற் கூறப்பட்டது. பார் - ஆகுபெயர். (கச)

கரு.—(இ - ள்.) எப்போதும நல மணம் தோய்ந்து - எல்லா மலர்களுக்குஞ் சிறந்த வாசனையைப் பொருந்தி, ஏற்பவர்க்கு இட்டு - வந்து யாசிப்பவர்க்குத் தானஞ்செய்து, [எப்போதும நலமணம் தோய்ந்து - எப்பொழுதும் நல்ல கலியாணங்களைப் பொருந்தி, ஏற்பவர்க்கு இட்டு - தக்கவர்க்கு இடங்கொடுத்து], ஐந்தரு ஒப்பு ஏய்க்கும் - பஞ்ச தேவதருக்களுக்குச் சமமாகச் சொல்லப்படுகிற, வதி - வீதிகளையுடைய, புலியூரே - புலியூரானது,—மெய்ப்பு ஆன - உண்மையையுணர்ந்து, நந்தி - நந்திதேவரை, பரியார் - வாகனமாகக்கொண்டவரும், நளினத்து அயனை அரிக்கும் - தாமரைப்பூவில் வாழ்கிற பிரமனுக்கு நிகராகாதவரும், சந்திப்பு அரியார் - சேர்தற்கு அருமையானவருமாகிய சிவபிரானது, தலம் - இடமாம்; (எ-று.)

ஏற்பவர், ஏல - பகுதி. ஐந்தரு - சந்தானம், மந்தாரம், பாரிஜாதம், கற்பகம், அரிசந்தனம என்பன. மெய்ப்பு - மெய்ச்சொல், கொண்டாடப்படுதல் என்றுங் கொள்ளலாம். பரி என்னுங் குதிரைப்பெயர், இங்கே, வாகனமென்னு மாத்திரையாய் நின்றது. நளினத்தயனை அரிக்குங்கூட்டி, திருவந்தித்தாமரையையுடைய என்றும பொருள்கொள்ளலாம். (கரு)

கசு.—(இ - ள்.) சோபனத்தை சேர்ந்து - மங்களத்தை யடைந்து, செங்கோல் தூக்கி - செங்கோலேந்தி, [சோபனத்தை சேர்ந்து - படிகளைப்பொருந்தி, செம் கோல் தூக்கி - ஒழுங்கான தூண்கள் நாட்டப்பட்டு], உயர் தோரணம்-உயர்ந்த தோரணம், பூபதிக்கு ஒப்பு ஆகும் - அரசனுக்குச் சமமாகப்பெற்ற, புலியூரே - புலியூரானது,—தாபரம - நிலைபெற்ற, எண்திக்கு எனும - எட்டுத்திக்குகளென்கிற, ஆசாரத்தார் - ஆடையையுடையவரும், சிட்டர் உருகுள் இனிக்கும் - பெரியோர்களதுமனத்தில் இனிக்கிற, இக்கு எனும மா சாரத்தார் - கரும்பையொத்த மிக்கசுவையையுடையவருமாகிய சிவபிரானது, இல் - இடமாம்; (எ - று.)

தோரணம்-வெளிவாயிலென்றுங் கொள்ளலாம். சோபனம் - படியென்னும் பொருளில் சோபானம என்னும் வடசொல்லின் விகாரம். பூபதி - பூமிக்குத் தலைவன். தாபரம - ஸ்தாவரம், சிட்டர்-சிஷ்டர்; வடசொற்றிரிபுகள். இனிக்கும் என்னும பெயரெச்சத்தில், இனி - பகுதி. (கசு)

கஎ.—(இ - ள்.) அம் மழை கண்ணால் - அழகிய மழைபோலக்குளிர்ந்த கண்களையுடைமையாலும், காலால் ஆடுதலால் - (தமது) பாதங்களால் நர்த்தனஞ்செய்தலாலும், [அம் மழை கண்ணால் - அந்தமேகமண்டலத்தினிடத்து அளாவுதலாலும், காலால் ஆடுதலால்-காற்றால் அசைதலாலும்], கேதனங்கள் - துவசங்கள், பொம்மல் முலையார் ஆம் - பொலிவையுடைய தனங்களையுடைய மகளிரை யொத்திருக்கப்பெற்ற, புலியூரே - புலியூரானது,—பொங்கு அரவின் - சீறுகின்ற நாகங்களாகிய, நல் பணி - சிறந்த ஆபரணங்களை, சம்மதி ஆய் - உடன்பட்டு, வார் பொன் சடைக்கு இட்டார்-

நீண்ட பொன்னிறமான சடையில் தரித்தவரும், கிரணம் செம் கரம் இணைந்து பணிவார்-கிரணங்களாகிய சிவந்தகைகளையுடைய சூரியனால் வணங்கப்படுபவரு மாகிய சிவபிரான், சேர்வு-சேருமிடமாம்; (எ - று)

கேதநம், ஸம்மதி, இநன் - வடசொற்கள். பொம்மல்- பருமையுமாம். ஆம் - உவமவுருபு. (௧௭)

௧௮.—(இ - ள்) மால் அகலம் உற்று - திருமாலின திருமார்பைச் சேர்ந்து, மணி வடம் பூண்டு-இரத்தினஹாரத்தை அணிந்து, [மால் அகலம் உற்று-மிக்கவிசாலம்பொருந்தி, மணி வடம் பூண்டு-(அடுக்கும்) மணிகளையும் (இழுக்கும்) வடங்களையும் உடைத்தாட], இந்திரையாள் போல-திருமகளை ஒக்கின்ற, இரதம் - தேர்கள், ஆரும்-பொருந்தப்பெற்ற, புலியூரே-புலியூரானது,—பாலனை கொலவாள் - (தமது) குமாரனைக் கொன்றவரான சிறுத்தொண்டநாயனாரது, அகத்தை - மாளிகையிலுள்ள, ஊண்-தலைச்சையை, நேர்-புசித்தருளாதவரும், வாளரக்கன் மா முடிமேல-வாளாயுதத்தையுடைய இராவணனது பெரிய தலைகளின்மேல், காலாகத்து ஊன்றினோர்-(தமது) இடக்காற்பெருவிரலினகத்தை அழுத்தினவரு மாகிய சிவபிரான். காப்ப-காக்குமிடமாம்; (எ - று)

இந்திரை-இந்திராவென்னும் வடமொழிச்சிதைவு. அகத்தை-யென்புழி ஐகாரத்தை உருபுமயக்கமென்றாவது சாரியையென்றாவது கொள்க. இராவணனுக்கு வாள், சிவபிரான் பின்னர் அவனைச் செய்ததைப் பொறுத்தருளி அளித்தது. குமலிழ்ந்து ஈந்தது. காலாகத்து ஊன்றினோர் - தமது திருவடியால் கைலாசமலையை அழுத்தியவ ரென்றுங் கொள்ளலாம். இராவணன் தனது தேர் தடைப்பட்டதனால் இருபதுகைகளையுங் கீழ்க்கொடுத்துக் கைலாசமலையைப் பெயர்த்து எடுத்துத் தனது பத்துத் தலைகளின்மேலும் வைத்துத்தூக்கி அப்பாலெறிந்துவிட்டுச் செல்வதாக முயலுகையில், சிவபிரான் திருவடிவிரலையூன்றியழுத்த, அம்மலையின்கீழ்ப்பட்டு அவ்விராவணனது தலைகளுங் கைகளும் நெரிந்தன வென்க; "கடுகிய தேர்செலாது கயிலாயமீது கருதேலுன்வீர மொழிநீ, முடுகுவ தன்று தன்ம மெனநின்று பாகன் மொழிவானை நன்று முனியா, விடுவிடு வென்று சென்று விரைவுற் றரக்கன் வரையுற்றெடுக்க முடிதோள், நெடுநெடு விற்று வீழ விரலுற்ற பாத நினைவுற்ற தென்றன் மனனே" எனத் திருநாவுக்கரசுநாயனாரும், "பாங்கிலா வரக்கன் கயிலையன் றெடுப்பப் பலதலை முடியொடு தோளவை நெரிய, வோங்கிய விரலா லூன்றியன் றவற்கே யொளிதிகழ் வாளது கொடுத்து" எனத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும், "அரக்கன் முடிகரங்க ளடர்த்திட்டவெம் மாதிபிரான்" எனச் சுந்தரமூர்த்திநாயனாரும் அருளிச்செய்தவாறு காண்க. 'இரதமாரும்' என்றபாடத்துக்கு -தேர்கள் செலனு மென்க. (௧௮)

௧௯.—(இ - ள்.) செலவம் திருந்திடலால் - ஐசுவரியம மிகுந்திருந்ததலால், சேர் மூடத்தால் - பொருந்தின மூடத்தன்மையினால், [செல் வந்து இருந்திடலால்-மேகம் வந்து (தன்மீது) தங்கப்பெறுதலால், சேர் முடத்தால் - பொருந்தின வளைவுத்தன்மை யுடைமையால், பிங்கலன் நேர் புலவும் - குபேரனுக்குச் சமமாகப் பொருந்தின, தெங்கு - தென்னைமரங்கள், ஓங்கும் - உயர்ந்திருக்கப்பெற்ற, புலியூரே - புலியூரானது,—மெல் இதழ் வாய் விண்ட- மென்மையான பூவிதழ்கள் முறுக்குமலர்ந்த, கடுக்கையான- கொன்றைமாலையையுடையவரும், மேல் நாள் -முன்னொருகாலத்தில், அமரருக்கு ஆ - தேவர்களைக் காக்கும்பொருட்டாக, உண்ட - அமுதுசெய்தருளின, கடு - விஷம், ஊர் - கைக்கப்பெறுதவரு மாகிய சிவபிரானது, ஊர்-ஊராம்; (எ - று.)

கைலாசமலையின் ஒருபக்கத்திலிருந்து தவஞ்செய்துகின்ற குபேரன் அங்கிருந்த உமாதேவியை ஊன்றிப்பார்த்தகாரணத்தால் கண்ணொளிபசந்து 'ஏகாக்ஷிபிங்களன்' எனப் பெயர்பெற்றனன். பிங்கலன் - பிங்களநிறமுடையவன்; பிங்கலம் - கறுப்புக்கலந்த பொன்னிறம். குபேரனுக்கு முடத்தன்மை நேர்ந்தவரலாற்றை வந்தவிடத்திற் காண்க; தக்ஷமுனிவரயாகத்தில் வீரபத்திரரால் சூரியன்முதலியோர்க்குச் சிலவகை அங்கவீனங்கள் நேர்ந்தது போல, இவனுக்கும் அங்கு முடத்தன்மை நேர்ந்திருக்கலாம்; முடம் - உறுப்புக்குறைவென்ற மாத்திரமாய், கண்ணொளிமழுங்கியதையேயு மாகலாம்.

௧௦௦.—(இ - ள்.) மா கமண்டலம் தாங்கி - சிறந்த கமண்டலமென்னுஞ் சலபாத்திரத்தை (க்கையில்) தரித்து, வண் தமிழ் பூத்து - சிறந்த தமிழ்இலக்கணத்தைத் தந்து, ஆறு விட்டு - காவிரிநதியைப் பெருகவிட்டு, [மாகம் மண்டலம் தாங்கி - பெரிய விண்ணுலகவட்டத்தை (த்தன்மேல்) உடைத்தாய், வண்டு அமிழ் பூ தாறு விட்டு - வண்டுகள் (தேனில்) மூழ்கப்பெற்ற பூக்களையும் குலைகளையும் வெளிவிட்டு], பூகமும் - பாக்குமரமும், கும்பன் சீர் - அகத்தியர்க்குச் சமமாகப்பெற்ற, புலியூரானது,— ஆகமங்கள் கூறு இரும் மா வாக்கினர் - (இருபத்தெட்டு) ஆகமங்களை வகுத்திட்ட சிறந்த திருவாயையுடையவரும், கூடல் இறைக்கு ஆ - மதுரைப்பதியரசனான அரிமர்த்தனபாண்டியனுக்காக, நரியை - நரிகளை, ஏறிடும் மா ஆக்கினார் - ஏறுகின்ற குதிரைகளாகச் செய்தருளியவருமாகிய சிவபிரானது, இல் - இருப்பிடமாம். (எ - று.)

கமண்டலம்முனிவர்க்குரியதாதலை "நூலே கரகம் முக்கோல் மணையே, ஆயுங்காலை யந்தணர்க் குரிய" என்னுந் தொல்காப்பியத்தாலும் அறிக. கங்காதீர்த்தங்கொண்டுவந்த அகத்தியமுனிவரது கமண்டலம் குடகுமலைச்சாரலிற் காக்கைவடிவங்கொண்ட விநாயகராற் கவிழ்க்கப்பட்டு அதிலிருந்து காவேரிநதிபெருகிய தென அறிக. அகத்தியர் கைலாசத்தில் ஸர்வஜ்ஞராகிய சிவபிரானிடத்தும் சுப்பிரமணியமூர்த்தியிடத்தும் தமிழிலக்கணங்களை உபதேசம்பெற்று வடதிசையினின்று தென்திசைவந்து மலயமலையிலிருந்து சிற்றகத்தியம் பேரகத்தியம் என்னுந் தமிழிலக்கணநூல்களை இயற்றி, அவற்றைத் தொல்காப்பியர் முதலிய மாணாக்கர்பன்னிருவர்க்குங் கற்பித்துக் கொடுத்து அந்தப்பாஷையைச் சுத்தமாக உலகத்திற் பரவச்செய்தனரெனக. அகத்தியர் - தமிழ்க்குரிய முனிவராதலின், அவரை உவமைகூறியதோடு இத்தமிழ்ப்பிரபந்தத்தை முடித்தனர், இந்நூலாசிரியரென்க. ஊர்வசியைக்கண்டு காதல்கொண்ட மித்திரன் வருணன் என்னும்இரண்டுதேவர்களது விருப்பத்தால் ஒருகுடத்தினின்று பிறந்தவரிவராதலின், இவர்க்குக் கும்பனென்று ஒருபெயர்; கும்பம் - குடம். சீர் - உவமவுருபு. சதாசிவமூர்த்தியினுடைய ஐந்துமுகங்களுள்ளும், சத்தியோசாதமுகத்தினின்று - காமிகம் யோகஜம் சிந்தியம் காரணம் அஜிதம் என்னும் ஐந்தாகமங்களும், வாமதேவமுகத்தினின்று - தீப்தம் சூக்ஷ்மம் சகஸ்ரம் அஞ்சுமான் சுப்பிரபேதம் என்னும் ஐந்தாகமங்களும், அகோரமுகத்தினின்று - விசயம் நிச்சுவாசம் சுவாயம்புவம் ஆக்கினேயம் வீரம் என்னும் ஐந்தாகமங்களும், தற்புருடமுகத்தினின்று - ரௌரவம் மகுடம் விமலம் சந்திரஞானம் முகவிம்பம் என்னும் ஐந்தாகமங்களும், ஈசானமுகத்தினின்று - புரோற்கீதம் இலலிதம் சித்தம் சந்தானம் சருவோக்தம் பாரமேசுரம் கிரணம் வாதுளம் என்னும் எட்டாகமங்களும் ஆக இருபத்தெட்டு ஆகமங்களுந் தோன்றின. இவை - ஞானபாதம் யோகபாதம் கிரியாபாதம் சரியாபாதம்என்று தனித்தனி நான்குபாதங்களை யுடையனவாயிருக்கும். (௧௦௦)

புலியூர்வெண்பா முற்றிற்று.

(இ - ள்.) இசைபெற்ற புலியூர்விஷயமாக ஒழுங்குபடக் கூறப்பட்ட வெண்பாக்கள் நூறும்; அவற்றுள், ஆராயுமிடத்து, முதலிருபத்தைந்துவெண்பா ஒருவகையாம்; அதன்பின்னுள்ள ஒவ்வொரு இருபத்தைந்தும் ஒவ்வொருவகையாம்; (எ - று.)

முதல்இருபத்தைந்து கவிகள் - முன்னிரண்டடி தலமகிமையும், பின்னிரண்டடி திரிபுமாகவும்; அதன்பின் இருபத்தைந்துகவிகள் - முன்னிரண்டடி தலமகிமையும், பின்னிரண்டடி யமகமுமாகவும்; அதன்பின் இருபத்தைந்துகவிகள் - முன்னிரண்டடி சிலேடையும், பின்னிரண்டடி திரிபுமாகவும்; அதன்பின் இருபத்தைந்துகவிகள் - முன்னிரண்டடி சிலேடைபற்றிய உவமையும், பின்னிரண்டடி திரிபுமாகவும் வந்தவாறு காண்க. இந்நூலின் முதலைம்பதுபாடல்களிற் பெரும்பாலும் இத்தலத்தைப்பற்றிய கதைகள் வந்துள்ளன. எல்லாச் செய்யுள்களிலும் பின்னிரண்டடி சிவபிரான்பெருமையைப் பலவகையாலுங் கூறும். யமகமாவது - எழுத்துக்கள் ஒற்றுமைப்பட்டுச் சொற்பொருள்கள் வேறுபட்டிருப்பது; இது மடக்கெனப்படும். திரிபாவது - செய்யுளடிகளில் முதலெழுத்துமாத்திரம் வேறுபட்டிருக்க இரண்டாவது முதலிய பலவெழுத்துக்கள் ஒற்றுமைப்பட்டுப் பொருளிற் பேதப்படுவது. சிலேடையாவது - பலபொருள் தருவது. இது சிலேடைமொழியாகவரும் உபமானம், சிலேடையுவமமெனப்படும். 'வாளைவாய்' என்றும் வழங்கும்.

இந்தப்புலியூர்வெண்பா நூலாசிரியர், மாரிமுத்துப்பிள்ளை யென்பவர். இவர், சோழநாட்டில் சிதம்பரத்துக்கு ஈசானதிசையிலுள்ள தில்லைவிடங்கனென்னுமூரில் சைவவேளாளர்குலத்தில் தெய்வங்கள்பெருமாள்பிள்ளை யென்பவரது புத்திரர். இப்பொழுதைக்குச் சற்றேறக்குறைய நூற்றுப்பத்து வருஷங்களின்முன் இருந்தவர். இவர் இளமைப்பருவத்திலேயே சிவபிரானது திருவருளால் கவிபாடுந்திறமைபெற்றுப் பிறவிக்குருடனொருவனுக்குக் கண்ணைக்கொடுத்துக் கீர்த்தியடைந்தனரென்பர். இவரதுகுரு, சிவகங்காநாததேசிக ரென்பவர். இவர்க்கு அப்பாவுப்பிள்ளையென்னும் மறுபெயரையுடைய தெய்வங்கள்பெருமாள்பிள்ளை யென்றும், சபாபதிப்பிள்ளையென்றும், குமாரசாமிப்பிள்ளையென்றும் புத்திரர் மூவர். இவர்களுள், இடையிலுள்ளவரொழிந்தவர், புலவர்கள்; இவர் தமது மூத்தபிள்ளை இளமைப்பருவத்தில் சித்தப்பிரமமுடையவராயும் குடும்பசந்ததியில்லாதவராயும் இருந்துகொண்டிருந்ததைக் கண்டு கவலைகொண்டு ஒருநாள்கடவுளைத் தியானித்தவாறே துயிலுகையில், சபாநாயகர் ஒருதில்லைவாழந்தணர்வடிவாய்க் கனவில்வந்து காட்சிதந்து 'உமதுகவலைதீரும், இவ்வூருக்கு ஒருபிரபந்தம்பாடும்' என்று திருவாய்மலர்ந்தருளிமறைய, இவர் துயிலுணர்ந்து திருவருளைச்சிந்தித்துப் பேரானந்தங்கொண்டு அங்ஙனமே புலியூர்வெண்பாவென்னும் இந்நூலைத் தொடங்கிச் செய்துமுடித்தமாத்திரத்தில் இவர்புத்திரரது மனமயக்கம் தெளிந்த தென்பர். இவர் இயற்றிய வேறுநூல்கள்:—சிதம்பரேசுரர்விறலிவிடுதூது, வருணபுரிஆதிமூலேசர்குறவஞ்சி, காழியார்நொண்டி, ஷெயார் தாய்மகளேசல், அம்பலப்பள்ளிக்கும் கோவிந்தப்பள்ளிக்கும் ஏசற்பள்ளு, ஐயனார்நொண்டி, அநீதிநாடகம், நடராசப்பெருமான்மேல் கீர்த்தனம் பதங்கள், ரதபந்தம் நாகபந்தம்முதலிய சித்திரகவிகள், பலவிதவண்ணங்கள், புலியூர்ச்சிங்காரவேலர்பதிகம், விடங்கேசர்பதிகம் முதலியன. இந்நூற்பாயிரமாகிய "ஐயன் சபைநாத னைப்பாய்ப் புலிசைவெண்பா, செய்யென் றினிதுரைக்கச் செப்பினேன்—மெய்யென்று, பாட்டிற் பிழையிருந்தாற் பார்த்துப் பெரியோர்கள், காட்டித் திருத்தக் கடன்" என்னும்பாடலையும், இந்நூற்சிறப்புப்பாயிரமாகிய "திருவளருந் தில்லை விடங்கனுறை சீர்த்தி, வருபுல

[redacted]வெண்பா.

"ரிமுத்து மால்சிர் - திருபுலியூர், வெண்பா மடந்தையா மேலியற்றி ...ர்க்கு வெண்பா மடந்தையா மேல்", "எழுத்தறியா முன்னடைந்தால் ...வர்தாம் பாடார், வழுத்தரியாமாரிமுத்து வள்ளல் — விழுத்தவன்போல், ...ம்பல வாண லயிற்கணென்பார் மன்னுதில்லை, அம்பல வாண னருள்" என் ...ம் பாடல்களையும் அறிக.

இந்நூல் ௧௮௮௯ - ஆம் வருஷம் பி-ஏ பட்டப்பரீக்ஷைக்குப் பாடமாக ...ருந்தகாலத்தில், சென்னைக்கவர்ன்மெனட் நார்மல்பாடசாலைத் தமிழ்ப் ...வராயிருந்த ம - ா - ா - ஸ்ரீ. தி. க. சுப்பராயசெட்டியார் அவர்கள் ...ந்நூலுக்கு முதலில் உரை யெழுதி வெளிப்படுத்தினார்கள். பின்பு, இந்நூ ...சிரியர் அமைப்பில் நான்காவதாக முறைபாயுள்ளவரும், இப்பொழு ...ந்தை ... சபைப் பள்ளிக்கூடத் தமிழ்ப் புலவருமாகிய ம - ா - ா - ஸ்ரீ. ச. வேலுசாமிப்பிள்ளையவர்கள், ஒரு உரையியற்றிப் பிரசுரஞ்செய்துள்ளார்; இந்நூலாசிரியரைப்பற்றி இங்கு ... விவரம், இவ்வுரையின் முதலிற் கண்டது.

நேரிசைவெண்பாவாவது - நான்கடிகளாய், ஈற்றடி முச்சீரடியாகவும் மற்றையடி நாற்சீரடிகளாகவும் பெற்று, காய்ச்சீரும் மாச்சீர் விளச்சீர்களும் வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் கொண்டு, மற்றைச் சீருந் தளையும் பெறாமல், இரண்டாமடியின் இறுதிச்சீர் முதலிரண்டடிகளின் எதுகைக்கேற்ற தனிச்சொல் பெற்று, காசு பிறப்பு நாள் மலர் என்னும் வாய்பாடுகளுள் ஒன்றால் முடிந்து, ஒரு விகற்பத்தாலாயினும் இரு விகற்பத்தாலாயினும் வருவது [வெண்சீர் வெண்டளையாவது - காய்முன் நேர் வருவது; இயற்சீர் வெண்டளையாவது - மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவது; "காய்முன் நேரும் மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவது வெண்டளை" ஒரு விகற்பமாவது - நான்கடியும் ஒரு எதுகையாய் வருவது. இருவிகற்பமாவது - முன்னிரண்டடியும் ஒரு எதுகையும், பின்னிரண்டடியும் ஒரு எதுகையுமாய் வருவது.]

இன்னிசைவெண்பா - இவ்வாறே தனிச்சொல்லின்றி வருவது; தனிச் சொற்பெற்றும் மூன்று விகற்பத்தால் வரின், இன்னிசை வெண்பாவாம்.

புலியூர் வெண்பா முழுவதும் இருவிகற்ப நேரிசைவெண்பா.

நாலடியாரில், ஒருவிகற்ப இன்னிசைவெண்பா — ௨0௬, ௨0௮, ௨௧௮, ..., ௨௨௨, ௨௨௪, ௨௨௬, ௨௩௬, ௨௩௭, ௨௪0, ௨௪௩, ௨௪௬.

பலவிகற்ப இன்னிசைவெண்பா - ௨0௧, ௨௪௧, ௨௪௨.

மற்றவையெல்லாம் இருவிகற்ப நேரிசைவெண்பாவாம்.

...ப்புண்ணை
...ருவேங்கட
...ச்சிக்கப்ப
...ண்டு தி
...ர